
லட்சுமி சுதாவின்
மாயம்
செய்தாயோ...
ட்சுமி சுதாவின்
மாயம்
சய்தாயோ..

## நூற் குறிப்பு


| | |
|---|---|
| • நூல் தலைப்பு | மாயம் செய்தாயோ... |
| • ஆசிரியர் | லட்சுமி சுதா |
| • மொழி | தமிழ் |
| • முதற் பதிப்பு | ஜூன், 2012 |
| • உரிமை | ஆசிரியருக்கு |
| • தாளின் தன்மை | 11.6 K.g. வெள்ளைத் தாள் |
| • நூலின் அளவு | 1 × 8 கிரவுன் |
| • அச்சு எழுத்து | 11 புள்ளிகள் |
| • மொத்தப் பக்கங்கள் | 268 |
| • பைண்டிங் | சாதா அட்டை |

**விலை: ரூ. 120.00**

வெளியிடுவோர் **அருண் பதிப்பகம்**
எண். 107/8, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.

கணினி அச்சு மாதா பிரிண்டர்ஸ், சென்னை - 116.

அச்சிட்டோர் கே.வி.எஸ். ஆப்செட், சென்னை - 14.


## முன்னுரை

வாங்க... பேசலாம்.

இது ஒரு புதிய பகுதி.

'உங்கள் நாவல்கள் ரொம்ப லைட்டாக இருக்கின்றன. ஆனால் நடு நடுவே அழகான பயனுள்ள தகவல்களைப் பிரசென்ட் செய்கிறீர்கள். மகாபாரதம் பற்றி, சயின்ஸ் பற்றி, மனதைக் கட்டுப் படுத்தியவர்களின் வாழ்க்கையைப் பற்றி, கிரியேட்டிவாக இருப்பது எப்படி என்று நிறைய டிப்ஸ் கொடுக்கிறீர்கள், உங்கள் நாவல்கள் மூலமாக.

'உங்கள் நாவல்களைப் பொழுது போக்கு அம்சமாக மட்டும் என்னால் எடுத்துக் கொள்ள முடியவில்லை.

'லைட் ரீடிங்குக்கு மட்டுமே இல்லை உங்கள் நாவல். அதைத் தாண்டி நிறையப் பயனுள்ள விஷயங்கள் உள்ளன. சமூகச் சிந்தனை உங்கள் எழுத்துக்களில் பிரதிபலிக்கிறது. அதனால் கொஞ்சம் கனமான விஷயங்களை நீங்கள் தனியாக எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்களேன்...' என்று மின்னஞ்சல் மூலமாகக் கோரிக்கையை அழகாக வைத்த வாசகி நிர்மலாவிற்கு நன்றி.

நிர்மலா... நீங்கள் சொன்னதை நான் யோசித்தேன். முதலில் தயக்கமாக இருந்தது. Starting trouble என்பார்களே... அது போல முதன் முதலாகத் தமிழ் நாவல் எழுதும் பொழுது எனக்கு அது ஏற்பட்டது.

நான் என் முதல் நாவலை எடுத்துக் கொண்டு லட்சுமணன் ஐயாவைச் சந்தித்த நாளை என்னால் மறக்கவே முடியாது. வேறு யாராவதாக இருந்தால், 'மேடம்! என்ன இது... இப்படிக் குப்பை மாதிரி எழுதி எடுத்துக் கொண்டு வந்திருக்கீங்க?' என்று சொல்லி இருப்பார்கள். ஆனால் அவர் பொறுமையாகக் கதையைப் படித்தார். என்னென்ன திருத்தங்கள் செய்ய வேண்டும் என்று அழகாகச் சொன்னார்.

"இன்று போய் நாளை வா!" என்பது போல் இருந்தது என் நிலைமை. வீட்டிற்கு வந்தேன். அவர் சொன்ன திருத்தங்கள் எல்லாம் செய்து முடிக்க எனக்கு ஒரு மாதத்திற்கு மேல் ஆனது.

Presentation எவ்வளவு முக்கியம் என்று எனக்குப் புரிந்தது அன்று. சிலர் வீட்டில் சமையல் சுமாராக இருக்கும். ஆனால் அந்த வீட்டில் உள்ளவர்கள் நம்மிடம் இனிமையாகப் பேசுவதில் அது சுவையாகத் தோன்றும் நமக்கு. வாழ்க்கையும் அது போலத் தானே! எப்பவும் கடுகடுவெனக் கோபமாக இருப்பவர்களை யாருக்குப் பிடிக்கும்!

'If you want to love people, you should stop judging them!' என்று மதர் தெரஸா சொல்லி இருக்கிறார். ஆனால் அது நடைமுறைக்கு எவ்வளவு கஷ்டம்! நாம் ஒவ்வொருவரும் அடுத்தவரைப் பற்றி ஏதோ ஒரு எண்ணத்தை மனதில் வைத்துக் கொண்டிருப்போம்.

'அந்த அம்மாவா... அவங்களுக்குத் தலைக் கனம் ஜாஸ்தி. எப்பவும் வானத்தில்தான் நடப்பாங்க.'

'அந்த ஆளா... பயங்கரக் கஞ்சம். கஞ்ச மகாப் பிரபு... அப்படின்னு பட்டமே கொடுக்கலாம்...' என்று ஒவ்வொருவரைப் பற்றியும் ஒரு perception நம் மனதில் இருக்கும்.

அந்த perception உண்மையாக இருக்கலாம். இல்லை... பொய்யாக இருக்கலாம். நமக்கு நேரடியாக அவர்களிடம் ஏற்பட்ட அனுபவம் அந்த மாயக் கண்ணாடியை உடைக்கும். இல்லை... கண்ணாடி உடையாமலேயே இருக்கும்.

மனிதர்களை அவர்கள் நிறைகளுடன் குறைகளுடன் அப்படியே accept செய்து கொள்ள முயற்சி செய்யலாம். வாழும் நாட்கள் இனிமையாக இருக்கும்.

நட்புடன்,

**லட்சுமி சுதா**
lakshmisudha2010@yahoo.com

# மாயம் செய்தாயோ...

## 1

நீ வருவாய்
என
நான்
காத்துக்
கொண்டு
இருக்கிறேன்!
..............

நீ
பூவாக
வந்தால்
நான்
வண்ணமாகக்
காத்துக்-
கொண்டு
இருக்கவா?
நீ
மழையாக
வந்தால்
நான்
குடையாகக்
காத்துக்
கொண்டு
இருக்கவா?
சொல்லடி, பெண்ணே!

**செ**ன்னை எழும்பூர் ரயில் நிலையம். வழக்கம் போல் மக்கள் கடல். லக்கேஜ்களைச் சுமந்தபடி முண்டியடித்துக் கொண்டு செல்லும் போர்ட்டெர்கள்.

'ட்ரெயின் சீக்கிரமாக வந்து விட்டால் தேவலை... இந்தக் கூட்டத்தில் இருந்து விடுதலை!' என்று நினைத்த படியே ப்ளாட்ஃபார்மில் எதிர்பார்ப்புடன் நிற்கும் பயணிகள்.



"சூடா காப்பி, டீ, சமோசா..." என்று வித்தியாசமான ராகத்துடன் குரல் கொடுக்கும் சிறுவர்கள்.

புத்தகக் கடையில் பயணத்திற்குத் தேவையான புத்தகங்களை ஆர்வமாக வாங்கும் பெண்கள்.

இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்.

ஆனால் கற்பனைக்குக் குறுக்கே வந்து விட்டாள், நம் கதையின் நாயகி அஞ்சனா.

அஞ்சனாவின் விழிகள் அங்கும் இங்கும் அலை பாய்ந்து கொண்டிருந்தன.

அவள் முகத்தில் அப்பட்டமான பதட்டம் தெரிந்தது.

கைக்கடிகாரத்தைப் பார்த்தாள். பின்பு மீண்டும் பிளாட்ஃபாரத்தைப் பார்த்தாள்.

'என்ன ஆச்சுன்னு தெரியலையே...! கண்டிப்பாக வருவதாகச் சொல்லி இருந்தாரே!

ஏன் அழைத்துப் போக இன்னும் வரவில்லை? முகவரி என்னிடம் உள்ளது. பேசாமல் நானே போய் விடவா அவர் வீட்டிற்கு!'

யோசித்தபடியே நின்று கொண்டிருந்தாள்.

ட்ரெயின் வந்து அரை மணி நேரம் ஆகி விட்டது.

'நான் வந்த ட்ரெயினில் இருந்து இறங்கியவர்கள் எல்லோரும் இந்நேரம் அவரவர் போக வேண்டிய இடத்திற்குப் போய்க் கொண்டிருப்பார்கள்.

நான் மட்டும் இங்கே காத்துக் கொண்டிருக்கிறேன். வெயிட்டிங் ஹாலில் வேண்டுமானால் போய் இருக்கலாமா?" என்று யோசித்தாள் அஞ்சனா.

வெயிட்டிங் ஹாலிற்குச் சென்றால் அங்கே அவர் வந்து அழைத்துப் போவாரா... என்று தெரியவில்லையே என்று குழம்பினாள்.

"ஹலோ... நீங்க அஞ்சனாதானே?" என்ற குரல் தன் அருகே கேட்க... திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

"ஆமாம்... நீங்க டாக்டர் ராகவ்தானே?"

"ம்... நான் ராகவின் பிரதர் நிரஞ்சன்."

"ஓ... ஆனால் ராகவ் ஸார்தானே வருவதாக இருந்தது. என்னை அழைத்துப் போவதற்கு."

"அவர் வந்தால்தான் வருவீர்களா, அஞ்சனா?"

"இ... இல்லை. இது புது இடம். அதனால்தான் ஜாக்கிரதையாக இருக்க வேண்டி உள்ளது."

"சரி... இப்ப என்ன செய்யலாம்?"

"டாக்டர் ஸாரிடம் நான் பேச முடியுமா?"

"ம்... அண்ணன் இப்ப ஒரு எமெர்ஜென்ஸி கேஸ்ன்னு ஹாஸ்பிடல் வரைக்கும் போயிட்டார்.

"அதனால்தான் நான் உங்களை அழைத்துப் போக வந்தேன். இப்ப என்ன செய்யலாம் என்று சொல்லுங்க."

அஞ்சனா மௌனமாக இருந்தாள்.



சில விநாடிகள் அப்படியே கழிந்தன.

"சரி... நான் உங்களோடு வருகிறேன்."

"அப்பாடா... ஒரு வழியாகச் சம்மதித்தீர்களே... ரொம்ப நன்றி."

அஞ்சனாவின் கண்களில் சந்தேகம் தெரிந்தது.

"எனக்கு வேறு வழி தெரியலை. அதனாலதான் ரிஸ்க் எடுத்து உங்களோடு வரச் சம்மதிச்சேன்."

"அட... என்னங்க உங்களோட ரொம்ப பேஜாரா இருக்கு..."

"பேஜாரா...! அப்படின்னா?"

"ஓ... நீங்க திருச்சியிலிருந்து வர்றீங்க இல்ல. அதான் உங்களுக்குச் சென்னை செந்தமிழ் சட்டுன்னு புரியலை.

"இன்னும் கொஞ்ச நாளில் உங்களுக்குப் பழகிப் போயிடும்."

"ஸோ... உங்க வீட்டில் எல்லோரும் இந்த மாதிரி ஸ்லாங் பேசுவார்களா?"

அவன் அவளைப் பார்த்தான்.

"பரவாயில்லையே... இந்த மாதிரி ஹைஃபை ஆங்கிலம் எல்லாம் உங்களுக்குத் தெரிந்திருக்கிறதே!"

"அது வந்து... ஐ.டி. கம்பெனியில் இருந்து சில நேரம் எங்கள் ஆசிரமத்திற்கு நிறையப் பேர் வருவார்கள். அவங்க எங்களுக்கு டேபிள் மேனர்ஸ், எப்படி

எல்லோரிடமும் பழகுவது என்று சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள்.

"அவர்களுடன் பேசிப் பேசி எனக்கு இந்த மாதிரி சில டெர்ம்ஸ் வந்து விட்டது."

அவன் கலகலவெனச் சிரித்தான்.

"ஏன் ஸார் சிரிக்கிறீங்க?"

"இல்ல.... 'அபியும் நானும்' படத்தில ஒரு பிச்சைக்காரன் ரொம்ப சூப்பரா இங்கிலீஷ் பேசுவான்.

"பிரகாஷ்ராஜ் அதைப் பார்த்து ஸ்டன் ஆயிடுவார். டேய்... நீ எப்படி இங்கிலீஷ் எல்லாம் கத்துக்கிட்டன்னு அவனைக் கேட்பார்."

"ம்... நானும் பார்த்தேன், அந்தப் படத்தை. சர்ச் பார்க் கான்வென்ட்கிட்ட உட்கார்ந்து பிச்சை எடுத்ததால் என் இங்கிலீஷ் டெவலப் ஆயிடுச்சின்னு அவன் சொல்வான்."

"ஸாரி... உங்களை அப்படி நான் நினைக்கவில்லை. சட்டுன்னு மனசில் பட்டுது. தப்பாக நினைக்காதீங்க. உங்களைப் பிச்சைக்காரனுடன் ஒப்பிட்டுப் பேசினேன் என்று."

"பரவாயில்லை ஸார்! நீங்கள் பிச்சைக்காரனுடன் என்னை ஒப்பிட்டுப் பேசினாலும் நான் தவறாக நினைக்க மாட்டேன்.

"இறைவனிடம் கையேந்துங்கள்... என்று நாகூர் ஹனிபா அழகாகப் பாடுவார். நாம் எல்லோருமே எதையோ எதிர்பார்த்துப் பிச்சை கேட்கிறோம். சக மனிதர்களிடமோ... இல்லை, இறைவனிடமோ!



"இது நிதர்சன உண்மை. அதனால் நீங்கள் சொல்வதை நான் தப்பாக நினைக்கவே மாட்டேன்."

"வாவ்... ஃபிலாஸபி எல்லாம் பேசறீங்க. நான் ஒண்ணு சொன்னாக் கோபிச்சுக்க மாட்டீங்களே?"

"என்னது ஸார்?"

"ஆசிரமத்தில் இருந்து ஹவுஸ் கீப்பராக ஒரு பெண்ணை வரவழைக்கலாம் என்று அம்மாதான் ஐடியா கொடுத்தார்கள்.

"அப்புறம் அண்ணன்தான் டாலியைப் பார்த்துக் கொள்ள மட்டும் ஒரு பெண் பார்க்கலாம். ஹவுஸ் கீப்பிங்கிற்கு நிறைய ஆட்கள் கிடைப்பார்கள்.

"ஆனால் டாலியைப் பார்த்துக் கொள்ள ஒரு நல்ல பொறுப்பான பெண் வேண்டும் என்று அவர்தான் முடிவு செய்தார்.

"ஆசிரமப் பெண் என்றவுடன்... என் மனக் கண்ணில் நம்ம கன்னடப் பைங்கிளி சரோஜாதேவிதான் தோன்றினாங்க. பாவாடை, தாவணி அணிந்து, தலை நிறைய எண்ணெய் வைத்து, படிய வாரிய ஒற்றை ஜடையுடன் ஒரு பெண் வருவாள் என்று நான் நினைத்தேன்.

"ஆனால் அதற்கெல்லாம் துளிக்கூட சம்பந்தம் இல்லாமல் ஜெனிலியா மாதிரி நீங்க வந்து நிற்கிறீங்க..."

அவள் ஏதும் பேசாமல் இருந்தாள்.

"ப்ளீஸ் ஸார்! இனி இந்த மாதிரி ஃபிலிம் ஸ்டார் பேச்செல்லாம் வேண்டாமே...!"

"ஓ.கே.... ஓ.கே. முதல் சந்திப்புதான் இது. நான் பேசியது கொஞ்சம் அதிகப்படிதான்... ஸாரி!"

"பரவாயில்லை ஸார்!"

"அஞ்சனா! நீங்கள் டாலியை நன்றாக ஹாண்டில் செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது."

"தேங்க்ஸ் ஸார்! உங்க நம்பிக்கை வீணாகாது."

"வீட்டில் உள்ள ஒவ்வொருவரும் ஒவ்வொரு துருவம் அஞ்சனா! நீங்க எல்லோரையும் சமாளிக்க முடியுமான்னுதான் எனக்குப் புரியலை."

"எனக்குப் புரியலை ஸார்!"

"அம்மா கொஞ்சம் கண்டிப்பானவங்க..."

"அம்மா என்றாலே அன்பு கலந்த கண்டிப்புதானே!"

"கரெக்ட். அது எங்களுக்குப் பெரிய விஷயமாகத் தெரியவில்லை. கண்டித்து அழகாக எங்களை வளர்த்த அம்மா... இப்ப டாலியை எப்படி ஹாண்டில் செய்வது என்று தெரியாமல் முழிக்கிறாங்க..."

"புரியுது ஸார்! டாலி சின்னப் பெண். இப்ப இருக்கிற ஜெனரேஷன் ரொம்ப டிஃபரண்ட் ஸார்! வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும். ரசிக்க வேண்டும். சின்னச் சின்னச் சந்தோஷங்களைக்கூட அவர்கள் தியாகம் செய்யத் தயாராக இல்லை.

"தே ஆர் ஸ்மார்ட். பட்... கொஞ்சம் செல்ஃபிஷ். அது சில பேருக்குத் தப்பாகத் தெரியலாம்."



"ஹவ் ஓல்ட் ஆர் யூ அஞ்சனா?"

"ஏன் ஸார்?"

"ம்... பெண்கள் கிட்ட வயசைக் கேட்கக் கூடாதுதான். பட் இட் இஸ் ஓ.கே. சொல்லுங்க அஞ்சனா!"

"இருபத்து மூன்று வயசு ஸார்!"

"ம்... உங்க பேச்சு ரொம்ப மெச்சூர்டா இருக்கு. உங்க வயசுக்கும் பேச்சுக்கும் சம்பந்தமே இல்லை. ஆச்சரியமா இருக்கு. டாலியை நீங்க நல்லாக் கவனிப்பீங்கன்னு மனசில் தீர்மானமே செய்திட்டேன்."

"தேங்க்ஸ் ஸார்!"

அதிகாலை நேரம் என்பதால் சாலையில் போக்குவரத்து இல்லை. கார் வேகமாகப் பாய்ந்தது.

"இன்னும் எவ்வளவு நேரம் ஸார் ஆகும், போக?"

"ஏன் டயர்டா இருக்கா?"

"இல்லை ஸார்! டாலியைப் பார்க்க ஆவலா இருக்கு. அதோட புது வேலை. கொஞ்சம் பதட்டமாகத் தான் இருக்கு."

அவன் சிரித்தான்.

"டாலியும் பதட்டமாகத்தான் இருந்தா... நேற்று ஃபுல்லா!"

"ஓ... ஏன் அப்படி?"

"நீங்க அவளுக்குப் பதினைந்தாவது கவர்னெஸ் என்று நினைக்கிறேன். அவள் செய்யும் சேட்டைகள்,

அடிக்கும் லூட்டி... இவற்றை எல்லாம் பார்த்து விட்டு வந்த எல்லோரும் பத்து நாளில் ஓடி விட்டார்கள்.

"டாலியின் ட்ராக் ரெகார்ட் அப்படி. உங்களை எப்படி வெளியே துரத்தலாம் என்று டாலி சதி ஆலோசனை செய்து கொண்டிருப்பாள்."

"சே... பாவம் ஸார்! குழந்தையை அப்படிச் சொல்லாதீங்க."

"சரி. நீங்களும் என்னை ஸார் என்று அழைக்காதீங்க. நான் உங்களை விட மூன்று வயது பெரியவன். தட்ஸ் ஆல்."

கார் ஒரு பெரிய பங்களா முன் நின்றது.

அதைப் பார்த்த அஞ்சனாவின் மனதில் ஏனோ அச்சம் பிறந்தது.

## 2

நீ வருவாய்
என
நான்
காத்துக்
கொண்டு
இருக்கிறேன்!

..............



நீ
நிலவாக
வந்தால்
நான்
இரவாகக்
காத்துக்
கொண்டு
இருக்கவா?

..........

நீ
வார்த்தையாக
வந்தால்
நான்
கவிதையாகக்
காத்துக் கொண்டு
இருக்கவா?
சொல்லடி, பெண்ணே!

அந்தப் பங்களா பிரம்மாண்டமாக இருந்தது.

பங்களாவைச் சுற்றி மரங்கள் செழுமையாக இருந்தன.

கேட் கதவைக் காவலாளி திறந்து நிரஞ்சனுக்குப் பவ்யமாக, "குட் மார்னிங்!" சொன்னான்.

காரை நிறுத்தி விட்டு இறங்கினான் நிரஞ்சன்.

"அஞ்சனா! வாங்க போகலாம்."

"சரி..." என்றபடியே தன் கைப்பையையும், பெட்டியையும் எடுத்துக் கொண்டாள் அவள்.

ஹாலில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

கதவு திறந்திருந்ததால், நிரஞ்சன் உள்ளே சென்றான்.

அவனைப் பின் தொடர்ந்தாள் அஞ்சனா.

ஹாலில் ஒரு ஐம்பது வயது மதிக்கத் தக்க பெண்மணி சோபாவில் உட்கார்ந்து ஏதோ புத்தகம் படித்துக் கொண்டிருந்தார்.

"ஏம்மா! தூங்காமல் விழிச்சிட்டு இருக்கீங்க? அப்புறம் உங்க டாக்டர் மகன் என்னைக் கோபிச்சுப்பான்!" என்றபடியே உள்ளே நுழைந்தான் நிரஞ்சன்.

"ஒரு நாள்தானேடா... பரவாயில்லை. அஞ்சனா! பிரயாணம் சௌகர்யமாக இருந்ததா? நான்தான் கஸ்தூரி. டாலியின் பாட்டி."

"வணக்கம் மேடம்! ட்ரெயினில் எந்தப் பயமு இல்லை. பிரச்சினையும் இல்லை. நன்றாக இருந்த மேடம்!"

"சரி... உன் அறையை நான் காட்டுகிறேன். கொஞ் நேரம் ஓய்வு எடு. டாலி எப்படியும் எட்டு மணிக் மேல்தான் கண் விழிப்பாள்."



"சரிங்க மேடம்!"

"அப்புறம்... காலையில் நீ காப்பி, டீ ஏதேனும் குடிப்பியா? இல்லை... பால் சொல்லட்டுமா?"

"எதுவும் வேண்டாம், மேடம்!"

"அம்மா! அஞ்சனா ரொம்ப ஸ்மார்ட் கேர்ள். ரொம்ப மெச்சூர்டா பேசறாங்க. டாலியை நல்லாக் கவனிப்பாங்க. அப்படிங்கிற நம்பிக்கை எனக்கு இருக்கு!" என்றான் நிரஞ்சன்.

"ம்... நம்பிக்கைதான் வாழ்க்கை."

"என்னம்மா கல்யாண் ஜுவல்லர்ஸ் விளம்பரத்தில வர்ற மாதிரிப் பேசறீங்க..." என்றான் சிரித்தபடியே நிரஞ்சன்.

கஸ்தூரியும் சிரித்தார்.

அஞ்சனாவின் இதழ்களில் புன்முறுவல் படர்ந்தது.

"போடா... போய்த் தூங்கு. சும்மா வளவளன்னு பேசிட்டே இருப்பான்."

"ஓ.கே. மாம்!" என்று அம்மாவின் கன்னத்தைச் செல்லமாகக் கிள்ளி விட்டு அங்கிருந்து நகர்ந்தான் நிரஞ்சன்.

"இன்னும் குழந்தை மாதிரி நடந்துக்கிறதைப் பார்!" என்று கஸ்தூரி முணுமுணுத்தபடியே நடந்தார்.

ஹாலைத் தாண்டி நடந்து கஸ்தூரியைப் பின்தொடர்ந்தாள் அஞ்சனா. வலது கைப்பக்கம் கடைசி அறையில் கஸ்தூரி நுழைந்தார்.

"இதுதான்ம்மா உன் அறை."

"சரிங்க மேடம்!"

"எல்லா வசதியும் இங்கே உண்டு. நீ ஓய்வு நேரத்தில் தொலைக்காட்சி பார்க்கலாம். புத்தகங்கள் வேண்டுமானாலும் படிக்கலாம்.

"ரூமில் ஏ.ஸி. உள்ளது. நீ நன்றாக இருந்தால்தான் டாலியை நன்றாகப் பார்த்துக் கொள்ள முடியும்."

"சரிங்க மேடம்!"

"உனக்கு வேறு ஏதாவது வேண்டும் என்றால் தயங்காமல் கேள். இந்தப் பெட்டியில் உள்ளதுதான் உன் மொத்தச் சாமானா? ரொம்பச் சின்னதாக இருக்கிறதே!"

"ம்... இங்கேயே எல்லா வசதியும் இருக்கும் என்று நீங்கள் கடிதத்தில் தெளிவாகக் குறிப்பிட்டு இருந்தீர்கள். அதனால் தேவையான துணிகளை மட்டும் உள்ளே வைத்துள்ளேன்."

"சரி அஞ்சனா! புது இடம். பழகுவதற்குக் கொஞ்சம் நாட்கள் ஆகலாம். ஆனால் டாலி சூட்டிகையான பெண். அதை ஞாபகம் வைத்துக் கொள்."

"சரிங்க மேடம்!"

"ம்... நீ ரொம்ப மெலிவாக இருக்கிறாயே... சரியாக சாப்பிட மாட்டாயா? ஏன் இவ்வளவு மெலிவாக இருக்கிறாய்?

"உன் வயதுப் பெண்கள் எல்லாம் பூசினாற் போல் இருக்க வேண்டாமா! நன்றாகச் சாப்பிட வேண்டும்



கல்லைத் தின்றாலும் ஜீரணிக்கக் கூடிய வயது இது. எதையும் ஒதுக்கக் கூடாது. புரிந்ததா?"

"சரிங்க மேடம்!"

"சரி அஞ்சனா! நீ ரெஸ்ட் எடு. எட்டு மணிக்கு மேல் எட்டரைக்குள் ஹாலிற்கு வந்து விடு. டாலி வந்து விடுவாள்."

"சரிங்க மேடம்!"

கஸ்தூரி தலை மறைந்ததும் அஞ்சனாவிடம் இருந்து ஒரு பெருமூச்சுப் பிறந்தது.

'நிரஞ்சன் சொன்னது உண்மைதான். கஸ்தூரி மேடமிடம் அன்பு கலந்த கண்டிப்பு இருக்கிறது. இதுவரை யாருமே இப்படிச் சாப்பாடு விஷயத்தைப் பற்றித் தன்னிடம் பேசியது இல்லை...' என்று நினைக்கும் பொழுதே கண்கள் கலங்கின.

உணவைப் பார்த்தாலே தன்னுள் ஏற்படும் பயம் போகுமா? அது மட்டும் பிரச்சினை ஆகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள் அஞ்சனா.

**கா**ஞ்சனாவின் நினைவு வந்தது. இந்நேரம் அவள் படித்துக் கொண்டிருப்பாள்.

வாரம் ஒரு முறை அவளிடம் பேச வேண்டும்.

தினமும் பேசி... தொல்லை செய்யக் கூடாது என்று தனக்குத் தானே முடிவு செய்தாள் அஞ்சனா.

குளித்து விட்டு வரலாம் என்று நினைத்தபடியே குளியல் அறை நோக்கிச் சென்றாள்.

குளித்து விட்டு வந்தவள்... ஒரு நீல நிறச் சுடிதாரில் தன்னை நுழைத்துக் கொண்டாள். கஸ்தூரி மேடம் சொன்ன டைம் ஆகி விட்டது. அதனால் ஹாலிற்குப் போகலாம் என்று தனக்குள்ளேயே பேசியபடியே ஹாலை அடைந்தாள்.

ஹாலில் சோபாவில் உட்கார்ந்தபடியே பேப்பரில் மூழ்கி இருந்தார் கஸ்தூரி.

"குட் மார்னிங் மேடம்!"

"குட் மார்னிங் அஞ்சனா!"

"டாலி கண் விழிச்சிட்டாளா... மேடம்?"

"ம்... வந்திடுவா. சில நேரம் ஒன்பது மணி வரைக்கும் கூடத் தூங்குவா."

"ஓ... ஸ்கூல் எல்லாம் கிடையாதா மேடம்?"

"ம்... ஆறு வயசு ஆச்சு அஞ்சனா. ஆனால் ஸ்கூலுக்கே போக மாட்டேன்னு ஒரே அடம்."

"ஒருவேளை இந்த ஸ்கூல் பிடிக்கலையோ என்னவோ மேடம்!"

கஸ்தூரியிடம் இருந்து பெருமூச்சுப் பிறந்தது.

"இந்த ஸ்கூல் பிடிக்குமோ என்னவோன்னு நினைச்சு இதுவரை எட்டு ஸ்கூல் மாத்தியாச்சு. இனிமே சென்னையைத் தவிர வேற ஏதாவது இடம்தான் தேடணும். இவ ஸ்கூலிற்கு..."



"ஓ... அப்படியா?"

"டாலி மத்த கேர்ள்ஸ் மாதிரி இல்ல... அஞ்சனா! நான் உன்கிட்ட அவ பேக்கிரவுண்ட் பற்றி அப்புறம் சொல்றேன்."

"ஓ.கே. மேடம்!"

"அம்மா! இன்னும் டாலி முழிக்கலையா?" என்று கேட்டபடியே ஹாலை ஒட்டி இருந்த அறையில் இருந்து வெளியே வந்தான் ஒரு இளைஞன்.

அவன் பார்வை அஞ்சனா மேல் படிந்தது. அவன் கண்களில் அதிர்ச்சி தெரிந்தது.

"வாடா ராகவ்! ராத்திரி போன எமெர்ஜென்ஸி கேஸ் என்ன ஆச்சு?"

"ம்... சர்ஜரியில கொஞ்சம் சிக்கல்ம்மா... பட் சக்ஸஸ்ஃபுல்லா முடிஞ்சுது."

"எது அண்ணா சக்ஸஸ்ஃபுல்? ஆபரேஷனா... இல்ல பேஷண்ட் நிலைமையா?" என்றபடியே வந்தான் நிரஞ்சன்.

"ஏய்... இரண்டுமேதான்டா!"

"அண்ணா! ஆபரேஷன் சக்ஸஸ். ஆனால் பேஷண்ட் டெட்ன்னு அடிக்கடி சொல்வாங்களே ஜோக்... அது மாதிரியோன்னு நினைச்சேன்."

"உன்னை..." என்று அவனை அடிக்கக் கை ஓங்கினான் ராகவ்.

ஆனால் நிரஞ்சன் சட்டென ஒதுங்கிக் கொள்ளவும்... பின்னால் நின்று கொண்டிருந்த அஞ்சனாவின் தோளில் பட்டது அந்த அடி.

"டேய்... என்னடா இது? பாவம். இன்னிக்குத்தான் வேலைக்குச் சேர்ந்திருக்கா இவ..."

"ஸாரி..." என்றான் ராகவ்.

"பரவாயில்லை!" என்றாள், மெதுவாக அஞ்சனா.

"அண்ணா... நீ டாலியை விட ரொம்ப மோசமா இருக்க. அவதான் வேலைக்கு வர்றவங்களை எல்லாம் ஏதாவது விஷமம் செய்து வீட்டை விட்டு வெற்றிகரமா துரத்திடறா.

"நீ என்னடான்னா... அடியே போடுற. சே! ரொம்ப மோசம் அண்ணா... நீ!"

ராகவ்வின் முகம் இறுகியது.

"அம்மா! ஹூ இஸ் ஷி?"

"ராகவ்! டாலியைப் பார்த்துக்கிறதுக்காக வந்த பெண் இவ. ஆசிரமத்தில் கேட்டிருந்தோம் அல்லவா? அவங்கதான் அனுப்பினாங்க."

"ஓ..."

"சரி... சாப்பிடலாம் வாங்க. அஞ்சனா! வாம்மா நீயும்..."

"இல்லை மேடம்! நீங்க சாப்பிடுங்க. நான் டாலி வந்த பின்பு சாப்பிடறேன்."



"இல்லை அஞ்சனா! எல்லோரும் ஒண்ணா உட்கார்ந்து சாப்பிடறதுதான் வழக்கம்.

"அதனால கூச்சப்படாம வாம்மா."

"இ... இல்லை..." என்று அவள் முடிக்கும் முன் ராகவ் குறுக்கிட்டான்.

"அம்மா! பசி எடுத்தா... தானா வரப் போறாங்க. ஏதோ வீட்டுக்கு வந்த முக்கியமான கெஸ்டை உபசரிப்பது போல உபசரிக்கிறீங்க..." என்றபடியே அங்கிருந்து அகன்றான்.

அங்கே கனத்த மௌனம் பரவியது. அஞ்சனாவின் முகம் அவமானத்தால் சிவந்தது.

"நீ வாம்மா. அவன் ஏதோ மூட் அவுட்டில் இருக்கிறான் போல. அவன் சார்பாக நான் உன்னிடம் மன்னிப்புக் கேட்கிறேன்."

"இல்லை மேடம்! பரவாயில்லை. நீங்க பெரியவங்க... என்கிட்ட போய் மன்னிப்பெல்லாம் கேட்கிறீங்க... வேண்டாம் மேடம், ப்ளீஸ்!"

"சரி... மன்னிப்புக் கேட்கவில்லை. ஆனால் இன்னொன்று கேட்கப் போகிறேன், தருவாயா?"

"என்ன மேடம்... என்கிட்ட என்ன இருக்கு, உங்களுக்குத் தருவதற்கு?"

"ம்... என்னை மேடம் என்று கூப்பிடுவதை நிறுத்திக்கோ. என்னை ஆன்ட்டி என்றே கூப்பிடு அஞ்சனா!" என்றார் கஸ்தூரி, புன்னகைத்தபடியே.

"சரி ஆன்ட்டி!" என்றாள்.

"வாம்மா... ப்ரேக்பாஸ்ட் சாப்பிடலாம்."

"சரி..." என்றபடியே அவரைப் பின் தொடர்ந்தாள் அஞ்சனா.

டைனிங் ஹால் விசாலமாக இருந்தது. டைனிங் டேபிளில் உணவு வகைகள் எல்லாம் மூடி வைக்கப்பட்டு இருந்தன. ஆனாலும் உணவு நறுமணம் நாசியை நிறைத்தது.

"உட்கார், அஞ்சனா!" என்றார் கஸ்தூரி, தன் அருகே உள்ள இருக்கையைச் சுட்டிக் காட்டி.

நிரஞ்சனும், ராகவ்வும் அருகருகே அமர்ந்தி ருப்பதைக் கவனித்தாள் அஞ்சனா.

ராகவ்வின் பார்வை ஏனோ அனலைக் கக்குவது போல் அவளுக்குத் தோன்றியது.

"முத்தம்மா! அஞ்சனாவை நல்லாக் கவனிக்க வேண்டியது உன் பொறுப்பு. ரொம்ப மெலிவாக இருக்கிறாள் பார்!"

"சரிங்கம்மா..." என்று அவள் முடிக்கும் முன் குறுக்கிட்டான் நிரஞ்சன்.

"அவ்வளவுதான்... ராகவ் அண்ணாவிடம் சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டியதுதான்!" என்றான் சிரிக்காமல்.

"தம்பிக்கு எப்பவும் விளையாட்டுதான்!" என்றாள் முத்தம்மா.



தட்டில் இருந்த உணவை வெறித்துப் பார்த்தபடியே இருந்தாள் அஞ்சனா.

## 3

நீ வருவாய்
என
நான்
காத்துக்
கொண்டு
இருக்கிறேன்!
..............
நீ
இயற்கையாக
வந்தால்
நான்
ஓவியனாகக்
காத்துக்
கொண்டு
இருக்கவா?
..............
நீ
இசையாக
வந்தால்

நான்
நாதமாகக்
காத்துக்
கொண்டு
இருக்கவா?
சொல்லடி, பெண்ணே!

"அம்மா... என்னம்மா அந்தப் பொண்ணு ஒண்ணுமே சாப்பிடலை!" என்று அங்கலாய்த்தாள் முத்தம்மா.

"அவளுக்கென்ன பிழைத்துக் கொண்டாள்... அகப்பட்டது நாங்கள் அல்லவா!" என்று சினிமாப் பாடலை மாற்றிச் சப்தமாகப் பாடினான் நிரஞ்சன்.

"ரஞ்சன்! போதும்... முத்தம்மா பாவம்."

"அம்மா.. அவங்க அதெல்லாம் தப்பா எடுத்துக்க மாட்டாங்க."

"டாக்டர் தம்பி! அந்தப் பொண்ணு நல்லாச் சாப்பிடறதுக்கு ஏதாவது நல்ல டானிக்கா கொடுங்க."

"சாப்பாடு நல்லா இருந்தா... எல்லாம் தானா நல்லாச் சாப்பிடுவாங்க, என்ன பண்றது, நம்ம நாக்கு இதுக்குப் பழகிப் போயிடுச்சு. அவங்களுக்குக் கொஞ்ச நாளாகும்!" என்று மீண்டும் முத்தம்மாவை வம்பு இழுத்தான் நிரஞ்சன்.



அங்கு நடப்பதைப் பற்றி எல்லாம் எதுவும் தெரியாது அஞ்சனாவிற்கு. காரணம்... அவள் தன் அறைக்கு வந்து விட்டாள்.

அறையில் நுழைந்தவள்... தன் கைப்பையில் இருந்த மாத்திரைத் தாளில் இருந்து ஒரு மாத்திரையை எடுத்து வாயில் போட்டாள்.

பின்பு வேக வேகமாகத் தண்ணீரைக் குடித்தாள்.

ஜன்னல் வழியாக ஒரு ஜோடிக் கண்கள் அவள் செய்வதைக் கவனித்தன.

"அம்மா... ஒருவேளை அஞ்சனாவுக்கு இங்கே நம்மளோட உட்கார்ந்து சாப்பிடக் கூச்சமா இருக்கோ... என்னவோ?"

"ரஞ்சன்! நீ சொல்றது சரிதான்."

"நாளையிலிருந்து அவர்கள் தனியாகச் சாப்பிடட்டும்."

"அப்படியே செய்யலாம், ரஞ்சன்."

"அண்ணன் ஏன் இன்னிக்கு அஞ்சனா முகத்தில் அடித்தாற் போல் பேசினார் என்று தெரியவில்லை."

"அதுதான் ரஞ்சன் எனக்கும் புரியவில்லை."

"அண்ணா எப்பவும் பட்டுன்னு யாரிடமும் பேச மாட்டாங்க. பட் இன்னிக்கு ரொம்ப ரூடாப் பேசினது ஏன்னு புரியலை?"

"வேலையில டென்ஷனா இருக்கும்பா!"

"அதெல்லாம் இல்லை அம்மா. அந்த எமெர்ஜென்ஸி கேஸ் ஆபரேஷன் சக்ஸஸ்ன்னுதானே சொன்னார்."

"அதுவும் ரைட்தான். அஞ்சனா... ஒருவேளை ராகவ் சொன்னதை மனசில் வைத்துக் கொண்டுதான் சரியாகச் சாப்பிடலையோ என்னவோ?"

"பெஸ்ட் வே. பேசாமல் அவர்கள் ரூமிற்கே சாப்பாட்டைக் கொடுத்து அனுப்பி விடுங்கள்."

"சரி ரஞ்சன்! டாலி இவளை என்ன பாடுபடுத்தப் போகிறாளோ? அஞ்சனா எத்தனை நாளைக்குத் தாக்குப் பிடிக்கப் போகிறாளோ... தெரியவில்லை!"

"அம்மா! அஞ்சனா இஸ் எ ஸ்மார்ட் கேர்ள். பொறுத்திருந்து பார்க்கலாம்."

'இன்னிக்கு ஒருவேளை எப்படியோ சமாளித்து விட்டேன். டெய்லி இப்படிச் செய்ய முடியுமா?' - குழம்பினாள் அஞ்சனா.

தன் வாழ்க்கை மட்டும் ஏன் இப்படிச் சிக்கல்கள் நிறைந்ததாக இருக்கிறது? இயல்பான வாழ்க்கையாக மாறவே மாறாதா... என் வாழ்க்கை?

சுய பச்சாதாபத்தால் கண்கள் கலங்கின. உணவு, உடை, இருப்பிடம் இவை மூன்றுதானே அடிப்படைத் தேவை, மனிதனாகப் பிறந்தவனுக்கு.



ஆனால் உணவு இருந்தும் சாப்பிட முடியவில்லை. இருப்பிடம் இருந்தும் தங்க முடியவில்லை. உடைகள் உடுத்துவதற்கு விருப்பம் இல்லை. சே... என்ன வாழ்க்கை இது? - என்று மனம் வெம்பினாள் அஞ்சனா.

காஞ்சனாவின் முகம் கண் முன்னே தோன்றியது. அவளுக்காக நான் எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்வேன்.

நான் உயிருடன் இருப்பதற்கு அவள்தான் காரணம். அதற்காகவாவது நான் நன்றிக் கடன் செலுத்த வேண்டும்.

இனி, இந்த மாதிரி எண்ணங்கள் மனதில் எட்டிப் பார்க்க விடக் கூடாது என்று தனக்குத் தானே பேசிக் கொண்டாள் அஞ்சனா.

கண்களைத் துடைத்துக் கொண்டு ஹாலை நோக்கி நடந்தாள்.

ஹாலில் கஸ்தூரி அருகே ஒரு சின்னப் பெண் உட்கார்ந்திருந்தாள். சைனாப் பொம்மை போல அழகாக இருந்தாள்.

இவள்தான் டாலியாக இருக்கும்... என நினைத்தபடியே முன்னேறினாள் அஞ்சனா.

"டாலி... பார். அஞ்சனாவே உன்னைத் தேடிக் கொண்டு வந்திட்டா... பார்."

"ஓ... இவங்கதானா அது! ஐ டோண்ட் லைக் ஹர்."

அஞ்சனா முகம் வாடியது.

"ஹாய் டாலி! குட் மார்னிங்."

முகத்தைத் திருப்பிக் கொண்டாள் டாலி.

"ஆன்ட்டி! நான் உங்களைத்தான் பார்க்க வந்தேன். ஏதாவது ஹெல்ப் வேணுமா?" என்று பேச்சை மாற்றினாள் அஞ்சனா.

டாலியின் முகத்தில் சட்டெனச் சந்தோஷம் மின்னுவதைக் கவனித்தாள் அஞ்சனா.

குழந்தைகளின் உலகமே இதுதான். அவர்களைக் கண்டு கொள்ளாமல் விட்டு விட்டால்... அவர்கள் நம்மைக் கவனிக்கத் தொடங்குவார்கள் என்ற சைக்காலஜ் அவளுக்குத் தெரியும்.

அதனால் வேண்டுமென்றே டாலியைக் கண்டு கொள்ளாமல் இருந்தாள்.

கவனத்தை ஈர்ப்பதற்காகக் கண்டிப்பாகக் குழந்தைகள் ஏதேனும் செய்வார்கள் என்று அவளுக்குத் தெரியும்.

டாலியும் அதற்கு விதி விலக்கு இல்லை என்று அவள் உள்ளுணர்வு கூறியது.

"அஞ்சனா! நீ என் அறைக்கு வாம்மா..." என்றார் கஸ்தூரி.

அஞ்சனா உடனே, "சரி ஆன்ட்டி!" என்றாள்.

இருவரும் பேசிச் சிரிப்பதைப் பார்த்த டாலியின் மனதில் கோபம் தீப் போல் படர்ந்தது.

இவ்வளவு நாள் இந்தப் பாட்டி என்னோடு மட்டுமே சிரித்துப் பேசுவார்கள். இப்ப என்ன வந்து விட்டது



இந்தப் பெண்ணுடன் இப்படிச் சிரித்துப் பேசுகிறார்களே... என்னைக் கண்டு கொள்ள மாட்டேங்கிறாங்களே... என்று எரிச்சல் வந்தது.

நைஸாகப் பூனை போல் அவர்கள் பின்னால் மெதுவாக அடி மேல் அடி வைத்து நடந்தாள் டாலி.

"என்ன அஞ்சனா! பாப்பா அப்படிப் பேசிடுச்சுன்னு கஷ்டமா இருக்கா?"

"நோ ஆன்ட்டி! ஷி இஸ் எ ஸ்மால் கேர்ள். அவள் பேசுவதை எல்லாம், நான் பெரிது படுத்த மாட்டேன். அதோடு முதல் நாளே அவள் என்னுடன் நன்றாகப் பழகுவாள் என்று நான் எந்த நம்பிக்கையையும் வைத்துக் கொள்ளவில்லை."

கதவுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு... நடந்த சம்பாஷணை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்த டாலியின் கோபம் பன்மடங்கானது.

காரணம்... தன்னை ஸ்மால் கேர்ள் என்று அஞ்சனா குறிப்பிட்டதுதான்.

பாட்டி குளியல் அறை சென்று விட்டதைக் கவனித்தாள் டாலி.

பாட்டியின் ரூமில் வலிக்காகப் பயன்படுத்தும் ஸ்ப்ரே அவள் கண்ணில் பட்டது. சட்டென அந்த யோசனை தோன்றியது.

வேகமாக ஷெல்ஃபில் இருந்த அந்த ஸ்ப்ரேயை எடுத்தாள். சத்தம் கேட்டுத் திரும்பினாள் அஞ்சனா.

ஸைக்கிள் கேப்பில் ஸ்ப்ரேயை அவள் முகத்தி படும்படி அழுத்தி விட்டு அங்கிருந்து சிட்டாகப் பறந்து விட்டாள் டாலி.

"அம்மா... அம்மா... எரியுதே...!" - அலறினார் அஞ்சனா.

குளியல் அறையில் இருந்து வேகமாக ஓ வந்தாள் அஞ்சனா.

"என்னம்மா ஆச்சு?" பதறினார் கஸ்தூரி.

"கண்ணு எரியுது ஆன்ட்டி!"

"என்னம்மா... தைலம் வாசனை வருது. தை மருந்தா கண்ணில் பட்டு விட்டது?"

"ஆ... ஆமாம்."

"டாலி வந்தாளா... இங்கே?"

"இல்லை ஆன்ட்டி!"

"பொய் சொல்லாதே, அஞ்சனா!"

"இல்லை ஆன்ட்டி. தலை வலிக்குதுன் நான்தான் தைலத்தை எடுத்தேன். முதல் தடவ அழுத்தினேன். தைலம் சரியாகப் படவில்லை.

"அதனால் இரண்டாவது தடவை கொஞ் வேகமாக அழுத்தம் கொடுத்து விட்டேன். அப்படியே பு மாதிரி ஸ்ப்ரே என் கண்ணில் பட்டு விட்டது."

"என்னம்மா நீ... ஜாக்கிரதையாக இருக்கச் சுவாத கண்ணு ரொம்ப முக்கியமான விஷயம்மா..."



"இப்ப பரவாயில்லை ஆன்ட்டி. எரிச்சல் குறைஞ்சிருக்கு."

"நான் ராகவ்வைப் பார்க்கச் சொல்றேன்ம்மா... இரு."

"வேண்டாம் ஆன்ட்டி! தண்ணீர் ஊற்றிக் கழுவினால் சரியாகி விடும்."

"அவன் இன்னும் ஹாஸ்பிடலுக்குப் போய் இருக்க மாட்டான். நான் போய் அவனை அழைத்துக் கொண்டு வர்றேன். நீ இங்கேயே இரும்மா..." என்றபடியே வேக வேகமாக அறையை விட்டு வெளியேறினார்.

கதவுக்கு வெளியே இருந்த டாலி... பாட்டி அறையில் இல்லை என்று தெரிந்ததும், வேகமாக அறையினுள் நுழைந்தாள்.

கண்கள் மூடி நாற்காலியில் உட்கார்ந்திருந்த அஞ்சனாவையே பார்த்தாள் டாலி.

"என்ன டாலி! என்ன வேணும் உனக்கு?"

"நான் இங்கே வந்தது உனக்கு எப்படித் தெரியும்? நீ கண்ணை க்ளோஸ் செய்திருக்கியே!"

"ம்... உன் தலையில் இருந்து வரும் பூ வாசனை உன்னைக் காட்டிக் கொடுத்து விட்டது."

"ஓ... அப்படியா!"

"சரி... பிரேக்பாஸ்ட் சாப்பிட்டியா?"

"இல்லை."

"ஏன்?"

"நீ வந்தது எனக்குப் பிடிக்கலை."

"சரி... என்ன செய்யலாம்?"

"நீ போ... இங்க இருந்து."

"எனக்கு வேற இடம் ஏதும் இல்லை டாலி. அதனாலதான் இங்க வந்திருக்கேன்."

"ஓ... ராகவ் சித்தப்பாவிடம் என்னைக் காட்டி கொடுத்து விடுவாயா?"

"என்ன செய்யலாம். சொல்?"

"அது உன் இஷ்டம். சொன்னால் சொல்லிக்கோ மறுபடியும் எல்லோரும் எனக்கு அட்வைஸ் செய்வார்கள் ஐ ஜஸ்ட் ஹேட் இட்."

பெரிய மனுஷி போல் பேசினாள் டாலி.

"உனக்கு அட்வைஸ் பிடிக்காதா?"

"நோ வே."

"சரி... உங்க சித்தப்பாவை நான் மேனேஜ் செய்து கொள்கிறேன். நீ கவலைப்படாதே டாலி."

அதைக் கேட்டபடியே அறையினுள் நுழைந்தான் ராகவ். அவன் கண்கள் கோபத்துடன் அவள் முகத்தில் பதிந்தன.

"என்ன ஆச்சு உனக்கு? அம்மா ஏதோ கண்ணில் பிரச்சினை என்றார்களே..."

"ஒன்றும் இல்லை டாக்டர்!" என்றாள், கண்களை மூடியபடியே அஞ்சனா.



"ஓக்... எனக்கு ஹாஸ்பிடலுக்கு நேரமாச்சு. என்ன பிராப்ளம் என்று சீக்கிரமாகச் சொல்லித் தொலை."

சட்டெனக் கண்களைத் திறந்தாள் அஞ்சனா.

கண்களில் மருந்தின் எரிச்சல் ஒரு பக்கம். இவனின் சுடு சொற்கள் வேறு மனதில் எரிச்சலை மூட்டுகிறதே என்று நினைத்தபடியே ராகவ்வைப் பார்த்தாள்.

"ஒன்றும் இல்லை டாக்டர். நீங்கள் ஹாஸ்பிடலுக்குப் போங்க..." என்றாள் தெளிவாக.

"நான் என்ன செய்ய வேண்டும் என்று எனக்குத் தெரியும்!" என்றபடியே வேகமாக அறையை விட்டு வெளியேறினான் ராகவ்.

## 4

ஒரு
வண்ணத்துப்
பூச்சியாக
என்
கை விரல்களுக்கு
இடையே நீ!
............
ஒரு
வீணையின்
தந்திகளாக

என்
கை விரல்களுக்கு
இடையே நீ!

............

ஒரு
பூமாலையாக
என்
தோள்களுக்கிடையே நீ!

...............

எல்லாமே நீ!
நீக்கமற என்னுள்
நிறைந்தவள் நீ!

கதவுக்குப் பின்னால் ஒளிந்திருந்த டாலி ராகவ் சித்தப்பாவின் தலை மறைந்ததும் அஞ்சனாவின் அறைக்குள் நுழைந்தாள்.

"ஹாய் டாலி! என்ன வேணும் உனக்கு இப்ப?" என்றாள் அஞ்சனா.

"சும்மா வந்தேன்... நான்."

"ஓ... அப்படியா?"

"ஏன் உன் அறைக்கு நான் வரக் கூடாதா?"

அவள் பேச்சிற்கும் அவள் வயதிற்கும் சம்பந்தமே இல்லை. குழந்தை என்று இவள் செய்வதை எல்லாம்



ஒதுக்கி விடுவதா... இல்லை, ஏதேனும் அட்வைஸ் செய்ய வேண்டுமா?

இந்தக் குழந்தை ஏன் இப்படி இருக்கிறாள்? தன் வயதுக்கு உரிய குறும்புகள் ஏதும் இல்லாமல் பெரிய மனுஷி போல் நடந்து கொள்கிறாளே... அது ஏன்?

ஒருவேளை இவளைச் சுற்றி உள்ள எல்லோருமே பெரியவர்களாக இருப்பதால் இவள் இந்த மாதிரி நடந்து கொள்கிறாளா... என்று குழம்பினாள் அஞ்சனா.

"என்ன, நான் கேட்டது புரியவில்லையா?"

"இது உன் வீடு டாலி. நீ எங்கே வேண்டுமானாலும் வரலாம்."

"ஓ... அப்ப நான் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். அப்படித்தானே?"

"ம்... பட் அது மற்றவர்களை ஹர்ட் செய்யக் கூடாது."

"என்னை மட்டும் மற்றவர்கள் ஹர்ட் செய்யலாமா?"

"யார் உன்னை ஹர்ட் செய்வார்கள் டாலி? இந்த வீட்டின் செல்ல இளவரசி நீ!"

"இதற்கு முன்பு என்னைப் பார்த்துக் கொள்ள வந்தவர்கள் எல்லோருமே என்னை ரொம்பவே திட்டி இருக்கிறார்கள்."

"அப்படியா என்ன?"

"யெஸ்... ரொம்ப பேட் எல்லாருமே..."

"ஓ... இப்பதான் அவங்க யாரும் இல்லையே..."

"பட் நீ இருக்கியே..."

"நான் உன்னைத் திட்ட மாட்டேன்."

"ம்... நான் நம்ப மாட்டேன்."

"என்ன செய்தால் நம்புவாய்?"

"நீ நான் சொன்னதை எல்லாம் செய்ய வேண்டும்."

"ம்... ஓ.கே. இப்ப என்ன செய்ய வேண்டும்?"

"நான் என்ன செய்தாலும் நீ என்னை வீட்டி இருப்பவர்களிடம் மாட்டி விடக் கூடாது."

பயங்கர தில்லாலங்கடிக் குழந்தையாக இருக்கிறாே இவள். சிவனிடம் ரொம்ப நைச்சியமாக வரம் வாங்கி அசுரனின் நினைவு ஏனோ அவளுக்கு வந்தது.

நான் யார் தலையில் கை வைத்தாலும் அவர்க பஸ்பமாக வேண்டும் என்று வரம் பெற்ற அசுரன், வரம் கொடுத்த சிவபெருமான் தலை மேல் கை வைக்கத் துடிப்பான்.

இந்தக் குழந்தையும் அதே மாதிரி ரொம் சாமர்த்தியமாக நடந்து கொள்கிறாளே... என்று அந் இக்கட்டான சூழலிலும் டாலியின் திறமையை நினைத் வியந்தாள் அஞ்சனா.

சரி... டாலி எந்த அளவிற்குப் போகிறாள் என்றுதா பார்க்கலாமே... என்று முடிவு செய்தவள், டாலியை பார்த்துப் புன்னகைத்தாள்.



"சரி டாலி! நீ என்ன செய்தாலும் நான் போட்டுக் கொடுக்க மாட்டேன்."

"ப்ராமிஸ்!" என்று கையை நீட்டினாள் டாலி.

"ப்ராமிஸ்!" என்று தன் கையை அவள் கை மேல் பதித்தாள்.

டாலியின் உதட்டில் சிரிப்பு பரவியது.

"சரி... நான் என் ரூமுக்குப் போகிறேன்..." என்றாள் டாலி.

"நானும் வரவா உன்னுடன்...?"

"வாயேன்."

அப்பாடா! ஏதோ பெரிய மனது வைத்து இந்தச் சின்னப் பெண் தன் அறைக்கு அழைக்கிறாள். இந்த வாய்ப்பைத் தவற விடக் கூடாது என்று தீர்மானித்த அஞ்சனா டாலியுடன் நடந்தாள்.

டாலியின் அறையைப் பார்த்துப் பிரமித்தாள் அஞ்சனா.

அறையின் திரைச்சீலை, சுவரில் உள்ள ஓவியங்கள் எல்லாமே ரொம்பவே இனிமையாக ரசிக்கும்படி இருந்தன.

சுவருக்கு அழகான பிங்க் வண்ணத்தில் பெயிண்ட், தரையின் கார்ப்பெட்டும் கிட்டத்தட்ட ரோஜா வண்ண இதழ் நிறத்தில் இருந்தது.

டோரா, டெடிபேர், சோட்டா பீம் எனச் சுவரை அலங்கரித்தன. எல்லாமே குழந்தைகளுக்குப் பிடித்த ஓவியங்கள்.

"எப்படி இருக்கு என் ரூம்?"

"வெரி நைஸ்."

"தேங்க்ஸ். நீயும் என் ரூமை ஷேர் செய்துக்கலாம். பட் நான் சொல்றதை நீ கேட்க வேண்டும். அப்பொழுதுதான் நான் உனக்கு எல்லாவற்றையும் தருவேன்."

இந்தப் பெண் ஆட்டி வைக்கும் பொம்மையாகி விடுவேன் போல நான்... என்று தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டாள் அஞ்சனா.

"என்ன, உனக்கு ஓ.கே.வா... இல்லையா?"

"ம்... ஓ.கே. டாலி!"

"சரி... இப்ப நாம ஏதாவது விளையாடலாமா?"

"ம்... யெஸ்."

"நான்தான் கவர்னெஸ். நீதான் குழந்தை. நான் சொல்றதை எல்லாம் நீ கேட்க வேண்டும்."

"சரி... என்ன செய்ய வேண்டும்? சொல்லுங்க மேடம்!" என்றாள், பணிவாக அஞ்சனா.

"வா... என்னோட!" என்று அவள் கையைப் பற்றி அழைத்துச் சென்றாள் டாலி.

அறையை விட்டுத் தோட்டத்தின் பக்கம் அவள் செல்ல... அஞ்சனா வியப்பில் ஆழ்ந்தாள்.

காரணம்... தோப்பு போலத் தென்னை மரங்கள் நிறைய இருந்தன. அதைத் தவிர மா, பலா, வாழை



மரங்களும் இருந்தன. பலாப் பழம் வேர் அருகே இருப்பதைப் பார்த்து ரசித்தபடி வந்தாள் அஞ்சனா.

தோட்டத்தின் நடுவே அமைந்திருந்தது டென்னிஸ் கோர்ட் ஒன்று. சற்றுத் தள்ளி ஒரு நீச்சல் குளம் இருந்தது.

இந்த மாதிரி ஒரு இடம் ஜனத் தொகை அதிகம் உள்ள இடத்தில் இருப்பது... அதுவும் டவுன்ஷிப் மாதிரி அப்பார்ட்மெண்ட் இல்லாமல் தனியாக வீட்டில் இந்த மாதிரி வசதிகள் இருப்பது ஆச்சரியம்தான் என நினைத்துக் கொண்டாள்.

"தோட்டம் ரொம்ப அழகா இருக்கு டாலி!"

"ம்... ஐ டு லைக் இட்."

"சரி... வீட்டில நம்மளைத் தேடப் போறாங்க. போகலாமா?"

"நோ வே. நான் சொல்லும் பொழுதுதான் வீட்டுக்குப் போக வேணும். நான் சொன்னது மறந்து போய் விட்டதா? நான்தான் கவர்னெஸ்."

"ஓ... ஓ.கே. ஸாரி. இப்ப என்ன செய்யணும்? சொல்லுங்க மேடம்!"

"வா... என்னோடு."

அவளைப் பின் தொடர்ந்தாள் அஞ்சனா.

நீச்சல் குளம் அருகே நின்றாள் டாலி.

"வா... நான் உனக்கு நீச்சல் சொல்லித் தர்றேன்."

"வேண்டாம் டாலி."

"பயப்படாதே. நான் உனக்குச் சொல்லித் தர்றேன். அப்புறம் என்னை மேடம் என்றுதான் கூப்பிடணும். நான்தான் கவர்னெஸ். நீ அதை மறக்கவே கூடாது. புரிந்ததா?"

"ஓ.கே. மேடம்!"

"நவ் ஜம்ப்!" என்றாள், நீச்சல் குளத்தைச் சுட்டிக் காட்டியபடியே.

"எ... எனக்கு ஸ்விம்மிங் தெரியாது."

"நான் உனக்கு டீச் செய்றேன்."

"வேண்டாம் டாலி!" என்று திரும்பி நடக்க முயன்றாள் அஞ்சனா.

"நோ... ஜம்ப்!" என்றபடியே அஞ்சனாவைத் தள்ளினாள் டாலி குளத்தினுள்.

நீச்சல் குளத்தினுள் மூழ்கத் தொடங்கினாள் அஞ்சனா.

"கை காலை அசைக்கணும். டூ தட்!" - மேலே இருந்தபடியே கத்தினாள் டாலி.

குளத்திலிருந்து எந்தச் சத்தமும் கேட்கவில்லை. குளம் அமைதியாக இருந்தது.

டாலிக்குப் பயம் தோன்றியது. சட்டென வீட்டிற்குள் ஓடினாள். தன் அறைக்குள் சென்றவள் கதவைத் தாழிட்டுக் கொண்டாள்.

"டாலி பாப்பா! அஞ்சனா மேடம் எங்கே?" என்று முருகன் குரல் கொடுத்தார், இரண்டு மணி நேரம் கழித்து



"எனக்குத் தெரியாது. நான் பார்க்கலை."

"எங்கே போயிட்டாங்க? அவங்க ரூமிலேயும் இல்லையே..." என்று முணுமுணுத்தார் முருகன்.

"என்ன முருகன்... என்ன தேடுறீங்க?" என்றார் கஸ்தூரி.

"மேடம்! அஞ்சனா மேடமைக் காணோம்."

"எங்கேயாவது வெளியில போயிருப்பாளோ... ஏதாவது அவசர வேலையா?"

"இல்லைம்மா. செக்யூரிட்டிகிட்டயும் கேட்டுட்டேனே... அவங்க அந்தப் பக்கம் வரவே இல்லையாமே!"

"ஆமாம். வெளியே போறதா இருந்தா நிச்சயமா என்கிட்ட சொல்லிட்டுத்தான் போவா. ஆச்சரியமா இருக்கே... சரி... ஏன் நீங்க அவங்களைத் தேடுறீங்க?"

"அவங்களுக்கு ஒரு கொரியர் வந்திருக்கு மேடம். அதான் அவங்ககிட்ட கொடுக்கலாம்னு..."

"ஓ... கொரியரை நீங்க வாங்கிட்டீங்கதானே!"

"ஆமாம் மேடம். நம்ம வீட்டிலதான் அஞ்சனா மேடம் இருக்காங்கன்னு சொன்னேன். என்னையே கையெழுத்துப் போட்டு வாங்கச் சொல்லிட்டார் கொரியர் கொடுத்தவர்.

"வழக்கமா நம்ம வீட்டுக்கு வர்ற பேர் இல்லையேன்னு அவருக்குச் சந்தேகம்... நான் அஞ்சனா மேடம் தான் பாப்பாவைப் பார்த்துக்க வந்திருக்காங்கன்னு

சொன்னவுடன் கேள்வி ஏதும் கேட்காமல் கொடுத்துட்டா
மேடம்!

"சரி... கொரியரை அவங்ககிட்ட கொடுத்திடலாம்னு
தேடிட்டு இருக்கேன்."

"டாலியைக் கேட்டீங்களா?"

"ம்... பாப்பாவைக் கேட்டேன்ம்மா. அதுக்கும்
தெரியலை."

உள்ளுணர்வு எச்சரிக்கை மணி அடிப்பதை
உணர்ந்தார் கஸ்தூரி.

"டாலி... டாலி..."

"ரூம்லதான்ம்மா பாப்பா இருக்கு."

"டாலி... டாலி! சீக்கிரம் வா."

"என்ன பாட்டி?"

"டாலி! அஞ்சனா எங்கே?"

"எ... எனக்குத் தெரியாது பாட்டி."

"பொய் சொல்லாதே, டாலி!"

"போங்க பாட்டி. எனக்குத் தூக்கம் வருது."

அறைக்குள் போக முயன்றவளின் ஃபிராக்கில்
ஒட்டிக் கொண்டிருந்த காய்ந்த போகன்வில்லா பூ ஒன்று
கஸ்தூரியின் கண்ணில் பட்டது.

"முருகா! அஞ்சனா தோட்டத்தில்தான் இருப்பா
சீக்கிரம் வாங்க... போகலாம். ஏதோ சரியில்லை. நீங்
தோட்டத்துப் பக்கம் தேடினீங்களா?"



"இல்லை மேடம்!"

"அப்ப சீக்கிரம் வாங்க. பழனியையும் அங்கே தோட்டத்துப் பக்கம் வரச் சொல்லுங்க."

"சரிங்க மேடம்!"

கிட்டத்தட்ட ஆறு ஏக்கர் அளவு பரந்து விரிந்திருந்த தோட்டத்தில் ஆளுக்கு ஒரு மூலையாகத் தேடத் தொடங்கினார்கள்.

கஸ்தூரியின் முகத்தில் பதட்ட ரேகைகள் தெரிந்தன.

"அம்மா... நீங்க பதட்டப் படாதீங்க..." என்று சமாதானப்படுத்தினார் முருகன்.

நீச்சல் குளம் அருகே அவர்கள் விரைந்தனர்.

## 5

தனியாக
நிற்கிறேன்
நான்!
.........
நான்
மட்டும்
இன்று!
.........
நீ
இல்லாததால்

நேரம்
நீண்டு
கொண்டே
போகிறது!
.........
நதியோரம்
ஒரு
ஒற்றைக்
கொக்கு
என்னைப் போலவே
காத்திருக்கிறது!

**நீ**ச்சல் குளம் அருகே அஞ்சனாவின் துப்பட்டா படிக்கட்டில் இருந்தது.

பதட்டத்துடன் குளத்தைப் பார்த்தார் கஸ்தூரி.

“முருகா! உள்ளே விழுந்திருப்பா போல!” என்றார் குரல் நடுங்க.

“அம்மா... நீங்க பதறாதீங்க...” என்றபடியே நீச்சல் குளத்தினுள் பாய்ந்தார் முருகன்.

அவர் வெளியே வரும் வரை எல்லாத் தெய்வங்களிடமும் பிரார்த்தனை செய்தபடியே இருந்தார் கஸ்தூரி.



மதிய உணவு உண்பதற்காக வீட்டினுள் வந்த ராகவ்... விஷயத்தை வேலைக்காரர்கள் மூலம் அறிந்து தோட்டத்தை நோக்கி ஓடினான்.

“அம்மா... என்ன ஆச்சு?”

“தெரியலைடா ராகவ்! இந்தப் பெண் அஞ்சனாவை ரொம்ப நேரமாக் காணலை. வீடு முழுக்க அலசி எடுத்துட்டோம். இப்பதான் அவ துப்பட்டாவை இங்கே பார்த்தோம்.”

“காட்... நீச்சல் தெரியாது போல. இது வேற நல்ல ஆழமாச்சே!” என்று சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே முருகன் அஞ்சனாவைத் தூக்கிக் கொண்டு குளத்திலிருந்து வந்தார்.

“முருகன்! அப்படியே படுக்க வைங்க. நான் ஃபர்ஸ்ட் எய்ட் கொடுக்கிறேன்.”

மயங்கிக் கிடந்த அஞ்சனாவைப் பார்த்த கஸ்தூரியின் மனம் பதை பதைத்தது.

‘சே! பாவம்... நன்றாக ஓடி ஆடிக் கொண்டிருந்த பெண் இப்படி ஆகி விட்டாளே!

எப்படிக் குளத்தினுள் விழுந்தாள்? கால் தவறி விழ இவள் குழந்தை இல்லை. கண்டிப்பாக இது டாலியின் வேலையாகத்தான் இருக்கும்!’ என்று முடிவு செய்தார்.

அஞ்சனாவின் வயிற்றை அழுத்தினான் ராகவ்.

தண்ணீர் வெளியேறியது. வாய் வழியாக. நாடியைப் பரிசோதித்தான். பின்பு அவள் வாயில் தம் பிடித்துக் காற்றை வேகமாக ஊதினான்.

பின்பு மூச்சுக் காற்று சீராக இருக்கிறதா என்று பார்த்தான். அது எல்லாம் சரியாக இருக்கிறது என்று தெரிந்த பின்புதான் அவன் மனதில் நிம்மதி படர்ந்தது.

"என்னடா ராகவ்! எப்படி இருக்கா?"

"அம்மா! பயப்பட ஏதும் இல்லை. பல்ஸ் எல்லாம் நார்மலாத்தான் இருக்கு."

அவர் முகத்தில் லேசாக நிம்மதிப் பூக்கள் பூத்தன.

"அப்புறம் ஏன்டா மயங்கியே இருக்கா?"

"ம்... நீச்சல் தெரியாததால ஷாக்... அதில மயங்கி விழுந்துட்டா போல..."

"ஓ... எப்பக் கண் விழிப்பா?"

"அம்மா! சினிமாவில் காட்டுற மாதிரி உடனே கண் விழிச்சிட மாட்டா. இன்னும் ஒரு மணி நேரம் ஆகும். இவள் ஈர உடையைக் கழற்றி விட்டு வேறு உடை போடணும்.

அப்புறம் ஹீட்டர் இருக்கிற அறையில் கொஞ்ச நேரம் படுத்திருக்கட்டும். இவளோட மெடிக்கல் ஹிஸ்டரி எனக்குத் தெரியலை. அதுதான் பயம்மா இருக்கு. ஜன்னி ஏதாவது வராமல் இருக்கணும்."

"சரிடா! நான் நம்ம ராணியை விட்டு இவளுக்கு வேற டிரஸ் போடச் சொல்றேன்."

"சரிம்மா... நான் இவளைத் தூக்கிட்டு வர்றேன்."

"சரிடா!"



"அம்மா! நீங்க பதட்டப்படாதீங்க. உங்க பி.பி. ஏறப் போகுது."

"இல்லைடா! எப்படி இப்படி ஆச்சுன்னு தெரியலை? பாவம்... நல்லாத் துடிப்பா இருந்த பெண்..."

"ம்... தெரியலை. ஒருவேளை தற்கொலை முயற்சி ஏதாவது இருக்கும்மா..."

"சே... சே... ரொம்ப மெச்சூர்டா பேசினா ராகவ்!"

"இந்தக் காலத்தில யாரையும் நம்ப முடியலைம்மா. எக்ஸாமில ஃபெயில் ஆனா தற்கொலை, லவ் ஃபெயிலியர் ஆனா தற்கொலை... ஃபிரெண்ட் சரியாப் பேசலைன்னா தற்கொலைன்னு... நிறையப் 'பெரிய' விஷயங்களுக்கெல்லாம் தற்கொலை செய்யத் துணிஞ்சிடறாங்க."

"ம்... நீ சொல்றது சரி ராகவ்! ஆனால் ஆசிரமத்திலேயே வளர்ந்த பெண்... அப்படிங்கிறதால நல்ல மனப் பக்குவம் இருக்கும்னு நான் நினைக்கிறேன்."

"சரி... உங்க நம்பிக்கை வீண் போகாதுன்னு நம்பலாம்."

அதற்குள் வீடு வந்துவிட... அஞ்சனாவை மெதுவாக அவள் அறையில் இருந்த படுக்கையில் படுக்க வைத்தான் ராகவ்.

"அம்மா! இவ உடையை மாற்றிய பின்பு என்னைக் கூப்பிடுங்க..."

"சரிடா!"

தன் அறைக்குள் வந்த ராகவ்... அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தான். கண் மூடி யோசித்தான்.

'அஞ்சனாதான் அந்தப் பெண்ணா? இல்லை... சினிமாவில் வருவது போல் இது ஏதாவது ட்வின்ஸ் வேலையா? அம்மாவிடம் கேட்கலாமா?

வேண்டாம்... அம்மா அஞ்சனா மேல் நல்ல அபிப்பிராயம் வைத்துள்ளார்கள். அதைச் சிதைக்க வேண்டாம். அப்படி என்றால் என்ன செய்வது? இந்தப் பிரச்சினைக்கு எப்படித் தீர்வு காண்பது?

ஆசிரமத் தலைவர் ஊரில் இல்லை. அவர் மானசரோவர் போயிருக்கிறார். திரும்பி வர ஆறு மாதத்துக்கு மேல் ஆகும். அது வரைக்கும் நான் இந்த விஷயத்தைக் கண்டு கொள்ளாமல் விட்டு விடலாமா?

வேண்டாம்... அது சரியில்லை. இதில் சம்பந்தப்பட்டிருப்பது டாலி வேறு. ஏற்கெனவே அவள் வாழ்க்கையில் நிறையப் பிரச்சினைகள்.

கூடவே... இப்ப புதிதாக அஞ்சனாவால் வேறு எந்தப் பிரச்சினையும் வராமல் இருக்க வேண்டுமே! எப்படிக் கையாள்வது இதை?' - குழம்பினான் ராகவ்.

"ராகவ்! அவ இப்ப உலர்ந்த உடைதான் போட்டுக் கொண்டிருக்கா. பக்கத்து அறையிலதான் படுக்க வெச்சிருக்கோம். நீ வந்து பார்க்கிறியா?" என்ற கஸ்தூரியின் குரல் அவனது யோசனையைக் கலைத்தது.

"ம்... இதோ வரேன்ம்மா!"



அறையில் பொம்மை போல் படுத்திருந்தாள் அஞ்சனா.

இந்தப் பெண்ணின் முகத்தில் ஒரு இன்னஸென்ஸ் தெரிகிறது. இவளா அந்த மாதிரி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பாள்? ஆச்சரியமாக இருக்கிறது... என்று நினைத்த படியே 'ஸ்டெத்' வைத்து அவளைப் பரிசோதித்தான்.

ரூம் ஹீட்டர் இருந்ததால் அறையில் சூடு பரவியது. அவளின் இதயத் துடிப்பு சீராக இருந்தது.

அப்டமென் பிரெஸ்ஸிங் முடித்து விட்டோம். மவுத் டு மவுத் ரிசக்சியேஷன் முறை கொண்டு தண்ணீரை வெளியேற்றி விட்டேன்.

ஆனால் இன்னும் நினைவு திரும்பவில்லையே! ஒருவேளை நேசல் டியூப்பை உபயோகப்படுத்தினால்தான் சரி வருமோ?

ஹாஸ்பிடலுக்கு அழைத்துப் போய் ட்ரீட்மெண்ட் அளிக்கலாமா? ஆக்சிஜன் மாஸ்க் அப்புறம் நேசல் டியூப் எல்லாம் பொருத்திச் சிகிச்சை அளிக்க வேண்டுமா என்று நினைத்துக் கொண்டான் ராகவ்.

அஞ்சனாவிடம் இருந்து மெல்லிய முனகல் சத்தம் கேட்டது. அவன் ஆர்வமாக அவளை நோக்கித் திரும்பினான்.

அவள் லேசாகக் கண்களைத் திறந்தாள்.

"அஞ்சனா! ஹவ் ஆர் யூ?"

"ம்... ம்..."

"என்ன நடந்தது என்று உனக்கு நினை வருகிறதா? நீ எப்படி ஸ்விம்மிங் பூலில் விழுந்தாய்?"

எழுந்து உட்கார முயன்றாள் அஞ்சனா. ஆனா உடல் ஒத்துழைக்க மறுத்தது.

"பரவாயில்லை, படு. அம்மா... அம்மா..." என் அழைத்தபடியே அங்கிருந்து வெளியேறினான் ராகவ்.

"என்னடா? என்ன ஆச்சு?"

"அம்மா... அவளுக்கு நினைவு திரும்பிடுத்து..."

"அப்பாடா! இப்பதான் மனம் நிம்மதியாச்சு. தள்ளு நான் போய்ப் பார்க்கிறேன்!" என்று அவனைக் கிட்டத்தட் தள்ளி விட்டு விட்டு உள்ளே சென்றார் கஸ்தூரி.

ராகவ்வின் இதழ்களில் புன்னகை படர்ந்தது.

"அஞ்சனா! இப்ப எப்படி இருக்க?"

"ம்... பரவாயில்லை ஆன்ட்டி!"

"எப்படிம்மா ஆச்சு? எப்படி நீ நீச்சல் குளத்தி விழுந்திட்ட?"

"அது... அது வந்து... நானும் டாலியு விளையாடிக் கொண்டிருந்தோம். அப்ப கால் தவறி நா விழுந்திட்டேன்."

"ஆனால் டாலி இதைப் பற்றி ஏதும் சொல்லலே இல்லையே?"

"டாலி பயந்து போய் இருப்பாள்."

"நீ எங்களிடம் எதையும் மறைக்கவில்லைதானே?"



"இ... இல்லை."

"டாலி உன்னைப் பிடித்துத் தள்ளினாள்தானே!" என்று பின்னால் இருந்து ராகவ் குரல் அழுத்தமாகக் கேட்டது.

"இல்லை..." என்றாள், அதே தொனியில் அஞ்சனா.

"பொய் சொல்லாதே."

"நீங்கள் எத்தனை தடவை கேட்டாலும் இதே பதில்தான்."

"டாலி என்னிடம் உண்மையை எல்லாம் சொல்லி விட்டாள்."

"என்ன உண்மை?"

"அவள்தான் உன்னைத் தள்ளி விட்டாள் என்று."

"ஸோ... டாலி பயந்து போய் உங்களிடம் பொய் சொல்லி இருக்கிறாள்."

"நோ வே. டாலிக்குப் பயமே கிடையாது."

"ஸோ... நீங்கள் டாலி சொல்வதை நம்புவீர்கள். அப்படித்தானே?"

"டாலியை எங்களுக்குப் பிறந்ததிலிருந்து தெரியும். அவளுக்குத் தன்னைப் பார்த்துக் கொள்ள கவர்னெஸ்ஸே இருக்கக் கூடாது என்று பிடிவாதமாக இருக்கிறாள்."

"அதனால் அவள் என்னைத் தள்ளி விட்டிருப்பாள் என்று நீங்களாகக் கற்பனை செய்வது தப்பு."

"இது கற்பனை இல்லை. நான் அவளிடம் பே... எல்லா விஷயத்தையும் கறந்து விட்டேன்."

அஞ்சனா மௌனமாக இருந்தாள்.

டாலி ரொம்ப மைண்ட்-ஸ்ட்ராங் கேர்ள். அவ... இவனிடம் உண்மையைச் சொல்லி இருப்பாளோ என்... குழம்பினாள் அஞ்சனா.

"நீங்கள் மிரட்டிக் கேட்டதனால் அவள் ஏதாவ... உளறி இருப்பாள்."

"என்னைப் பார்த்தால் மிரட்டுகிற மாதிரி தெரிகிறதா... என்ன? தப்பு நடந்தாலும், பொய் பேசுவதைக் கண்... கொள்ளாமலும் நான் இருந்து கொண்டிருக்கிறேன்.

"தப்பு என்று தெரிந்த போதும் அதைக் கண்டு... காணாமலும் நான் இருக்கிறேன்!" என்றவனின் விழிக... அவள் முகத்தில் பதிந்தன.

அஞ்சனா அவன் முகத்தைப் பார்த்தாள். இருவ... கண்களும் சந்தித்துக் கொண்டன.

அவன் கண்களில் தெரிந்த கோபம் அவளுக்... அச்சத்தை ஊட்டியது.

"சரி... ராகவ்! பாவம்... அவளே டயர்டா இருப்பா... அதனால் நீ உன் விசாரணை எல்லாம் அப்புறம் வைத்து... கொள்ளலாம்."

"அம்மா... நான் வக்கீல் இல்லை!" என்றா... சிரித்தபடியே ராகவ்.



கஸ்தூரியும் அவன் சிரிப்பில் இணைந்து கொண்டார்.

"டாலியை அனுப்பவா இங்கே?" என்றான் ராகவ்.

"அவ வருகிறாளா பார். அவ பிகு செய்வா!"

"யெஸ்... டிராமா குயின் அவ. இப்ப எல்லாம் பெண்கள் அப்படித்தான் இருக்கிறார்கள்."

அஞ்சனா அவன் முகத்தைப் பார்த்தாள்.

அவள் முகத்தில் பயம் படர... சட்டெனக் கண்களை மூடிக் கொண்டாள்.

## 6

நீ
இல்லாத
நாட்கள்
கற்பனை
செய்யப்
பயமாக
இருக்கிறது!
உயிர்
மட்டும்
என்
உடலில்

உன்
வருகையை
எதிர்பார்த்து
ஓட்டிக்
கொண்டு
இருக்கிறது!
..........
கருணை
பொழிவாயா
என் மேல்?
சொல்லடி, பெண்ணே!

"டாலி! மெதுவாப் போ. இப்படி பேலன்ஸ் செய்யணும் சைக்கிளை!" என்றாள் அஞ்சனா.

"நீயும் என் பின்னாடி உட்காரேன்."

"நான் உட்கார்ந்தால் சைக்கிள் உடைந்து போய் விடும். என் வெயிட்டை சைக்கிள் தாங்காது."

"கமான்... குழந்தையிடம் இப்படிப் பொய் பேசக் கூடாது!" என்ற குரல் கேட்க... திரும்பினாள் அஞ்சனா.

மரத்தடியின் கீழ் நிரஞ்சன் நின்று கொண்டிருந்தான். அவன் கண்களில் குறும்பு மின்னியது.

"ஹலோ... ஸார்!" என்றாள் அஞ்சனா.

"ஹலோ... அஞ்சனா! எப்படி இருக்கீங்க?"

"ரொம்ப நன்றாக இருக்கிறேன். நான் இங்கே வந்து மூன்று மாதங்கள் ஆகி விட்டன. நாட்கள் ஓடிப் போனதே தெரியவில்லை.

"சரி... நான் என்ன பொய் பேசினேன் என்று சொன்னீர்கள்?"

"ம்... உங்கள் வெயிட்டை சைக்கிள் தாங்காது என்று சொன்னது பொய் இல்லாமல் என்னவாம்?"

அஞ்சனாவின் உதடுகளில் புன்னகை விரிந்தது.

"டாலி உட்கார்... உட்கார். என்னை டபிள்ஸ் அடிக்க வேண்டும் என்று விடாமல் கேட்டுக் கொண்டிருந்தாள்."

"ம்... நீங்க சரியாகச் சாப்பிடுவதில்லை. உங்கள் உடம்பு ரொம்ப மெலிவாகத்தான் இருக்கிறது. எங்கள் வீட்டுக்கு வரும்பொழுது ரொம்ப மெலிவாக இருந்தீங்க. இப்ப ரொம்ப ரொம்ப மெலிந்து விட்டீர்கள்.

"என்ன பிரச்சினை அஞ்சனா, உங்களுக்கு? இஸ் ஸம்திங் பாதரிங் யூ!"

"சே... சே... அதெல்லாம் இல்லை. நன்றாகச் சாப்பிடுகிறேன் நான். அதுவும் முத்தழகியின் சமையல் ரொம்பப் பிரமாதமாக இருக்கிறது. என் உடல் வாகே அப்படித்தான்."

"ம்... ஓ.கே. ராகவ் அண்ணன் இன்று வெளி நாட்டில் இருந்து திரும்புகிறார்கள். அவர்கள் உன்னை செக் செய்து, டெஸ்ட் ஏதாவது எடுப்பது நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது."

"ஓ... ஸார் இன்னிக்கு வர்றாரா?"

"யெஸ்... முக்கியமான கான்ஃபிரென்ஸிற்க அண்ணா சிங்கப்பூர் போய் இருந்தார். எல்லாம் முடிந் பின்பு இன்றுதான் வருகிறார். அம்மா வீட்டைத் தலைகீழா மாற்றிக் கொண்டிருக்கிறார்கள்."

"ம்..."

"ஏன் சட்டுன்னு டல்லாயிட்டீங்க அஞ்சனா?"

"அதெல்லாம் எதுவும் இல்லையே!"

"ம்... சரி. வாடைக் காற்று அடிக்கிறது. உள்ளே போகலாமா?"

"ம்... போகலாமே. டாலி வா. உள்ளே போகலாம்."

"அஞ்சு! ஒரே ஒரு ரவுண்ட் ஓட்டணும்."

"டாலி! நாளைக்கு ஓட்டலாமே..."

"நோ... நோ. இப்ப ஓட்டணும்."

"அஞ்சனா! டாலி 'நினைத்ததை நடத்தியே முடிப்பவள் நான் நான்...' என்ற பாட்டுக்குப் பொருத் மானவள்.

"அவள் வைப்பதுதான் சட்டம். அவள் ஒன்ற தீர்மானித்து விட்டாள் என்றால் அது நிறைவேற வேண்டும், கண்டிப்பாக. வெரி அடமெண்ட்."

"ம்... சின்னச் சின்ன விஷயத்திற்குக் குழந்தைகள் பிடிவாதம் பிடிப்பது ரொம்ப சகஜம்."



"ம்... அது பெரிய விஷயங்களில் இல்லாமல் இருந்தால் நல்லது. டாலி உங்களுடன் நன்றாகப் பழகுவது எங்களுக்கெல்லாம் நிம்மதியாக இருக்கிறது."

"அவள் அருமையான குழந்தை. எந்த விஷயத்தையும் டக்கெனப் பிடித்துக் கொள்கிறாள்."

"சஞ்சய் அண்ணா இவளிடம் அன்பு செலுத்தினால் நன்றாக இருக்கும். ஒரு நல்ல தகப்பனாக அண்ணா இல்லாமல் இருப்பது எங்களுக்கெல்லாம் பெரிய குறை."

"ம்... அந்த ஏக்கத்தைப் போக்கத்தான் நீங்க எல்லாருமே டாலி மேல் அன்பு மழை பொழிகிறீர்களே..."

"ம்... ராகவ் அண்ணாவும் டாலி மேல் உயிரையே வைத்திருக்கிறார்கள்."

"அப்படியா என்ன?"

"என்ன... இப்படிக் கேட்டுட்டீங்க. அண்ணனுக்கு டாலின்னா ரொம்பப் பிரியம்."

"ம்... சில சமயம் நான் இப்படி நினைப்பது உண்டு."

"எப்படி?"

"நீங்கள் டாக்டராகப் போயிருக்கலாம். டாக்டருக்குத் தேவையான பொறுமை, இனிமையான பேச்சு எல்லாமே உங்களிடம் இருக்கிறது."

"ஸோ... அண்ணனிடம் அதெல்லாம் இல்லை என்று சொல்கிறீர்கள். அப்படித்தானே?"

"ஓ... நோ. நான் அப்படி ஏதும் சொல்லவில்லை."

"பொய்... பொய்..." என்று கத்தினான் நிரஞ்ச
சிரித்தபடியே.

"டாலி! வா... உள்ளே போகலாம்!" என்று சிரித்தபடி
உள்ளே ஓடினாள் அஞ்சனா.

டாலியும் நிரஞ்சனும் அவளைத் துரத்தினார்கள்.

சிரித்துக் கொண்டு ஓடிய அஞ்சனா சட்டென பிரே
போட்டது போல் நின்றாள்.

காரணம்... அங்கே வழியை மறைத்தபடி ராகவ் நின்
கொண்டிருந்தான்.

அவனை அங்கே எதிர்பார்க்காததால் திடுக்கிட்
அஞ்சனா.

அவன் முகத்தில் தெரிந்த இறுக்கம் அவளுக்குப் பு
இல்லை. ஆனால் மூன்று மாதங்களுக்குப் பின்பு... அ
கோபத்தை மீண்டும் பார்க்கிறாள்.

"ராகவ் அண்ணா!" என்று அவன் தோள் மேல்
பதித்தான், தோழமையுடன் நிரஞ்சன்.

"என்னடா! பிஸினஸ் எல்லாம் ஒழு
கவனிக்கிறதானே?"

"ம்... யெஸ் அண்ணா! ஏன் உங்களுக்குச் சந்தே
அதுவும் ஊரிலிருந்து வந்ததும் வராததுமா...!"

"இல்லை... நீ தேவை இல்லாத விஷயங்க
கவனம் செலுத்துகிறாயோ என்று நினைத்தேன்!" என்று
அஞ்சனாவைப் பார்த்தான் ராகவ்.



அஞ்சனாவின் முகம் அவமானத்தால் சிவந்தது.

நிரஞ்சன் இதழ்களிலும் புன்னகை உறைந்தது.

"சித்தப்பா... எனக்கு என்ன வாங்கிக் கொண்டு வந்தாய்?" என்று டாலி கேட்டவுடன் சூழ்நிலை மாறியது.

"ம்... உனக்குத்தான்டா எல்லாமே. வா... வா!" என்று அவளைத் தூக்கினான் ராகவ்.

"அஞ்சுவிற்கு என்ன வாங்கின?"

"அஞ்சுவா!" என்று புருவத்தை நெரித்தான் ராகவ்.

"அஞ்சனாதான் சித்தப்பா அஞ்சு!" என்று சிரித்தாள் டாலி.

"குழந்தைக்கு மரியாதை எல்லாம் சொல்லிக் கொடுப்பது இல்லையா? குழந்தைக்குத் தேவையான எல்லாவற்றையும் சொல்லிக் கொடுக்கத்தான் உனக்குச் சம்பளம்.

"புரிந்ததா? சும்மா வெட்டியாகப் பேசிக் கொண்டிருப்பதற்கு இல்லை..." என்று வார்த்தைகளைக் கொட்டி விட்டு டாலியைத் தூக்கிக் கொண்டு உள்ளே சென்றான் ராகவ்.

அஞ்சனா சிலை போல் நின்றாள். கண்கள் கலங்கின. உதடு துடித்தது.

"ஸாரி அஞ்சனா!" என்றான் நிரஞ்சன், மென்மையாக.

"இட்ஸ் ஓ.கே. ஸார்! குழந்தைகள் விஷயத்தில் சில நேரம் அடமெண்டாக இருக்க முடியாது. அவள் என்னை

அஞ்சு என்று அழைப்பதை நான் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை!" என்றாள், மெல்லிய குரலில்.

"இட்ஸ் ஓ.கே. அண்ணன் சார்பில் நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். டாலியிடம் நீங்கள் எவ்வளவு நல்ல மாற்றங்களை எல்லாம் ஏற்படுத்தி இருக்கிறீர்கள் என்று எனக்குத்தான் தெரியும்.

"எப்பவும் அறைக்குள்ளேயே முடங்கிக் கிடப்பாள் டாலி. ஆனால் நீங்கள் வந்த பின்புதான் அவள் விளையாடுகிறாள். சைக்கிள் விடுவது, ஸ்விம்மிங் என எல்லாவற்றிலும் ஆர்வமாக இருக்கிறாள்.

"ஆனால் அண்ணன் ஏன் இப்படிப் பேசினார் என்று தெரியவில்லை. அவர் எப்பவும் இவ்வளவு ஹார்ஷாகப் பேச மாட்டார்."

அஞ்சனாவிடம் இருந்து பெருமூச்சுப் பிறந்தது.

"அஞ்சனா மேடம்! கொஞ்சம் டாலியை வந்து கவனிக்க முடியுமா? டாலியைக் கவனிப்பது மட்டும் தான் உங்களுக்கு வேலை. அது தெரியும் என்று நினைக்கிறேன்!" என்று மீண்டும் ராகவ் வந்து கோபத்துடன் கத்த... அஞ்சனா கடகடவென வீட்டிற்குள் உள்ளே நுழைந்தாள்.

"அண்ணா... என்ன இது?" என்றான் நிரஞ்சன்.

"வாட்?"

"அண்ணா! வாட் இஸ் ராங் வித் யூ?"

"ஏன்... இப்படிக் கேட்கிற?"



"அஞ்சனா டாலியை நன்றாகப் பார்த்துக் கொள்கிறாள். டாலியிடம் நிறைய சேஞ்சஸ் தெரிகின்றது. அதனால் நீ அஞ்சனாவை அப்படிப் பேசியது சரியில்லை."

"ஸோ... நான் செய்தது தப்பு என்கிறாய். எனக்கே அட்வைஸ் செய்யுற அளவுக்கு நீ பெரிய ஆளாயிட்ட... அப்படித்தானே?"

"அண்ணா! ஏன் இப்படித் தப்புத் தப்பாக யோசிக்கிறாய்? நீ ரொம்ப மாறி விட்டாய்!"

"குட் ஜோக். மாறியது நானா... இல்லை, நீயா?"

ராகவ்வின் கேள்விக்குப் பதில் சொல்ல வாயைத் திறந்தான் நிரஞ்சன். அதற்குள் அம்மா அங்கே வருவது தெரிய அமைதியானான்.

"என்னடா! ரெண்டு பேரும் ரொம்ப நேரமா அரட்டை அடிக்கிறீங்க போல..."

"ஆ... ஆமாம் அம்மா. மூன்று மாதங்கள் ஆச்சே... அண்ணாவைப் பார்த்து."

"ம்... ராகவ்! சிங்கப்பூர் ட்ரிப் உபயோகமாக இருந்ததாப்பா?"

"ஆமாம் அம்மா. நிறையப் பயனுள்ள தகவல்கள் கிடைத்தன. மருத்துவத் துறையில் நவீன யுக்திகள் என்னென்ன செய்யலாம் என்பதைப் பற்றி நிறைய ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டார்கள்.

"ரோபோக்களை வைத்து அதன் உதவியோ துல்லியமாக, வெற்றிகரமாக எப்படி ஆபரேஷன் செய் லாம் என்பதைப் பற்றி அருமையாக விளக்கினார்கள்.

"ரொம்ப யூஸ்ஃபுல் ட்ரிப் அம்மா! சரி... நம் வீட் நிலைமை எப்படி இருக்கிறது?"

"அண்ணா! மூன்று மாதமாக வீட்டு நிலவ தெரியாதது போலக் கதை விடுகிறாயே...

"வாரம் ஒரு முறை வெப் கேமிரா வழியாக எங் எல்லோரிடமும் பேசிக் கொண்டுதானே இருந்தாய் என்றான், சிரித்தபடியே நிரஞ்சன்.

"ம்... என்ன இருந்தாலும் அம்மாவிடம் நேரடியா பேசுவது போல் வருமோ?" என்று கஸ்தூரியி கன்னத்தைக் கிள்ளினான் ராகவ்.

"ஏய்... என்னடா இதெல்லாம்?"

"ஆன்ட்டி! நீங்க எல்லாரும் உள்ளே வரணும் டாலி அடம் பிடிக்கிறா. ப்ளீஸ் உள்ளே வர முடியுமா என்றாள், கெஞ்சும் குரலில் அஞ்சனா.

"அச்சோ... குழந்தைதானே அவ. பாவ எல்லோரும் ஒண்ணா அவளோட டைம் ஸ்பென் செய்யணும்னு நினைக்கிறா. அது தப்பே இல்ல எனக்குத் தோன்றி இருக்கணும், இந்த எண்ணம்.

"நீ ஏன் அஞ்சனா ரொம்ப கெஞ்சிக் கேட்கிற இவ நீ வந்த பின்புதான் டாலியின் முகத்தில் சிரிப்புத் தெரி நீ அவளை ரொம்ப அழகாக மாற்றி இருக்கிறாய்.



"அதனால் நீ எங்களிடம் உரிமையாகவே கேட்கலாம். டாலியின் தேவைகளைப் பற்றி மட்டும் இல்லை அஞ்சனா... உன்னுடைய தேவைகளையும் நிறைவேற்றுவது எங்கள் கடமை."

ராகவ்வின் முகம் இறுகியது.

அஞ்சனாவின் முகம் பயத்தால் வெளிறியது.

## 7

என்
இதயத்தைத்
தொலைத்து
விட்டேன்,
என்னவளே!
எங்கே
என்று
தேடுகின்றேன்!
உன்
புன்னகையிலா?
............
உன்
கூந்தலின்
கருமையிலா?
............

உன்
காலில்
கொஞ்சி
விளையாடும்
கொலுசிலா?
எங்கே, பெண்ணே?

தன் வாழ்க்கை எப்படி அடியோடு மாறி விட்டு என்று நினைத்து வியந்தாள் அஞ்சனா.

டாலிக்குத்தான் நன்றி கூற வேண்டும். எ கவலைகளை எல்லாம் கரைத்தவள் அவள். எ வாழ்க்கையின் பிடிமானம் டாலி.

அம்புலி மாமா கதைகளில் ஒரு பூதம் வரும்.

ஒரு வேலை முடிந்த பின்பு, அடுத்து என்ன வேலை? வேலை கொடுங்கள் என்று எஜமானனை செல்லமாகத் தொல்லை செய்யும் அது.

அது போலத்தான் டாலியும். ஏதாவது வேலை கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும் அவளுக்கு.

அழகழகாகப் பொம்மைகள் வரைவது, க அடிப்பது, டி.வி. பார்ப்பது, கதைகள் கேட்பது, வி யாடுவது என எந்தெந்த நேரத்தில் என்னென்ன செ வேண்டும் என்று அவளுக்குத் தினசரி அட்டவணை மா அஞ்சனா போட்டுக் கொடுத்து விடுவாள்.



அதைப் பெரிய மனுஷி போல் டாலி அழகாகக் கடைப்பிடிப்பாள்.

அந்தக் குழந்தைக்கு ஏன் பெற்றோரின் அன்பும் அரவணைப்பும் கிடைக்கவில்லை?

கடவுள் ஏன் ஏதேனும் குறை வைத்து விடுகிறார் ஒவ்வொருவருக்கும்?

டாலியின் அம்மாவால் எப்படி இவ்வளவு அழகான குழந்தையை விட்டு விட்டுத் தனக்கென ஒரு வாழ்க்கை தேவை என்று சுயநலமாகத் தீர்மானிக்க முடிந்தது?

அம்மா என்றால் கருணைக் கடல் என்றுதானே அர்த்தம். அதெல்லாம் மாறி விட்டதா? அதனால்தான் டாலி போன்ற குழந்தைகள் எல்லோரும் அன்பிற்காக ஏங்குகிறார்களோ?

யோசனையில் மூழ்கி இருந்தவளைக் கலைத்தது காலடிச் சத்தம். சட்டெனத் திடுக்கிட்டுத் திரும்பினாள் அஞ்சனா.

தோட்டத்தில் அவள் உட்கார்ந்து கொண்டிருந்த இடம் அருகே ராகவ் நடந்து வருவது தெரிந்தது.

ராகவ்விற்கு ஏனோ என்னைக் கண்டால் பிடிக்கவில்லை. அதனால்தான் வந்த நாள் முதல் என் மேல் எரிந்து விழுகிறான்.

ஏதாவது குற்றம் கண்டுபிடித்துக் கொண்டே இருக்கிறான். டாலி தூங்குவதால்தான் நான் இங்கே வந்தேன்.

அவனைக் கண்டு நான் ஏன் பயப்பட வேண்டும்? நான் எந்தத் தப்பும் செய்யவில்லை. அதனால் நான் இயல்பாக இருப்பேன் என்று தனக்குத் தானே பேசிக் கொண்டாள் அஞ்சனா.

"என்ன, தனியா உட்கார்ந்திருக்கீங்க மேடம்?" அவன் குரலில் ஏளனம் கொப்புளித்தது.

"டாலி தூங்கறா ஸார். அதனாலதான்...."

"நீ எதற்காக இந்த வீட்டிற்கு வந்தாய்? சொல்."

அஞ்சனாவின் முகத்தில் வியர்வைப் பூக்கள் சட்டென மலர்ந்தன.

"நான் டாலியைப் பார்த்துக் கொள்ள வந்தேன்."

"ஆனால் அதைத் தவிர மற்ற வேலைகளும் செய்கிறாய் போல..."

"இ... இல்லை ஸார்! ஆன்ட்டி என்னை வேறு எந்த வேலையும் செய்ய விடுவதில்லை.

"சமையலுக்கு ஆள், டஸ்டிங் செய்ய ஆள், தோட்டத்தைப் பராமரிக்க ஆள் எனத் தனித் தனியாக ஆட்கள் ஒவ்வொரு வேலைக்கும் இருக்கிறார்கள். அதனால்தான் பொழுது போகாமல், இங்கே வந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறேன்.

"உங்களுக்கு ஏதாவது வேலை செய்ய வேண்டுமா ஸார்? இருந்தால் கொடுங்கள். எனக்குக் கம்ப்யூட்டர் நாலெட்ஜும் ஓரளவு உண்டு."



"ஹோ... இப்படிச் சொல்லித்தான் என் தம்பி நிரஞ்சனை உன் பக்கம் இழுத்தாயா?" என்று உறுமினான் ராகவ்.

அவள் முகம் கோபத்தால் சிவந்தது.

"ஸார்! இந்த மாதிரி அநாகரிகமாகப் பேசாதீங்க. நான் இங்கே டாலியைப் பார்த்துக் கொள்ள வந்த கவர்னெஸ். அவ்வளவுதான்!

"அதைத் தவிர என் மனதில் வேறு எந்தத் தவறான எண்ணமும் கிடையாது!" என்றாள், அழுத்தமாக.

"நீ ரொம்ப டீஸண்டான பெண். அப்படித்தானே? நான் நாகரிகம் இல்லாதவன். அப்படித்தானே?

"நீ எவ்வளவு நாகரிகமானவள் என்று எனக்குத் தெரியும். உடல் எடை கூடக் கூடாது என்று சாப்பிடாமல் வெறும் மாத்திரையை மட்டுமே சாப்பிட்டுக் காலத்தைத் தள்ளுபவள் நீ. சைஸ் ஸீரோவுக்கு எய்ம் பண்ணுகிறாயா?

"மாடலாகப் போக வேண்டும் என்ற ஆசையா உனக்கு? அதற்கான கூடுதல் தகுதிகள் உன்னிடம் இருக்கிறது."

அவள் கண்களில் பயம் தெரிந்தது.

"டாலி முழிக்கிற நேரம். நான் போகிறேன்..." என்றபடியே எழுந்தாள் அஞ்சனா.

"ஏய்..." என்று அவள் கைமணிக்கட்டைப் பற்றினான் ராகவ்.

"டாக்டர்! ப்ளீஸ்... விடுங்கள். வலிக்கிறது."

"ஸோ... நான் சொன்னதெல்லாம் உண்மை தானே?"

"என் வேலையில் குறை இருந்தால் சொல்லுங்கள்

"என் பெர்சனல் விஷயத்தில் தலையிடாதீர்கள் என்று சொல்கிறாய். அப்படித்தானே?

"தலையிடுவேன் நான். ஏனென்றால் டாலி உ வழியைப் பின்பற்றக் கூடாது. உன்னைப் போல் அழகா மெலிந்த தோற்றம் வர வேண்டும் தனக்கு என்று டா நினைக்கக் கூடாது.

"உன்னைப் போல மாத்திரைகளை மட்டுமே சாப்பாடாகச் சாப்பிடக் கூடாது. உன்னைப் போ பார்ட்டிகளில் மதுக் கிண்ணத்துடனும், சிகரெட்டுடனு திரியக் கூடாது.

"அதனால் நான் உன் பெர்சனல் விவகாரங்களி தலையிடுவேன்!" என்று உறுமினான் ராகவ்.

அஞ்சனா பதில் பேச முடியாமல் சிலை போ நின்றாள். அவள் உடல் மேல் சேற்றை யாரோ வீ எறிந்தது போல் உணர்ந்தாள்.

"அஞ்சு! நான் முழிச்சிட்டேன். நீ இங்கே என்ன செய்யறே?"

"வாடா செல்லம்! நான் தோட்டத்தில் காற்று வாங் வந்தேன்."



"நீ பொய் சொல்ற அஞ்சு."

"இல்லைடா... குட்டிம்மா!"

"காற்று நமக்கு ஃப்ரீயா கிடைக்கும். அதை ஏன் நீ வாங்க வந்தே? பொய்தானே அது!" என்று சிரித்தாள் டாலி.

அஞ்சனாவும் லேசாகச் சிரித்தாள்.

"வாடா கண்ணா!" என்று அவள் கைபற்றிப் பேசியபடியே நடந்தாள் அஞ்சனா.

டாலியும் அஞ்சனாவும் நடந்து போவதையே வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றான் ராகவ்.

இவள் என்ன இவ்வளவு அழுத்தமாக இருக்கிறாள். தப்பு செய்து விட்டேன். இனி அப்படி எல்லாம் செய்ய மாட்டேன் என்று சொல்லாமல்... என் வழியில் குறுக்கிடாதே என்று சொல்கிறாளே!

ரொம்பத் திமிர்தான் இவளுக்கு. ஆனால் டாலியிடம் பிரியமாக நடந்து கொள்கிறாள். இல்லை... அட்லீஸ்ட் நடிக்கிறாள் என்றே வைத்துக் கொள்ளலாம்.

ஆனாலும் இவளைக் கண்காணிக்க வேண்டும். இவ்வளவு நாள் கான்ஃபிரென்ஸில் இருந்ததால் முடியாமல் போய் விட்டது.

இனிமேல் அந்த மாதிரி இருக்க முடியாது. நிரஞ்சனிடம் இவளைப் பற்றிச் சொல்லலாமா? அவனுக்கு விஷயம் தெரிந்தால் அவன் ஜாக்கிரதையாக இருப்பான் தானே!

ஆனால் அவனுக்கு முன்கோபம் அதிகம். பட்டென அஞ்சனாவிடம் எடுத்தோம், கவிழ்த்தோம் என்பது போல் பேசிவிடப் போகிறான் என்று யோசித்தபடி இருந்தான் ராகவ்.

"ஆன்ட்டி! டாலியைப் பற்றி ஒரு விஷயம் உங்களிடம் பேச வேண்டும்."

"சொல்லும்மா அஞ்சனா!"

"ம்... அவளைப் பள்ளிக்கு அனுப்பிப் பார்க்கலாமே... வீட்டில் நாம் எவ்வளவு சொல்லிக் கொடுத்தாலும் பள்ளிக்கூடம் மாதிரி வராது.

"அதுவும் டாலிக்கு அங்கே நிறையப் பேருடன் பேசிப் பழகுவதற்கு வாய்ப்பு அதிகம். அவளுக்கு நிறைய ஃபிரண்ட்ஸ் கிடைப்பார்கள். அதனால்தான் நான் அவளைப் பள்ளிக்கூடம் அனுப்புவது பற்றி உங்களிடம் பேசலாம் என்று வந்தேன்."

"ம்... நீ சொல்வது எல்லாம் சரிதான். ஆனால்..." என்று இழுத்தார் கஸ்தூரி.

"என்ன ஆன்ட்டி தயங்கறீங்க?"

"டாலி ஏற்கெனவே பள்ளிக்கூடம் போயிருக்கா. அது உனக்குத் தெரியும்தானே?"

"ம்... ஆமாம் ஆன்ட்டி!"

"அவளை இதுவரை நிறைய ஸ்கூல்ல போட்டுப் பார்த்துட்டோம். ஆனால் எதுவும் அவளுக்கு செட் ஆகலை. நான் அதையும் உன்கிட்ட சொல்லி இருக்கேன்னு நினைக்கிறேன்."

"ம்... சொல்லி இருக்கீங்க."

"அவளுக்கு ஏன் ஸ்கூல் செட் ஆகலை தெரியுமா?"

"ஏன் ஆன்ட்டி?"

"டாலியை மற்றப் பசங்க எல்லாம் வம்புக்கு இழுக்குறாங்க போல... அவளுக்கு அம்மா, அப்பா சரியில்லைன்னு..."

"ஓ... இதுதான் காரணமா?"

"ஆமாம். அவளுக்கு அதனால கொஞ்சம் காம்ப்ளெக்ஸ் இருக்குமோன்னு சந்தேகமா இருக்கு அஞ்சனா எனக்கு"

"ஓ.கே. இப்படிச் செய்யலாமா ஆன்ட்டி?"

"எப்படி அஞ்சனா?"

"டாலியின் அம்மாவும் அப்பாவும் வெளிநாட்டில் இருப்பதாகச் சொல்லி விடலாம். அவர்கள் திரும்பி வர நான்கு... இல்லை ஐந்து வருடங்கள் ஆகும் என்று ஸ்கூல் நிர்வாகத்திடம் சொல்லி விடலாம்.

"டாலி இப்பொழுது உங்கள் பொறுப்பில் இருக்கிறாள். நீங்கள்தான் அவளுக்கு கார்டியன் என்று சொல்லி விடலாம்."

"நானா அவளுக்கு கார்டியன். எனக்கு வயசாகி விட்டதே அஞ்சனா?"

"சரி... அப்ப உங்க பேரை கார்டியனாகப் போ... வேண்டாம். நிரஞ்சன் ஸாரை வேண்டுமானா... கார்டியனாகப் போடலாம்."

"ஏன்... என் பெயரைப் போடலாமே! என் ஞாபக... உனக்கு வரவில்லையா?" என்றபடியே அருகே வந்தா... ராகவ்.

"இல்லை... டாக்டர். நீங்கள் அடிக்கடி டூர் போ... வேண்டி வரலாம். அதனால்தான்..."

"ம்... இந்த வீட்டில் நான் இருப்பது உனக்கு... சங்கடமாக இருக்கிறது போல் தெரிகிறது. அப்படித்தானே..."

"ராகவ்... ஏன் அஞ்சனாவை வம்புக்கு இழு... கிறாய்?"

"அம்மா... அப்படி எல்லாம் இல்லை. நிரஞ்ச... பெயர் வேண்டாம். என் பெயரையே கார்டியன் பெயராக... போட்டு விடலாம் என்றுதான் அஞ்சனாவிடம் சொல்லி... கொண்டிருந்தேன்.

"என்ன அஞ்சனா! உனக்கு அது சம்மதம்தானே?"

"டாலியைப் பள்ளியில் சேர்க்க வேண்டும் என்பதே... என் விருப்பம். மற்ற விஷயங்களைப் பற்றி முடி... எடுக்கும் அதிகாரம் எனக்கு இல்லை."

"ஸோ... நான் சொல்வதில் உனக்கு உடன்பாடு... இல்லை. அப்படித்தானே!" என்று கோபமாகத் தெறித்த... வார்த்தைகள்.



"ராகவ்... என்ன இது? ஏன் இப்படிக் கோபப்படுற? எப்பவும் உனக்குக் கோபம் வராதே... இந்த மாதிரியெல்லாம்..."

ராகவ் தலை குனிந்தபடி மௌனமாக இருந்தான்.

"ஆன்ட்டி! நான் டாலியைத் தூங்க வைக்கணும். வர்றேன்!" என்றபடியே அங்கிருந்து வேகமாக நடந்தாள் அஞ்சனா.

அவள் மனதில் புயல் வீசிக் கொண்டிருந்தது.

'ராகவ் ஏன் என்னிடம் சண்டை போடுகிறான்? நான் பேசும் ஒவ்வொரு வார்த்தைக்கும் வேறு ஒரு அர்த்தம் கண்டுபிடித்து என்னைக் கண்டிப்பதே இவனுக்கு வாடிக்கையாகி விட்டது.

அதோடு நான் உட்கொள்ளும் மாத்திரைகளின் விவரம் இவனுக்கு எப்படித் தெரிந்தது? இவன் என் அறைக்கு வந்து என் பொருட்களை எல்லாம் பார்த்திருப்பானா?'

நினைப்பே அவளுக்குச் சோர்வை வரவழைத்தது.

அஞ்சனா குழம்பினாள்.

## 8

தேவதை
பூமிக்குத்
தேவை
என்று

அவசரமாக
ஒரு
சட்டம்
போடப்பட்டது
இந்திர லோகத்தில்!
...............
அப்பொழுதுதான்
நீ
பிறந்தாயோ?
என்
இதய
வானில்
இறக்கை
இன்றிப்
பறக்கும்
தேவதை நீ!
என் வசமாவது
எப்பொழுது?

**டா**லி பள்ளிக்கூடம் போகத் தொடங்கியது மு அஞ்சனாவிற்கு வேலைப் பளு ரொம்பவே குறைந் விட்டது.

பொழுது போகாமல் என்ன செய்வது என்று புரியாம போர் அடித்தது அவளுக்கு.



தோட்டத்துப் பக்கம் காலார நடப்பாள். வீட்டில் உள்ள பொருட்களை எல்லாம் தூசு தட்டி வைக்கலாம் என்று நினைப்பாள்.

ஆனால் அதற்குத் தனியாக ஒரு வேலையாள் இருப்பதால் அதற்கும் வாய்ப்பு இல்லாமல் போய் விட்டது.

"என்ன அஞ்சனா! ரொம்ப போர் அடிக்குதா?" என்றார் கஸ்தூரி.

"ஆமாம் ஆன்ட்டி! டாலி ஸ்கூல் போறா. அது ரொம்ப நல்ல விஷயம். ஆனால் எனக்கு ரொம்பப் போர் அடிக்குது."

கஸ்தூரி கலகலவெனச் சிரித்தார்.

"ஏன் ஆன்ட்டி சிரிக்கிறீங்க?"

"இல்லை... பாஸ் கிட்ட பயம் இல்லாமல் போர் அடிக்குது. எனக்கு வேலை இல்லைன்னு சொல்ற ஒரே ஆள் நீயாகத்தான் இருக்கும்."

"ம்... நான் உங்களை இந்த வீட்டில் பாஸ் மாதிரி நினைத்ததில்லை ஆன்ட்டி! ஒரு முறை கூட அந்த மாதிரி எண்ணம் என் மனதில் தோன்றியது இல்லை."

"அப்ப வேற யாரையோ நீ பாஸ் மாதிரி நினைத்துக் கொண்டிருக்கிறாய். அப்படித்தானே?"

"ஆன்ட்டி! ஐயோ... அப்படி எல்லாம் ஏதும் இல்லை."

"நீ இப்படி அலறும்போதே தெரியுது அஞ்சனா... ஏதோ மேட்டர் இருக்கு என்று. ராகவைத்தானே நீ பாஸ் மாதிரி நினைத்துக் கொண்டிருக்கிறாய்..."

"என்ன, என் பெயர் அடிபடுகிறதே இங்க..." என்றபடியே உள்ளே நுழைந்தான் ராகவ்.

ராகவைப் பார்த்தவுடன் அஞ்சனாவின் முகம் சிவந்தது. ஏதாவது காரணம் கண்டுபிடித்துச் சண்டை போடுவது இவன் வேலையாச்சே என்று நினைத்து அவள் மனம் பதறியது.

"ஆன்ட்டி! நான் கிளம்பறேன். டாலிக்கு இன்னிக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டியவை எல்லாம் நான் எடுத்து வைக்க வேண்டும்..." என்றபடியே வேகமாக அங்கிருந்து நடந்தாள்.

அஞ்சனா தன்னை அவாய்ட் செய்கிறாள் என்று ராகவ்விற்குப் புரிந்தது. தப்பு செய்வதால்தான் இப்படி எல்லாம் பிஹேவ் செய்கிறாள் என்று நினைத்தவுடன்... அவன் மனதில் கோபம் தீப் போல் படர்ந்தது.

"என்ன ராகவ், என்ன யோசனை? நைட் ஹாஸ்பிடலுக்குப் போகணுமான்னு ரெண்டு தடவை கேட்டேன். பதிலே காணோம்."

"ஓ... அப்படியா அம்மா? ஏதோ யோசனை!"

"ம்... அதுதான் என்ன யோசனைடா?"

"வேறு என்ன, டாலியைப் பற்றித்தான்."

"என்ன யோசனை டாலியைப் பற்றி..."

"இல்ல... டாலி உண்மையிலேயே சந்தோஷமா இருக்காளா? இல்ல... ஏதாவது அஞ்சனா மிரட்டி வைக்கிறதால இந்த மாதிரி ஹாப்பியா இருக்காளா?"



அதைக் கேட்டுக் கஸ்தூரி சிரித்தார்.

"என்னம்மா, ஏன் சிரிக்கிறீங்க?"

"டாலியை யாராவது மிரட்ட முடியுமா என்ன?"

"அதுவும் சரிதான்."

"அஞ்சனாவை முதலில் டாலிக்குப் பிடிக்கவில்லைதான். அது உனக்குத் தெரியும்."

"ம்... ஆமாம். அப்புறம் என்ன மேஜிக் நடந்தது?"

"வேறென்ன, ஸ்விம்மிங் பூலில் அஞ்சனாவைத் தள்ளி விட்டது டாலிதான். ஆனால் அதை அஞ்சனா சொல்லவே இல்லை. டாலியை அவள் காட்டிக் கொடுக்கவே இல்லை.

"கெட்டதிலும் நல்லது நடக்கும் என்பது போல் அஞ்சனா நீச்சல் குளத்தில் விழுந்ததால்தான் டாலிக்கு அவள் மேல் அன்பும் நம்பிக்கையும் பிறந்தது.

"சரி... உனக்கு ஏன் அஞ்சனா மீது சந்தேகம்? அவள் வந்த முதல் நாளில் இருந்து நீ அவள் மேல் கோபப்பட்டுக் கொண்டிருக்கிறாய்!" என்றார் ராகவ்வின் முகத்தைப் பார்த்தபடியே கஸ்தூரி.

"தெரியலை அம்மா! சில பேரைப் பார்த்தாலே பிடிக்காமல் போகிறது. எந்தக் காரணமும் இல்லை."

"ராகவ்! நீ பேசுவது தப்பு. நீ ஒரு டாக்டர். இந்த மாதிரி எண்ணங்களை எல்லாம் முளையிலேயே கிள்ளிவிட வேண்டும்!" என்றார் கண்டிப்பான தொனியில் கஸ்தூரி.

"முயற்சி செய்கிறேன், அம்மா!"

"அஞ்சனா ரொம்ப நல்ல பெண் ராகவ். டாலியு உலகத்தை அழகானதாக, இனிமையானதாக மாற் பெருமை அவளைத்தான் சேரும்."

"ம்... ஓ.கே."

"சஞ்சய் கவலையை மறக்க இசையில் தன்ன மூழ்கடித்துக் கொள்கிறான். டாலியின் அம்மா காவி உ அணிந்து ஏதோ ஒரு மலையில் சாமியார்கள் மத்தி எதையோ தேடித் திரிகிறாள்.

"டாலியின் பெற்றோர் இந்த லட்சணத்தில் இருக்கு பொழுது எங்கிருந்தோ வந்த பெண் இந்த அஞ்சன டாலியின் மேல் அன்பைப் பொழிகிறாள்.

"குழந்தைகளைக் கையாளுவதற்கு ஒரு திற வேண்டும் ராகவ்! அது எல்லோருக்கும் வரா அஞ்சனாவிடம் அது இயல்பாக அமைந்திருக்கிறது.

"நீ அதைக் கெடுத்து விடாதே. நான் சொல்வ உனக்குப் புரியும் என்று நம்புகிறேன்."

அம்மா தன்னிடம் கண்டிப்புக் காட்டிப் பேசுவதை கவனித்தான் ராகவ். அம்மா ரொம்ப நாட்களுக்குப் பின் தன்னிடம் அப்படிப் பேசியது அவனுக்கு வியப்பா இருந்தது.

ஆனால் அம்மா சொல்வதில் உண்மை இருக்கிற டாலி இப்பொழுதுதான் மற்றக் குழந்தைகள் போல் இருக்கிறாள்.



அதற்குக் காரணம் அஞ்சனாதான். அம்மா சொல்வது போல் அஞ்சனாவிடம் ஏதோ ஒரு வசிய சக்தி இருக்கிறது. அதனால்தான் டாலி அவளிடம் ஒட்டிக் கொண்டாள் போல.

டாலி மட்டுமா? உன் கதை என்ன... என்று அவன் மனதில் இருந்து ஒரு குரல் கேட்டது.

என்னடா இது சோதனை என்று ராகவ் திகைத்தான். என் மனதில் அஞ்சனாவைப் பற்றி இந்த மாதிரி எண்ணம் இருந்திருக்கிறதா?

என் மனதில் ஒளிந்து கொண்டிருக்கும் ஆசை வெளியே தலை காட்டக் கூடாது என்றுதான் நான் அஞ்சனாவிடம் சுள்ளென விழுகிறேனா?

அவள் செய்வதில் எல்லாம் தப்புக் கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறேனா... என்று தன்னைப் பற்றிச் சுய அலசலில் ஈடுபட்டான் ராகவ்.

அவளிடம் இனி ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தான் ராகவ்.

யோசனையில் மூழ்கி இருந்தவனைக் கலைத்தது கைபேசியின் சிணுங்கல்.

"ஹலோ! ராகவ் ஸ்பீக்கிங்."

"ராகவ்! நான் ஸ்நேகா பேசறேன். எப்படி இருக்க?"

"ஏய்... ஸ்நேகா! இது என்ன கனவா?"

"ம்... இது நிஜம். நான் இப்ப சென்னையிலதான் இருக்கேன்."

"ஏன்... அமெரிக்கா போர் அடித்து விட்டது உனக்கு?"

"நோ வே ராகவ்! அழகான இடம். தூய்மையான இடம். ரொம்பப் பாதுகாப்பான இடம் அது. பொல்யூஷன் என்ற வார்த்தையே அங்கே கிடையாது.

"அப்புறம் ட்வின் குண்டு வெடிப்பிற்குப் பின்னால் அங்கே எந்தப் பிரச்சினையும் இல்லை. பாதுகாப்பு ரொம்ப அருமையாக உள்ளது. அழகான பார்க்குகள், ஷாப்பிங் மால், வொண்டர் லாண்ட் எனக் கேளிக்கைகளுக்குப் பஞ்சமே இல்லை."

"கமான்... விட்டால் 'சொர்க்கமே என்றாலும் அமெரிக்கா போல் வருமா?' என்று பாட்டே படித்து விடுவாய் போல..."

ஸ்நேகா மணியோசையின் நாதம் போல் மறுமுனையில் சிரித்தாள்.

"ஏய்... அதெல்லாம் இருக்கட்டும். நீ இன்னும் அதே வீட்டில்தானே இருக்கிறாய்?"

"யெஸ்... உனக்கென்ன சந்தேகம்?"

"சந்தேகம் இல்லை. சும்மாதான் கேட்டேன்..." என்றாள், சிரித்தபடியே ஸ்நேகா.

அறைக் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது.

"ஸ்நேகா! ஒன் செகண்ட். ஏதோ எமெர்ஜென்சி கேஸ்ன்னு நினைக்கிறேன். நான் கொஞ்ச நேரம் கழித்து



உன்னை இந்த எண்ணில் தொடர்பு கொள்கிறேன்!" என்றபடியே சிவப்புப் பட்டனை அழுத்தினான் ராகவ்.

அறைக் கதவைத் திறந்தான். அவன் கண்களில் வியப்புக் கலந்த சந்தோஷம் தெரிந்தது.

"ஸ்நேகா! என்னால் நம்ப முடியவில்லை..."

"ம்... நான் எமெர்ஜென்ஸி கேஸ் இல்லை ராகவ்!" என்றாள் சிரித்தபடியே ஸ்நேகா.

"ஏய்... காலேஜ் டேஸ்ஸில் எப்படி இருந்தியோ, அப்படியேதான் இருக்க இன்னும்..."

"பொய் சொல்லாதே ராகவ்!"

"ஏய்... பொய் இல்லை ஸ்நேகா!"

"நான் நல்ல வெயிட் போட்டுட்டேன் ராகவ்!"

"காட்... நான் உன்னுடைய அதிரடி வேலையைப் பற்றிச் சொன்னேன் ஸ்நேகா! புரபஸர் போல இமிடேட் செய்வது, காலேஜ் ஆனுவல் டே ப்ரோக்ராமில் எச்.ஓ.டி.யை ஓட்டியது, டிஸெக்ஷன் அறையில் முதல் தடவை நுழைந்தவுடன் மயக்கம் போட்டு விழுந்தது... என்று சொல்லிக் கொண்டே போகலாம்.

"அதே போல்தான் திடுமென அமெரிக்காவில் இருந்து இங்கே வந்து குதித்திருக்கிறாய். அதுவும் என்னிடம் கைபேசியில் பேசிக் கொண்டே இருந்தாய்... சட்டென என் வீட்டுக் கதவைத் தட்டுகிறாய்... நீ!

"இந்த மாதிரி அதிரடி வேலை எல்லாம் உன்னால் தான் முடியும் ஸ்நேகா!"

"சரி... இப்பவே பழைய கதை எல்லாம் ...
வேண்டாமே... ப்ளீஸ்!"

"ஏன் உனக்கு போர் அடிக்கிறதா?"

"சே... சே... நீ பேசுவது எனக்கு எப்பவுமே போ...
அடிக்காது."

"அப்புறம் என்ன பிரச்சினை உனக்கு?"

"நான் இங்கே ஒரு வாரம் உன் வீட்டில்தான் தங்...
போகிறேன்."

"என்னது?"

"ஏய்... ராகவ்! ஏன் இப்படி அதிர்ச்சியாயி...
உனக்கு இஷ்டம் இல்லை என்றால் நான் வே...
எங்காவது தங்கிக் கொள்கிறேன்."

"ஓ... நோ. ஸாரி ஸ்நேகா! நீ இங்கேதான் த...
வேண்டும். நீ ஷாக் மேல ஷாக் கொடுக்கிற. பட் இ...
ஆல் பிளஸெண்ட்."

"சரி... ஆன்ட்டி எங்கே? நிரஞ்சன், சஞ்சய் எல்...
எங்கே? சஞ்சய்யின் வொய்ஃப் பேர் என்ன? அவ...
எப்படி இருக்காங்க? ஸாரி... என்னால கல்யாணத்துக்...
கூட வர முடியலை."

ராகவ் முகம் இறுகியது.

"ஏய்... என்ன ஆச்சு?" என்று அவன் தோளை...
பற்றினாள் ஸ்நேகா.

"ஒன்றும் இல்லை ஸ்நேகா!"



"நீ சொல்வதிலிருந்தே தெரிகிறது. ஏதோ பெரிதாக உள்ளது என்று. என்ன பிராப்ளம் ராகவ்? கமான் டெல் மி!"

"வந்த முதல் நாளே நான் உனக்கு ஷாக் கொடுக்கணுமான்னு யோசிக்கிறேன்."

"சித்தப்பா..." என்று ஓடி வந்து டாலி அவனைக் கட்டிக் கொள்ள, பேச்சுத் தடைப்பட்டது.

"ஹாய் குட்டி!" என்றாள், சிநேகமாகச் சிரித்தபடியே ஸ்நேகா.

"என் பெயர் டாலி. குட்டி இல்லை."

"வாவ்... வெரி ஸ்மார்ட் கேர்ள்!" என்றபடியே டாலியிடம் ஒரு சாக்லெட் பாரை நீட்டினாள் ஸ்நேகா.

"அஞ்சு ரொம்ப சாக்லெட் சாப்பிடக் கூடாதுன்னு சொல்லியிருக்கா..."

அப்பொழுது...

அறைக்குள் நுழைவதா... வேண்டாமா... எனத் தயங்கினாள் அஞ்சனா.

## 9

மார்கழி
மாதம்
..........

நிலவு
தூங்கும்
நேரம்!
............
நான்
கண் விழித்து
உன்
நினைவுகளைச்
சுமந்து
கொண்டு
இருக்கிறேன்!
காதல்
என்றால்
இவ்வளவு
வலியா?
.............
கண்ணீர்
முத்துக்கள்
என்
மனதில்...!

அன்று வீடே கலகலவென இருந்தது. அதற் காரணம் ஸ்நேகாதான். வாய் ஓயாமல் பேசிய இருந்தாள் அவள்.



"ஆன்ட்டி! டாலியின் பிறந்த நாளை நாம் கிராண்டாகக் கொண்டாட வேண்டும். அதற்கு என்ன செய்யலாம்?" என்றாள், ஆர்வமாக ஸ்நேகா.

"வேற என்ன? ஒரு பார்ட்டி வைக்க வேண்டியதுதான். அப்புறம் கேக் கட்டிங்!" என்றான் நிரஞ்சன்.

"ம்... செய்யலாம். அது கொஞ்சம் ஓல்ட் மாடல். வேற ஏதாவது ஐடியா?"

"ம்... குழந்தையை எங்கேயாவது அழைத்துப் போகலாமா? மிருகக் காட்சி சாலை... இல்ல, ஏதாவது நல்ல படத்திற்கு..." என்றான் ராகவ்.

"டாக்டர்... நாட் பேட்!" என்றாள், சிரித்தபடியே ஸ்நேகா.

"வேற ஏதாவது புது ஐடியாவா சொல்லேன், அஞ்சனா!" என்றார் கஸ்தூரி.

"ம்... இங்கே நிறையக் குழந்தைகள் இருக்கிறார்கள், நம் காலனி அருகில் உள்ள ஹவுஸிங் போர்டில். அவர்கள் எல்லாம் ரொம்ப வசதியானவர்கள் கிடையாது. அவர்களை எல்லாம் எங்கேயாவது அழைத்துக் கொண்டு போகலாம்.

"உங்களுக்கு இந்த யோசனை பிடிக்குமா என்று தெரியவில்லை. என் மனதில் இருந்ததை நான் சொன்னேன்."

"வாவ்... ரொம்ப நல்ல ஐடியா!" என்றான் நிரஞ்சன்.

"ம்... ஆமாம். டாலிக்கும் ஒரு வித்தியாசமான அனு கிடைக்கும்!" என்றாள் ஸ்நேகா.

"என்னடா ராகவ்! உனக்கு இந்த யோசனை விருப்பம் இல்லையா? அமைதியா இருக்கியே!" என்றா கஸ்தூரி.

"யார் யார் எங்கிருந்து வந்தார்களோ... அதற் ஏற்ற மாதிரிதானே யோசனை வரும்!" என்றா அஞ்சனாவைப் பார்த்தபடியே ராகவ்.

அஞ்சனாவின் முகம் அவமானத்தால் சிவந்தது.

"ம்... லிங்கன் கூட ரொம்பக் கஷ்டப்ப குடும்பத்தைச் சேர்ந்தவர்தான். அவர் தந்தை மர வேலை செய்து வாழ்ந்து வந்தார். அமெரிக்காவின் குடியரசு தலைவராக லிங்கன் பொறுப்பேற்றுத் திறம்பட நாட் ஆண்டார்.

"காமராஜர் வீட்டில் சாப்பாட்டுக்குக் கூடக் கஷ்டம் பல நாட்கள் பட்டினியோடு, வெறும் வயிற்றில் அவ படுத்திருக்கிறார். அவர் முதலமைச்சராக ஆன பின்பு சத்துணவுத் திட்டத்தை அமல்படுத்தியதற்கு இதுவும் ஒரு காரணம். அது இன்றுவரை தமிழகத்தில் வெற்றிகரமாக நடந்து வருகிறது.

"அப்புறம்... நம் முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் வீட்டிலும் ஏழ்மைதான். ஆனால் மறக்க முடியாத குடியரசுத் தலைவராக எல்லோர் மனதிலும் அவர் இன்றுவரை குடியிருக்கிறார்!" என்று கடகடவென மூச்சு வாங்கப் பேசினாள் அஞ்சனா.



"வாவ்... சூப்பர்!" என்று நிரஞ்சன் கை தட்டினான்.

"ஏய்... உனக்குள்ள இப்படி ஒரு திறமையா!" என்று ஸ்நேகா அவளை அணைத்துக் கொண்டாள்.

ராகவ்வின் முகத்தில் முதலில் சில விநாடிகள் பெருமிதம் வீற்றிருந்தது. பின்னர் மீண்டும் இறுக்கம் தோன்றியது.

"அஞ்சனா சொன்ன யோசனைதான் பெஸ்ட். அதனால் அதையே செய்யலாம்!" என்றார் கஸ்தூரி.

அஞ்சனா ராகவ்வின் முகத்தைப் பார்த்தாள். அவன் விழிகளில் கோபம் தெரிந்தது.

அவள் விழிகளை வேறு இடத்தில் பதித்தாள்.

"சரி... அப்ப எந்த இடத்திற்குக் குழந்தைகளை அழைத்துப் போகலாம்?" என்றாள் ஸ்நேகா.

"அதற்கு ஒரு அருமையான இடம் இருக்கிறது!" என்றான் நிரஞ்சன்.

"ம்... என்ன, வண்டலூர் ஸீவா?" என்றாள் ஸ்நேகா.

"நோ."

"தென் கிண்டி பார்க்கா?"

"நோ."

"மாயாஜால் சினிமாவா?"

"நோ."

"முட்டுக்காடு போட் சவாரியா?"

"நோ."

"சர்க்கஸா?"

"நோ."

"கிஷ்கிந்தா தீம் பார்க்கா?"

"நோ."

"அட... எனக்குத் தெரிந்த இடம் எல்லாம் நான் சொல்லி விட்டேன். வேற என்ன இருக்கு, சிங்கார சென்னையில்?"

"ஸ்நேகா! நீ சொன்ன இடம் எல்லாமே ரொம்ப அருமையான இடங்கள்தான். அதில் சந்தேகமே இல்லை.

"ஆனால் ஒரு நாள் முழுக்க டைம் ஸ்பெண்ட் செய்வது கஷ்டம். குழந்தைகள் எல்லோரும் டயர்ட் ஆகி விடுவார்கள். அதுவும் இப்ப சம்மர் வேறு!" என்றான் நிரஞ்சன்.

"ம்... பீச்சா?"

"ஓ நோ. இப்ப அடிக்கடி சென்னையில் நில அதிர்வுகள் வருகிறது. கொஞ்ச நாளைக்கு நோ பீச்!"

"அப்ப என்ன இடம் அது?"

"ம்... குழந்தைகள் விளையாடுவதற்கு நிறையப் பொம்மைகள் உள்ளன. அந்த இடத்தில். முழுக்க முழுக்க ஏ.ஸி. வசதி இருக்கு. அதனால் குழந்தைகள் டயர்டாக மாட்டார்கள்."

"பட்... போர் அடித்து விடாதா, அவர்களுக்கு! எவ்வளவு நேரம் பொம்மைகளோடு விளையாடுவார்கள்?" என்று சந்தேகத்தைக் கிளப்பினாள் ஸ்நேகா.

"சான்ஸே இல்லை."

"எப்படி ரஞ்சன்... அடித்துச் சொல்றீங்க?"

"எங்க கம்பெனி மேனேஜர் அவர் பெண்ணோட பிறந்த நாளை அங்குதான் கொண்டாடினார். கிட்டத்தட்ட முப்பது குழந்தைகள் வந்திருந்தார்கள். போரே அடிக்கவில்லை அந்தக் குழந்தைகளுக்கு.

"நான்கு மணி நேரத்திற்கு மேல் ஆகி விட்டது. பெற்றோர்கள் கெஞ்சிக் கூத்தாடி அவர்களைத் திரும்ப வீட்டிற்கு அழைத்துச் செல்வதற்குள் போதும் போதும் என்று ஆகி விட்டது!" என்றான் நிரஞ்சன்.

"ஓ... பரவாயில்லையே...!" என்றாள் ஸ்நேகா.

"என்ன மாதிரி டாய்ஸ் இருக்கு அங்கே?" என்றாள் அஞ்சனா.

"ம்... நிறைய. காரில் உட்கார்ந்து அவர்களே காரைச் செலுத்தலாம். அப்புறம் ஹாஸ்பிடல் மாதிரி ஒரு சின்ன அறை. டாக்டர் கோட், ஸ்டெதஸ்கோப், ஆம்புலன்ஸ் என எல்லாமே அங்கு இருக்கும்.

"தென், டாலி போன்ற கேர்ள்ஸ் விளையாடுவதற்காக கிச்சன் செட், தென் சூப்பர் மார்க்கெட், மியூசிக் பொருட்கள் என நிறைய இருக்கின்றன. எல்லாமே நல்ல பெரிய அளவில் இருப்பதால் குழந்தைகள் விரும்பி விளையாடுவார்கள்."

"இப்பவே போகலாம் சித்தப்பா!" என்று குதித்தாள் டாலி.

"டாலி... இன்னும் ரெண்டு நாள்தான்டா குட்டி. ப்ளீஸ் வெயிட்."

"ஹை... ஜாலி... ஜாலி. இன்னும் ரெண்டு நாள் எனக்கு ஹேப்பி பர்த்டே."

"ம்... உன் பர்த்டேக்கு நான் கரெக்ட்டா வந்திட்டேன் பார்!" என்றாள் ஸ்நேகா.

"அப்பா வர மாட்டாரா?" என்று ஏக்கமாகக் கேட்டாள் டாலி.

"நான் அப்பாவிடம் பேசி அவரை வரச் சொல்கிறேன்..." என்றாள் ஸ்நேகா.

"பொய்... நீ சும்மா சொல்ற!"

"நோ... நான் நிஜமாத்தான் சொல்றேன்."

"நான் நம்ப மாட்டேன்!" என்று அழத் தொடங்கினாள் டாலி.

"டாலி... ஆன்ட்டியும் பேசறேன் அப்பாகிட்ட. இந்த தடவை நீ கேக் வெட்டும் பொழுது அப்பா உன் கூட இருப்பார்!" என்றாள் அஞ்சனா.

"இப்பவே பேசு அஞ்சு. அப்பதான் அப்பா வருவார்" - அடம் பிடித்தாள் டாலி.

"சஞ்சய்க்குப் போன் போடுடா!" என்றார் கஸ்தூரி.

"அம்மா! அண்ணா இப்ப மும்பையில்தானே இருப்பாங்க?" என்றான் நிரஞ்சன்.



"நான் அவன்கிட்ட பேசணும். அவன் உலகத்தில் எந்த மூலையில் இருந்தாலும் சரி... நான் அவனிடம் பேச வேண்டும்!" - தீர்மானமாக ஒலித்தது. கஸ்தூரியின் குரல்.

நிரஞ்சன் கைபேசி வழியாகச் சஞ்சயைத் தொடர்பு கொண்டான்.

"ஹாய் ரஞ்சன்! சொல்லுடா..."

"ஹலோ! சஞ்சு அண்ணா..."

"என்ன விஷயம்டா? ஏதாவது பிரச்சினையா? ஏன் இந்த நேரத்தில திடீர்ன்னு கூப்பிடறடா?"

"நத்திங்டா...."

"ஏய்... அம்மாவுக்கு உடம்புக்கு ஒன்னும் இல்லதானேடா!"

"சே... சே... நோ டா. ராகவ் அண்ணா இருக்கிறான். அதனால நத்திங் டு வொர்ரி."

"குட்... குட்... சரிடா. சொல்லு. எதுக்குப் போன் செஞ்சே?"

"அம்மா உன்கிட்டப் பேசணுமாம். டாலி பர்த்டே வருது. உனக்கு ஞாபகம் இருக்குதுதானே?"

"ம்... யெஸ்."

"நீ வா அண்ணா இங்கே... டாலி உன்னை ரொம்ப எதிர்பார்க்கிறா."

"இல்லடா... எனக்கு இங்க முக்கியமான ப்ரோக்ராம் இருக்கு."

"என்கிட்ட கொடுடா!" என்று கைபேசியை அவனி... இருந்து பறித்தார் கஸ்தூரி.

"சஞ்சய்! டாலி உன்னோட பெண். அது ஞாபக... இருக்குதானே?"

"அம்மா! ஸாரி... எனக்கு மும்பையில் முக்கியமா... ப்ரோக்ராம் இருக்கு."

"சஞ்சய்! நீ செய்யுறது சரி இல்லை. அம்மா, அப்ப... அன்பு இல்லாமல் டாலி வளரணுமா?"

"அம்மா... நீங்க இருக்கீங்க. ராகவ், நிரஞ்சன்... எல்லோரும் இருக்காங்க. அதுக்கு மேல என்னம்மா... வேணும்... டாலிக்கு! இது போதும் அவளுக்கு."

"அதை அவள் தீர்மானிக்கணும் சஞ்சய்!"

"அம்மா... ப்ளீஸ்! எனக்கு வர இஷ்டமில்லை."

"இப்படி விட்டேத்தியாய்ப் பதில் சொன்னால் எப்படி?"

"அம்மா... ஏன்ம்மா என்னை வற்புறுத்தறீங்க?" என்றபடியே ஃபோனின் சிவப்புப் பட்டனை அழுத்தினா... சஞ்சய்.

கஸ்தூரியின் முகம் வாடியது.

"என்னடா ராகவ் இது? அவன் இப்படிப் பிடிவாத... பிடிக்கிறான். இந்தச் சின்னக் குழந்தையைப் பற்றி... கவலைப்படுவேனா... இல்லை, சஞ்சய்யின் பிடிவாதத்தை... நினைத்துக் கவலைப்படுவேனா?

"எனக்குப் புரியவில்லை. என் மனதை அரிக்கு... கவலை இதுதான்!" என்று கண் கலங்கினார் கஸ்தூரி.



"அம்மா... ப்ளீஸ்! மனசைப் போட்டு அலட்டிக் காதீங்க..." என்று சிறு குழந்தையிடம் கெஞ்சுவது போல் கெஞ்சும் ராகவை... விழிகள் அகலப் பார்த்தாள் அஞ்சனா.

இவனுக்கு இவன் அம்மா மேல் இவ்வளவு பாசமா! கல்லுக்குள் ஈரம் என்பது போல் இருக்கிறதே... இவன் நடந்து கொள்ளும் முறை என நினைத்து வியந்தாள் அஞ்சனா.

"நிரஞ்சன்! உன்கிட்ட சஞ்சய்யின் நம்பர் இருக்குதானே. அதை என்னிடம் கொடு!" என்றாள் ஸ்நேகா.

"ஷ்யூர். இதுதான் அண்ணா நம்பர்!" என்று நிரஞ்சன் சொல்லச் சொல்ல... அதைத் தன் ஐ-பேட்டில் பதிவு செய்து கொண்டாள் ஸ்நேகா.

"நீ அண்ணாவிடம் பேசப் போகிறாயா?"

"யெஸ். உனக்கு ஏதாவது அப்ஜெக்ஷனா?"

"சே... சே. நீ அண்ணாவை டாலியின் பிறந்த நாளுக்கு வரவழைத்து விட்டால் போதும். வீ ஆல் வில் பி ஹேப்பி."

"ம்... புரிகிறது. நான் முயற்சி செய்கிறேன்..." என்றாள், புன்னகைத்தபடியே ஸ்நேகா.

"உன்னை சஞ்சய் அண்ணாவிற்கு ஞாபகம் இருக்கும் என்று நினைக்கிறேன்."

"உன் அண்ணாவிற்கு செலக்டிவ் அம்னீஷியா ஏதும் இல்லைதானே?"

நிரஞ்சன் சிரித்தான்.

"ஏதும் இல்லை என்றுதான் நினைக்கிறேன்.." என்றான் நிரஞ்சன், புன்னகைத்தபடியே.

பதிலுக்குப் புன்னகைத்த ஸ்நேகாவின் புன்னகையின் அழகை ரசித்தாள் அஞ்சனா.

## 10

நீ
செல்லும்
பாதை
முழுவதும்
பூக்களைப்
பரப்பவா?
..........
இல்லை,
நட்சத்திரங்களால்
ஆன
வீதியை
அமைக்கவா?
..........



இல்லை,
மேகக் கூட்டங்களை
உன் பஞ்சுப் பாதங்களுக்கு
வலிக்காமல் இருக்க
வீதியில் பரப்பவா?
............
வருவாயா?
அப்பொழுதாவது
வருவாயா?

சஞ்சய் வந்ததால் வீடு அல்லோலகல்லோலப் பட்டது. சகோதரர்கள் மூன்று பேரும் எப்படிக் குணங்களில் வித்தியாசமாக இருக்கிறார்கள் என்று வியந்தாள் அஞ்சனா.

ராகவ் சிரிப்பதற்குப் பணம் கேட்பான். எப்பவும் கடுகடுவென முகத்தை வைத்துக் கொண்டு இருப்பான்.

நிரஞ்சன் அதற்கு நேர் எதிர். அவன் முகத்தில் எப்பவும் புன்னகை தவழும். பேசும் பொழுது கூடப் புன்னகை தொலையாமல் பேசுவதற்கு அவனிடம் இருந்துதான் கற்றுக் கொள்ள வேண்டும்.

சஞ்சய்யின் முகத்தில் சோகத்தின் நிழல் தெரிகிறது. சோகத்தை மறைப்பதற்காகத்தான் அவன் தன்னை இசையில் மூழ்கடித்துக் கொள்கிறானோ?

ஒவ்வொரு இடமாகப் பயணம் செய்கிறானோ ரசிகர்களின் கைதட்டலில் தன் சோகத்தை மறந்து போகிறானோ?

யோசனையில் மூழ்கியிருந்தவளைக் கலைத்தது கஸ்தூரியின் குரல்.

"அஞ்சனா! இன்னிக்கு வெள்ளிக்கிழமை. சங்கடஹர சதுர்த்தி. கோவிலுக்குப் போவியே எப்பவும். இன்னிக்கு போகலை?"

"ம்... கிளம்பணும் ஆன்ட்டி."

"எதுக்குப் பிள்ளையாரை ஐஸ் வைக்கிற அப்படின்னு சொல்ல மாட்டேங்கிற?"

"பிள்ளையார் நான் நினைத்ததை நிறைவேற்றட்டும் ஆன்ட்டி. அப்புறம் என்ன விஷயம் என்று நான் உங்களிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்லப் போகிறேன்."

"ஆஹா என்ன ஒரு ஐஸ்! பிள்ளையார் மயங்குகிறாரோ இல்லையோ, அம்மா மயங்கி விடுவார்கள்!" என்றபடியே உள்ளே நுழைந்தான் நிரஞ்சன்.

"டேய்... கேலி பேசாமல் உன்னால் இருக்கவே முடியாதாடா?" செல்லமாக மகனைக் கோபித்துக் கொண்டார் கஸ்தூரி.

"கேலி... கிண்டல் எல்லாமே என் பிறப்புரிமை!" என்றான் நிரஞ்சன்.



கஸ்தூரி சிரிக்க... அந்தச் சிரிப்பில் இணைந்து கொண்டாள் அஞ்சனா. ஹாஸ்பிடலில் இருந்து வெள்ளைக் 'கோட்'டைக் கையில் ஏந்தியபடி உள்ளே நுழைந்தவனின் பார்வை அவள் மேல் பதிந்தது.

அவள் விழிகளும் அவன் கண்களைச் சந்தித்தன. அவன் முகத்தில் இருந்த புன்னகை காணாமல் போனது.

"ஆன்ட்டி! நான் கோவிலுக்குப் போயிட்டு வர்றேன்!" என்றபடியே தன் அறைக்குள் நுழைந்தாள்.

பிள்ளையாருக்கு வாங்கி வைத்திருந்த அருகம்புல் மாலை, பூ, பழம், வெற்றிலை பாக்கு எல்லாவற்றையும் பூக்கூடை ஒன்றில் எடுத்து வைத்துக் கொண்டாள் அஞ்சனா.

ஹாலைத் தாண்டி, வரவேற்பறையைக் கடந்து நடக்கும் பொழுது ராகவ் அவன் அம்மாவிடம் சொல்வது அவள் காதில் விழுந்தது.

"அம்மா! இவ டாலியைப் பார்த்துக்க வந்தாளா? இல்லை... சும்மா இங்க கெஸ்ட் மாதிரி தங்கி எல்லா இடத்தையும் சுற்றிப் பார்க்க வந்தாளா?

"எனக்குத் தெரியலை. அவள் டாலியோடு டைம் ஸ்பெண்ட் பண்றாளா? எனக்குச் சந்தேகமா இருக்கு. என்னால ஹாஸ்பிடல் வேலையின் மத்தியில் இதை எல்லாம் சரியாகக் கவனிக்க முடியவில்லை."

அஞ்சனாவின் முகம் சிவந்தது. இவன் ஏன் என்னைப் பற்றி எப்பவும் இப்படியே பேசுகிறான்? என் மேல் இவனுக்குத் துளிக்கூட நல்ல எண்ணம் இல்லை.

ஒருவேளை என்னைப் பற்றிய எல்லா விஷய-
களும் இவனுக்குத் தெரியுமா? அதனால்தான் இவ-
இந்த மாதிரி என்னை வார்த்தைகளால் காயப்படு-
கிறானோ! அவள் உடல் பயத்தால் நடுங்கியது.

இருக்காது... அப்படி எல்லாம் இருக்காது. உண்ம-
தெரிந்திருந்தால் அவன் இந்நேரம் சும்மா இருக்-
மாட்டான்.

சீ போ... என்று என்னைக் கழுத்தைப் பிடித்து
தள்ளியிருப்பான். அதுவும் ராகவ் நிச்சயமாகச் சும்ம-
இருக்க மாட்டான்.

அதனால் கண்டிப்பாக அவனுக்கு என்னை-
பற்றிய உண்மைகள் தெரிந்திருக்காது என்று தன்னையே
தேற்றிக் கொண்டாள் அஞ்சனா.

கோவிலில் கத்ரியின் சாக்ஸபோனின் இசையில்
'நீ ஆடு பாம்பே விளையாடு பாம்பே...' என்ற பாடல்
ஒலித்துக் கொண்டிருந்தது.

அர்ச்சனை டிக்கெட்டை வாங்கிக் கொண்டு
பிள்ளையார் வீற்றிருந்த இடத்தை நோக்கி நடந்தாள்
அஞ்சனா.

சங்கடஹர சதுர்த்தி என்பதால் கூட்டம் அலை
மோதியது.

கண்களை மூடித் தன் கோரிக்கையை இறைவன்
முன் சமர்ப்பித்தாள் அஞ்சனா.

தீபாராதனை தொடங்கியதும் கண்களைத் திறந்தாள்.



அருகம்புல் மாலை அணிந்து எருக்கம்பூ மாலையைத் துதிக்கையில் ஏந்தி அழகாகக் காட்சியளித்தார் பிள்ளையார்.

"இந்தாங்க மேடம்! அர்ச்சனை செய்த நெய்வேத்தியம்..." என்று அர்ச்சகர் ஒரு பையை நீட்ட... அதை வாங்கிக் கொண்டாள் அஞ்சனா.

பிராகாரத்தை மூன்று முறை சுற்றினாள். பின்பு பெருமாள், ஆஞ்சநேயரையும் கும்பிட்டு விட்டு நவக்கிரகங்களைச் சுற்றத் தொடங்கினாள்.

"சங்கடம் தீர்க்கும்
சனி பகவானே!
மங்களம் பொங்க
மனம் வைத்தருள்வாய்!
சச்சரவின்றிச் சாகாநெறியில்
இச்சகம் வாழ
இன்னருள் தா தா!"

- என்று பின்னால் இருந்த ஒரு பெரியவர் சத்தமாகப் பாடியபடியே சுற்றுவதைக் கவனித்தாள்.

'எனக்கு எந்த ஸ்லோகமும் தெரியாது. ஆனால் கடவுளே! வீட்டில் உள்ள டாலி என்னும் அந்தச் சின்னக் குழந்தைக்கு மன நிம்மதியைக் கொடு.

பாவம்! தாய், தந்தை இல்லாத அந்தக் குழந்தைக்குத் தாயும் நீயே, தகப்பனும் நீயே! அவள் வாழ்க்கையில் ஒளி பெருக உதவி செய்...' என்று வேண்டியபடியே ஒன்பது சுற்றுச் சுற்றி முடித்தாள்.

கோவில் அருகே உள்ள ஹாலில் கச்சேரி நடந்து கொண்டிருந்ததால், சுவாமி தரிசனம் முடித்தவர்கள் எல்லோரும் ஹாலை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

கச்சேரிக்குப் போய் விட்டுப் பாதியில் எழுந்து வந்தால் நன்றாக இருக்காது. அதனால் இங்கேயே பெஞ்சில் உட்காரலாம் என்று நினைத்தபடியே பெஞ்சில் அமர்ந்தாள் அஞ்சனா.

"ஹாய் அஞ்சு! என்ன ஒரு ஆச்சரியம்!" என்று ஒரு பழக்கமான ஆண் குரல் அருகே கேட்க... திடுக்கிட்டு திரும்பினாள் அஞ்சனா.

"ஹலோ ராஜீவ்! நீ எப்படி இங்கே?" என்றவளின் குரலில் வியப்புத் தெரிந்தது.

"அஞ்சு! நான் உன்னைக் கேட்க வேண்டிய கேள்வி இது..."

"ம்... சரிதான், நீ சொல்வது!"

"உன்னைக் காணாமல் உன் சித்தி மும்பையையே ஒரு வழி செய்து கொண்டிருக்கிறார்கள்."

"அப்படியா என்ன?"

"அஞ்சு! என்ன இப்படிக் கேட்டுட்ட நீ? உனக்கு விஷயமே தெரியாதா?"

"ம்... தெரிந்து கொள்ள இஷ்டமில்லை என்று வைத்துக் கொள்ளேன், ராஜீவ்..."



"உன்னை இங்கே சந்திப்பேன் என்று நான் கனவில் கூட நினைக்கவில்லை."

"நானும்தான்."

"நீ எப்படி இங்கே சென்னைக்கு வந்தாய்?"

"அது பெரிய கதை ராஜீவ்!"

"உன் சித்திக்கு மட்டும் நீ இங்கே இருப்பது தெரிந்தால்... அவ்வளவுதான்... மரங்கொத்திப் பறவையைப் போல் உன்னைக் கொத்தி ஏப்பம் விட்டு விடுவார்கள்."

"ம்... உயிர் போனால் கூடப் பரவாயில்லை. ஆனால் சித்தி ஆட்டுவிக்கும் பொம்மையாக என்னால் இருக்க முடியாது. அதனால்தான் வீட்டை விட்டு ஓடி வந்து விட்டேன்.

"என் வாழ்க்கையைத் தீர்மானிக்கும் உரிமை எனக்கு உண்டு ராஜீவ்! எனக்கு மட்டும் இல்லை. இந்த உலகில் பிறந்த எல்லா உயிர்களுக்கும் இந்த உரிமை உண்டு."

"நீ சொல்வது சரிதான். உன் சித்தியிடம் நீ மனம் விட்டுப் பேசியிருந்தால் தீர்வு பிறந்திருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

"இது என்னுடைய எண்ணம் அஞ்சு. மூன்றாம் மனிதன் சொல்வது சில நேரம் சரி வரும். ஆனால் பல நேரம் சரி வராது!" என்றான் சிரித்தபடியே, ராஜீவ்.

"நான் மனம் விட்டு அவர்களிடம் பேசி இருக்க மாட்டேன் என்று நினைக்கிறாயா?"

"ம்... நீ நிச்சயம் பேசி இருப்பாய் என்றுதான் என் மனதிற்குத் தோன்றுகிறது."

"எல்லா வகையிலும் நான் முயற்சி செய்து பார்த்து விட்டேன். எல்லாக் கதவுகளுமே மூடி விட்டன ராஜீவ். அதற்குப் பிறகு வேறு வழி தெரியாமல்தான் ஊரை விட்டு ஓடி வந்தேன்!" என்று சொல்லும் பொழுதே அவள் குரல் உடைந்தது.

"ஏய் அஞ்சு! ஸாரி. உன்னை டிஸ்டர்ப் செய்வது என் நோக்கம் இல்லை. கமான்... ப்ளீஸ் அழாதே!" என்று அவள் தோளைத் தட்டிச் சமாதானப்படுத்தினான் ராஜீவ்.

"முடியலை ராஜீவ்! எனக்கு மட்டும் ஏன் இவ்வளவு கஷ்டம்?" என்று கைகளால் முகத்தைப் பொத்திக் கொண்டு அழத் தொடங்கினாள் அஞ்சனா.

"அஞ்சு... ப்ளீஸ்! நீ இந்த மாதிரி அழுதால் என் மனசுக்குக் கஷ்டமாக இருக்கிறது. மும்பையில் நீ எப்படி எல்லாம் திரிந்து கொண்டிருப்பாய்... ஒரு அழகான வண்ணத்துப் பூச்சி போல!"

அஞ்சனாவிடமிருந்து ஒரு பெருமூச்சுப் பிறந்தது.

"ம்... ஸ்கூல் டேஸில் நாம் அடித்த லூட்டி ஏராளம். அழகான பசுமையான நினைவுகள் அவை."

"மறுபடியும் திரும்பி அந்தக் காலத்திலேயே பயணம் செய்ய மாட்டோமா என்று எனக்கு ஏக்கமாக இருக்கிறது."

"எனக்கும் அடிக்கடி இந்த மாதிரி எண்ணங்கள் வருவது உண்டு."

"ம்... நீ இங்க எப்படி இருக்கிறாய் அஞ்சு? சந்தோஷமாக இருக்கிறாயா?"



"ம்... இங்கே நான் ஒரு கவர்னெஸ்ஸாக வேலை பார்க்கிறேன். ஒரு சின்னக் குழந்தையைப் பார்த்துக் கொள்கிற வேலை என்னுடையது."

"நீயா... பார்த்துக் கொள்கிறாய்! என்னால் நம்ப முடியவில்லை..."

"ஏன் ராஜீவ்?"

"உன்னைப் பார்த்துக் கொள்ள உன் வீட்டில் எத்தனை வேலையாட்கள்! உனக்கென ஒரு தனி ராஜாங்கமே இருந்ததே. அந்த வீட்டில்... அதை எல்லாம் விட்டு விட்டு... எப்படி நீ இங்கே இருக்கிறாய்?"

அவள் லேசாகப் புன்னகைத்தாள்.

"வீட்டில் அடைபட்டுக் கிடந்த கூண்டுக் கிளி நான். தங்கக் கூண்டு செய்து என்ன பயன் கிளிக்கு? சுதந்திரமாகப் பறந்து திரிய வேண்டும் என்றுதானே கிளி ஏங்கும்!

"என் நிலைமையும் அப்படித்தான் இருந்தது ராஜீவ். எவ்வளவு நாட்கள் பொறுத்துக் கொண்டிருந்தேன்... என்று இப்பொழுது நினைத்தால் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது."

"உன் சித்தியிடம் நான் வேண்டுமானால் பேசட்டுமா?"

"ஐயோ... வேண்டாம் ராஜீவ்!" - பதறினாள் அஞ்சனா.

வானில் மேகங்கள் கருமையாகத் திரண்டு இருந்தன.

# 11

உன்
கண்கள்
எனும்
மாயக்
கயிறு
என்னைப்
பிணைத்து விட்டது
உன்னோடு!
............
எனக்கே
தெரியாமல்
எப்படி
இது
சாத்தியம்?
உன்னைப்
பார்த்த
நாள்
முதல்
.......
நான்
நானாக
இல்லை!
ஏன் பெண்ணே?



"ப்ளீஸ்... அதை மட்டும் செய்து விடாதே!" என்று கெஞ்சினாள் அஞ்சனா, அவன் கைகளைப் பற்றியபடியே.

"சரி... நான் எதுவும் சொல்லலை. போதுமா?"

"ரொம்பத் தேங்க்ஸ் ராஜீவ்."

"நீ இவ்வளவு தூரம் மனம் வெறுத்துப் போகும்படி ஆயிற்றே அஞ்சனா! அதை நினைத்தால்தான் கஷ்டமாக இருக்கிறது."

"ம்... வாழ்க்கையில் எல்லோருக்கும் எல்லாமே கிடைத்து விட்டால் அப்புறம் வாழ்க்கையில் சுவாரசியம் இல்லாமல் போய் விடும்.

"அதனால்தான் எனக்கு இந்த மாதிரி ஒரு குறையை வைத்தார் போல கடவுள்!"

"பிரச்சினை என்று வந்தால் அதற்குக் கண்டிப்பாகத் தீர்வு என்று ஒன்று இருக்கும். அதனால் நீ மனதை அமைதியாக வைத்துக் கொள்ள முயற்சி செய்.

"நீ ரொம்ப மெலிந்து போய் விட்டாய். உன் உடல் நலனில் அக்கறை செலுத்து. உன் கவனம் அதில் இருக்கட்டும்."

"சரி ராஜீவ்! நான் கிளம்பறேன். லேட்டாச்சு..."

"ம்... என் ஃபோன் நம்பர் இதில இருக்கு அஞ்சனா! ப்ளீஸ் உனக்கு எந்த உதவி வேணும்னாலும் தயங்காமல் கேட்கலாம்."

"சரி... ராஜீவ்! உன்னைச் சந்தித்ததில் எனக் ரொம்பச் சந்தோஷம்."

"ம்... எனக்கும்தான்."

"சித்தியிடம் மறந்து போய்ப் பேச்சுவாக்கில் கூ என்னைப் பற்றிச் சொல்லி விடாதே."

"சே... சே... அதெல்லாம் நான் செய்ய மாட்டேன். கவலைப் படாமல் போ."

"தேங்க்ஸ் ராஜீவ்!" என்றபடியே வேகமா அங்கிருந்து நடந்தாள் அஞ்சனா.

வீட்டில் இருந்து கோவில் ஐந்து நிமிட நடைதான் கடகடவென வீட்டை நோக்கி நடந்தாள்.

"ஸோ... அம்மாவிடம் கோவில் என்று பொய் சொல்லி விட்டு உன் பாய்-ஃபிரண்டைப் பார்க்கத்தான் இப்படி ஓடி ஓடி வருகிறாயா?" என்று ராகவ் குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினாள் அஞ்சனா.

அவள் பின்னால் ராகவ் நின்று கொண்டிருந்தான். அவன் கண்கள் தீயைக் கக்கின. அவனிடம் பேசினால் பிரச்சினை பெரிதாகும் என்று நினைத்த அஞ்சனா... வே வேகமாக இரண்டடி எடுத்து வைத்தாள்.

அவன் கை அவள் மணிக்கட்டை இரும்பு போல் பிடித்தது. வலி பொறுக்க முடியாமல், "அம்மா!" என்று கத்தினாள் அஞ்சனா.

"கேள்வி கேட்கிறேன். பதில் சொல்லாமல் போனால் என்ன அர்த்தம்?"



"நேரமாகிறது... ப்ளீஸ், கையை விடுங்கள். டாலி வீட்டுக்கு வந்திருப்பாள்."

அவன் கை அவள் கன்னத்தைப் பதம் பார்த்தது.

"சும்மா நடிக்காதே... டாலி மேல் அக்கறை இருப்பது போல். இவ்வளவு நேரம் அவனிடம் பேசிக் கொண்டிருந்தாய்.

"அப்ப தெரியலையா நேரமானது? நேரம் போனதே தெரியாமல் அப்படி என்ன சுவாரசியமான பேச்சு!"

அவள் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது.

"அவன்கிட்ட அழுது முடிச்சாச்சு. இப்ப என்கிட்ட அதே முயற்சியைச் செய்கிறாயா? உன்னைப் பற்றி எல்லாமே எனக்குத் தெரியும். அதனால் நான் உன்னை நம்பவே மாட்டேன்..." என்று சீறினான் ராகவ்.

"கையை விடுங்க. நீங்க நினைக்கிற மாதிரி இல்லை. அவர் எனக்குத் தெரிந்தவர்."

"எப்படித் தெரியும்? என்ன பழக்கம்?"

"ஆசிரமத்திற்கு அடிக்கடி வந்திருக்கிறார். நன்கொடை தவறாமல் கொடுப்பார்!" என்று சட்டெனப் பொய் சொல்லிச் சமாளித்தாள் அஞ்சனா.

"ஓ... அப்படியா! சரி... என்ன சொல்லி அவரிடம் அழுது கொண்டிருந்தாய்?"

அவள் கண்களில் கோபம் தெறித்தது.

"உங்களிடம் எல்லாவற்றையும் சொல்ல வேண்டும் என்ற அவசியம் எனக்கு இல்லை!"

அவன் முகம் கோபத்தால் இறுகியது.

"லுக்... என்னை அவ்வளவு சுலபமாக ஏமாற் விடலாம் என்று நினைக்காதே. நீ யார் என்று எனக்கு தெரியும். உன்னைப் போலீசில் ஒப்படைக்கத் தயங் மாட்டேன்."

"என்ன வேண்டுமோ செய்து கொள்ளுங்கள் எனக்குக் கவலை இல்லை."

"அம்மா உனக்கு சப்போர்ட் செய்வதால்தானே இப்படி எல்லாம் திமிராக நடந்து கொள்கிறாய். டாலியும் உன்னுடன் நன்றாக ஒட்டிக் கொண்டு விட்டாள்.

"இனிமேல் உன்னை யாரும் எதுவும் செய்ய முடியாது என்ற நினைப்பில்தானே இப்படி எல்லாம் செய்கிறாய்? அது மட்டும் இல்லாமல் நிரஞ்சனை வேறு உன் பக்கம் இழுத்து விட்டாய். சே... எல்லாரையும் உன் கைக்குள் போட்டுக் கொண்டு விட்டாய்."

"டாக்டர்! ப்ளீஸ்... போதும். இந்த மாதிரிப் பேசி உங்கள் மதிப்பைக் குறைத்துக் கொள்ளாதீர்கள். நான் இங்கே வந்தது டாலியைப் பார்த்துக் கொள்ளத்தான். மற்றப்படி வேறு எந்த எண்ணமும் என் மனதில் இல்லை.

"நீங்கள் அநாவசியமான கற்பனை எல்லாம் செய்து கொண்டால் அதற்கு நான் பொறுப்பு இல்லை!" என்று தெளிவாகச் சொன்னாள் அஞ்சனா.

"உன் நடத்தை எப்படிப்பட்டது என்று எனக்குத் தெரியும். அதனால் சும்மா நடிக்காதே. நடிப்பு உன் ரத்தத்தில் ஊறி இருக்கிறது போல...



"இந்த அப்பாவியான கண்களுக்குப் பின்னால்... குழந்தைத் தனம் கொஞ்சும் இந்த முகத்திற்குப் பின்னால் உண்மையான ஒரு முகம் இருக்கிறது.

"உன் நடிப்புத் திறமையால் அதை நீ மறைக்கலாம். மற்றவர்கள் அதை நம்பலாம். ஆனால் நான் நம்ப மாட்டேன்!" என்றான் அழுத்தமாக, ராகவ்.

அவள் ஏதும் சொல்லாமல் அவன் முகத்தைப் பார்த்தாள்.

"டாக்டர்! நான் உயிர் வாழ்வதற்கு இப்பொழுது ஒரே காரணம் டாலிதான். அவள் விஷயத்தில் நான் நடிக்கவில்லை. அது எனக்குத் தெரியும்.

"நீங்கள் மறுபடியும் மறுபடியும் இந்த மாதிரி என் நடத்தையைப் பற்றித் திரும்பத் திரும்பப் பேசிக் கொண்டிருந்தீர்கள் என்றால் நான் வேறு முடிவு எடுக்க வேண்டி வரும்."

"வீட்டை விட்டுப் பணத்தைச் சுருட்டிக் கொண்டு உன் பாய்-ஃபிரண்டுடன் ஓடிப் போவது... அதுதான் உன் முடிவு."

அவன் கண்களில் ஏளனம் தெரிந்தது.

"இந்த உலகத்தை விட்டு ஓடிப் போவது தனியாக... அது எனக்கு ரொம்ப சுலபம்!" என்று சொல்லி விட்டு அவன் முகத்தைப் பார்த்தாள்.

அவன் அவள் கையை விடுவித்தான்.

அவள் முகத்தில் இருந்த தீவிரம் அவனைப் பயமுறுத்தியது.

தலைமுடியை இரண்டு கைகளால் கோதித் தன்
ஆசுவாசப்படுத்திக் கொண்டான் ராகவ்.

அவள் நடந்து போவதையே பார்த்தபடி நின்ற
இவள் பொய் சொல்லவில்லை. பொய் சொல்பவர்க
கண்டுபிடிப்பது சுலபம்.

இவள் கண்களில் வலி தெரிந்தது. விரக்தியு
கூடிய ஒரு வலி.

அதற்கு என்ன காரணம்?

அவளிடம் நேரடியாகக் கேட்டு விடலாமா? கேட்
அவள் உண்மையை ஒத்துக் கொள்வாளா?

வாழ்க்கையை முடித்துக் கொள்ளும் அளவு
அவளுக்கென்ன சோகம் இருக்க முடியும்? ஏன் அ
அப்படிச் சொன்னாள்? யோசித்தபடியே வீட்டை நோ
நடந்தான் ராகவ்.

வீட்டினுள் நுழையும் பொழுதே டாலியின் சிரிப்
சத்தம் கேட்டது.

"அஞ்சு! அந்தக் கதை ரொம்பக் காமெடி. ப்ளீ
மறுபடியும் சொல்லேன்."

"டாலி! இதோடு மூணு தடவை அந்தக் கதையை
சொல்லி விட்டேன். மறுபடியும் அதே கதைதா
வேணுமா, டாலி குட்டிக்கு?

"நான் வேற கதை சொல்றேனே... சூப்ப
இருக்கும். சரியா!"



"ம்... வேண்டாம். எனக்கு அதே கதைதான் வேணும். டெய்லி ஸேம் ஸ்டோரிதான் வேணும். வேற வேணாம்..." என்று அஞ்சனாவின் கழுத்தைக் கட்டியபடி கொஞ்சினாள் டாலி.

ராகவ் அந்தக் காட்சியைப் பார்த்தான். அவன் மனம் நெகிழ்ந்தது.

டாலியை இவள் நன்றாகப் பார்த்துக் கொள்கிறாள். அதில் நடிப்பு எதுவும் இல்லை. அதனால் மற்ற விஷயங்களை நான் பெரிதுபடுத்தக் கூடாது.

அடுத்த தடவை அஞ்சனாவிடம் பக்குவமாகப் பேச வேண்டும். கோபத்தைக் குறைக்க வேண்டும். அவளுக்கு என்ன பிரச்சினை என்று விசாரிக்க வேண்டும். அவள் ஏன் பசி எடுக்காததற்கு மருந்துகள் சாப்பிடுகிறாள் என்று கேட்க வேண்டும்... என்று தீர்மானித்தான்.

அந்த இளைஞனுடன் அவள் பேசியது என்ன வென்று தெரியவில்லை. ஆனால் ஏதோ பிரச்சினையைப் பற்றித்தான் அவனிடம் பேசிக் கொண்டு இருந்திருக்கிறாள்.

அவள் அவனைப் பற்றிச் சொன்னது உண்மையாகத்தான் இருக்குமா? நான் அவனை அவனுடன் இணைத்துப் பேசியது தவறா?

அவள் முகத்தில் எவ்வளவு கோபம் தெரிந்தது. அப்பொழுது!

எனக்கு ஏன்... அஞ்சனா அவனிடம் பேசும் பொழுது ஒரு எரிச்சல் தோன்றியது?

அஞ்சனாவின் பெர்சனல் ஸ்பேசில் தலையிட எனக்கு என்ன உரிமை இருக்கிறது? ஒன்றும் இல்லை. நான் நடந்து கொள்ளும் விதம் எனக்கே ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

வீடு, ஹாஸ்பிடல் என்று மட்டுமே இருந்த என் மனதில் எப்படிச் சட்டெனக் கள்ளத்தனம் புகுந்து கொண்டது?

மருத்துவத் துறையில் நான் நிறையப் பெண்களைச் சந்தித்து இருக்கிறேன். அதில் அழகான பெண்களும் இருந்தனர்.

ஏன்... இப்பொழுது கூட ஹாஸ்பிடலில் அழகான பெண் டாக்டர்ஸ் இருக்கிறார்கள். ஆனால் என் மனம் அவர்களிடம் ஒரு துளிக் கூட ஈடுபட மறுக்கிறது.

ஆனால் அஞ்சனாவின் மேல் என் மனம் சாய்கிறது. அவள் என்னை அலட்சியப்படுத்துகிறாள். என்னை அவாய்ட் செய்கிறாள். இருந்தாலும்... நான் ஏன் அவளிடம் திரும்பத் திரும்பக் கவரும் முயற்சியில் ஈடுபடுகிறேன்?

என் கோபம் கூட ஒரு கேடயம்தான். அது என்னைப் பாதுகாத்துக் கொள்ள எனக்கு நானே ஏற்படுத்திக் கொண்ட ஆயுதம். அவளைக் கை நீட்டி அடித்து விட்டேனே... சே!

"சித்தப்பா! நீங்களும் வாங்க. விளையாடலாம்!" என்று டாலி கையைப் பிடித்து இழுக்க... கற்பனை உலகில் இருந்து மீண்டான் ராகவ்.



"என்ன விளையாட்டு டாலி?"

"நம்ம மூணு பேரும் விளையாடலாம். ஓ.கே.வா?"

"டாலி! நீ சித்தப்பாவுடன் விளையாடு. ப்ளீஸ்..."

"நோ... நோ... அஞ்சு! நீயும் இருக்கணும்."

"இல்லை டாலி... வேண்டாம்."

"குழந்தை ஆசைப் படறா. ப்ளீஸ்... அவளுக்காகவாவது ஒத்துக் கொள்ளேன்!" என்றான் மென்மையாக ராகவ்.

'இவனால் இவ்வளவு மென்மையாகக் கூடப் பேச முடியுமா?'

அவளுக்கு வியப்பாக இருந்தது.

"ஸாரி... உன்னை அடித்ததற்கு!" என்றான் மெதுவாக.

அவள் மௌனமாக இருந்தாள்.

"இன்னும் கோபமா... என் மேல்? என்ன செய்தால் உன் கோபம் தீரும்?"

அவள் விழிகள் அகல அவனைப் பார்த்தாள்.

'என்ன ஆச்சு இவனுக்கு? எப்பவும் என்னைக் கண்டால் எரிந்து விழுவான். கொஞ்ச நேரம் முன்பு கூட என்னை வார்த்தைகளால் சித்திரவதை செய்தானே! என்ன மாயம் இது?' - குழம்பினாள் அஞ்சனா.

## 12

நீ
இல்லை
என்றால்
என்
வாழ்க்கை
சஹாரா
பாலைவனம்!
ஆகாயம்
இரண்டாக
உடையுமா
என்ன?
நீயும்
நானும்
பிரிந்தால்
அது
நடந்து
விடும்!
பெண்ணே,
என்
வாழ்க்கையை
வசந்தமாக்கு...!



டாலியின் பிறந்த நாளும் வந்தது.

ராணி மூலம் ஹவுஸிங் போர்டு காலனியில் இருந்த குழந்தைகள் எல்லோரும் தயாராக இருந்தனர்.

ஆறு வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் எல்லோரும் நன்றாக உடுத்திக் கொண்டு வீட்டிற்குள் நுழைந்தார்கள்.

கிட்டத்தட்ட முப்பதுக்கும் மேற்பட்ட குழந்தைகளைப் பார்க்கும் பொழுது மழலைப் பட்டாளம் போலத் தோன்றியது, அஞ்சனாவிற்கு. அவள் மனம் மகிழ்ச்சியில் துள்ளியது.

"அஞ்சனா! பசங்க எல்லோரும் வந்துட்டாங்க. நீ இன்னும் தயார் ஆகலையே?" என்றார் கஸ்தூரி.

"நான் ரெடியாகத்தான் இருக்கிறேன், ஆன்ட்டி!"

"என்னம்மா... நல்ல சேலையாக உடுத்தலாமே... காட்டன் புடவை கசங்கி விட்டது, பார்."

"இ... இல்லை ஆன்ட்டி. ப்ளீஸ், இதுவே போதும்."

"அஞ்சனா! நீ எப்பவும் இந்த மாதிரி எளிமையான சேலையைத்தான் உடுத்துவாய். அது எனக்குத் தெரியும். இது நாள் வரை நான் உன்னை ஒன்றும் சொன்ன தில்லை.

"ஆனால் இன்னிக்கு டாலியின் பிறந்த நாள். அதனால் ஒரு நாள் உன் கொள்கையை எல்லாம் விட்டு விடு!" என்றார், கண்டிப்பான தொனியில்.

"இல்லை... ஆன்ட்டி! நான்..." என்று அவள் முடிக்கும் முன்பு அங்கே ராகவ் வந்தான்.

"என்னம்மா... என்ன பிரச்சினை?"

"பிரச்சினை எல்லாம் இல்லைடா!"

"அப்புறம் என்னம்மா... ஏதோ சத்தமாப் பேசின போல இருந்தது. அதனாலதான் சந்தேகமாகக் கேட்டேன்."

"இல்லைடா... ராகவ். டாலியோட பர்த் டே இன்னிக் அதனால அஞ்சனாவை நல்ல டிரெஸ்ஸாப் போய சொல்றேன்."

"ஓ... அப்படியா!" என்றவனின் விழிகள் அவள் மே பதிந்தன.

அஞ்சனா அவன் விழிகளின் கூர்மையைத் தாங் முடியாமல் தலை குனிந்தாள்.

"அஞ்சனா இதே டிரெஸ்ஸில்தான் வருவேன் என்ற பிடிவாதம் பிடிக்கிறாள்..." என்றார் கஸ்தூரி.

"அஞ்சனா! இன்னிக்கு ஒரு நாள் உன் பிடிவாதத்தைத் தளர்த்திக் கொள்ளக் கூடாதா? டாலிக்காக உன் கொள்கை எல்லாம் ஒரே ஒரு நாள் தளர்த்திக் கொள்ளக் கூடாதா?" என்றான், மென்மையாக.

அப்பொழுது டாலியும் அங்கே வந்தாள்.

"அஞ்சு! நான் ரெடி. நீ ஏன் இன்னும் ரெடி ஆகலை?"

"இல்லை... டாலி! நானும் ரெடிதான்."

"இல்லை... நீ ரெடி இல்லை. வேற ட்ரெஸ் போடு நீ..."

"டாலி! ப்ளீஸ்... நான் இதே ட்ரெஸ்ஸைப் போட்டுட்டே வரேனே..."



"நோ... நோ. நீ வேற போடு!" - டாலி பொறுமை இழந்து சத்தத் தொடங்கினாள்.

"அஞ்சனா! டாலிக்காகவாவது நீ உன் கொள்கையை ஒரு நாள் விட்டுக் கொடுக்கலாம். தப்பு இல்லை. நீ எப்பொழுதாவது பார்ட்டிகளில் கலந்து கொண்டிருப்பாய். யோசித்துப் பார்.

"அப்பொழுது என்ன உடை அணிந்து கொண்டிருந்தாய் என்று நினைவு படுத்திப் பார்!" - அழுத்தமாக ஒலித்தது. ராகவ்வின் குரல்.

அவள் சட்டென அவன் முகத்தைப் பார்த்தாள்.

அவன் கண்களில் அடிபட்ட பறவையின் வலி தெரிந்தது.

"ராகவ்! அவ எங்கேடா பார்ட்டிக்கெல்லாம் போயிருப்பாள்?"

"இல்லம்மா... ஆசிரமத்திற்கு வருகிறவர்கள் சில நேரம் பார்ட்டிகளுக்கு அங்கு இருப்பவர்கள் எல்லோரையும் அழைத்துச் செல்வது வழக்கம்.

"அதனால்தான் கேட்டேன். நான் சொல்வது சரிதானே அஞ்சனா?"

அவள் 'சரி' என்பது போல் தலையசைத்தாள்.

'இந்த மாதிரி ஒரு நிலைமைக்கு என்னைத் தள்ளி விட்டாயே... கடவுளே!' என்று மனதிற்குள் புலம்பினாள் அஞ்சனா.

தன் அறைக்குள் சென்றவள் ஒரு அழகான இளம் பச்சை வண்ணச் சுடிதாரை எடுத்து அணிந்து கொண்டாள்.

ஆரஞ்சு நிறமும், இளம் பச்சை வண்ண நிறமும் கலந்து பூக்கள் வாரி இறைத்து இருந்த துப்பட்டாவை மேலே போட்டுக் கொண்டாள்.

அறைக்கு வெளியே வந்தவுடன்... டாலி ஓடி வந்து அவளைக் கட்டிக் கொண்டாள்.

"கோபமா... என் மேல அஞ்சு?" என்று கொஞ்சினாள் டாலி.

"உன் மேல் நான் எப்படா கோபப்பட்டு இருக்கிறேன்..." என்றபடியே அவளைத் தூக்கிக் கொண்டாள் அஞ்சனா.

"நல்லா இருக்கு அஞ்சனா... உனக்கு இந்த ட்ரெஸ்!" என்று புன்னகைத்தார் கஸ்தூரி.

"தேங்க்ஸ் ஆன்ட்டி!"

"ஆன்ட்டி! நான் ரெடி. என் ட்ரெஸ் உனக்குப் பிடித்து இருக்கிறதா, டாலி?" என்றபடியே டாலியை நோக்கி வேகமாக ஓடி வந்தாள் ஸ்நேகா.

நீலமும் கறுப்பும் கலந்த புடவையில் ஸ்நேகா நளினமாக இருந்தாள்.

"உங்க ரெண்டு பேர் டிரஸ்ஸும் சூப்பர்!" என்றாள். உற்சாகமாக டாலி... ஸ்நேகாவையும் அஞ்சனாவையும் பார்த்தபடியே.



"அப்பா ட்ரெஸ் பற்றி நீ எதுவுமே சொல்லலையேம்மா..." என்றபடியே அவளை நோக்கி வந்தான் சஞ்சய்.

"அப்பா... பாய்ஸ் எல்லாருக்கும் எப்பவும் ஒரே மாதிரி ட்ரெஸ்தானே! பேண்ட் சர்ட், குர்தா ஆர் எல்ஸ் வேஷ்டி... வேற டிரெஸ்ஸே கிடையாதே!" என்றாள், சிரித்தபடியே டாலி.

அவள் சொன்ன விதம் எல்லோருக்கும் சிரிப்பை வரவழைத்தது.

வீடே சிரிப்பலையில் மிதந்தது.

"சஞ்சய்! உங்க ட்ரெஸ் ரொம்ப நைஸ்!" என்றாள் ஸ்நேகா.

"ஓ... தேங்க்ஸ் ஸ்நேகா! உனக்குத்தான் நான் நன்றி சொல்லணும்."

"எனக்கா? ஏன்... நான் உங்க ட்ரெஸ்ஸை செலக்ட் செய்யலையே... ட்ரை க்ளீன் செய்யக் கூட நான் எதுவும் உதவி செய்யலையே...!"

"அதனாலதான் அண்ணா ட்ரெஸ் இவ்வளவு நல்லா இருக்கு. உன் கைவண்ணம் பட்டிருந்தால் அவ்வளவுதான்!" என்றான், சந்தடி சாக்கில் ராகவ்.

மீண்டும் எல்லோரும் சிரிக்கத் தொடங்கினார்கள்.

"ராகவ்... என்ன இது?" என்று சிணுங்கினாள் ஸ்நேகா.

"ஏய் ராகவ்! என்ன இது? என்ன இப்படி எல்லாரு... பேசற? பாவம் ஸ்நேகா..." என்று பரிந்து பேசினா... சஞ்சய்.

"சரி... அண்ணா! இனிமேல் ஸ்நேகாவைக் கிண்ட... செய்யலை. ஆனால் அதுக்கு முன்னாடி ஒரு உண்மை... தெரியணும்."

"என்ன உண்மை தெரியணும்."

"நீ எதுக்கு ஸ்நேகாவிற்கு நன்றி சொன்ன?"

"ஓ... அதுவா! நான் இன்னிக்கு இங்க இந்... இடத்தில இருக்கிறதுக்கு ஸ்நேகாதான் காரணம்."

"ஏன் அண்ணா... உனக்கு ஃப்ளைட் டிக்கெ... அவதான் புக் செய்தாளோ?" என்றான் சீரியஸாக, ராக...

"டேய்... உன்னை!" என்று அவன் முதுகி... செல்லமாக ஒரு அடி வைத்தான் சஞ்சய்.

"ஆ... வலிக்குதே!" என்று பொய்யாக அலறினா... ராகவ்.

"சித்தப்பா! உனக்கு ரொம்ப வலிக்குதா? நா... தடவித் தர்றேன்..." என்றாள் டாலி.

"நீ ஒரு ஏஞ்ஜெல் பேபி!" என்று அவளைக்... கொஞ்சினான் ராகவ்.

"நான் உங்களுக்கு என்ன ஹெல்ப் செய்தேன்... ப்ளீஸ், நீங்களே சொல்லிடுங்க. இல்லாட்டி இவங்க... எல்லாரும் என்னை ஒரு வழி செஞ்சிடுவாங்க..." ஸ்நேகா... சிணுங்கினாள்.



"அதுவும் ரைட்தான். நான் சொல்றேன். இல்லா... விட்டால் இவர்கள் எல்லோரும் உன்னை ரொம்ப இம்சை செய்வார்கள்."

"ஏய், என்னைப் பார்த்தால் உனக்கு இம்சை அரசன் போலத் தோன்றுகிறதா?" என்று வம்புக்கிழுத்தான் ராகவ்.

"சே... சே... ஒரு பொறுப்பான டாக்டரைப் பார்த்து நான் அப்படிச் சொல்வேனா?"

"ஸோ... அப்ப நீங்க என்னைத்தான் இம்சை அரசன்னு சொல்றீங்க. அப்படித்தானே அண்ணா?" என்றபடியே உள்ளே நுழைந்தான் நிரஞ்சன்.

"அட... இது என்ன இப்படி எல்லாரும் எனக்கு எதிராப் போர்க் கொடியைத் தூக்கறீங்க? இந்த மாதிரிப் பேசினா நான் என்ன செய்ய முடியும்? என்னை சப்போர்ட் செய்ய யாருமே இல்லையா?"

"ம்... நான் உங்க கட்சிதான் சஞ்சய்!" என்றாள் ஸ்நேகா, சிரித்தபடியே.

"நீ யாருக்கு சப்போர்ட் செய்யப் போற டாலி?"

"அப்பா! அஞ்சு யாருக்கு சப்போர்ட்டோ... அந்தக் கட்சிதான் நானும்!" என்றாள் டாலி.

"அஞ்சனா எப்பவுமே என் கட்சிதான். அப்படித் தானே அஞ்சனா!" என்றான் ராகவ், அவள் முகத்தைப் பார்த்தபடியே.

அவள் ஏதும் சொல்லாமல் மௌனமாக இருந்தாள்.

"மௌனம் சம்மதம் என்று எடுத்துக் கொள்ளலாமா?" என்றான் ராகவ், அமர்த்தலாக.

"உங்க கட்சி வீக் ராகவ்! மிரட்டி உருட்டி ஆ
சேர்க்கக் கூடாது. அது தப்பு!" என்றாள் ஸ்நேகா.

"மிரட்டினால் மசியக் கூடிய ஆள் அஞ்ச இல்லை. அது நம்ம எல்லோருக்கும் தெரியுமே!" என்றா ராகவ்.

"ஸோ... அன்புக்கு மசியக்கூடிய ஆள் அஞ்சன அதனால் அவள் உன் அன்பிற்குக் கட்டுப்படுகிறா அப்படியா ராகவ்?" என்றாள் ஸ்நேகா.

"ம்... யெஸ். யூ ஆர் ரைட்!" என்றான், கண்களி அன்பு பொங்க ராகவ்.

அஞ்சனாவின் இதயம் படபடத்தது.

என்ன இது? இன்று இப்படி எல்லாம் இவ பேசுகிறானே... என்று வியப்புக் கூடிய பயம் அவ உடலில் வேகமாக அலை போல் பரவியது.

"நீங்க என்ன சொல்றீங்க... அஞ்சனா? நீங்க ராக கட்சியா?"

"இ... இல்லை. நாம போகலாமா, ப்ளீஸ்?" என்றா மென்மையாக.

"ம்... போகலாம். ஆனால் எனக்கு உண்மை தெரியணும்!" என்றாள் ஸ்நேகா.

"என்ன உண்மை உனக்குத் தெரியணும்?" என்றான் சஞ்சய்.

"ம்... நீங்க எனக்கு நன்றி சொன்னீங்களே... அ எதற்கு?"



"அடடா... ஆரம்பிச்ச விஷயத்தை அப்படியே மறந்திட்டேனே! ஆனா நீ மறக்கலை பார். நீ என்னிடம் பேசி... என்னைக் கன்வின்ஸ் செய்தாய் அன்று.

"டாலியைப் பற்றி நீ விளக்கமாக என்னிடம் சொன்னாய். அதனால்தான் எனக்குப் புரிந்தது. நீ எடுத்துச் சொன்னதால்தான் எனக்குப் புரிந்தது. டாலி என்னை எவ்வளவு தேடுகிறாள் என்று.

"இவ்வளவு நாள் இந்தத் தேவதையைப் பார்க்காமல் இருந்து விட்டேனே... என்று என் மனம் என்னைக் குத்திக் குதறியது!" என்றான் மெதுவாக.

"அச்சோ அண்ணா! ஸ்நேகாவையா தேவதை என்று சொல்கிறாய். ஸம்திங் இஸ் ராங் வித் யூ!" என்றான் நிரஞ்சன், சீரியஸாக.

"ம்... இவள் தேவதைதான். டாலியைப் போல!" என்று சஞ்சய் தன்னை மறந்து சொன்னான்.

ஸ்நேகாவின் கன்னங்களில் ரோஜா பூத்தது.

அதை அஞ்சனா கவனித்தாள்.

## 13

உன்னை
நான்
முதல்
முதலாகப்

பார்த்த
பொழுது
.......
என்
மனதில்
ஒரு
மின்னல்
தோன்றியதா?
இல்லை,
...........
என்
மனதில்
வெள்ளம்
பாய்ந்ததா?
இல்லை,
............
கவிதை
பிறந்ததா?
குழப்பத்தில்
இருக்கிறேன் நான்!

அந்த ஏ.ஸி. ஹால் முழுக்கக் குழந்தைகள் நிரம்பி இருந்தனர்.



குழந்தைகள் விளையாடுவதற்கு ஏகப்பட்ட அயிட்டம்ஸ் இருந்தன.

எதில் விளையாடுவது என்று புரியாமல் திகைத்து அங்கும் இங்கும் ஓடியபடி இருந்தனர், நிறையக் குழந்தைகள்.

"அஞ்சனா! உனக்குத்தான் நன்றி சொல்லணும்!" என்றார் கஸ்தூரி.

"என்ன... இன்னிக்கு ஆள் ஆளுக்கு நன்றி சொல்வதிலேயே இருக்கீங்க!" என்று சிரித்தான் நிரஞ்சன்.

"டேய்... உனக்கும் எனக்கும் ஒன்றும் கிடைக்கப் போவதில்லை. லேடீஸ் ஸ்பெஷல் போல நன்றி நவிலும் படலம் எல்லாம் இன்னிக்கு அவங்களுக்குத்தான் போல!" என்றான், போலி வருத்தத்துடன் ராகவ்.

"ஆமாம் அண்ணா! நீங்க சொல்றது சரிதான்!" என்றான் நிரஞ்சன்.

"டேய்... போதும். எல்லாரும் சேர்ந்து நம்ம வீட்டுப் பெண்களைக் கேலி செய்யறீங்களா?

"அஞ்சனா சொன்னதால்தான் நமக்கு இந்தக் குழந்தைகளை எல்லாம் இங்கே... டாலியின் பிறந்த நாளிற்கு அழைத்துக் கொண்டு வர வேண்டும் என்று தோன்றியது.

"எவ்வளவு சந்தோஷம் தெரிகிறது பார், இவர்கள் முகத்தில். இனி இந்த மாதிரி அடிக்கடி ஏதாவது உபயோகமாக இது போன்ற குழந்தைகளுக்குச் செய்ய

வேண்டும்டா...” என்றார் கஸ்தூரி, உணர்ச்சி ததும்ப குரலில்.

“அம்மா... நிச்சயமாக. இவ்வளவு நாள் வேலையில் மட்டுமே மூழ்கி இருந்து விட்டேன். அதனால் மற்ற விஷயங்களை நான் சரியாகக் கவனிக்கவில்லை. ஐயாம் ஸாரி அம்மா!” என்றான் நிரஞ்சன்.

“ஆமாம் அம்மா! நானும் ஹாஸ்பிடல், பேஷண்ட்ஸ்... அப்படின்னு அதிலேயே பிஸியா இருந்திட்டேன். அதை எல்லாம் தாண்டி வேறு ஒரு உலகம் இருக்குன்னு எனக்கு இன்னிக்குத்தான் புரிஞ்சது” என்றான் ராகவ், மன்னிப்புக் கோரும் தொனியில்.

“டாலியின் அம்மா போன பிறகு நான் இசையில் என் துக்கத்தை எல்லாம் கரைக்க முயன்றேன். டாலியைக் கூட நான் மறந்து விட்டேன். ஒரு தகப்பனாக அவள் வளரும் அழகை நான் ரசிக்கவில்லை.

“அது மட்டுமில்லை. அவளின் சின்னச் சின்ன ஆசைகளை நான் நிறைவேற்றத் தவறி விட்டேன். இதை எல்லாம் பற்றிக் கொஞ்சம் கூடக் கவலைப்படாமல் நான் ஏன் சுயநலத்துடன் இருந்தேன் என்று எனக்கே தெரியவில்லை... அம்மா!” என்றான் சஞ்சய், கலங்கிய கண்களுடன்.

“டேய்... சஞ்சய்! நீ டாலியின் அம்மா மேல் ரொம்ப பிரியமாக இருந்தாய். அவள் சட்டெனச் சந்நியாசியாக மாறியவுடன் உனக்கு என்ன செய்வது என்றே புரியவில்லை. வாழ்க்கைத் துணையை இந்த மாதிரி பிரிவது ரொம்ப அரிதுடா சஞ்சய்!



“உன் இடத்தில் யார் இருந்திருந்தாலும் இந்த மாதிரி ஏதாவதுதான் செய்திருப்பார்கள். அதனால் நீ கவலைப் படாதே!”

“அம்மா... நல்ல காலம். அண்ணா வேறு எந்தக் கெட்ட வழியையும் தேர்ந்தெடுக்காமல் இருந்தாரே... துக்கத்தைக் கரைப்பதற்கு.

“அந்த விஷயத்தில் அண்ணனின் மன உறுதியை நாம் பாராட்டியே தீர வேண்டும்!” என்றான் நிரஞ்சன்.

“ஆமாம்டா. விரக்தி அடைந்த மனம் கண்டதையும் தேடும். ஆனால் சஞ்சய் அதில் எல்லாம் சிக்க மாட்டான் என்று எனக்கு நம்பிக்கை இருந்தது.”

“தேங்க்ஸ் அம்மா!”

“அம்மா... எங்க மேலயும் உங்களுக்கு அந்த நம்பிக்கை இருக்குதானே?” என்றனர் கோரஸாக, நிரஞ்சனும் ராகவ்வும்.

“நீங்கள் மூன்று பேருமே எனக்குக் கிடைத்த அரிய மாணிக்கங்கள். நீங்கள் யாருமே தப்பான வழியில் போக மாட்டீர்கள் என்று எனக்கு எப்பவுமே நம்பிக்கை உண்டு!” என்றார் கஸ்தூரி, குரல் நடுங்க.

“அம்மா...” என்றபடியே மூன்று சகோதரர்களும் கஸ்தூரியின் கையைப் பிடித்துக் கொண்டனர்.

அதைப் பார்த்த அஞ்சனாவின் கண்கள் கலங்கின.

அவள் மனம் நெகிழ்ந்தது.

இந்த மாதிரி ஒரு உணர்வு தன் வாழ்க்கையில் இது வரை ஏற்பட்டதே இல்லையே... இனியும் இந்த மாதிரி ஒரு அனுபவம் என் வாழ்க்கையில் ஏற்படவே ஏற்படாது என்ற நினைப்பு அவள் மனதை அழுத்தியது.

இந்த மாதிரி ஒரு வாழ்க்கை ஏன் தனக்கு வாய்க்க வில்லை... என்ற ஏக்கம் அவள் மனதை ஆக்கிரமித்தது.

"டாலி! கேக் கட் செய்ய நேரம் ஆச்சே!" என்று ஸ்நேகா சொன்னவுடன் எல்லோரும் இயல்பு நிலைக்கு வந்தனர்.

"ஆமாம்... ஆமாம். நல்ல நேரம் இப்பதான். போகலாமா?" என்றார் கஸ்தூரி.

"டாலி குட்டி, வாடா... அப்பாகிட்ட!" என்று அவளை இரு கரம் நீட்டி அணைத்துக் கொண்டான் சஞ்சய்.

டாலியின் முகத்தில் தெரிந்த சந்தோஷத்தைக் கவனித்தாள் அஞ்சனா.

அவள் இதழ்களிலும் புன்னகை தொற்றிக் கொண்டது.

டாலி ஸ்டேஜ் போன்ற உயரமான அமைப்பில் நின்று கொண்டாள்.

ஆறு மெழுகுவத்திகள் உள்ளடக்கிய அந்த கேக் பிங்க் நிறத்தில் பார்க்க அழகாக இருந்தது.

வண்ணப் பலூன்கள் ஆங்காங்கே தொங்க விடப்பட்டிருந்தன. குழந்தைகளுக்கு அணிந்து கொள்ள முகமூடிகள் (மாஸ்க்) தயாராக இருந்தன.



புலி, கரடி, யானை, டோரா, சோட்டா பீம், ஸ்பைடர் மேன் என விதவிதமான முகமூடிகளை அணிந்து கொண்டு குழந்தைகள் கேக் வெட்டும் வைபவத்திற்கு ஆவலாகக் காத்துக் கொண்டிருந்தனர்.

"ஹேப்பி பர்த் டே டு டாலி!" என்று குழந்தைகள் கோரஸாகப் பாட கேக்கை வெட்டினாள் டாலி.

மெழுகுவத்திகளை ஏற்றினால் அணைக்க வேண்டும். நல்ல நாள் அதுவுமாகத் தீபம் போன்ற மெழுகுவத்தியின் ஒளியை ஊதி அணைக்க கஸ்தூரியின் மனம் ஒப்பவில்லை.

அதனால் மெழுகுவத்திகளை ஏற்றவே வேண்டாம் என்று தீர்மானமாகச் சொல்லி விட்டார் கஸ்தூரி.

கேக்கை வெட்டிய டாலியிடம் கேக்கின் ஒரு துண்டை எடுத்து அவள் வாயில் ஊட்டினான் சஞ்சய்.

அதைச் சாப்பிட்ட டாலி கேக்கிலிருந்து இன்னொரு துண்டை எடுத்துச் சஞ்சய்யின் வாயில் ஊட்டி விட்டாள்.

டாலி கொடுப்பதற்கு வாட்டமாகக் கேக்கைச் சிறு சிறு துண்டுகளாக வெட்டினாள் அஞ்சனா.

"அஞ்சு! இந்தா, நீ சாப்பிடு..." என்று ஒரு துண்டைக் கையில் கொடுத்தாள் டாலி.

"தேங்க்ஸ் டாலி! பாட்டிக்குக் கொடு..." என்றபடியே கேக்கைச் சுவைத்தாள் அஞ்சனா.

"சித்தப்பா... பாட்டி... இந்தாங்க உங்க எல்லோருக்கும் கேக். எல்லாம் கடகடன்னு சாப்பிடணும். இன்னும் லஞ்ச் வேற இருக்கு.

"எதையும் வேஸ்ட் செய்யாமல் சாப்பிடனும் புரிந்ததா!" என்றாள், பெரிய மனுஷி போல் டாலி.

"சரிங்க மேடம்! உங்க உத்தரவு!" என்றன சிரித்தபடியே நிரஞ்சனும் ராகவ்வும்.

மற்றக் குழந்தைகள் எல்லோருக்குமே கேக்குகளை வினியோகம் செய்து கொண்டிருந்தாள் அஞ்சனா.

"ஏதாவது உதவி செய்யட்டுமா நான்..." என்று ராக குரல் அங்கே கேட்க... திடுக்கிட்டாள்.

"இல்லை டாக்டர்! எதுவும் வேண்டாம்..." என்றா அஞ்சனா, சமாளித்துக் கொண்டு.

"நீ என்னிடம் ட்ரீட்மெண்ட் எடுத்துக் கொண்ட போல் எனக்கு ஞாபகம் இல்லையே..."

"இல்லை... டாக்டர்! ஏன் கேட்கிறீங்க?"

"ம்... என்னை டாக்டர்... டாக்டர்... என் கூப்பிடறியே... அதுக்கு என்ன காரணம்? நீ எ பேஷண்ட் இல்லை அஞ்சனா. அதனால் இனிமே அப்படிக் கூப்பிடாதே."

"சரி... டாக்டர்! ஸாரி..." என்று நாக்கைக் கடித்து கொண்டாள்.

சுடிதாரில் அவள் ரொம்ப மெலிவாகத் தெரிந்தா முகத்தில் அழகும், நளினமும் இருந்தன. ஆனா கண்களில் ஏதோ ஒரு சோகம் தெரிவது போல் அவனுக்குத் தோன்றியது.



"நீ இங்க வந்த பின்பு எப்படி இருக்க அஞ்சனா? ஆர் யூ ஓ.கே.?" என்றான் ராகவ்.

"யெஸ் டாக்டர்! ஸாரி... நான் மகிழ்ச்சியாக இருப்பதே உங்க வீட்டுக்கு வந்த பின்புதான்!"

அவள் கண்களில் மின்னல் போல் தோன்றி மறைந்த மகிழ்ச்சி அவள் மனதைப் படம் பிடித்துக் காட்டியது.

அவள் பொய் சொல்லவில்லை. உண்மை யைத்தான் சொல்கிறாள் என்று ராகவ்விற்குப் புரிந்தது.

"தட் இஸ் குட். எனக்குக் கேட்க ரொம்பச் சந்தோஷமா இருக்கு."

"டாலி என்றால் எனக்கு உயிர்."

"ம்... அப்புறம் ஏன் அன்று அப்படிப் பேசினாய், அஞ்சனா?" என்றான், மெல்லிய குரலில் ராகவ்.

உயிர் துறப்பது எனக்குப் பெரிய விஷயம் இல்லை என்று தான் அன்று சொன்னதை அவன் சொல்லிக் காட்டுகிறான் என்று அவளுக்குப் புரிந்தது.

"ஸாரி... நான் அன்று ஏதோ ஒரு மனநிலையில் அப்படிப் பேசி விட்டேன்."

"உன்னை அந்த மாதிரி ஒரு மன நிலையில் தள்ளியதற்கு நான்தான் காரணம். என் பங்கு அதில் அதிகம். அப்படித்தானே அஞ்சனா?" என்றான் மென்மை யாக.

இவன் இந்த மாதிரி மென்மையாக என்கி... பேசினால் அவ்வளவுதான். நான் உளறி விடுவே... என்னைப் பற்றி. எல்லா விஷயத்தையும் நான் உ... விடுவேன்.

இது சரி வராது. என்ன செய்வது? எப்ப... இதிலிருந்து தப்புவது எனக் கடகடவென யோசித்தா... அஞ்சனா.

"நான் டாலி என்ன செய்கிறாள் என்று கவனிக்... வேண்டும்..." என்றபடியே அங்கிருந்து நகர முயன்றாள்.

டேபிளுக்கு அந்தப் பக்கம் சுவர் இருந்தது... அதனால் அவளால் அந்தப் பக்கமாகப் போக... முடியவில்லை. மறுபக்கம் ராகவ் நின்று கொண்டிருந்தான்.

அவன் வழி விட்டால்தான் அவளால் அந்தப் பக்க... போக முடியும். ஆனால் அவன் நகராமல் நின்று... கொண்டிருந்தான்.

"ப்ளீஸ் வழி விடுங்க."

"ம்... முடியாது!" என்றவன் உல்லாசமாகச் சிரித்தான்.

"ப்ளீஸ்... நான் போகணும்..." என்று கெஞ்சினாள் அஞ்சனா.

"முடியாது. நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்... நான் உடனே உனக்கு வழி விடுகிறேன்."

அவள் மௌனமாக இருந்தாள். நொடிகள் கரைந்தன.



"ப்ளீஸ்... என்ன இது?"

"ஸாரி... என்னால்தானே நீ அன்று அப்படி எல்லாம் பேசினாய். இனி அந்த மாதிரி எல்லாம் நான் பேச மாட்டேன்.

"ஆனால் நீ என்னிடம் உன்னைப் பற்றிய உண்மைகள் எல்லாவற்றையும் மறைக்காமல் சொல்ல வேண்டும்!" என்றான் ராகவ்.

அவள் முகம் அச்சத்தால் வெளிறியது.

## 14

என்னுடன்
சேர்ந்து
சிரிக்க
ஒரு
ஜீவன்
இருக்கிறது!

............

என்
துக்கங்களைச்
சொல்லி
அழ

ஒரு
ஜீவன்
இருக்கிறது!
........
என்னை
எனக்காக
என்
குறை
நிறைகளுடன்
ஏற்றுக் கொள்ள
ஒரு ஜீவன்
இருக்கிறது!
நன்றி பெண்ணே!

"எ... என்ன உண்மைகள் உங்களுக்குத் தெரிய வேண்டும்?" என்றாள் பதட்டமாக.

"ம்... நீ ஏன் ஏதேதோ மாத்திரைகளைச் சாப்பிடுகிறாய்? அவை உடம்புக்கு நல்லது இல்லை."

"அப்படியா என்ன? எனக்குத் தெரியாதே!"

"உனக்கு யார் கொடுத்தார்கள், அந்த மாத்திரையை? எந்த டாக்டர் உனக்கு அதை ரெகமண்ட் செய்தார்? அவர் ப்ரிஸ்கிரிப்ஷன் உன்னிடம் இருக்கிறதா? அதை என்னிடம் கொடு."



"ம்... அந்த ப்ரிஸ்கிரிப்ஷன் எல்லாம் என்னிடம் இல்லை..." என்றாள் தயக்கமாக.

அஞ்சனா தன்னிடம் எதையோ மறைக்கிறாள் என்று அவனுக்குப் புரிந்தது.

"ஓ... ப்ரிஸ்கிரிப்ஷன் இல்லையா? அப்ப உனக்கு அந்த மாத்திரைகளை அறிமுகப்படுத்தியது யார்?"

"ஆசிரமத்துக்கு ஒரு மேடம் வருவாங்க. அவங்ககிட்ட நான் சாப்பிடப் பிடிக்கவே இல்லை. சாப்பிட்டால் உடனே வாமிட் வந்து விடுகிறது என்று சொன்னேன்.

"அப்பொழுது அவர்கள்தான் இதைச் சாப்பிடு. இது உடம்பிற்கு நல்லது என்று என்னிடம் ஒரு டப்பாவைக் கொடுத்தார்கள். அதிலிருந்து நான் இதைத் தொடர்ந்து சாப்பிடுகிறேன், டாக்டர்!

"இப்ப உங்களை அப்படி டாக்டர்ன்னு கூப்பிடலாம்தானே?" என்றாள் கண்கள் அகல.

அவள் விழிகள் அகலக் குழந்தையைப் போல் தன் பர்மிஷனை எதிர்பார்த்துக் காத்து நின்ற தோற்றம் அவன் மனதை என்னவோ செய்தது.

"அஞ்சனா! அந்த மாத்திரைகள் உடம்புக்கு நல்லது இல்லை. நரம்புகள் வீக் ஆகிவிடும். சாப்பாடு சரியாகச் சாப்பிட முடியாதவர்கள்தான் அந்த மாத்திரையைச் சாப்பிடுவார்கள்.

"பசியை அது அடைத்து விடும். ஜீரண சக்தி குன்றி விடும். உடம்புக்குத் தேவையான தாதுப் பொருட்கள்

கிடைக்காது. அதனால்தான் நான் சொல்கிறேன், அதை நிறுத்தி விடு என்று.

"சரி... நீ எவ்வளவு நாட்களாக இந்த மாத்திரை எடுத்துக் கொள்கிறாய்?"

"ம்... இரண்டு வருடங்களுக்கு மேல் இருக்கும் டாக்டர்!"

"காட்! அதனால்தான் நீ மெலிந்து கொண்டே போகிறாய்."

"இல்லை டாக்டர்! அப்படி எல்லாம் எனக்குத் தெரியவில்லை. என் அம்மா ரொம்ப மெலிவாகத்தான் இருப்பார்களாம். அப்பா என்னிடம் சொல்லி இருக்கிறார்."

"ம்... நீ அனாதை என்றுதானே சொன்னாய். ஆசிரமத்தில் இருந்து படித்ததாகச் சொன்னாயே..." என்றவனின் விழிகள் கூர்மையாக அவள் முகத்தில் பதிந்தன.

சே! பேச்சுவாக்கில் உளறி விட்டேனே... என்று தன்னையே கடிந்து கொண்டாள் அவள்.

"இ... இல்லை. நான் செகண்ட் ஸ்டாண்டர்டிற்கு மேல்தான் ஆசிரமத்தில் இருந்தேன். அதுவரை வீட்டில் பெற்றோருடன்தான் இருந்தேன்!" என்று மழுப்பினாள்.

"ஓ... உன் பெற்றோருடன் நீ எங்கே இருந்தாய்? சென்னையிலா?"

"நோ... மும்பை. ஸாரி திருச்சி."



"ஓ... உன் பெற்றோருக்கு என்ன ஆச்சு? ஏன் நீ சட்டென அநாதையாக மாறினாய்?"

"ஏன் டாக்டர்... என்னைப் பற்றி... என் பழைய வாழ்க்கையைப் பற்றி... இவ்வளவு கேள்விகள் கேட்கிறீர்கள்?"

"உன்னைப் பற்றித் தெரிந்து கொள்ளத்தான்..."

"அதற்கு என்ன அவசியம்? உங்கள் வீட்டில் உள்ள பணத்தைச் சுருட்டிக் கொண்டு நான் என் பாய்-ஃபிரண்டுடன் ஓடிப் போய் விடுவேன் என்று உங்களுக்குச் சந்தேகமாக இருக்கிறதா?"

தான் சொன்னதையே தன்னிடம் வேண்டும் என்றே சொல்லிக் குத்திக் காட்டுகிறாள் என்று அவனுக்குப் புரிந்தது.

அவன் முகம் இறுகியது. ஆனால் சமாளித்துக் கொண்டான்.

"அந்த மாதிரிச் சந்தேகம் ஏதுமில்லை. ஆனால் நீ ஏதோ பெரிய விஷயத்தை எங்கள் வீட்டில் உள்ள எல்லோரிடமும் மறைக்கிறாய் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது."

"அது உங்களுடைய கற்பனை டாக்டர்!"

"இல்லை அஞ்சனா! என் உள்ளுணர்வு ஒருபோதும் என்னை ஏமாற்றியது இல்லை."

"எல்லாவற்றுக்குமே ஆதாரம் வேண்டும் டாக்டர்!"

"ஸோ... நான் ஆதாரத்துடன் வர வேண்டும் என்று சொல்கிறாய். அப்படித்தானே!"

அவள் மௌனமாக இருந்தாள்.

"அஞ்சனா! குழந்தைகள் தனியாக விளையாடு கிறார்கள் பார். அவர்களைக் கொஞ்சம் பார்த்துக் கொள்!" என்று கஸ்தூரி சொன்னவுடன்... 'அப்பாடா.... தப்பித்தோம்' என்ற எண்ணம் அவள் மனதில் பரவியது.

"சரி ஆன்ட்டி!" என்றவள் சிட்டெனப் பறந்தாள்.

அவள் போவதையே பார்த்தபடி இருந்தான் ராகவ். இவள் என்னிடம் ஏதோ ஒரு விஷயத்தை மறைக்கிறாள்.

அது என்ன என்று தோண்டித் துருவி விசாரணை செய்யலாம் என்று நினைத்தால்... அதற்குள் அம்மா வந்து காரியத்தைக் கெடுத்து விட்டார்களே என்ற யோசித்தபடியே இருந்தான் ராகவ்.

அஞ்சனாவிடமிருந்து எப்படியாவது இந்த விஷயத்தைப் பற்றி உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தான்.

அஞ்சனா மெயின் ஹாலிற்குத்தான் சென்றிருப்பாள். அங்குதான் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருப்பார்கள். அதனால் தானும் அங்கேயே செல்வது என்று முடிவு செய்தான் ராகவ்.

ஹால் முழுக்கக் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தனர்.



"சித்தப்பா! வா; நீயும் விளையாடலாம்!" என்று அவன் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு சென்றாள் பாலி.

"ம்... கண்டிப்பா. இன்னிக்கு ஃபுல்லா நான் உன்னோடதான் டைம் ஸ்பெண்ட் செய்யப் போறேன். என்ன விளையாட்டு விளையாடலாம்? சொல்லு... குட்டி!"

"இதோ இங்கே பார். சூப்பர் மார்க்கெட் இதுதான். இங்க நிறைய திங்ஸ் இருக்கு பார்."

"அட... ஆமாம். இந்தப் பக்கம் காய்கறிகள். இந்தப் பக்கம் பழங்கள் இருக்கே."

"ஆமாம் சித்தப்பா! அப்புறம் அந்த ஸைட் பார்... அரிசி, கோதுமை, நூடுல்ஸ் எல்லாமே இருக்கு."

"ஆமாம் பிஸ்கெட் பாக்கெட்ஸ் கூட இருக்கே!"

"யெஸ் சித்தப்பா. ரொம்பப் பெரிய சூப்பர் மார்க்கெட்தானே இது."

"ஆமாம் குட்டி! ட்ராலி கூட இருக்கு பார் அங்கே. சின்ன சைஸ் ஒண்ணு, பெரிய சைஸ் ஒண்ணு."

"சித்தப்பா! நீ ட்ராலியில் சாமான் எல்லாம் எடுத்துக் கொண்டு வர்றியா?"

"ஒ.கே. நீயும் ட்ராலியில் தள்ளிக் கொண்டு வர்றியா?"

"நோ... நான் பில் போடப் போறேன்."

"அட்ரா சக்கை! அவ்வளவு பெரிய ஆளா நீங்க! பில் போடப் போறீங்களா?"

"யெஸ். அந்தக் கம்ப்யூட்டர்கிட்டதான் நான் உட்கார போறேன். நீ ட்ராலியைத் தள்ளிக் கொண்டு எடுத்துக் கொண்டு வரணும். புரிந்ததா?"

"ஓ... அப்படியா! சரி... நான் அப்படியே செய்யறேன், மேடம்!"

"டாலி... இங்கதான் விளையாடறியா? நான் உன்னை எங்கெல்லாமோ தேடினேன்!" என்றபடியே அவளை அணைத்துக் கொண்டாள் அஞ்சனா.

"அஞ்சு! நீயும் வா... விளையாடலாம். நானும் சித்தப்பாவும் விளையாடறோம். சூப்பர் மார்க்கெட் விளையாட்டுதான். நீயும் வா. ஜாலியா இருக்கும்."

அப்பொழுதுதான் டாலி விளையாடும் இடம் அருகே இருந்த ராகவைக் கவனித்தாள் அஞ்சனா.

"வா அஞ்சனா! நீயும் ஒரு ட்ராலியைத் தள்ளிக் கொண்டு வா. டாலிதான் கேஷியர். பில்லிங் செக்ஷனில் அவள் உட்கார்ந்திருக்கிறாள் பார்!"

"ம்... ரைட்தான். நீங்க உங்க விளையாட்டைக் கண்டினியூ செய்யுங்க. நான் போய் ஆன்ட்டிக்கு உதவி செய்து விட்டு வருகிறேன்."

"நில்..." என்றவன் அவள் மணிக்கட்டைப் பற்றினான்.

"ப்ளீஸ்... கையை விடுங்க."

"ஏன்... என்னை அவாய்ட் செய்யுற?" - அவன் குரலில் கோபம் கொப்புளித்தது.

"அப்படி எல்லாம் எதுவும் இல்லை."

"இல்லை அஞ்சனா! நீ ஏதோ தப்பு செய்திருக்கிறாய். அதனால்தான் என்னைக் கண்டு பயப்படுகிறாய். அதனால்தான் என்னைக் கண்டாலே ஓடி ஒளிகிறாய்!"

"நோ... அதெல்லாம் இல்லை. விடுங்கள்!" என்றபடியே திமிறிக் கொண்டு... கையை அவன் பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டு வேகமாக ஓடினாள்.

குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்த ஏ.ஸி. ஹாலைத் தாண்டி நடந்தாள்.

வரவேற்பறையின் முன்பு இருந்த தோட்டத்தில் இருந்த பூக்கள் அவளை வா... என்று வரவேற்பது போல் ஒரு பிரமை தோன்ற... தோட்டத்தை நோக்கி நடந்தாள்.

ராகவ் சொல்வது உண்மைதான். நான் அவனைப் பார்த்து ஓடி ஒளிகிறேன்தான். ஆனால் எனக்கு அவனைப் பார்த்துப் பயம் இல்லை.

என்னைப் பார்த்துதான் பயம். என் மேல் எனக்கு நம்பிக்கை இல்லை.

என்னை மீறி ஏதாவது உளறி விடுவேனோ என்ற பயம் என்னை ஆட்டிப் படைப்பது உண்மைதான். ஏன் ராகவைக் கண்டு என் மனம் சலனப்படுகிறது?

"ஏய்... நீ பூஜாஸ்ரீயின் மகள்தானே?" - யோசனையில் மூழ்கி இருந்தவளைக் கலைத்தது அந்தக் குரல்.

சட்டெனத் தன்னிடம் கேள்வியைக் கேட்டவ...
ஏறிட்டாள் அவள்.

"உன்னைத்தான் கேட்கிறேன். காதில் ...
வில்லையா?" - குரலில் எரிச்சல் இருந்தது.

"இல்லை. நான் ஏதோ யோசனையில் இருந்தே...
ஸாரி... என்ன கேட்டீங்க?"

"ம்... நீ நடிகை பூஜாஸ்ரீயின் பெண்தானே!"

அஞ்சனாவின் முகம் பயத்தால் வெளிறியது.

"இல்லை... எனக்கு அவங்க யாருன்னே தெரியாது"

"அப்படியா என்ன? நீங்க அதே மாதிரி இருக்கீங்க...
அதனாலதான் கேட்டேன். அவங்க பெண்ணைக் கொஞ்...
மாதமாகக் காணவில்லை. அவங்க அவளைத் தே...
றாங்க.

"அவங்க பெண்ணிற்குக் கழுத்தின் இடது புறம் ஒ...
மச்சம் இருக்கு. அது எனக்குத் தெரியும்!" என்றவன்
அவளை நோக்கி முன்னேறினான்.

உடலும் மூளையும் மரத்துப் போகச் சிலை போல
நின்று கொண்டிருந்தாள் அஞ்சனா.

துப்பட்டா மேல் அந்தப் புதியவனின் கை பட...
அவனைத் தள்ளி விட்டு விட்டு ஓட முயன்றாள்.

ஆனால் அதற்குள் அவள் கையைப் பற்றியது. ஓர்
ஆண் கரம்.



# 15

என்னைக்
கவிஞனாக்கியது
நீ!

............

என்னை
ஓவியனாக்கியது
நீ!

............

என்னைக்
கலைஞனாக்கியது
நீ!

............

என்னை
மனிதனாக்கியது
நீ!

............

இப்பொழுது
எங்கே
இருக்கிறாய்
நீ?
உன் நினைவாக
நான் இங்கே
தனியாக!

"அஞ்சனா! யார் இவர்?" - கோபமாக ஒலித்தது ராகவ்வின் குரல்.

"தெ... தெரியவில்லை." - அவள் குரல் நடுங்கியது.

பயத்தில் அவன் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள் அஞ்சனா.

"ஏய்... யார் நீ? என்ன வேண்டும்?" என்று அதட்டினான் ராகவ்.

"இல்லை ஸார். எனக்குத் தெரிஞ்ச பொண்ணு மாதிரி இருந்தது. அதனாலதான் விசாரித்துக் கொண்டிருந்தேன். அதுக்குள்ள நீங்க வந்துட்டீங்க."

அவனிடமிருந்து மது வாடை கிளம்பியது.

"தனியாக இருக்கிற பெண்ணிடம் வம்பு செய்யலாம் என்று நினைத்தாயா? உன்னைப் போலீஸில் ஒப்படைக்கவா? வா... என்னுடன்!" என்று அவன் கையைப் பற்றினான் ராகவ்.

"அட... அப்படி எல்லாம் இல்லை ஸார்!" என்றவன் கையை இழுத்துக் கொண்டான்.

"டாக்டர் ஸார்! நாம இங்கிருந்து போய் விடலாமே... ப்ளீஸ்!" என்று கெஞ்சினாள் அஞ்சனா.

அவள் முகத்தைப் பார்த்தான் ராகவ். அவள் முகத்தில் பய ரேகைகள் தெரிந்தன.

அவளைப் பார்க்கப் பாவமாக இருந்தது அவனுக்கு.



"சரி... வா போகலாம்!" என்றபடியே அவள் தோளில் கை பதித்தான். அவள் உடல் நடுங்குவதை அவனால் உணர முடிந்தது.

"ஏய்... ஏன் பயப்படுற? இங்கே நான் இருக்கும் வரை உன்னை யாரும் எதுவும் செய்ய முடியாது. அதை நீ நினைவில் வைத்துக் கொள். என்ன, புரிந்ததா?" என்று சிறு குழந்தையைச் சமாதானப் படுத்துவது போல் அவளைச் சமாதானப்படுத்தினான் ராகவ்.

"ம்... ப்ளீஸ். நாம உடனே இங்கிருந்து போய் விட முடியுமா?" என்றவளின் குரல் நடுங்கியது.

அவள் கையை அவன் பற்றிக் கொண்டான். அவள் மறுப்பு ஏதும் சொல்லவில்லை.

"பயப்படாதே அஞ்சனா! நீ எதற்கும் பயப்பட வேண்டாம்."

"ம்..." - என்றவளின் கண்களில் இருந்து கண்ணீர் பெருகியது.

ஒரு கேவல் அவளை அறியாமல் வெடித்தது.

"ஏய்... என்ன இது? என்னம்மா இது?" என்றவன்... அவளைச் சட்டென அணைத்துக் கொண்டான்.

அதற்காகவே காத்துக் கொண்டிருந்தது போல் அஞ்சனா அவன் மார்பில் முகம் புதைத்து அழத் தொடங்கினாள்.

அவள் உடல் நடுங்குவதை ராகவ் உணர்ந்தான். அவள் பயத்தைப் போக்க வேண்டும் என்று நினைத்தவன் அவள் முதுகை வருடினான்.

"அஞ்சு! ஒண்ணும் இல்லை. அநாவசியமாக பயப்படாதேம்மா!"

அவன் மென்மையான வார்த்தைகள் அவள் மன வலியைக் குறைத்தன. ஆனால் அழுகை குறைய வில்லை.

அணையிலிருந்து வேகமாக ஓடி வரும் வெள்ளம் போல் அவள் மனதில் இருந்த உணர்ச்சிகள் எல்லாம் கரை புரண்டு ஓடின.

"அஞ்சு! அவன் உன்னிடம் தப்பாக நடந்து கொண்டானா? சொல். நான் அவனை ஒரு வழி செய்து விடுகிறேன். ஏதாவது அசிங்கமாகப் பேசினானா?

"சொல் அஞ்சு! அவன் ரொம்பத் தூரம் போய் இருக்க மாட்டான். சொல்லும்மா!" என்று அவள் தோளை உலுக்கினான் ராகவ்.

அவன் கண்களில் தெரிந்த கோபத்தை கவனித்தாள் அஞ்சனா.

அவளுக்குப் பதட்டமானது.

"இ... இல்லை. ஏதும் இல்லை."

அவன் முகத்தில் நிம்மதி பூப் பூத்தது.

"சரி... நீ ஏன் அஞ்சு அப்படிப் பயந்திட்ட?"

"ம்... அவன் தோற்றம் ரொம்ப முரடாக இருந்தது அதோடு மிரட்டுவது போல் வேறு ஏதோ கேட்டான் அதனால் பயந்து விட்டேன். ஸாரி!" என்று அவன் பிடியில் இருந்து மெதுவாகத் தன்னை விடுவித்துக் கொண்டாள்.



"அப்பாடா... நான் பயந்து போய் விட்டேன். நீ அழுத அழுகையைப் பார்த்து..."

"ஸாரி. நான்... நான் பயந்து போய்த் தெரியாமல்..." என்று முடிக்க முடியாமல் திணறினாள் அஞ்சனா.

"எதுக்கு ஸாரி சொல்ற?" என்றான், சிரித்தபடியே ராகவ்.

அவன் முகத்தைப் பார்க்கவே அவளுக்குக் கூச்சமாக இருந்தது.

"உங்க வெள்ளை சர்ட் வீணாகி விட்டது!" என்றாள் மெல்லிய குரலில்.

"ம்... கறை நல்லது. இந்த மாதிரி கறை ஏற்பட என் சட்டை கொடுத்து வைத்திருக்க வேண்டும். நீ சாய்ந்து அழுவதற்கு என் தோள் எப்பவும் தயாராக இருக்கும். "ஐயாம் அட் யுவர் சர்வீஸ் மேடம்!" என்று இடை வரை குனிந்து வணங்கினான்.

அவள் விழிகள் அகல ஆச்சரியமாக அவனைப் பார்த்தாள்.

ராகவ்வா இப்படி எல்லாம் பேசுகிறான்.... என்று அவள் மனதில் வியப்பு படர்ந்தது.

"என்ன அஞ்சு? ஏன் சட்டுன்னு மௌனமாயிட்ட?"

"இ... இல்லை. போகலாமா?"

"நீ என்னுடன் வருவதாக இருந்தால் நான் எங்கே வேண்டுமானாலும் போக ரெடி."

"டாக்டர்... ப்ளீஸ்! இப்படி எல்லாம் பேசாதீர்கள்."

"ஏன் அஞ்சு... எனக்கு உன்னைப் பிடித்திருக்கிறது. நான் உன்னைத் திருமணம் செய்து கொள்ள ஆசைப் படுகிறேன்."

"டாக்டர்..." - அவள் குரலில் அதிர்ச்சி தெரிந்தது.

"ஏன் அஞ்சு! என்னிடமிருந்து நீ இதை எதிர் பார்க்கவில்லையா?"

"இல்லை டாக்டர்!" என்றாள் மெல்லிய குரலில்.

"ம்... நான் இதுவரை எந்தப் பெண்ணிடமும் இந்த மாதிரி உணர்ந்தது கிடையாது அஞ்சு. உன்னைப் பார்த்தது முதல் என் மனதில் ஏதேதோ உணர்ச்சிகள் அஞ்சு. உன்னை முதலில் பார்த்தவுடன் எனக்கு ஏற்பட்டது அதிர்ச்சிதான். ஏன் தெரியுமா?"

"ஏன் டாக்டர்?"

"நான் உன்னைப் போன்ற ஒரு பெண்ணை மும்பையில் ஒரு உயர்ரக நட்சத்திர ஹோட்டலில் பார்த்திருக்கிறேன்."

"என்னது? என்னைப் போன்ற பெண்ணையா!"

"ஆமாம். அதுவும் எந்த நிலையில் தெரியுமா?"

"எந்த நிலைமையில் டாக்டர்?"

"ம்... ரொம்பக் குறைவான ஆடையுடன்.... கையில் மதுக் கிண்ணத்துடன். அவளைச் சுற்றி நிறைய ஆண்கள்.

"சே... சே... பலாப் பழத்தில் ஈ மொய்ப்பது போல்!" என்று முகத்தைச் சுழித்தான் ராகவ்.



"ஓ... அந்தப் பெண் என்னைப் போலவே இருந்தாளா?"

"ஆமாம்... அஞ்சு!"

"சரி... அந்த மாதிரி பார்ட்டிக்கு நீங்க ஏன் டாக்டர் போனீங்க?"

ராகவ் சிரித்தான்.

"ஏன் டாக்டர் சிரிக்கிறீங்க?"

"இல்லை. திருமணத்திற்கு முன்பே நீ இப்படி எல்லாம் கேள்வி கேட்கிறாயே.. திருமணத்திற்கு அப்புறம் ரொம்ப ஸ்ட்ரிக்டாக இருப்பாய் போல..."

"ப்ளீஸ்... இந்த மாதிரி எல்லாம் பேசாதீங்க."

"ஏன் அஞ்சு! என்னைப் பிடிக்கவில்லையா?"

அவள் மௌனமாக இருந்தாள்.

"நீ வேறு யாரையாவது..." என்று அவன் முடிக்கும் முன்பு அவள், "டாக்டர்..." என்று கத்தினாள்.

"ஸோ நீ யாரையும் விரும்பவில்லை. அப்புறம் என்ன தயக்கம்? எப்படியும் ஒரு நாள் நீ யாரையாவது திருமணம் செய்து கொள்ளத்தான் வேண்டும். அது ஏன்... நானாக இருக்கக் கூடாது அஞ்சு? சொல்..."

"டாக்டர்... ப்ளீஸ். இந்தப் பேச்சு வேண்டாமே..."

"ஏன் அஞ்சு! ஏன் தயங்குறே? அந்தஸ்தைப் பார்த்துக் காதல் வருவதில்லை. நீ அனாதை என்று தயங்குகிறாயா? இல்லை... என் மேல் நம்பிக்கை இல்லையா?

"இவன் கடைசிவரை நம்மோடு இருக்க மாட்டா
என்று பயப்படுகிறாயா? எதுவாக இருந்தாலும் சொல்
அஞ்சு! நீ பேசினால்தானே புரியும்."

"டாக்டர்! என்னை வற்புறுத்தாதீங்க."

"ஏன் அஞ்சு? உன் மனதில் ஏதோ தேவையில்லா
பயம், சந்தேகம் இருக்கிறது. அது ஏன்ம்மா...? மனதி
இருப்பதை மறைக்காமல் சொல்லுடா!"

"டாக்டர்... நீங்க இதே போல் பேசிக் கொ
டிருந்தால் நான் வேறு முடிவு எடுக்க வேண்டி வரும்."

"என்ன முடிவு?"

"இந்த உலகத்தை விட்டு நான் போக வேண்
வரும்."

அதைக் கேட்டவுடன் ராகவ்வின் முகம் இறுகியது
அவன் கண்களில் கோபம் தெரிந்தது.

ஏதும் சொல்லாமல் அங்கிருந்து வேகமா
வெளியேறினான்.

அஞ்சனாவிடமிருந்து ஒரு பெருமூச்சுப் பிறந்தது.

'ராகவ், என்னை மன்னித்து விடுங்கள். எனக்
வேறு வழி தெரியவில்லை. உங்கள் அன்பை ஏற்று
கொள்ளும் தகுதி எனக்கு இல்லை. பிச்சைக்காரன் ரா
வாழ்க்கையை ஏற்றுக் கொள்ள முடியாது.

ஏன் என் வாழ்க்கை மட்டும் இவ்வளவு சிக்கல்க
நிறைந்து உள்ளது? இயல்பாக எல்லோருக்கும் அமையு
வாழ்க்கை எனக்குக் கிடைக்காதா?



ராகவ், ஐயாம் ஸாரி. உங்கள் மனம் புண்பட
வேண்டும் என்றுதான் நான் வேண்டுமென்றே அப்படிப்
பேசினேன். என்னைப் பற்றிய உண்மைகள் எல்லாம்
தெரிந்தால் நீங்கள் அதை எப்படி எடுத்துக் கொள்வீர்கள்
ராகவ்?

இதே மாதிரி மன நிலையில் இருப்பீர்களா?
இல்லை... உங்கள் மனம் மாறி விடுமா?

ம்...ம்... நீங்கள் மாற மாட்டீர்கள் என்று என்
உள்ளுணர்வு சொல்கிறது.

இவ்வளவு ஒரு நல்ல மனிதரை எனக்கு அறிமுகப்
படுத்தி வைத்த கடவுளுக்கு நன்றி சொல்ல நான்
கடமைப்பட்டு இருக்கிறேன்.

ஆனால் அந்த மனிதனை என்னுடைய சுயநலத்
திற்காக நான் பயன்படுத்திக் கொள்வது தப்பு. இது
ரொம்பத் தப்பு...' என்று தனக்குள்ளே முடிவு செய்து
கொண்டாள்.

"சஞ்சய்! டாலியைப் பற்றி என்ன முடிவு
செய்திருக்கீங்க?" என்று ஸ்நேகாவின் குரல் தோட்டத்தில்
கேட்க... தயங்கி நின்றாள் அஞ்சனா.

"இனிமேல் டாலியை விட்டு விட்டு நான் எங்கேயும்
போக மாட்டேன். இவ்வளவு நாள் அவளைத் தனியாக
விட்டு விட்டு என் சுயநலத்திற்காக... அவளைப்
பலிகடாவாக ஆக்கியது என் தப்பு."

"ம்... நல்ல முடிவு சஞ்சய்!"

"சரி... நீ ஏன் டாலியைப் பற்றி இவ்வளவு அக்கறையாக விசாரிக்கிறாய்?"

"ம்... பாவம் சஞ்சய். தாயில்லாத குழந்தை."

"என்ன செய்வது ஸ்நேகா! நல்ல காலம் அஞ்சனா அவளை நன்றாகப் பார்த்துக் கொள்கிறாள்."

"ம்... ராகவ் செய்த ஒரே உருப்படியான வேலை இதுதான். ஆனாலும் டாலிக்கு அம்மா வேண்டும், சஞ்சய்."

"என்ன செய்வது? கடையில் விற்கும் பொருள் இல்லையே அம்மா... சும்மா வாங்கிக் கொடுப்பதற்கு!"

"ம்... கடையில் கிடைக்காததுதான். ஆனால் நீங்க கண்ணைத் திறந்து பார்த்தால் கிடைக்கும்!" என்றாள், மென்மையாக ஸ்நேகா.

"புரியலை ஸ்நேகா!"

"உன் கண் முன்னால் நான் ஐந்தரை அடி உயரத்தில் நிற்கிறேனே... உனக்கு அது தெரியலையா?" என்றாள், மெல்லிய குரலில் ஸ்நேகா.

"ஸ்நேகா! நீ என்னைப் பற்றி எல்லாம் தெரிந்துதான் பேசுகிறாயா?" - அவன் குரலில் அதிர்ச்சியும் சந்தோஷமும் தெரிந்தது.

"ஆமாம்... சஞ்சய். நீ மாளவிகாவைத் திருமணம் செய்து கொண்டாய். ஆனால் நான் அப்பொழுதே... இல்லை, அதற்கு முன்பாகவே..." - என்று மேலே தொடர முடியாமல் திணறினாள் ஸ்நேகா.



# 16

என்
கையிலேயே
தீபம்
இருந்திருக்கிறது!
............
ஆனால்
நான்
குருடனாக
இருந்திருக்கிறேன்!
...............
என்னைத்
தேடி
வந்த
தெய்வம்
நீ!
தொலைத்து
விட்டேன் நான்
உன்னை,
என்
வார்த்தைகளால்!
மன்னிப்பாயா பெண்ணே?

"ஸ்நேகா! நீ சொல்வது உண்மையா?"

"ஆமாம் சஞ்சய். ராகவிடம் பாடத்தில் சந்தேகம் கேட்கும் சாக்கில் நான் அடிக்கடி வருவேன், உங்க வீட்டுக்கு. அது உங்களுக்கு நினைவு இருக்கிறதா?" என்றாள் ஸ்நேகா, வெட்கப் புன்னகையுடன்.

"யெஸ்... எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. நான் கூட ராகவ்விடம் கேட்பேன். இந்தப் பெண் ரொம்ப மக்காடா? டெய்லி உன்கிட்ட சந்தேகம்னு கேட்கிறாளே... க்ளாஸ்ல என்னடா செய்வா இவ?

"பாடத்தைக் கவனிக்கவே மாட்டாளா? இல்லை... க்ளாஸ் பக்கம் வரவே மாட்டாளா... அப்படின்னு நிறையத் தடவை ராகவைக் கேட்டிருக்கிறேன்."

"ஓ... அப்படியா! நான் உங்களைப் பார்க்கத்தான் வீட்டுக்கு வருவேன், சஞ்சய்."

"சே... எனக்கு அது துளிக்கூடப் புரியலை ஸ்நேகா! நீ என்னிடம் உன் அன்பைச் சொல்லி இருக்க வேண்டியதுதானே?"

"ம்... அதற்குத் தைரியம் இல்லை சஞ்சய். என் மனதிலேயே எல்லாவற்றையும் பொத்திப் பொத்தி வைத்திருந்தேன்."

"நீ... நீ இதனால்தான் என் திருமணத்திற்குக் கூட வரவில்லையா?"

"ஆமாம்..." எனும் பொழுது அவளை அறியாமல் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது.



"ஓ... ஸ்நேகா! ஸாரிடா..." என்று அவளை இழுத்து அணைத்துக் கொண்டான் சஞ்சய்.

அவள் அழுது கொண்டே சிரித்தாள்.

"உன் அழகிற்கும் அறிவுக்கும்... நான் உனக்கு ஏற்றவன் இல்லை ஸ்நேகா! நான் கல்யாணமானவன். ஆறு வயதில் எனக்கு ஒரு குழந்தை இருக்கிறாள்.

"நீ... கொஞ்சம் யோசித்து முடிவு செய் ஸ்நேகா... அவசரப்படாதே!" என்று அவளை மெல்ல விலக்கினான்.

"சஞ்சய்! எனக்கு உங்களோட இந்த நேர்மைதான் ரொம்பப் பிடித்த விஷயம். இந்தத் தீர்மானம் இப்பொழுது எடுத்தது இல்லை.

"நான் உங்களை முதலில் சந்தித்த பொழுதே என் மனதில் ஏதோ ஒரு சலனம். படிக்கும் பொழுது மனதை அலைபாய விடக் கூடாது என்று நானே என் மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டேன்.

"படித்தவுடன் வெளிநாட்டிற்கு மேற்படிப்புக்காகச் செல்வதற்கு வாய்ப்புக் கிடைத்தது. அப்பொழுது ப்ரபோஸ் செய்ய எனக்குத் தைரியம் இல்லை. படிப்பு முடிந்தவுடன் ப்ரபோஸ் செய்யலாம் என்று நினைத்தேன்.

"கடைசியில் உங்கள் திருமணப் பத்திரிகை வந்தது. ஊமையின் காதல் போல் ஆகிவிட்டது, என் நிலைமை. உங்கள் திருமணப் பத்திரிகை வந்த பொழுது நான் அழுத அழுகை எனக்குத்தான் தெரியும்.

"உங்களிடம் பேசித் திருமணத்தை நிறுத்தி விடலாமா என்று நினைத்தேன். ஆனால் அது தப்பு என்று என் மனச்

சாட்சி என்னைத் திட்டியது. மனதை அடக்கிக் கொ
வேலையில் மூழ்கினேன் நான். ஆனாலும் ஒரு வெ
என் மனதில் எப்பொழுதுமே இருந்தது.

"அதற்குக் காரணம் நீங்கள்தான் சஞ்சய். ஐ
ஸாரி... நான்... நான் ரொம்பப் பொறாமைப்பட்டே
உங்கள் மனைவியைப் பற்றி... என் எண்ணங்கள் த
என்று மூளைக்குப் புரிந்தது. ஆனால் மனம் அ
சட்டை செய்யவில்லை.

"ஸாரி சஞ்சய்! நான் இந்த மாதிரி எல்
நினைத்ததால்தான் மாளவிகா உங்களை விட்டு வி
துறவறம் தேடிப் போய் விட்டார்களோ?" என்ற
மெல்லிய குரலில்.

"சே... சே... அவளுடைய முடிவுக்கு நீ எப்ப
பொறுப்பாக முடியும், ஸ்நேகா?"

"எப்படி, சஞ்சய்! அவர்களால் இந்த மாதிரி ஒ
முடிவைச் சட்டென எடுக்க முடிந்தது. அதுவும் ஒ
குழந்தை பிறந்த பின்பு. என்னால் நம்பவே மு
வில்லை."

"ம்... மாளவிகாவிற்கு ஆரம்பத்திலிருந்தே கு
வாழ்க்கையில் அவ்வளவா பற்றுதல் இல்லை. ச
போகப் போகச் சரியாகி விடும் என்று நானு
அலட்சியமாக இருந்து விட்டேன்.

"ஆனால் அவள் ஆறு மாதமே ஆன டாலி
விட்டு விட்டு டைவர்ஸுக்குச் சம்மதம் என்று எழுதி வைத்



விட்டுச் சென்ற பொழுதுதான் எனக்கு உண்மை உறைத்தது!" என்றான், கண்கள் கலங்க.

"ம்... புரிகிறது சஞ்சய். மனசில் நிரந்தர வலி ஏற்பட்டு இருக்கும்."

"அதோடு மட்டும் இல்லை ஸ்நேகா! என் ஃபிரண்ட்ஸ், உறவினர்கள் எல்லோரும் என்னைப் பரிதாபமாகப் பார்த்தார்கள். பெண்டாட்டியை வெச்சுக் காப்பாற்றத் தெரியாதவன் என்று என் காது படவே ஏதேதோ சொன்னார்கள்.

"வாழ்க்கையே நரகமாகி விட்டது எனக்கு. உண்மையைச் சொல்லப் போனால்... பெண்களைக் கண்டாலே வெறுப்பும் எரிச்சலும் வந்தது."

"என் மேல் கூடவா கோபம் சஞ்சய்?"

"அம்மா வீட்டுக்கு வந்து விடு என்று எத்தனையோ தடவை சொல்லி விட்டார்கள். ஆனால் நான் மும்பையை விட்டு வரவே மாட்டேன் என்று தீர்மானமாகச் சொல்லி விட்டேன்.

"எனக்கென ஒரு இசைக் குழுவை அமைத்துக் கொண்டேன். என் மனதில் இருந்த வலிகள் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்தன. ஆனால் காயம் மட்டுமே ஆறியது. வடுக்கள் அப்படியே இருந்தன."

"ம்... ஸாரி! நான் பழசை எல்லாம் கிளறி விட்டேன் போல. என்னை... என்னை உங்களுக்குப் பிடித்திருக்கிறதா, சஞ்சய்?"

அவன் விழிகள் அவள் முகத்தில் பதிந்தன. அவள் நெற்றியில் விழுந்திருந்த கூந்தல் கற்றையை அவன் ஒதுக்கி விட்டான்.

"வீட்டை விட்டுப் போன நான் இப்பொழுதுதான் முதல் முறையாக வீட்டுக்கு வந்திருக்கிறேன். அதுக்கு என்ன காரணம் தெரியுமா?" என்று அவள் முகத்தைக் கையில் ஏந்தினான்.

அவள் 'தெரியாது!' என்பது போல் தலையை அசைத்தாள்.

"நீ வரச் சொன்னதால்தான் நான் வந்தேன் ஸ்நேகா!" என்றபடியே அவள் இதழ்களைத் தன் உதடுகளால் ஒற்றி எடுத்தான்.

"சஞ்சய்!" என்று அவன் மார்பில் தலை புதைத்தாள் ஸ்நேகா.

"உன் குரலில் இருந்த ஏதோ ஒன்று என் மனதை இளக்கியது. அதனால்தான் டாலியின் பிறந்த நாளுக்கு நான் வரச் சம்மதித்தேன்."

"அப்படியா... என்ன?"

"அதில் என்னடா சந்தேகம் உனக்கு?"

"ம்... இங்கே வந்த பிறகு கூட நீங்கள் என்னிடம் ப்ரபோஸ் செய்யவில்லையே?"

"எப்படிச் செய்வது ஸ்நேகா? எந்தத் தைரியத்தில் நான் உன்னிடம் என் காதலைச் சொல்வேன்? நான் ஒரு பெண் குழந்தையின் தகப்பன். எப்படி உன்னிடம் நான் ப்ரபோஸ் செய்வேன்?



"நீ என்னை நிராகரிப்பதற்கு வாய்ப்புகள் அதிகம். அதனால்தான் தயக்கமாக இருந்தது."

அவள் கலகலவெனச் சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிற ஸ்நேகா?"

"இல்லை. ரெண்டு பேருமே காதலை மனசிலேயே பொத்திப் பொத்தி வெச்சிருந்ததை நினைத்துப் பார்த்தேன். சிரிப்பு வந்தது.

"சரி... ஒரு சந்தேகம். கேட்டால் கோபித்துக் கொள்ள மாட்டீங்களே?"

"உன்னிடம் எனக்குக் கோபமே வராது. ஸ்நேகா! கேள்."

"மாளவிகா அக்கா உங்களை விட்டுப் போன பின்பு... உங்களுக்குப் பெண்கள் மேல் வெறுப்பு வந்தது என்று சொன்னீங்க."

"யெஸ். அது உண்மைதான்."

"வேறு பெண்கள் உங்களிடம் ப்ரபோஸ் செய்யவில்லையா? அதுவும் மும்பையில் வேறு இருந்தீர்களே... அங்கு அழகான பெண்கள் நிறையப் பேர் இருப்பார்களே..."

"ஸோ... உனக்கு என் மேல் சந்தேகம். அப்படித்தானே!"

"இ... இல்லை. யூ ஆர் எ ஹாண்ட்சம் பெர்சன்!"

"அப்படியா என்ன...?" என்று உல்லாசமாகச் சிரித்தான் சஞ்சய்.

"அது மட்டும் இல்லை. யூ ஆர் ரிச்."

"அப்படியா என்ன?" - அவன் கண்களில் ஏதோ தெரிந்தது.

"அது மட்டும் இல்லை. உங்கள் கிடார் இசை ரொம்ப இனிமையாக இருக்கும்."

"அப்படியா என்ன?"

"சஞ்சய்! ப்ளீஸ்... விளையாட்டுப் போதும். உங்களுக்குச் சொல்ல விருப்பம் இல்லை என்றால் வேண்டாம்..." என்று பொய்யாகக் கோபித்துக் கொண்டாள்.

"அச்சோ... சும்மா ஜஸ் செஞ்சேன் ஸ்நேகா.. கோவிச்சுக்காதே...!"

"அப்ப நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லுங்க."

"ம்... நான் மும்பையில் இருந்த பொழுது நிறையப் பெண்களைச் சந்திக்க வேண்டிய சூழல்."

"வாட்?"

"அச்சோ! அப்படி முறைக்காதே ஸ்நேகா! நான் இசைக் குழு வைத்திருந்தேன் அல்லவா! அப்ப நிறைய கேர்ள்ஸ் - என் விசிறிகள் என்னிடம் பேசுவார்கள்.

"கிடார் கற்றுக் கொள்வதற்கு என்னென்னவெல்லாம் தெரிந்திருக்க வேண்டும் என்று ரொம்ப ஆர்வமாகக் கேட்பார்கள்."



"ம்... கோபிகைகள் நடுவில் குழல் ஊதும் கண்ணனை போல நீங்கள் இருந்திருக்கிறீர்கள். அப்படித் தானே சஞ்சய்?"

"சே... சே... நான் அப்படி எல்லாம் இல்லை. ஏதோ ஒன்று இரண்டு பெண்களைத் தவிர, மற்றவர்கள் எல்லோருக்கும் கிடாரில் பெரிதாக ஆர்வம் ஏதுமில்லை என்று எனக்குப் புரிந்து விட்டது.

"அப்புறம் அந்தப் பெண்களிடம் இருந்து நைஸாக நான் தப்பித்துக் கொண்டு வந்து விட்டேன். ம்... கடைசியில் உன்னிடம் மாட்டிக் கொண்டேன். என்ன செய்வது... விதி வலியது!"

"ஓ... அப்படியா! அப்ப விதியை மதியால் வெல்லுங்கள்..." என்றபடியே வேக வேகமாக நடந்தாள்.

அவன் அவள் இடையைப் பற்றித் தன் புறம் இழுத்தான்.

"உன்னைப் பார்த்தால் மூளையே வேலை செய்ய மறுக்கிறது, ஸ்நேகா! இவ்வளவு நாள் எப்படியோ பொறுத்துக் கொண்டேன். ஆனால் இனிமேல் முடியாது டியர்!" என்றபடியே அவளை மூச்சு முட்டும் அளவுக்கு அணைத்தான்.

ஸ்நேகா தன் உடல் முழுவதும் மின் அலைகள் பரவுவது போல் உணர்ந்தாள். அந்த இனிமையான நிலை நீடிக்க வேண்டும் என்று மனம் விரும்பியது.

ஆனால் மூளை அதைத் தவறு என்று சொன்னது. மூளைக்கும் மனதிற்கும் ஒரு பெரிய போராட்டம் நடந்தது.

"அது மட்டும் இல்லை. யூ ஆர் ரிச்."

"அப்படியா என்ன?" - அவன் கண்களில்
தெரிந்தது.

"அது மட்டும் இல்லை. உங்கள் கிடார் இசை
இனிமையாக இருக்கும்."

"அப்படியா என்ன?"

"சஞ்சய்! ப்ளீஸ்... விளையாட்டுப் போது
உங்களுக்குச் சொல்ல விருப்பம் இல்லை என்
வேண்டாம்..." என்று பொய்யாகக் கோபித்து
கொண்டாள்.

"அச்சோ... சும்மா டீஸ் செஞ்சேன் ஸ்நேகா
கோவிச்சுக்காதே...!"

"அப்ப நான் கேட்ட கேள்விக்குப் ப
சொல்லுங்க."

"ம்... நான் மும்பையில் இருந்த பொழுது நிறை
பெண்களைச் சந்திக்க வேண்டிய சூழல்."

"வாட்?"

"அச்சோ! அப்படி முறைக்காதே ஸ்நேகா! நா
இசைக் குழு வைத்திருந்தேன் அல்லவா! அப்ப நிறை
கேர்ள்ஸ் - என் விசிறிகள் என்னிடம் பேசுவார்கள்.

"கிடார் கற்றுக் கொள்வதற்கு என்னென்னவெல்ல
தெரிந்திருக்க வேண்டும் என்று ரொம்ப ஆர்வமா
கேட்பார்கள்."



"ம்... கோபிகைகள் நடுவில் குழல் ஊதும் கண்ணன் போல் நீங்கள் இருந்திருக்கிறீர்கள். அப்படித் தானே சஞ்சய்?"

"சே... சே... நான் அப்படி எல்லாம் இல்லை ஸ்நேகா! ஒன்று இரண்டு பெண்களைத் தவிர, மற்றவர்கள் எல்லோருக்கும் கிடாரில் பெரிதாக ஆர்வம் ஏதுமில்லை என்று எனக்குப் புரிந்து விட்டது.

"அப்புறம் அந்தப் பெண்களிடம் இருந்து நைஸாக நான் தப்பித்துக் கொண்டு வந்து விட்டேன். ம்... வந்தவன் உன்னிடம் மாட்டிக் கொண்டேன். என்ன செய்வது... விதி வலியது!"

"ஓ... அப்படியா! அப்ப விதியை மதியால் வெல்லுங்கள்..." என்றபடியே வேக வேகமாக நடந்தாள்.

அவன் அவள் இடையைப் பற்றித் தன் புறம் இழுத்தான்.

"உன்னைப் பார்த்தால் மூளையே வேலை செய்ய மறுக்கிறது, ஸ்நேகா! இவ்வளவு நாள் எப்படியோ பொறுத்துக் கொண்டேன். ஆனால் இனிமேல் முடியாது டியர்!" என்றபடியே அவளை மூச்சு முட்டும் அளவுக்கு அணைத்தான்.

ஸ்நேகா தன் உடல் முழுவதும் மின் அலைகள் பரவுவது போல் உணர்ந்தாள். அந்த இனிமையான நிலை நீடிக்க வேண்டும் என்று மனம் விரும்பியது.

ஆனால் மூளை அதைத் தவறு என்று சொன்னது. மூளைக்கும் மனதிற்கும் ஒரு பெரிய போராட்டம் நடந்தது.

கடைசியில் மூளை வென்றது.

"சஞ்சய்... ப்ளீஸ்!" என்றபடியே அவனிடம் இரு விலகினாள்.

"ஸாரி ஸ்நேகா! ப்ளீஸ் என்னைத் தப் நினைக்காதே. நான் இதுவரை யாரிடமும் இவ்வ பைத்தியமாக இருந்தது இல்லை.

"டாலியின் அம்மா உட்பட. ஐயாம் ஸாரி! நம் திருமணம் வரை உன்னிடம் ஜாக்கிரதையாக இரு வேண்டும்."

அவள் முகம் கூச்சத்தால் சிவந்தது.

'என் வாழ்க்கையிலேயே அற்புதமான நாள் இரு என்று மகிழ்ச்சியில் திளைத்தாள் ஸ்நேகா.

## 17

மழைத்
துளி
உன்
கன்னத்தில்
பட்டுத்
தெறிக்கிறது!
..................
என்
மனதில்
கள் வெறி!
..................
கண்கள்
வண்ணத்துப்
பூச்சியாகப்
படபடக்க
நீ
என்னைப்
பார்த்தாய்!
சிங்கத்தை
வேட்டையாடிய
மான் நீயடி
பெண்ணே!

அஞ்சனாவின் மனமும் அன்று மகிழ்ச்சியில் பொங்கியது. காரணம் டாலிக்கு அம்மா கிடைத்து விட்டாள் என்ற விஷயம்தான்!

ஸ்நேகாவின் மேல் அவளுக்கு எப்பவுமே நல்ல அபிப்ராயம் உண்டு.

வந்த நாள் முதலாக ஸ்நேகா பந்தா ஏதும் இல்லாமல் பழகியது அவளுக்கு ரொம்பப் பிடித்தது.

அது மட்டும் இல்லாமல் ஸ்நேகா டாலியிடம் ரொம்பப் பாசமாக அன்பாக இருப்பதை அவள் கவனித்து இருக்கிறாள்.

சஞ்சயும், ஸ்நேகாவும் 'மேட் ஃபார் ஈச் அதர்' போல இருப்பார்கள் திருமணத்திற்குப் பிறகு என நினைத்துத் தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டாள் அவள்.

திருமணத்திற்குப் பின்பு டாலிக்கு அருகாமையும் கவனிப்பும் தேவைப்படாதோ? அந்த வேளை என்னை வேலையிலிருந்து நீக்கி விடுவார்களோ? கஸ்தூரி ஆன்ட்டி என்று ஒரு பூதத்தைக் கிளப்பி விட்டது அவள் மனம்.

சே... சே... ஆன்ட்டி அப்படி எல்லாம் செய்ய மாட்டார்கள். டாலியைக் கவனித்துக் கொள்ள எப்படியும் அவர்களுக்கு ஆள் தேவைப்படும்.

அதனால் என்னைப் போகச் சொல்ல மாட்டார்கள். இந்த வீடு இல்லாவிட்டால் என் நிலைமை என்னவாக இருக்கும்?

நினைக்கும் பொழுதே அவள் உடல் அச்சத்தால் நடுங்கியது. ராகவ் சொன்னது எல்லாமே அவள் நினைவுக்கு வந்தது.

பார்ட்டியில் என்னைப் போன்ற ஒரு பெண்ணைப் பார்த்தேன் என்று சொன்னானே! அது வேறு யாரும் இல்லை... நான்தான் அந்தப் பெண் என்று அவனிடம் சொல்லி விடலாமா?

சொன்னால் ஒரு வேளை அவன் என்னைப் பற்றி அவன் மனதில் தோன்றி உள்ள காதலை முளையிலேயே கிள்ளி எறிந்து விடுவான்.

அப்படிச் செய்தால் பரவாயில்லை. இல்லை... அதற்கு நேர் எதிராக என் உடலைப் பரிசோதித்துப் பார்க்க வேண்டும் என்று 'டாக்டராக' மாறி விட்டால்... கஷ்டம்தான்.



இன்னும் நான்கு மாதங்கள் எப்படியாவது பல்லைக் கடித்துக் கொண்டு சமாளிக்க வேண்டும் என்று முடிவு செய்தாள்.

கைபேசி சிணுங்கியது. வேறு யார், காஞ்சனாவாகத்தான் இருக்க வேண்டும். அவளுக்காக வாங்கிய கைபேசி இது.

அவள் மட்டும்தான் என்னைக் கைபேசியில் தொடர்பு கொள்வாள் என்று நினைத்தபடியே பச்சைப் பட்டனை அழுத்தினாள் அஞ்சனா.

"ஹலோ காஞ்சனா! சொல்லும்மா..."

"ஹலோ அஞ்சு! எப்படி இருக்க?"

"எனக்கென்ன குறைச்சல்? நான் நல்லா இருக்கேன். நீ எப்படி இருக்க? உன் படிப்பெல்லாம் எப்படி இருக்கு?"

"ம்... எக்ஸாம் எல்லாம் நல்லபடியா முடிஞ்சிடுச்சி அஞ்சு!"

"வாவ்! சூப்பர்."

"ம்... இன்னும் இன்டர்னல்ஸ் இருக்கு."

"ஓ... அது எப்ப முடியும்?"

"எப்படியும் இன்னும் ஒரு மாசத்தில் முடிந்து விடும் அஞ்சு."

"பரவாயில்லையே... இப்பதான் நீ சேர்ந்த மாதிரி இருக்கு. இந்தக் கோர்ஸில். ஆனால் அதுக்குள்ள எக்ஸாம் எல்லாம் முடியுதுடி. என்னால நம்பவே முடியலை."

"ம்... ஆமாம் அஞ்சு! எவ்வளவு ஃபாஸ்டா ஆகுது டைம். நான் உனக்குத்தான் நன்றி சொல்லணு

"ஏய்... போதும். சென்டிமெண்ட் டயலாக் எல்லா வேண்டாம்டி ப்ளீஸ்!"

"இல்லை அஞ்சு. எனக்கு என் வாழ்க்கையி கிடைத்த பொக்கிஷம் நீ!"

"ஏய்... இந்த டயலாக்கை எல்லாம் ஞாபக வெச்சுக்கோ. உன் ஹீரோவிடம் நீ அப்புறம் சொல்லணு இதை..."

"படித்த பின்பு வேலைக்குப் போக வேண்டும் அஞ் அதுதான் என்னோட எய்ம் இப்ப..."

"ம்... கொஞ்சம் ரிலாக்ஸ் செய்ய வேண்டு வாழ்க்கையில். புரிஞ்சுதா, மேடம்?"

காஞ்சனா மறுமுனையில் சிரித்தாள்.

"அதை நீ சொல்றியா? சரி... ராகவ் ஸார் எப்ப இருக்கார்? பாலி எப்படி இருக்கா?"

"எல்லோரும் நல்லா இருக்காங்க."

"இப்ப ராகவ் ஸாரால பிரச்சினை ஏது இல்லைதானே?"

"ம்... இப்ப வேற மாதிரி பிரச்சினைடி!"

"ஏய்... அது என்ன?"

"இப்ப வேண்டாம். இன்னொரு நாள் சொல்றேன்."

"ஏன் இன்னிக்கு நாள் நல்லா இல்லையா?"



"அது கொஞ்சம் பெரிய விஷயம்டி. சொல்ல ரொம்ப நேரமாகும்."

"சரி. ஓ.கே. ரொம்பக் கஷ்டமா இருக்கா அஞ்சு? ஐயாம் ஸாரி. என்னாலதான் உனக்கு இந்தக் கஷ்டம் எல்லாம்..."

"ஏய்... அதெல்லாம் ஒன்றும் இல்லை. நீ உன் படிப்பில் மட்டுமே கவனம் செலுத்து..."

"சரிங்க பாட்டி!"

அஞ்சனா அதைக் கேட்டுச் சிரித்தாள்.

"நான் பாட்டின்னா... நீயும் பாட்டிதானே?" என்றாள் அஞ்சனா.

கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது.

"காஞ்சனா! நான் அப்புறம் பேசறேன்..." என்று அவசரமாகச் சிவப்பு பட்டனை அழுத்தினாள் அஞ்சனா.

கதவைத் திறந்தாள். அங்கே டாலி நின்று கொண்டிருந்தாள்.

"ஏய் டாலி... என்ன வேணும் உனக்கு? தூக்கம் வரலை உனக்கு?"

"அஞ்சு... உனக்கு ஒரு சர்ப்ரைஸ். நீ என் ரூமுக்கு வாயேன்."

"என்னடா குட்டி! என்ன விஷயம் அது? சொல்லு ஃபர்ஸ்ட்."

"மாட்டேன்... மாட்டேன். நீ என் ரூமுக்கு வா!" என்று பிடிவாதம் பிடித்தாள் டாலி.

"சரி... வா போகலாம்!" என்றபடியே அவ[ள்] கையைப் பற்றிக் கொண்டு நடந்தாள் அஞ்சனா.

டாலியின் அறையில் ஒரு மூலையில் ஒரு காகி[தக்] கப்பல் இருந்தது.

"இதைப் பார் அஞ்சு! இப்ப கப்பல் தரையி[ல்] போகும் பாரேன்."

"அது எப்படி? கப்பல் தண்ணீரில்தானே போகும்."

"நான் உனக்குச் செஞ்சு காட்டறேன் பார்...."

அவள் என்ன செய்யப் போகிறாள் என்[று] ஆர்வமாக இருந்தாள் அஞ்சனா.

அங்கிருந்த புத்தகத்தில் இருந்து ஒரு காகிதத்தைக் கிழித்தாள் டாலி. பின்பு அதைப் புல்லாங்குழல் போ[ல] சுருட்டினாள்.

"ஏய்... என்ன டாலி! மியூசிக் வாசிச்சுக் காட்ட[ப்] போறியா? இந்தப் பேப்பர் வழியா காகிதப் புல்லாங்குழ[ல்] செய்து, அதன் மூலமா மியூசிக் வரவழைக்கப் போகிறா[ய்] என்ன, நான் சொல்றது சரியா டாலி?"

"நோ... நோ.... தப்பு. உனக்கு இன்னும் ஒரு சான்ஸ் தர்றேன் அஞ்சு!"

"ஓ... இதுதான் லாஸ்ட் சான்ஸா? அப்படி என்னவா இருக்கும்?" என்று தனக்குத் தானே பேசிக் கொண்டாள் அஞ்சனா.

"நல்லா யோசி அஞ்சு!"



"ம்... நீ புல்லாங்குழல் மாதிரி செய்யப் போற. அது வழியாக் கப்பல் மூவ் ஆகுமா?"

"ம்... அஞ்சு, நீ கொஞ்சம் கிட்ட வந்துட்ட. இப்பப் பார்..." என்று இரண்டு ஸ்ட்ராவை எடுத்தாள்.

பின்பு அந்த இரண்டு ஸ்ட்ராக்களையும் ஃபெவிகால் வைத்து ஒட்டினாள்.

அவள் செய்வதைச் சுவாரசியமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள் அஞ்சனா.

பேப்பரால் சுருட்டி வைக்கப்பட்டிருந்த அந்தப் புல்லாங்குழலையும் அந்த ஸ்ட்ரா முனையில் வைத்தாள் டாலி. அதன் முனையில் காகிதக் கப்பல் இருந்தது.

"இப்பப் பார் அஞ்சு! கப்பல் கிளம்பும்..." என்றபடியே ஸ்ட்ராவில் உதட்டைக் குவித்துப் பலமாக ஊதினாள் டாலி.

கப்பல் வேகமாகப் பறந்தது.

"வாவ்! சூப்பர் டாலி. இது பறக்கும் கப்பல்!" என்று கை தட்டினாள் அஞ்சனா.

"நல்லா இருக்கா... இது?"

"வெரி நைஸ். இன்னொரு தடவை செய்து காட்டு டாலி. ப்ளீஸ்!"

டாலியின் முகத்தில் மகிழ்ச்சி கலந்த பெருமை தெரிந்தது.

"சரி... அஞ்சு!" என்றபடியே கப்பலைச் சரியாக வைத்தாள். பின்பு ஸ்ட்ரா வழியாக ஊதத் தொடங்கினாள்.

கப்பல் வேகமாகப் பறந்தது மீண்டும்.

"ஏய்... இது ரொம்ப நல்லா இருக்கு!" என்றபடி அவளைத் தட்டாமாலை சுற்றினாள் அஞ்சனா.

"ஹாய் டாலி!" என்று ராகவ் குரல் கேட்க... சட்டென டாலியைச் சுற்றுவதை நிறுத்தினாள் அஞ்சனா.

"சித்தப்பா..." என்று ராகவிடம் ஓடினாள் டாலி.

"என்னடா, இன்னும் தூங்கலையா?"

"இல்லை சித்தப்பா! நான் ஒரு சூப்பர் கப்பல் வெச்சிருக்கேன். அது பறக்கும் தெரியுமா? இப்பதான் அஞ்சுவுக்குக் காட்டினேன்.

"வா... வா. நான் உனக்கு அதைக் காட்டுறேன். மேஜிக் தெரியுமா?"

"சரி டாலி! நான் கிளம்பறேன். குட் நைட்!" என்று அங்கிருந்து அஞ்சனா கிளம்பிப் போனாள்.

"அஞ்சு! நீயும் இருக்கணும்..." என்றாள் டாலி.

"இல்லடா... நான்..." என்று அவள் முடிக்கும் முன்பு அவன் குறுக்கிட்டான்.

"டாலி ஆசைப்படறா இல்ல. இரு அஞ்சு!" - அவன் குரல் கட்டளையாக ஒலித்தது.

ஏதும் மறுப்புச் சொல்லாமல் அங்கேயே இருந்தாள் அஞ்சனா

டாலி அவளுக்குச் செய்து காட்டியது போல் ராகவிற்கும் செய்து காட்டினாள்.



"டாலி... சூப்பர்டா குட்டி! எங்கே இருந்து இந்த மேஜிக்கைக் கத்துக்கிட்ட..."

"நானேதான்!"

"ஓ... சரி... காற்று அடித்தால் கப்பல் மூவ் ஆகும்ங்கறது உனக்கு எப்படித் தெரிஞ்சுது?"

"சித்தப்பா, காற்று அடிச்சா துணி பறக்குது. அப்புறம் பூ, இலை இதெல்லாம் கீழே விழுதுதானே. அதே மாதிரிதானே இதுவும். நான் முதல்ல சும்மா வாயால ஊதிப் பார்த்தேன். கப்பல் பறந்து போச்சு.

"அப்புறம்தான் வேற மாதிரி ஐடியா செஞ்சு கப்பலை மூவ் செய்ய வெக்கலாமேன்னு யோசிச்சேன்."

ராகவ் முகத்தில் பெருமை தெரிந்தது.

"டாலி... நீ ரொம்ப அழகா யோசனை செஞ்சு நல்லா பறக்கிற கப்பலைக் கண்டுபிடிச்சு இருக்க...

"ஒரு பெரிய சயிண்டிஸ்ட் இருந்தார். அவர் ஒரு நாள் வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். அங்கே நிலா வானில் இருந்தது. பின்பு ஏதோ தோன்ற தோட்டத்தில் இருந்த மரங்களை எல்லாம் பார்த்தார்.

"அப்பொழுது ஒரு ஆப்பிள் பழம் மரத்திலிருந்து கீழே விழுந்து கொண்டிருந்தது. சட்டெனப் பொறி தட்டியது அவருக்கு.

"நிலா வானில் இருந்து கீழே விழாமல் இருக்கிறது. அதே நேரம் ஆப்பிள் பழம் கீழே விழுகிறதே... இரண்டும் எதிர்மறையாக இருக்கிறதே என்று யோசித்தார்.

"புவி ஈர்ப்பு சக்தி தியரியைக் கண்டுபிடித்தார். அவர் - நியூட்டன் தி கிரேட் சயிண்டிஸ்ட்!" என்றான் ராகவ்.

அஞ்சனா சுவாரசியமாக அவன் பேசுவதை கேட்டபடி இருந்தாள்.

# 18

என்
இதயத்
தோட்டத்தில்
பொத்தி
வைக்கப்பட்டு
இருந்த
மல்லிகை
மொட்டுக்கள்
மலர்ந்தன
அழகாக!
...............
உன்னை
நான்
பார்த்த
பொழுது
...............



வார்த்தைகள்
நம்மிடையே
தேவை
இல்லை!
உன் பார்வையைவிடச்
சிறந்த மொழி
வேறு இல்லை!

"ஓ... அப்படியா சித்தப்பா... அவருக்கு நிலாவைப் பார்த்தவுடன் எப்படிச் சட்டுன்னு அப்படி ஒரு ஐடியா வந்தது?"

"ம்... இயற்கையிலிருந்துதான் நிறைய அரிய கண்டுபிடிப்புகள் வெளிவருகின்றன."

"அது ஏன் சித்தப்பா?"

"ம்... இயற்கையை ரசிக்கும் பொழுது மனிதனின் மனம் அமைதியாக இருக்கிறது. ஸ்ட்ரெஸ் இல்லாமல் இருக்கும்பொழுது புதுப் புது எண்ணங்கள் உதிக்கும்."

"அது நிஜமா டாக்டர்?" என்று ஆர்வமாகக் கேட்டாள் அஞ்சனா.

"யெஸ். இது உண்மை என்று நிரூபிக்கப்பட்டு உள்ளது. மூளையின் செல்கள் பல லட்சக் கணக்கானவை. நம் எல்லோருக்கும் ஒரே வகையான செல்கள் தான் இருக்கின்றன. ஆனால் சிலர் அந்த செல்களை நன்றாக உபயோகப்படுத்துவார்கள். சிலர்

அதைக் குறைவாக யூஸ் செய்வார்கள். ப்ரெயினை உபயோகிக்கும் முறையைப் பொறுத்துத்தான் எல்லாமே அமையும்."

"ஸோ... மனம் அமைதியாக இருக்கும் பொழுது செல்களின் உபயோகம் அதிகமாக இருக்கும். அப்படியா டாக்டர்?" என்றாள் விழிகள் அகல அஞ்சனா.

"ம்... செல்கள் மூலம் சில விஷயத்தை நாம் அடிக்கடி கற்பனை செய்வோம். அதைப் பற்றியே அடிக்கடி நினைப்போம். அது நிச்சயமாக ஒரு நாள் நடக்கும்."

"அது... எப்படி டாக்டர்? என்னால் நம்ப முடியவில்லையே!"

"ம்... காட்சிப்படுத்துதல் மூலமாக இது சாத்தியம் அஞ்சனா!"

"புரியலை டாக்டர்..."

"ம்... மோரிஸ் குட்மேனைப் பற்றிக் கேள்விப்பட்டு இருக்கிறாயா?"

"இல்லை டாக்டர்!"

"அவர் ஒரு இன்சூரன்ஸ் கம்பெனியின் ஏஜெண்ட். அவர் நல்ல மனிதர். நல்ல வேலை அமெரிக்காவில். அதனால் பணம், புகழ், வசதிகள் எல்லாமே அவருக்குக் கிடைத்தன. அவருக்கென்று சொந்த விமானம்கூட இருந்தது."

"ஓ... நம்ம ஊரு இன்சூரன்ஸ் ஏஜெண்ட் மாதிரி இல்லவே இல்லை போல..."



"யெஸ்... ஆனால் ஒரு முறை விமானம் மூலம் எங்கோ இறங்கும் பொழுது விமானம் விபத்துக்கு உள்ளானது."

"காட்! அவருக்கு என்ன ஆச்சு?"

"அவர் கழுத்தெலும்பு இரண்டு இடங்களில் உடைந்து போனது. முதுகுத் தண்டு முற்றிலும் நசுங்கிப் போனது. அவருடைய சிறுநீரகம், குடல்கள், வயிறு என எல்லாமே செயல் இழந்து போனது."

"சே... என்ன ஒரு கொடுமை!"

"ஆமாம்! உயிர் மட்டும் இருக்க, பிணம் போல் அவர் மருத்துவமனையில் இருந்தார். அவரால் செய்ய முடிந்தது எல்லாம் இரண்டு காரியங்கள்தான்!"

"அது என்ன?"

"வேண்டும் என்றால் ஒரு முறையும், வேண்டாம் என்றால் இரண்டு முறையும் கண்களை மூடித் திறப்பார்."

"என்ன வாழ்க்கை இது?"

"அவர் அந்த மாதிரி நினைக்கவில்லை அஞ்சனா. அவர் போராட முடிவு செய்தார்."

"இந்த மாதிரி நிலைமையிலா?"

"ஆமாம்! ஒருவன் எதை நினைக்கிறானோ அதுவாகவே அவன் ஆகிறான் என்பதில் அவருக்கு நம்பிக்கை அதிகமாக இருந்தது."

"ஆச்சரியமாக இருக்கிறது."

"யெஸ்... முதல் முயற்சியாக வெண்டிலேட்ட வழியாக மூச்சு விடாமல் இயற்கையாக மூச்சு வி வேண்டும் என்பதே அவர் குறிக்கோள். ரொம்ப கஷ்டப்பட்டு கொஞ்சம் காற்றை அந்த வெண்டிலேட்ட மெஷின் மூலம் இழுக்க முயற்சி செய்தார்.

"அவர் ஒவ்வொரு முறையும் இந்த மாதிரி முயற் செய்யும் பொழுதெல்லாம் அவர் நுரையீரல் எதிலேயே மோதிப் பயங்கர வலி ஏற்பட்டது. ஆனால் அவர் அதை பொறுத்துக் கொண்டு கடுமையாக முயன்று நூறு முறை மூச்சு விட்டார். பின்னர் 200 முறை, பிறகு 300 முறை இப்படி ஒவ்வொரு முறை செய்யும் பொழுதெல்லாம் அவ நுரையீரல் மூன்று மடங்கு பெரிதானது."

"எவ்வளவு பெரிய விஷயம் இது. அதிசயமாக இருக்கிறது."

"யெஸ்... மெடிக்கல் மிராகிள் இது."

"அப்புறம் என்ன ஆச்சு?"

"டாக்டர்ஸ் வெண்டிலேட்டரை எடுத்து விட்டார்கள் ஆனால் எப்படி இவரால் இப்படிச் சாதனை செய்ய முடிந்தது என்பது அவர்களுக்குப் புரியாத புதிராக இருந்தது."

"யெஸ்... இது ஒரு மிராகிள்!"

"ஆமாம்... அடுத்த கிறிஸ்துமஸ் வருவதற்குள் எழுந்து நடக்க வேண்டும் என்று அடிக்கடி விஷ"வலைஸ் செய்வார் அவர்."



"அதே மாதிரி நடந்ததா?"

"ஆமாம்! ஒரு வாக்கியத்தைப் படிக்க அவருக்கு இரண்டு வருடங்கள் ஆச்சு. டயஃப்ரம் அவருக்கு முழுமையாகப் பழுது அடைந்து விட்டது. ஆனால் அவர் அதற்குப் பதிலாக வயிற்றுத் தசையைக் காட்சிப்படுத்துதல் மூலமும் மன உறுதி மூலமும் பயன்படுத்தினார்."

"அற்புத மனிதர் இவர்!"

"ம்... எண்ணங்கள் எப்பவுமே பாஸிடிவாக இருக்க வேண்டும். நாம் நினைப்பது நடக்க வேண்டும். 'ததாஸ்து' என்று வானில் தேவதைகள் சொல்லும் என்று பெரியவர்கள் சொல்வது இதைத்தான்!"

"ம்..."

"இது உனக்கும் பொருந்தும் அஞ்சனா."

அவள் மௌனமாக இருந்தாள். அங்கே சுற்றி, இங்கே சுற்றிக் கடைசியில் என் விஷயத்திற்கே வந்து விட்டானே என்று யோசித்தாள் அவள்.

"நான் சொல்வது உனக்குப் புரியும் என்று நம்புகிறேன்!" என்றான் ராகவ்.

அவள் வேண்டும் என்றே மௌனமாக இருந்தாள்.

"கால்ஃப் பந்து விளையாட்டில் உலகில் முதல் இடத்தில் இருக்கும் டைகர் உட்ஸ் என்பவர் இந்த உத்தியைத்தான் கடைப்பிடிப்பார். பந்து எங்கே போய் எந்தக் குழியில் விழ வேண்டுமோ அதில் விழுவதாக அவர் அடிக்கடி கற்பனை செய்வார்."

"ஓ... அப்படியா என்ன!"

"எதை நாம் காட்சி ரீதியாக மனதில் ஒட்டுகிறோமோ அதுதான் நடக்கிறது. விடாப்பிடியாக நாம் செய்ய தொடங்கிவிடும் விஷயங்கள் எல்லாம் சில நே இயல்பாக மாறி விடுகிறது. அதுவும் இப்படித்தான்!"

"ம்... எப்பவும் உபதேசிப்பது ரொம்ப சுலப டாக்டர்..." என்று பட்டென மனதில் வந்ததைச் சொல் விட்டாள் அஞ்சனா.

சொன்ன பின்புதான் ஏன் இப்படிச் சொன்னோம் என்று அவள் தன்னையே கடிந்து கொண்டாள்.

"வாழ்க்கையில் ஒரு கட்டத்தில் அவமான பட்டவர்கள் நிறையப் பேர் ஒரு கட்டத்தில் புகழின் உச்சியை அடைகிறார்கள். காலச் சக்கரம் ஒரே மாதி இருக்காது அஞ்சனா.

"நீ உன் வாழ்க்கையில் சில வருடங்களுக்கு முன் நிறைய அவமானங்களைச் சந்தித்து இருக்கலாம் ஆனால் இப்பொழுது அதெல்லாம் இல்லை அல்லவா! ஜஸ்ட் பாஸிங் க்ளவுட்ஸ் என்று நினைத்துக் கொள்ள வேண்டும். அவ்வளவுதான்!"

அவள் கண்கள் கலங்கின. ஏனோ பழைய வாழ்க்கை அவள் கண் முன்னே நிழல் ஆடியது.

"ஒரு ஒன்பது வயதுச் சிறுவனுக்குப் பேச்சு சரியாக வரவில்லை. எழுத்துக் கூட்டி வாசிப்பதில் சிரமம் இருந்தது பையனின் பெற்றோருக்குக் கவலை அதிகமானது பையனின் தந்தை ஹெர்மனும் மற்றப் பசங்கள் போல்



தன் மகனும் நன்றாகப் படிக்க வேண்டும் என்று விரும்பினார்.

"அவனை டாக்டரிடம் அழைத்துச் செல்வதற்குப் பதிலாக ஒரு பள்ளிக்கூடத் தலைமையாசிரியரிடம் அழைத்துச் சென்றார்.

" 'என்ன படிக்க வைத்தால் இவனுக்கு நல்லது?' என்று கேட்டார்.

" 'இவன் எது படிக்க வைத்தாலும் ரொம்பக் கஷ்டம் உருப்படுவதற்கு!' என்று சொல்லி விட்டார் அவர்.

"உருப்பட வாய்ப்பே இல்லை என்று அவமானப் படுத்தப்பட்ட சிறுவன் யார் தெரியுமா?"

'தெரியாது' என்பது போல் தலை அசைத்தாள் அஞ்சனா.

"தாமஸ் ஆல்வா எடிசன்."

"அப்படியா?"

"ஆமாம்... அவர் மட்டும் இல்லை... ஆல்பர்ட் ஐன்ஸ்டீனைக் கூட அவர் பள்ளி ஆசிரியர் ஒருவர் இதே போல்தான் சொன்னார். இசை மேதை பீத்தோவனையும் அவரது இசை ஆசிரியர் இப்படித்தான் திட்டினார். திறமை இல்லை என்பதற்காக உயர்நிலைப் பள்ளிக் கூடைப் பந்தாட்டக் குழுவிலிருந்து ஜோர்டான் நீக்கப்பட்டார்.

"இவர்கள் எல்லாருமே சிறு வயதில் நிறைய அவமானங்களைச் சந்தித்து இருக்கிறார்கள் அர்ச்சனா. ஆனால் அவர்கள் எல்லோருமே அந்தத் துறையில்

மேதைகள் என வர்ணிக்கப்பட்டனர். அதனால் உன் பழைய வாழ்க்கையை மறந்து விடு. அது எதுவாக இருந்தாலும் சரி!" என்றான் அழுத்தமாக ராகவ்.

அவன் பேசப் பேச ஏனோ அர்ச்சனாவின் மனதில் பழைய நினைவுகள் எல்லாம் பொங்கத் தொடங்கின.

வாய் விட்டு அழ வேண்டும் என்ற எண்ணம் அவள் மனதில் தீப் போல் பரவியது. கஷ்டப்பட்டுத் தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு நின்றாள் அவள்.

"அஞ்சனா... குட் நைட். போய்த் தூங்கு."

"சரி டாக்டர்... டாலி..."

"அவள் அப்பொழுதே தூங்கி விட்டாள்."

"ஓ... குட் நைட் டாக்டர்..." என்றவள், சோர்வாக நடந்தபடி மெதுவாக அறையிலிருந்து வெளியேறினாள்.

அவள் நடந்து போவதையே பார்த்தபடி நின்றான் ராகவ். சம் திங் இஸ் ராங். இவள் வாழ்வில் ஏதோ பெரிய பிரச்சினை இருக்கு.

எதையோ மனதிற்குள்ளேயே அடக்கிக் கொண்டு அதை முழுங்க முடியாமல் இவள் தவிக்கிறாள்.

என்னவாக இருக்கும் அது? ஏன் இவள் இப்படிச் சோர்ந்து போய் இருக்கிறாள்? ஏதாவது சொன்னால் உடனே உயிரை விட்டு விடுகிறேன் என்று சொல்கிறாளே! என்ன செய்யலாம்?

யோசித்தபடியே இருந்தான் ராகவ்.



## 19

நீ
வந்த
பின்பு
என்
வாழ்க்கையில்
எப்பொழுதும்
வசந்த காலமே!

................

எனக்குள்
நான்
தனியாகப்
பேசுகிறேன்!

................

எனக்கு
நானே
புன்னகைக்கிறேன்!

................

என்னுள்
எத்தனை
மாற்றங்கள்!

................

ஒரு
புதுமையான
உலகில் நான்!
உன்னால்தான்
பெண்ணே!

அஞ்சனாவின் மனதில் ராகவ் சொன்ன விஷயங்கள் திரும்பத் திரும்ப நினைவுக்கு வந்தன.

ராகவிடம் என் மனம் ஏன் ஈடுபடுகிறது? அவன் என் மனதில் இருக்கும் எண்ணங்கள் எல்லாம் எவ்வளவு தவறு என்று சொன்னான்.

அது ரொம்பவே உண்மை. ஆனால் மனதில் உள்ள பயம், கோபம், இயலாமை இதெல்லாம் என்ன செய்ய முடியும்?

ராகவுடன் பேசிக்கொண்டே இருக்க வேண்டும் என்று என் அடிமனதில் ஒரு ஏக்கம் தோன்றுகிறதே, அது ஏன்?

இந்த எண்ணம் ரொம்பத் தவறு. நான் இங்கே வந்தது ஒரு காரணத்திற்காக. காஞ்சனாவின் படிப்புக்குப் பணம் வேண்டும். அதற்காகத்தான். அது முடியும் வரை நான் அமைதியாக இருக்க வேண்டும். அதற்குப் பின்பு என்ன செய்யலாம்?

டாலிக்கு நான் தேவைப்படும் வரை இருக்கலாம். ஸ்நேகா ரொம்ப நல்ல பெண். அவள் கண்டிப்பாக டாலியை நன்றாகப் பார்த்துக் கொள்வாள்.



அதனால் என் தேவை ரொம்ப இருக்காது டாலிக்கு. ஏனோ அந்த நினைப்பு அவள் மனதில் வலியைத் தோற்றுவித்தது.

இது உண்மை. இதை நான் ஏற்றுக்கொண்டு நடப்பதுதான் புத்திசாலித்தனம் என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள் அவள்.

இரவு ரொம்ப நேரம் கழித்துத் தூங்கியதாலோ என்னவோ காலை எழுந்திருக்கும் பொழுதே அவளுக்குத் தலை வலித்தது.

சமாளித்துக் கொண்டு படுக்கையில் இருந்து எழுந்தாள் அவள். ஹாலில் பேச்சுக் குரல் கேட்டது.

"அம்மா! டாலிக்கு சயின்ஸில் ரொம்ப இஷ்டம் என்று எனக்குத் தோன்றுகிறது!" என்றான் ராகவ்.

"அது நல்ல விஷயம்தானேடா!"

"ஆமாம் அம்மா! அந்தத் திறமையை நாம் மேலும் வளர்க்க வேண்டும்."

"அதற்கு என்னடா செய்யலாம்?"

"சயின்ஸ் ப்ரோக்ராம் நிறையக் குழந்தைகளுக்கு என்று இருக்கின்றன. அதற்கு அவளை அழைத்துச் செல்லலாம். குழந்தைகளுக்கான சயின்ஸ் ப்ராஜெக்ட், எக்ஸிபிஷன் என்று நிறைய இருக்கின்றன."

"ம்... என்னவோ புதுசு புதுசா சொல்றடா!"

"புதுசுதான்... உங்க தலைமுறைக்கு இதெல்லாம்!"

"அம்மாவுக்கு வயது ஆகிவிட்டது அப்படின்னு சொல்லாமல் சொல்றியாடா!" என்றபடியே வந்தா ரஞ்சன்.

"வாடா வா! உனக்கு ரஞ்சன் அப்படின்னு பெய வைத்ததற்குப் பதிலாக நாரதர் என்று வைத்திருக்கலா ஏன்டா இப்படிச் சிண்டு முடிப்பதையே வேலையா வைத்துக் கொண்டு இருக்கிறாய்?" என்று வந்தவனை செல்லமாகக் கடிந்து கொண்டான் ராகவ்.

"ஒரு டாக்டர் இப்படியா பேசுவது? வெரி பேட்!"

"ரெண்டு பேரும் ஆரம்பித்து விட்டீர்களா உங்க சண்டையை! டாலியைப் பற்றித்தான் ராகவ் சொல்லி கொண்டு இருந்தான்."

"என்னம்மா... ஏதாவது பிரச்சினையா?"

"சே... சே... அதெல்லாம் இல்லைடா. அஞ்சனா வந்த பின்பு டாலி ரொம்ப மாறிவிட்டாள். அது ரொம்ப நல்ல மாற்றம்டா. அப்பப்பா... அதற்கு முன்னால் நான் எவ்வளவு கஷ்டப்பட்டு இருக்கேன் என்று எனக்குத்தான் தெரியும்."

"அது உண்மைதான். டாலியிடம் எவ்வளவு நல்ல மாற்றங்கள் அஞ்சனா வந்த பின்பு!" என்றான் ரஞ்சன்.

அவர்கள் எல்லோரும் அஞ்சனாவைப் புகழ்ந்து பேசும் பொழுது ஏனோ ராகவின் மனம் குறுகுறுவென இருந்தது.

அஞ்சனாவின் மனதில் இருக்கும் அந்த எதிர் மறையான எண்ணங்களைப் பற்றி அம்மாவிடம்



சொல்லலாமா என்ற யோசனையை உடனே ஒத்தி வைத்தான் அவன்.

அம்மா அமைதியாக இருக்கிறார்கள். அவர்கள் மனதைக் குழப்ப வேண்டாம் என்று முடிவு செய்தான்.

"அண்ணா... ஆர் யூ ஓ.கே.?" நிரஞ்சன் அவன் தோளைத் தொட்டான்.

"யெஸ்டா... ஏன் சட்டுன்னு கேக்கற?" என்றான் ராகவ்.

"ரொம்ப நேரமா அண்ணா அண்ணான்னு கூப்பிடறேன்... நீ ஏதோ யோசனையில் இருக்க!"

"ஓ... ஸாரி...!"

"அண்ணா... உன்கிட்ட ஒரு முக்கியமான விஷயம் கேட்கணும்."

"என்னடா...?" என்றான் பதட்டமாக.

அஞ்சனா பற்றி ஏதாவது இருக்குமோ என்று அவன் மனம் பதறியது.

"ஸ்நேகா பற்றி அண்ணா!"

அப்பாடா என்று அவன் மனதில் ஒரு நிம்மதி படர்ந்தது.

"சொல்லுடா... ஸ்நேகாவுக்கு என்ன?"

"அண்ணா... எப்படிச் சொல்வது என்று தெரிய வில்லை."

"என்னடா தயக்கம்? சொல்லுடா!"

"ம்... ஸ்நேகாவுக்கும் சஞ்சய் அண்ணாவிற்கும் ஏதோ இருக்கிறது மாதிரி இருக்கிறது."

"ஏதோ என்றால் என்னடா...?"

"ம்... அண்ணா... அவர்கள் இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் விரும்புகிறார்கள் என்று நினைக்கிறேன்."

"ஓ... அப்படியா? எப்படிடா இப்படிச் சொல்கிறாய்?"

"ம்... ஒரு கெஸ்தான்!"

"அதுதான் எப்படி இந்த மாதிரி கெஸ் செய்தாய்?"

"ம்... பட்சி சொல்லிச்சு. அண்ணா... அதெல்லாம் உனக்குப் புரியாது. உனக்குத் தெரிந்ததெல்லாம் டாக்டர்ஸ், கேஸ், பேஷண்ட்ஸ், ஹாஸ்பிடல்... தட்ஸ் ஆல்! அதை எல்லாம் தாண்டி வேறு ஒரு உலகம் இருக்கு அண்ணா."

சட்டென ராகவின் கண் முன்னே அஞ்சனாவின் முகம் தோன்றி மறைந்தது.

அந்த உணர்வு எனக்கும் தெரியும் என்று சொல்லத் துடித்த உதடுகளை அடக்கிக் கொண்டான் ராகவ்.

"ம்... பெரிய மனுஷன் நீ சொன்னால் சரியாகத்தான் இருக்கும்!" என்றான் சிரித்தபடியே ராகவ்.

"அண்ணா... கிண்டல் போதும். அடுத்து என்ன செய்யலாம். ஐடியா கொடுங்க."

"வேறு என்ன... திருமணம்தான்!"



"பட்... எப்படி அண்ணா இதைப் பற்றி நாம் அவர்களிடம் கேட்பது? அந்த மாதிரி எண்ணத்தில் நாங்கள் பழகவில்லை என்று சொல்லிவிட்டால் நமக்கு ஒரு மாதிரி ஆகிவிடுமே. அதுதான் என்ன செய்வது என்று புரியாமல் குழம்பி இருக்கிறேன்."

"ம்... நீ சொல்வது சரிதான். என்ன செய்யலாம்?" என்று யோசித்துக் கொண்டு இருந்த பொழுது டாலி அவனை நோக்கி ஓடி வந்தாள்.

"சித்தப்பா... நான் உங்க பின்னால்... வேண்டாம் சோபா பின்னால் ஒளிந்து கொள்கிறேன். அஞ்சு வந்தால் என்னைப் பற்றிச் சொல்லாதீர்கள்."

"சரிடா... ஒளிஞ்சுக்கோ!"

ஹால் அருகே வந்த அஞ்சனா, ராகவ் அங்கே இருப்பதைப் பார்த்துத் தயங்கினாள்.

"என்ன அஞ்சனா... எதையோ தேடுற போல..." என்றான் ரஞ்சன்.

"ம்... டாலி... இங்க வந்தாளா?"

"தேடினால் கிடைக்கும்!" என்றான் ராகவ் சோபா பக்கம் கண்ணைக் காட்டியபடியே.

அவள் வேண்டும் என்றே எல்லா இடங்களிலும் தேடுவது போல் பாவனை செய்தாள்.

"டாலியைக் காணோமே எங்கேயும்! ஒரு வேளை ஆன்ட்டி அறையில் இருப்பாளா? நான் அங்கே போய்ப் பார்க்கிறேன்."

"அவுட்... அவுட்... நான் இங்கேதானே இருக்கிறே" என்றபடியே சோபாவின் பின்னால் இருந்து ஓடி வந்தா டாலி.

"ஹாய்... டாலிதான் வின்னர்!" என்று சிரித்தபடி டாலியின் கையைப் பற்றினாள் அவள்.

ஏதோ தோன்ற ராகவின் முகத்தைப் பார்த்தா அவன் கண்கள் தன் ஒவ்வொரு அசைவையும் ப பிடிப்பதை அவளால் உணர முடிந்தது.

ஒரு இன்பமான அவஸ்தை அவள் மனதி தோன்றியது. அவளை அறியாமல் அவள் முக சிவந்தது.

"அஞ்சு... நீ இங்கேயே இரு. நான் பாட்டி கிட்ட ஒ சீக்ரெட் சொல்லிட்டு வருவேன்!" என்றபடியே அங் இருந்து ஓடினாள் டாலி.

என்ன செய்வது என்று புரியாமல் அங்கேயே நின் கொண்டு இருந்தாள் அஞ்சனா.

"அண்ணா... நாம அஞ்சனாவிடம் கேட்டு பார்க்கலாமா?"

"எதைப் பற்றிடா?"

"கமான்! அண்ணா, ஒரு நல்ல டாக்டரை கன்சல் செய்யணும் நீங்க!"

"ஏய்... என்னடா இந்த மாதிரி எல்லாம் பேசற. என் மேல ஏற்கெனவே நிறையப் பேருக்கு நம்பிக்கை இல்லை!" என்றபடியே அஞ்சனாவைப் பார்த்தான்.



"அண்ணா... ஸ்நேகா பற்றியும் சஞ்சய் அண்ணா பற்றியும் நாம் பேசிக் கொண்டு இருந்தோமே... அதைப் பற்றி அஞ்சனாவிடம் கேட்கலாமா என்று யோசித்தேன்."

"என்ன ஸார்... அவங்களுக்கும் சஞ்சய் ஸாருக்கும் கல்யாணம்தானே! எப்ப ஃபிக்ஸ் செய்து இருக்கீங்க?" என்றாள் நிரஞ்சனைப் பார்த்து.

"ம்... பிக்ஸ் செய்ய வேண்டியதுதான். சரி... இந்த மேட்டர் உனக்கு எப்படித் தெரியும்?" என்றான் ராகவ்.

"எந்த மேட்டர்?"

"அவர்கள் ஒருவரை ஒருவர் விரும்புகிறார்கள் என்பது!"

அஞ்சனாவின் முகத்தில் செம்மை படர்ந்தது.

"எனக்குத் தெரியும்."

"அதுதான் எப்படித் தெரியும்?"

"அண்ணா... நீ விசாரித்து வை அஞ்சனாவிடம். எனக்கு இப்ப முக்கியமான வேலை இருக்கு!" என்றபடியே அங்கு இருந்து வெளியேறினான் ரஞ்சன்.

"ம்... சொல்லு அஞ்சனா... உனக்கு எப்படித் தெரியும்?" என்று தன் விசாரணையைத் தொடங்கினான் ராகவ்.

அவளுக்குக் கூச்சமாக இருந்தது. ஏதும் பேசாமல் தலை குனிந்தபடி இருந்தாள்.

"லுக் அஞ்சனா. உனக்குத் தெரிந்ததைச் சொல். ஏன் இவ்வளவு தயங்கற?"

"ம்... அவர்கள் பேசிக் கொண்டு இருப்பது என் காதில் விழுந்தது."

"என்ன பேசிக் கொண்டு இருந்தார்கள்?"

"ம்... ஸாரி... மறந்து விட்டது."

"மறந்து விட்டதா? இல்லை... சொல்லக் கூச்சமாக இருக்கிறதா?"

அவள் கன்னங்களில் செம்மை படர்ந்தது.

"சொல் அஞ்சனா!" என்று அவள் கையைப் பற்றினான் ராகவ்.

அவள் விழிகள் அகல அவனைப் பார்த்தாள்.

"நம் திருமணம் நடக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இன்னமும் இருக்கிறது. அண்ணன் திருமணம் முடிந்த பின்பு அடுத்து நம் திருமணம்தான்!" என்றான் மெல்லிய குரலில்.

அவள் கண்கள் கலங்கின.

கையை இழுத்துக் கொண்டு வேகமாக அங்கு இருந்து ஓடினாள் அவள்.

## 20

உயிரிலே
என்
உயிரிலே



நீ
தீப் போல்
பர[illegible]றாய்!

...............

நிலவு
தவழ
வேண்டியது
மேகத்தில்
தான்!

...............

மழை
கலக்க
வேண்டியது
பூமியில்
தான்!

...............

நீயும்
நானும்
அதைப்
போலத்தானே
பெண்ணே!

சஞ்சய், ஸ்நேகா திருமணம் ரொம்பச் சிம்பிளாக நடந்து முடிந்தது. ஸ்நேகாவின் பெற்றோர் முதலில் திருமணத்திற்கு மறுப்புச் சொன்னார்கள்.

ஆனால் பின்னர் மகள் சந்தோஷமாக இருந்தால் போதும் என்ற எண்ணத்தில் திருமணத்திற்கு ஒத்துக் கொண்டனர்.

டாலி ரொம்ப சந்தோஷமாக இருந்தாள். தனக்கு அம்மா வந்து விட்டார்கள் என்று எல்லோரிடமும் சொல்லியபடி இருந்தாள்.

அஞ்சனாவிற்கு மனம் உற்சாகமாக இருந்தது காரணம், டாலியின் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள இனிய மாற்றங்கள்தான்.

பாவம்... சின்னக் குழந்தையான அவள் எவ்வளவோ சந்தோஷங்களை இதுவரை இழந்து விட்டாள். அதற்கு யார் பொறுப்பு?

பாவம்... யாரையும் குற்றம் சொல்ல முடியாது. டாலியின் அம்மா துறவியாகப் போக வேண்டும் என்ற எடுத்த முடிவு சரிதான்.

ஆனால் அதை எடுத்த நேரம்தான் சரி இல்லை. திருமணத்திற்கு முன்பு இதை அவர்கள் எடுத்து இருந்தால் பிரச்சினை இவ்வளவு பெரிதாக வெடித்து இருக்காது.

அதனால் பாதிப்பு யாருக்கும் இருக்காது. மாளவிகாவின் பெற்றோர் வேண்டுமானால் இந்த முடிவினால் மனம் வெம்பி இருப்பார்கள்.



ஆனால் இங்கே தவறான நேரத்தில் எடுத்த முடிவினால் ஒரு குடும்பமே உடைந்து போய் விட்டதே என்று யோசித்தபடியே அறையில் இருந்தாள் அவள்.

"என்ன அஞ்சனா... டாலி இல்லாமல் போர் அடிக்குதா?"

"ஆமாம் ஆன்ட்டி."

"ம்... அடுத்த வாரம் வந்து விடுவாள். ஊட்டிக்குத்தானே போய் இருக்கிறார்கள்."

"ம்... அவளுக்கு இப்பொழுதுதான் சின்னச் சின்ன சந்தோஷங்கள் தொடங்குகிறது!" என்றாள் அஞ்சனா.

"ம்... நீ வந்த பிறகே அவளுக்கு சந்தோஷம் தொடங்கிவிட்டது!" என்றபடியே பேச்சில் நுழைந்தான் ராகவ்.

"ஓ... நோ... அப்படி எல்லாம் இல்லை டாக்டர்."

"அம்மா! இவளுக்கு என்ன பனிஷ்மெண்ட் கொடுக்கலாம்?"

"எதுக்குடா பனிஷ்மெண்ட் எல்லாம். அவள் என்ன தப்பு செய்தாள்?"

"ஒரே தப்பைத் திரும்பத் திரும்பச் செய்கிறாள்!"

அஞ்சனாவின் முகம் பயத்தால் வெளிறியது.

"என்னடா தப்பு...? சொல்லுடா!"

"ம்... என்னை டாக்டர் டாக்டர் என்று அழைக்கிறாள். எத்தனை தடவை சொல்லிவிட்டது... அப்படிக் கூப்பிட வேண்டாம் என்று!"

அஞ்சனாவின் முகத்தில் நிம்மதி ரேகைகள் தெரிந்தன.

"ஸாரி டாக்டர்... ஸாரி... ஸாரி!"

"சரி... டாலி வந்த பின்பு அவளை ஒரு சயின்ஸ் ப்ரோக்ராமிற்குக் கூட்டிக்கொண்டு போக வேண்டும். அது விஷயமாக உன்னிடம் நான் பேச வேண்டும். என்னுடன் வருகிறாயா?"

"எங்கே டாக்டர்?"

"அம்மா... இவள் இங்கே வந்து எத்தனை மாதம் ஆகிறது?"

"ஏன்டா ராகவ்?"

"அம்மா... கேள்விக்குப் பதில் ப்ளீஸ்...!"

"சரிடா... அஞ்சனா இங்கே வந்து ஒரு வருஷம் ஆகப் போகிறது. அடுத்த மாசம் பிறந்தால் சரியாக ஒரு வருஷம் ஆகிவிடும்."

"ம்... ஒரு வருடம் ஆகிவிட்டது. இருந்தால் கூட என் மேல் நம்பிக்கை இல்லை பாருங்கள்!"

"அப்படி எல்லாம் இல்லை டாக்டர்..." என்றாள் மெதுவாக.

"டேய்... நீ முதலில் அவளிடம் நடந்து கொண்ட முறை அப்படி! 'ஃபர்ஸ்ட் இம்பிரஷன் இஸ் தி பெஸ்ட் இம்பிரஷன்!' சும்மாவா சொன்னார்கள் பழமொழியை!"



"அம்மா! வெரி பேட் நீங்கள் எனக்குச் சப்போர்ட் செய்வீர்கள் என்று பார்த்தால் இப்படிச் செய்து விட்டீர்களே! சே... சே... வெரி பேட்

"அஞ்சனா... உனக்குத்தான் அம்மாவும் சப்போர்ட் "அஞ்சனா... உனக்குத்தான் அம்மாவும் சப்போர்ட்

"அஞ்சனா... ஃபுல் வேளச்சேரி கிட்டத்தான் அந்த இடம் இருக்கு. ஃபுல் அட்ரஸ் இப்ப ஞாபகம் இல்லை. சொன்னால்தான் வருவாயா?"

கஸ்தூரி கலகலவெனச் சிரித்தார்.

"அப்படி எல்லாம் இல்லை டாக்டர்!" என்றாள் மெதுவாக.

"அப்ப இன்னும் அஞ்சு நிமிஷத்தில் ரெடியா இரு... நாம கிளம்பலாம்."

"ஆன்ட்டி... நான் போகட்டுமா?"

"ம்... இந்த வீட்டில் வரவர எனக்குத் துளிகூட மரியாதை இல்லை!" என்று கத்தினான் பொறுமை இழந்த ராகவ்.

"டேய்... அவள் ஏற்கெனவே உன்னைப் பார்த்துப் பயந்து நடுங்கறா. நீ திரும்பத் திரும்ப இந்த மாதிரிக் கத்தி ஆர்ப்பாட்டம் செய்து கொண்டு இருந்தால் பார்... நானே அவளை உன்னுடன் அனுப்பி வைக்க மாட்டேன்!" என்றார் அழுத்தமாக, கஸ்தூரி.

"ஓகே... ஸாரிம்மா!"

"ஆன்ட்டி... நான் போய் வருகிறேன்!"

"சரி அஞ்சனா!"

ராகவைப் பின்தொடர்ந்தாள் அவள். ஏனோ அவள் இதயத் துடிப்பு அதிகரித்தது.

"ஸோ... என்னோட வர்றதுக்கு உனக்கு அவ்வளவு தயக்கம் ஏன் அஞ்சனா?"

"ம்... அப்படி எல்லாம் இல்லை. இது டாக் சம்பந்தப்பட்ட விஷயம்தானே!"

"ம்... கூடிய சீக்கிரம் உனக்குத் தெரியத்தானே போகிறது!"

கார் அருகே வந்தவுடன் கார் கதவைத் திறந்து விட்டான். அவள் காரில் ஏறி அமர்ந்தவுடன் கார் கிளம்பியது.

காரில் இருந்த மியூஸிக் ஸிஸ்டம் வழியாக ஏதோ பாடல் கசிந்து கொண்டு இருந்தது. அவன் வேறு ஒரு சி.டி.யைப் பொருத்தினான்.

'நெஞ்சுக்குள் பெய்திடும்
மாமழை...
நீருக்குள் மூழ்கிடும்
தாமரை...
சட்டென்று மாறுது
வானிலை
பெண்ணே உன் மேல் பிழை!'

என்ற பாடல் மனதை வருடியது.

"அழகான பாடல் இது! உனக்குப் பிடிக்குமா?"



"இல்லை டாக்டர்! நான் திரைப்படங்களைப் பார்ப்பது இல்லை."

"ஓ... ஆச்சரியமாக இருக்கிறதே! ஆசிரம விதி முறைகள் அவ்வளவு ஸ்ட்ரிக்ட் ஆனவையா?"

"இ... இல்லை... எல்லோரும் பார்ப்பதற்கு டி.வி. ஒன்று உண்டு. தூர்தர்ஷன் அல்லது பொதிகையில் வரும் நிகழ்ச்சிகளைப் பார்ப்போம்."

"ஓ! அப்படியா? உனக்கு ஏதாவது நல்ல படம் பார்க்க வேண்டும் என்று ஆசையாக இருக்காதா?"

"இல்லை டாக்டர்! எனக்குத் திரைப்படங்களின் மேல் பெரிதாக நாட்டம் இல்லை. அது ஒரு மாய உலகம். திரைக்குப் பின்னால் எத்தனையோ அவமானங்கள், வேதனைகள், வலிகள் உண்டு. அதனாலோ என்னவோ திரைப்படத்தைப் பார்த்தாலே வெறுப்பாக இருக்கிறது. எவ்வளவு பேரின் வாழ்க்கை, குறிப்பாகப் பெண்களின் வாழ்க்கை இதனால் சீரழிந்து போய் இருக்கிறது தெரியுமா?

"குடும்பங்கள் சிதறு தேங்காய் போல் உடைந்து சிதறிப் போய் இருக்கின்றன தெரியுமா? அதை எல்லாம் பற்றி அக்கறை இல்லாமல் திரைப்படத்தில் வரும் ஹீரோக்களுக்குப் பால் அபிஷேகம் செய்யும் ஊர் இது. அதில் வரும் நடிகைகளின் சொந்த விஷயத்தில் மூக்கை நுழைக்கும் அநாகரிகமான மீடியா நிரம்பியிருக்கும் ஊர்!" என்று படபடவெனப் பொரிந்தாள் அஞ்சனா.

அங்கே கனத்த மௌனம் பரவியது.

"பரவாயில்லை... திரைப்படம் பற்றி உனக்கு இவ்வளவு தெரிந்து இருக்கிறதே. அதுவும் அதில் உள்ள ஆர்ட்டிஸ்ட்களின் நிலமை எல்லாம் உனக்குத் தெரிந்து இருக்கிறதே! இட் இஸ் குட். எல்லாத் தொழிலிலும் ப்ளஸ் அண்ட் மைனஸ் உண்டு அஞ்சனா. அது தவிர்க்க முடியாத விஷயமாக மாறிவிட்டது.

"சின்ன வயதில் நல்ல வேலைக்குப் போகும் பொழுது பணப் புழக்கம் அதிகமாகி விட்டது. உதாரணமாக ஐ.டி.யில் வேலை பார்ப்பவர்கள் இளம் வயதிலேயே நல்ல லைஃப் ஸ்டைலுக்குத் தங்களை ஈடுபடுத்திக் கொள்கிறார்கள். ஆனால் உடல் நலத்தில் அக்கறை எடுத்துக் கொள்வதில்லை. ஹாஸ்பிட்டலுக்கு வரும் நோயாளிகளில் இப்பொழுது பெரும்பாலானவர்கள் ஐ.டி துறையைச் சேர்ந்தவர்கள்தான்.

"மன அழுத்தம் அதிகரிப்பதால் இளம் வயதிலேயே ஹார்ட் அட்டாக் ஏற்பட வாய்ப்பு உள்ளது. மனதை அமைதியாக வைத்துக் கொள்ள நிறைய வழிமுறைகள் உள்ளன. அதை எல்லாம் செய்வது இப்பொழுது அத்தியாவசியம் ஆகிவிட்டது."

"ம்... நீங்கள் காலேஜில் க்ளாஸ் ஏதாவது எடுக்கலாம் டாக்டர். ரொம்ப அழகாக விஷயங்களை எடுத்துச் சொல்றீங்க!"

"ஓ... தேங்க்ஸ் அஞ்சனா. அட்லீஸ்ட் இந்த ஒரு விஷயமாவது உனக்கு என்னைப் பற்றிப் பிடித்து இருக்கிறதே... ஐயாம் ஹானர்ட்..." என்றான் உல்லாசமாகச் சிரித்தபடியே ராகவ்.



அவன் சிரிப்பது கொஞ்சம் ரேர் தான். ஆனால் சிரிக்கும் பொழுது அவன் ரொம்ப இயல்பாக இருப்பது போல் அவளுக்குத் தோன்றியது.

அவன் சிரிக்கும் பொழுது மீசையின் கீழ் மின்னிய வெண்பற்கள் அவனை மேலும் வசீகரமாக மாற்றின. சட்டெனப் பார்வையை வேறு புறம் திருப்பினாள் அஞ்சனா.

கார் கடற்கரை அருகே செல்வதைப் பார்த்தாள் அவள்.

"டாக்டர்... இது பீச்தானே?"

"ம்... யெஸ்!"

"இங்க எதுக்கு இப்ப?"

"திருச்சியில் பீச் எதுவும் கிடையாதுதானே!"

"ஆ... ஆமாம்!"

"அதனால்தான் உன்னை இங்கு அழைத்து வந்தேன். வா, போகலாம்."

"பட்... நீங்க டாலிக்கு ஏதோ சயின்ஸ் ப்ரோக்ராமிற்காக எங்கோ போக வேண்டும் என்றுதானே சொன்னீர்கள்?" கோபம் எட்டிப் பார்த்தது அவள் குரலில்.

"ம்... அப்படிச் சொன்னால்தான் நீ என்னுடன் வெளியே வரச் சம்மதிப்பாய். இல்லாவிட்டால் நீ வந்து இருக்க மாட்டாய். அதனால்தான் பொய் சொன்னேன்."

அவள் விழிகளில் கோபம் கொப்புளித்தது.

"இது சரியில்லை டாக்டர்!"

"நீ சொல்வதெல்லாம் சரியா அஞ்சனா?"

"என்னை வீட்டில் விட்டு விடுங்கள்!"

"முடியாது. எனக்கு இன்று ஒரு முடிவு தெரிய வேண்டும்."

அவள் பயத்துடன் அவனைப் பார்த்தாள்.

## 21

உன்
வார்த்தைகள்
தேன்
போல்
பாய்கின்றன
என்
காதில்!
உன்
பேச்சினும்
இனிய
மொழி
இருக்கிறதா
இந்த
உலகில்?

..............



இல்லவே
இல்லையடி
என்னவளே!
உன்
வார்த்தைகளின்
முன் தோற்றுப்
போனது என் கவிதை!

**"நான்** உன்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன் அஞ்சனா. உன்னிடம் நான் என் காதலைச் சொல்லி இருக்கிறேன். ஆனால் நீ சரியாகப் பதில் சொல்லாமல் பிடி கொடுத்துப் பேசாமல் நழுவுகிறாய்!

"நீ உன் வயதுப் பெண்களைப் போல் இல்லாமல் ரொம்ப வித்தியாசமாக இருக்கிறாய் அஞ்சனா. அது எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. நீ உணவு விஷயத்தில் அக்கறை எடுத்துக் கொள்வதில்லை. பசியை மறக்கடிக்க உதவி செய்யும் மாத்திரைகளில் ஜீவனை ஓட்டுகிறாய். ரொம்ப விசேஷமான அழகான உடை உடுத்துவதில் உனக்கு இன்ட்ரெஸ்ட் இல்லை. உன் மனதில் ஏதோ கவலைகள் இருக்கின்றன.

"வலிகளை ஏன் சுமந்து கொண்டு திரிகிறாய்? இறக்கி வைத்து விடு. எல்லாவற்றையும் கொட்டி விடு. உன் கண்களில் எப்பொழுதும் ஒரு சோகத்தின் நிழல் தெரிகிறது. ஏன் அஞ்சனா? என்ன பிரச்சினை உனக்கு? ப்ளீஸ் கம் அவுட்..." என்றான் மென்மையாக ராகவ்.

அவள் கண்கள் கலங்கின. அவள் மனதிற்குள் பெரும் போராட்டம் நடக்கத் தொடங்கியது. வாழ்க்கை என்னும் ஆற்றில் தான் சிக்கிச் சுழல்வது ஏன் எனும் கேள்வி அவள் மனதில் எழுந்தது.

கண்களில் இருந்து சட்டெனக் கண்ணீர் முத்துக்கள் உருண்டு கன்னத்தில் ஓடின.

"ஸாரி டாக்டர்... நான் ஆசிரமத்திலேயே வளர்ந்து விட்டேன். அதனால் எனக்குக் குடும்பத்தில் இயல்பான வாழ்க்கையே என்னவென்று தெரியாது. எல்லாவற்றையும் ஷேர் செய்துதான் ஆசிரமத்தில் வாழ்ந்து எனக்குப் பழக்கம். உடைகள் கூட அப்படித்தான்.

"இது உன் உடை, இது என் உடை என்று தனியாகப் பேதப்படுத்திப் பார்ப்பது கிடையாது. அதனால் உடை விஷயத்தில் பெரிதாக அக்கறை ஏதும் இல்லை. உணவும் அப்படித்தான். கிடைக்கும் பொழுது சாப்பிடுவோம். சில நாள் இரண்டு வேளை சாப்பிடுவோம். சில நாள் மூன்று வேளை. அதனால்கூட அப்படி ஆகியிருக்கலாம் டாக்டர். வாழ்க்கையில் எந்தப் பிடிப்பும் இல்லை. என்னைச் சார்ந்து யாரும் இல்லை.

"டாலியுடன் கழிந்த இந்த நாட்கள் என் வாழ்க்கையிலேயே ரொம்ப இனிமையானவை. என்னால் கூட ஒரு உபயோகம் இருக்கிறதே என்று எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது டாக்டர். இந்த நினைவுகளே போதும். என் மிச்ச வாழ்க்கையை நகர்த்திச் செல்ல. அதனால் உங்கள் எண்ணத்தை நீங்கள் மாற்றிக் கொள்ளுங்கள்.



"உங்கள் படிப்பு, அந்தஸ்து, உங்கள் ரசனை எல்லாவற்றுக்கும் ஏற்ற மாதிரி ஒரு பெண்ணைப் பார்த்துத் திருமணம் செய்து கொள்ளுங்கள் டாக்டர். இதற்கு மேல் மறுபடியும் இந்தப் பேச்சை எடுக்காதீர்கள்... ப்ளீஸ்!" என்றாள் கெஞ்சலாக அஞ்சனா.

அவன் முகம் இறுகியது. நிராகரிக்கப்படுவது அவனுக்குப் பழக்கமான ஒன்று கிடையாது. ரொம்பக் கஷ்டப்பட்டுப் படித்து மெடிக்கல் சீட் சென்னையில் ஸ்டான்லியில் நினைத்தபடியே வாங்கினான்.

படிப்பில் கோல்ட் மெடலிஸ்ட். எல்லாப் புரபஸர்களின் செல்லப் பிள்ளை அவன். கல்லூரியில் அவனைச் சுற்றி வந்த கேர்ல்ஸ் நிறைய.

ஆனால் எல்லோரையும் ஒரு டிஸ்டன்ஸில் நிறுத்தி வைத்தவன் அவன். முப்பது வயதில் ஹாஸ்பிடலை நிறுவித் திறம்பட நடத்தி வருகிறான்.

என்ன இருந்து என்ன பயன்? ஒரு பெண் மனதைத் தன்னிடம் ஈர்க்க முடியாமல் போய் விட்டதே. பெண் மனம் ஆழம் என்று இதை மனதில் வைத்துத்தான் சொன்னார்களா!

யோசனையில் மூழ்கினான் அவன். அஞ்சனாவின் மனம் மாறாதா? இன்று இல்லாவிட்டால் பரவாயில்லை... என்றாவது ஒரு நாள் அவளுக்கு வாழ்க்கை மேல் பிடிப்பு ஏற்படலாம். அப்பொழுதாவது என் நினைவு வருமா? ஏங்கியது அவன் மனம்.

"போகலாமா டாக்டர்...?"

"ம்... போவதிலேயே குறியாக இரு அஞ்சு. என் உயிரை எடுத்துக் கொண்டு போய் விடு. நான் என் வாழ்க்கையில் முதல் முறையாக ஒரு வெறுமையை உணர்கிறேன். அதற்குக் காரணம் நீ. உன் பிடிவாதம் தான் காரணம்.

"எப்படியும் நீ யாரையாவது திருமணம் செய்து கொள்ள வேண்டும்தானே! அது ஏன் நானாக இருக்கக் கூடாது? கொஞ்சம் யோசித்துப் பார். வற்புறுத்துவதில் எனக்கு இஷ்டம் இல்லை. அன்பு என்பது ஒரு ஊற்றைப் போன்றது. அது தானாக வரவேண்டும். வற்புறுத்தியோ, மிரட்டியோ, யாசித்தோ வருவது காதல் இல்லை அஞ்சு.

"அது ஒரு இயல்பான விஷயம். பூப் பூப்பது போல்... வசந்த காலத்தில் மலர்கள் தானாக மலரும். யாரும் பூக்களுக்குச் சொல்லிக் கொடுப்பது இல்லை. அது தானாகவே நடக்கும் ஒரு இயல்பான விஷயம். அதைப் போலத்தான் காதலும். நான் முதலில் உன்னைத் தப்பாகப் புரிந்து கொண்டேன். அந்தப் பார்ட்டியில் நான் பார்த்த பெண் என்று உன்னைத் தவறாக நினைத்துக் கொண்டேன். அதனால்தான் உன் மேல் எரிந்து விழுந்தேன்.

"அன்று கோயிலில் நீ பேசிக்கொண்டு இருந்ததை நான் தவறாகப் புரிந்து கொண்டு உன்னைக் கைநீட்டி அடிக்கவும் செய்தேன். ஐயாம் ஸாரி. நான் செய்தது ரொம்பத் தப்பு. உன் மேல் கை வைக்க, அதுவும் அடிக்க எனக்கு எந்த உரிமையும் இல்லை.



"என்னை நினைத்தே, நான் வெட்கப்பட்டு இருக்கிறேன். சே! எவ்வளவு கீழ்த்தரமாக நான் நடந்து கொண்டு விட்டேன். ஐயாம் வெரி ஸாரி. அதை எல்லாம் மனதில் வைத்துக் கொண்டுதான் என்னை வேண்டாம் என்று சொல்கிறாயா?" என்றான் கெஞ்சும் குரலில்.

அவள் நெஞ்சில் துக்கம் பொங்கியது. கடவுளே! என்னை ஏன் இப்படிச் சோதிக்கிறாய்? என் மனதில் இருப்பது ராகவ் மட்டுமே.

இந்த நல்லவனின் அன்பை ஏற்றுக் கொள்ள முடியாத நிலமையில் என்னை ஏன் தள்ளி விட்டு விட்டாய் என்று மனதினுள் புலம்பினாள் அஞ்சனா.

"என்ன அஞ்சு... என்னைத்தான் பிடிக்கவில்லை என்று சொல்லிவிட்டாய். என் கேள்விகளும் பிடிக்க வில்லையா? அதனால்தான் மௌனமாக இருக்கிறாயா? சரி... நான் உன்னைத் தொந்தரவு செய்யவில்லை.

"வா... கடற்கரையில் கொஞ்ச நேரம் உட்கார்ந்து இருக்கலாம். அப்புறம் போகலாம். ப்ளீஸ்... இதற்கும் நோ என்று சொல்லி விடாதே. இனி நான் உன் வாழ்க்கையில் குறுக்கிடவே மாட்டேன்."

கையில் கிடைத்த ராஜ உணவைக் குப்பையில் தூக்கிப் போட்டுவிட்டு, மீண்டும் சாப்பாட்டிற்குக் கை ஏந்தும் பிச்சைக்காரியின் நிலைமையில் இருந்தாள் அஞ்சனா.

ஏனோ தன் மேல் எப்பவும் இருக்கும் கோபம் இன்னும் அதிகமானது. சே! என்ன வாழ்க்கை இது! இப்படியே இறந்து போய்விட மாட்டேனா நான்.

அடுத்த ஜென்மம் என்று ஒன்று இருந்தால் நான் ராகவின் மனைவியாக இருக்க வேண்டும். இந்த ஜென்மத்தில் நான் கொடுக்க மறுத்த காதலை, நேசத்தைப் பல மடங்காக அவனுக்குக் கொடுக்க வேண்டும்.

கடவுளே! அதற்காகவாவது நீ எனக்கு உதவி புரிவாயா? இறைஞ்சினாள் மனதிற்குள்.

"போகலாம் டாக்டர்... கடற்கரைக்கு..." என்றாள் குரல் நடுங்க.

"தேங்க்ஸ்..." என்று அவள் கையை அழுத்தமாகப் பற்றியவன் சட்டெனக் கையை விடுவித்தான்.

காரை விட்டு இறங்கியவுடன் கடற்கரைக் காற்று முகத்தில் மோதியது.

கடற்கரை கூட்டமாக இருந்தது. படகு மறைவின் பின்னால் காதலர்கள் உலகை மறந்து தங்கள் உலகில் மூழ்கி இருந்தனர்.

சுண்டல் விற்கும் சிறுவர்கள், பூ விற்கும் பெண்கள் தங்கள் வியாபாரத்தில் மூழ்கி இருந்தனர்.

"இங்கே உட்காரலாமா அஞ்சனா?"

"சரி டாக்டர்!"

மணலில் இருவரும் உட்கார்ந்தனர். மணலில் இருந்த கிளிஞ்சல்களை எடுத்தும் கையில் சேகரித்தும் வைத்துக் கொண்டாள்.

"ம்... இந்தக் கிளிஞ்சல்கள் கொடுத்து வைத்தவை"

[illegible]



அவள் அவன் முகத்தைப் பார்த்தாள். என்னை வார்த்தையால் கொல்லாமல் கொல்லாதே என்று கெஞ்சின அவள் விழிகள்.

"எனக்கு ஒரு சத்தியம் செய்து கொடுக்க வேண்டும் நீ அஞ்சு!"

"எ... என்ன டாக்டர்?"

"பயப்படாதே! எனக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை!" என்றான் லேசான புன்னகையோடு.

"என்ன சத்தியம் டாக்டர்?"

"ம்... எக்காரணம் கொண்டும், எந்த நிலைமையிலும் நீ உன் உயிரைப் போக்கிக் கொள்ள நினைக்கக் கூடாது. சத்தியம் செய்து கொடு அஞ்சு!" என்று தன் கையை நீட்டினான் அவளை நோக்கி.

"சத்தியம் டாக்டர்..." என்றபடியே அவன் கையில் தன் கையைப் பதித்தாள் அஞ்சனா.

பின்பு அவன் கையை எடுத்துச் சட்டெனக் கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

"நீங்கள் ஒரு தெய்வம் டாக்டர்!"

அவன் கண்களில் வலி தெரிந்தது.

"வேண்டாம் அஞ்சு... நான் சாதாரண மனிதன். மனிதனுக்கு மனிதனாக மட்டுமே இருக்க விரும்புகிறேன். மனிதனுக்கு இருக்கும் இயல்பான ஆசைகள் எல்லாம் எனக்கும் உண்டு. உன்னை என்னால் மறக்க முடியாது. வேறு

எந்தப் பெண்ணையும் உன் இடத்தில் வைத்துப் பார்க்க முடியாது!" என்றபடியே அவள் முகத்தைப் பார்த்தான்.

சட்டென அவன் கையைத் தன் பிடியில் இருந்து விட்டாள் அவள். அவள் கண்கள் கலங்கின. மனதில் அழுது கொண்டு இருந்தாள்.

"அஞ்சு... ஏன் என்னை இப்படிக் கொல்லாமல் கொல்கிறாய்?" என்றபடியே அவளைத் தன் புறம் இழுத்தான் அவன்.

அவன் மடியில் விழுந்தாள் அஞ்சனா. அடைத்து வைத்து இருந்த கண்ணீர் கேவலுடன் வெளிப்பட்டது. அவன் வயிற்றில் முகம் புதைத்து அழுதாள் அவள்.

அவள் தலைமுடியைக் கோதி, முதுகை வருடி, அவளைச் சமாதானப்படுத்தியபடி இருந்தான் ராகவ்.

"ஸாரி... ஸாரி டாக்டர்!" என்றபடியே அவன் பிடியில் இருந்து சட்டென விலகினாள் அவள்.

"ம்... எதுவோ உன்னை என்னிடம் இருந்து விலக்குகிறது. நீயே ஏதோ ஒரு வேலியை உன்னைச் சுற்றிப் போட்டுக் கொள்கிறாய். ஏன் அஞ்சு? சொல்லும்மா!" என்றான்.

"டாக்டர்... போகலாம். வாங்க!"

"ம்... மறுபடியும் நீ உன் கூட்டுக்குள் நத்தை போல் ஒடுங்கிக் கொள்கிறாய். சொல்லும்மா... என்ன பிரச்சினை?" என்று அவள் கையைப் பற்றினான்.

அவள் கையை உதறினாள்.



"உங்கள் சத்தியத்தை மீறச் செய்யும் சஞ்சலத்தை எனக்கு ஏற்படுத்தாதீர்கள்."

அவன் கண்களில் வெறுமை குடி கொண்டது. ஏதும் சொல்லாமல் மணலில் இருந்து எழுந்தான். மௌனமாக நடந்தான்.

அவளும் அவனைத் தொடர்ந்தாள். வானம் கருமையாக இருந்தது. என் வாழ்க்கையும் இனி இப்படித்தான் என்று தனக்குள்ளேயே நினைத்தபடி அவனைத் தொடர்ந்தாள் அஞ்சனா. கடல் அலைகளின் சப்தம் கொஞ்சம் கொஞ்சமாக அடங்கியது. கார் அவர்களைச் சுமந்து கொண்டு சீறிப் பாய்ந்தது.

## 22

நீ
என்னைப்
பார்த்தாய்!
...............
அன்றுதான்
நான்
உன்னிடம்
சரண்
அடைந்தேன்!
...........

என்ன
மாயம்
செய்தாயோ
தெரியவில்லை!
என்னை
நான்
தொலைத்து
விட்டுத்
தேடப்
பிடிக்காமல்
அமிழ்ந்து
இருக்கிறேன்,
சுகமாக
உன்னில்!

அன்று இரவு தூங்காமல் ஜன்னல் வழியா தெரிந்த நிலவைப் பார்த்தபடியே நின்று கொண் இருந்தாள் அஞ்சனா.

வந்த இடத்தில் ராகவிடம் மனதைப் பறிகொடுப்பே என்று நான் நினைக்கவே இல்லை.

இது விபத்து. ஆனால் இனிமையான விபத் ராகவ் கூடவே இருக்க வேண்டும் என்று அவள் மன சொன்னது.



அஞ்சனா... நீ செய்வது சரி இல்லை என்று மூளை அவளுக்குக் கட்டளை இட்டு எச்சரித்தது. கண் மூடி யோசித்தாள் அவள்.

சட்டென ஒரு யோசனை மனதில் உதித்தது. இப்படிச் செய்தால் என்ன என்று தோன்றியது. மனதில் இருப்பதை உடனே செயல்படுத்த முடிவு செய்தாள்.

ஒரு பேப்பரையும் பேனாவையும் எடுத்தாள். 'என் பழைய வாழ்க்கை எனக்குப் பிடித்து இருக்கிறது. நீங்கள் என் சாயலைப் போல் ஒரு பெண்ணைப் பார்த்தேன் பார்ட்டியில் என்று சொன்னீர்களே டாக்டர்... அந்தப் பெண் நான்தான். எனக்கு ஒரு ஃபிரெண்ட் மூலமாக பார்ட்டி அனுபவம் கிடைத்தது. அந்த அனுபவம் எனக்குப் பிடித்து இருந்தது.

'ஆசிரமத்தில் வளர்ந்த எனக்குக் கட்டுக்கோப்பான வாழ்க்கையிலிருந்து விடுதலை கிடைத்தாற்போல் இருந்தது. நண்பர்கள்... ஆண் நண்பர்கள் எனக்கு நிறையக் கிடைத்தனர். மது. நண்பர்கள் என்று வாழ்க்கையை நன்றாக அனுபவித்துக் கொண்டு இருந்தேன் நான். டாலியின் பிறந்த நாள் பார்ட்டியின் பொழுது கூட ஒருவன் என்னிடம் வம்பு செய்தானே! அவன் கூட அப்படி அறிமுகம் ஆனவன்தான் பார்ட்டியில் எனக்கு!

'ஆசிரமத் தலைவர் வற்புறுத்தி என்னை உங்கள் வீட்டிற்கு அனுப்பி வைத்தார். ஏன் என்றால் வேறு யாரும் படித்தவர்கள் இல்லை ஆசிரமத்தில். அதனால்தான்

இங்கே வந்தேன் நான். வேறு வழியின்றி டாலியைப் பார்த்துக் கொள்ள ஒத்துக் கொண்டேன்.

'நீங்கள் சம்பளமாகச் சொன்ன தொகையும் நல்ல அமௌண்டாக இருந்தது. அதுவும் இந்த வேலையை ஒத்துக்கொள்ள ஒரு முக்கியக் காரணம். இப்பொழுது ஒரு நல்ல தொகை என்னிடம் உள்ளது. அதனால் நான் திரும்ப என் உல்லாச வாழ்க்கைக்குத் திரும்பப் போகிறேன். இந்தப் போட்டோக்களைப் பாருங்கள். இதுதான் எனக்குப் பிடித்த வாழ்க்கை.

இப்படிக்கு,
அஞ்சனா

என்று கடிதத்தை முடித்துக் கையெழுத்துப் போட்டாள் அவள். மனம் லேசானது போல் உணர்ந்தாள்.

இனிமேல் எந்தப் பிரச்சினையும் இல்லை. முடிவு எடுத்தாகி விட்டது. டாலியும் என்னை இனி ரொம்பத் தேட மாட்டாள்.

ஸ்நேகா அவளைப் பொறுப்பாக அன்பாகப் பார்த்துக் கொள்வாள். நான் இனி என் பயணத்தைத் தொடர வேண்டும்.

காஞ்சனாவின் படிப்பும் முடிந்துவிடும் தருவாயில் உள்ளது. எல்லாமே ரொம்ப அழகாக எனக்குச் சாதகமாக இருக்கின்றன. அதனால் இந்த வாய்ப்பை நழுவவிடக் கூடாது என்று தீர்மானித்தாள் அஞ்சனா.

இங்கு இருந்து எங்கே போவது? இந்தப் பரந்து விரிந்த உலகில் ஏதாவது ஒரு மூலையில் இருக்க வேண்டியதுதான்.



எனக்கென ஒரு இடம் இருக்கும். ராகவை என்னால் மறக்க முடியாது. ஆனால் வேறு வழி இல்லை.

இங்கே இருந்தால் என் மன நிம்மதி தொலைந்து விடும். ராகவ் என் அருகே இருந்தால் என் மனம் பேதலித்து விடுகிறது.

என் மனம் என் வசம் இல்லை. அதனால் நான் இங்கே இருந்து சென்று விட வேண்டும். இல்லாவிட்டால் நான் ஏதாவது உளறி விடுவேன்.

சரி... இந்தக் கடிதத்தை நான் எப்படி ராகவிடம் கொடுப்பது? காலையில் எழுந்தவுடன் ராகவின் கண்ணில் இது பட வேண்டும்!

என்ன செய்யலாம் என்று யோசித்தாள். ராகவின் அறையின் கதவு இடுக்கு வழியாக இந்தக் கடிதத்தை அங்கு போட்டு விடலாம் என்று நினைத்தாள் அவள்.

ஆன்ட்டிதான் வருத்தப்படுவார்கள். ஆனால் வேறு வழி இல்லை. என் மனதிற்கு இதுதான் சரியான வழி என்று தோன்றுகிறது. அதனால் நான் இதைத்தான் செய்ய வேண்டும் என்று தீர்மானித்தாள்.

அன்று இரவு முழுக்கத் தூங்க முடியாமல் தவித்தாள் அஞ்சனா. எப்படா விடியும் என்று காத்துக் கொண்டு இருந்தாள்.

ஐந்து மணி ஆனதுக்கு அடையாளமாகப் பறவைகள் 'கீச் கீச்' எனக் கத்த ஆரம்பித்தன. தன்னுடைய பையை எடுத்துக்கொண்ட அஞ்சனா, கடிதத்தை ராகவின் அறையின் கதவிடுக்கில் நுழைத்தாள்.

"என்னம்மா... வெளியில் வேலையா? டிரைவரை வரச் சொல்லட்டுமா?" என்றார் வாசலில் இருந்த செக்யூரிட்டி.

"இ... இல்லை... வேண்டாம். நான் அவசரமாகப் போக வேண்டும்!" என்று சொல்லிவிட்டு வேகமாக அங்கு இருந்து நடந்தாள்.

இருள் பிரியாமல் இருந்த அதிகாலை நேரம் ரோட்டில் ஈ காக்கா இல்லை. ஏனோ ஒரு அச்சம் அவள் மனதை ஆக்ரமித்தது.

பால் போடும் சின்னப் பசங்கள் வேக வேகமாய் சைக்கிளில் செல்வதைப் பார்த்து அவள் மனதில் நிம்மதி படர்ந்தது.

பஸ் ஸ்டாண்ட் ஒன்று அவள் கண்ணில் பட்டு அங்கே நின்றாள் அவள். ஒரு பஸ் வந்தது. 'பாண்டிச்சேரி' என்று போர்டு போட்டு இருந்த அந்த பஸ்ஸில் உடனே ஏறினாள் அஞ்சனா.

பஸ்ஸில் ஏறிய பின்பு பதட்டம் குறைந்தது போல உணர்ந்தாள் அவள்.

"எங்கம்மா போகணும்?" கண்டக்டர் குரல் கொடுத்தார்.

"ம்... பாண்டிச்சேரி போகும்தானே இந்த பஸ்?"

"போகும்மா... போர்டைப் பார்க்கலியா?"

"இல்லை... சரியாகக் கவனிக்கவில்லை..."

"இந்தாங்க டிக்கெட்" என்று நீட்டினார்.



டிக்கெட்டைப் பத்திரப்படுத்தி வைத்தவள் கண்ணில் பட்டது இருக்கையில் இருந்த பேப்பர். அட நேற்றைய பேப்பர் போல!

யாரோ விட்டு விட்டுப் போய்விட்டார்கள் என்று நினைத்தபடியே பேப்பரைப் படிக்கத் தொடங்கினாள்.

'ஃபிரான்சிஸ் சேவியர் பள்ளிக்கு ஃபிரெஞ்ச் பாடம் எடுக்க ஆசிரியைகள் தேவை. அனுபவ மிக்க ஆசிரியைகள் மற்றும் ஃபிரெஞ்சு மொழியில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்கள் நேர்காணல் தேர்விற்குக் கீழ்க்கண்ட முகவரிக்குத் திங்கட்கிழமை காலை பத்து மணி முதல் ஐந்து மணிவரை வரலாம். தங்கும் வசதி உண்டு.'

என்ற விளம்பரம் அவள் கண்ணில் பட்டது. இந்த நேர்காணல் தேர்விற்குச் சென்றால் என்ன? தங்குவதற்கு இடம் உண்டு என்று விளம்பரத்தில் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

அதனால் பாதுகாப்பிற்குப் பிரச்சினை இருக்காது. ஆனால் சம்பளத்தைப் பற்றி ஏதும் குறிப்பிடவில்லை. சம்பளம் எப்படி இருந்தால் என்ன?

எனக்குப் பெரிதாகச் செலவுகள் ஏதும் இல்லை. அதனால் தங்குவதற்குப் பாதுகாப்பான இடம் கிடைத்தால் அதுவே போதும் என்று நினைத்தபடியே கண்களை மூடினாள்.

இரவெல்லாம் தூங்காததால் தலை வலித்தது. ஜன்னல் வழியாக வீசிய குளுமையான காற்று தலை வலிக்கு இதமாக இருந்தது.

தன்னை மறந்து கண் அயர்ந்தாள் அவள். ஒரு அழகான கனவு. ராகவ் கனவில் வருகிறான். அவள் அவன் தோளில் சாய்ந்து இருக்கிறாள்.

இருவர் முகத்திலும் சந்தோஷப் பூக்கள் பூத்துக் குலுங்குகின்றன. சட்டென பஸ் ஒரு குலுக்கலுடன் நின்றது.

திடுக்கிட்டுக் கண் விழித்தாள் அவள். அப்பொழுதுதான் அது கனவு என்று புரிந்தது. இது என்ன அவஸ்தை? என்னால் ராகவை மறக்கவே முடியாதா?

என் கடிதம் அவன் கைக்குக் கிடைத்து இருக்குமா? கைக்கடிகாரத்தைப் பார்த்தாள். அது மணி எட்டு என்றது.

நிச்சயமாக ராகவ் கடிதத்தைப் படித்து இருப்பான். ஆறு மணி அளவில் எழுந்து ஜாகிங் செய்வது அவன் வழக்கம். அதனால் அவன் கண்ணில் என் கடிதம் நிச்சயம் பட்டு இருக்கும்.

பார்த்தவுடன் அவன் என்னைப் பற்றி என்ன நினைத்து இருப்பான்? சே! எவ்வளவு அழகாக என்னை ஏமாற்றி விட்டாள் என்றுதானே நினைத்து இருப்பான்.

இந்த மாதிரி ஒரு பெண்ணையா நான் விரும்பினேன்? எவ்வளவு சாமர்த்தியமாகத் துளிக்கூடச் சந்தேகம் வராமல் நடித்து என்னை ஏமாற்றி விட்டாளே என்று என் மேல் கோபத்துடன் இருப்பானோ?

கோபப்படட்டும். கோபம் வெறுப்பாக மாறும். என் மேல் வெறுப்பு வர வேண்டும் ராகவ் உங்களுக்கு. அதற்காகத்தான் நான் அப்படிச் செய்தேன்.



என்னை மறந்து நீங்கள் வேறு ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும். அதுதான் என் விருப்பம். நிறைவேற்றுவீர்களா ராகவ்?

நான் உங்கள் அன்புக்குத் தகுதியானவள் இல்லை. நான் சாக்கடையில் உள்ள பூ ராகவ். தெய்வத்தின் பாதங்களை அலங்கரிக்கும் தகுதி எனக்கு இல்லை.

அந்த நினைப்பே அவளுக்கு அழுகையை வரவழைத்தது. அந்தப் புகைப்படங்கள் அவள் கண் முன்னே விரிந்தன.

அதைப் பார்த்த ராகவ் என்னைப் பற்றி என்ன நினைத்து இருப்பான். நினைக்க நினைக்க உடல் கூசியது அவளுக்கு.

கடவுளே! எனக்குச் சக்தியைக் கொடு. மனத் திடத்தைக் கொடு. முடிந்தால் எல்லாவற்றையும் மறக்கக் கூடிய மனதை எனக்குக் கொடு. மனதிற்குள் இறைஞ்சினாள் இறைவனிடம் அஞ்சனா.

"என்னம்மா... இறங்கலையா?"

"ஓ...! பாண்டிச்சேரி வந்து விட்டதா?"

"ம்... நல்ல தூக்கமா? இது பாண்டிச்சேரிதான்ம்மா. இறங்கு... இறங்கு!"

பஸ்ஸே காலியாக இருப்பதைக் கவனித்தாள் அவள். சே! யோசனையில் மூழ்கியதால் இடத்தைக் கவனிக்கவில்லை பார் என்று தன்னையே கடிந்து கொண்டாள் அவள்.

காலை வெயில். பஸ்ஸை விட்டு இறங்கியவுடன் சுள்ளென முகத்தில் பட்டது. கடைகள் ஒன்று இரண்டு திறந்து இருந்தன.

பேப்பர் கடை ஒன்றில் இந்த அட்ரஸ் எங்கே என்று விசாரிக்கலாம் என்று முடிவு செய்தாள் அவள்.

"எக்ஸ்க்யூஸ் மீ..."

"என்ன மேடம்... பேப்பர் வேணுமா?"

"இல்லை... இந்த அட்ரஸ் எங்கே இருக்கிறது என்று தெரியுமா?" என்றாள் கையில் இருந்த பேப்பரை அவரிடம் நீட்டியபடியே அஞ்சனா.

"ஓ... இந்தப் பள்ளிக்கூடமா? இங்கே இருந்து பத்து நிமிஷ நடைதான் மேடம். ஒரே ரோடுதான். நேராப் போங்க... ஒரு இடத்தில் ஜங்ஷன் மாதிரி வரும். அங்கே லெஃப்ட் சைடு போற ரோடை எடுங்க. ஒரு பத்து பில்டிங் கழித்து ஸ்கூல் பில்டிங் வரும்."

"தேங்க்ஸ் ஸார்!"

சாலை நன்றாக அகலமாக இருந்தது. கூடவே துப்புரவாகவும் இருந்தது. சாலை ஓரம் மரங்கள் இருந்ததால் குளுமையாக இருந்தது.

என் வாழ்க்கை எப்படி மாறிவிட்டது! மும்பையில் வாழ்ந்த பொழுது சென்னை வருவேன் என்று நினைத்துப் பார்த்து இருப்பேனா?

இல்லை... பாண்டிச்சேரியில் காலை வேளையில் சாலையில் இப்படி நடப்பேன் என்று எதிர்பார்த்தேனா? இல்லவே இல்லை.



கற்பனைகூடச் செய்து பார்க்கவில்லை நான். இதற்குப் பெயர் விதியா? இல்லை, என் துரதிர்ஷ்டமா? ஏன் என் வாழ்க்கையில் மட்டும் இவ்வளவு அதிர்ச்சிகள், குழப்பங்கள், சோகங்கள்?

இன்பமும் துன்பமும் மாறி மாறி வருவதுதான் வாழ்க்கை என்பார்கள் பெரியவர்கள்.

ஆனால் என் வாழ்க்கையே துன்பத்தின் நிழல் மாதிரி அல்லவா இருக்கிறது.

டாலியிடம் கடைசியாகச் சரியாகச் சொல்லிக் கொள்ளாமல் வந்து விட்டேனே! பாவம்... சின்னக் குழந்தை அவள்.

என்னைப் பார்க்க வேண்டும் என்று அடம் பிடித்து இருப்பாளோ? ம்... ம்... இருக்காது. ஸ்நேகா அவளைக் கவனித்துக் கொள்வாள்.

நாடோடி வாழ்க்கைதான் எனக்குச் சரிப்பட்டு வரும்போல என்று ஏதேதோ நினைத்தபடி நடந்தாள் அவள்.

## 23

## ஒரு அழகான மாலைப் பொழுது!

.....

நான்
உனக்காகக்
காத்துக்
கொண்டு
இருக்கிறேன்!

...............

நீ
வர முடியாத
இடத்திற்குச்
சென்று
விட்டாய்!

...............

மூளைக்கு
அது
புரிகிறது!
ஆனால்
மனதிற்குத்
தெரியவில்லை!

...............

ஏன் என்னைச்
சோதிக்கிறாய் பெண்ணே!



காலையில் வழக்கம் போல் ஆறு மணி அளவில் கண் விழித்தான் ராகவ். சோம்பல் முறித்தபடியே எழுந்தவனின் கண்களில் முதலில் பட்டது கதவின் கீழ் கிடந்த ஒரு பேப்பர்.

உள்ளுணர்வு ஏதோ எச்சரிக்கை செய்ய வேகமாக நடந்தவன், அந்தப் பேப்பரை எடுத்தான். பேப்பருடன் இணைக்கப்பட்டு இருந்த புகைப்படங்களைப் பார்த்தவுடன் அவன் அதிர்ச்சியில் உறைந்தான்.

கடிதத்தைக் கடகடவெனப் படித்தான். அவன் மனதில் எழுந்த கோபம் உடல் முழுவதும் தீப் போல் வேகமாகப் பரவியது.

காட்! என்ன இது? இது உண்மையா? அஞ்சுவா இது? சே! எவ்வளவு மோசமான போட்டோக்கள் இவை!

இவ்வளவு குறைவான ஆடைகளுடன் பார்ட்டியில் நடனமாடுவது அஞ்சுவா? அதுகூடப் பரவாயில்லை... இந்தப் போட்டோவில் எவ்வளவு நெருக்கமாக ஆண்களுடன்... சே என்று கண்களை இறுக மூடிக் கொண்டான்.

சட்டென போட்டோக்களைத் தன் கப்போர்டில் வைத்துப் பூட்டினான். ஏன் இன்றைய பொழுது இவ்வளவு மோசமானதாக இருக்கிறது?

அஞ்சு இவ்வளவு கேவலமானவளா? இங்கே வந்து உத்தமி போல் நடித்தாளா? ஆனால் டாலியைக் குறைவின்றிப் பார்த்துக் கொள்ள அவளுக்கு எப்படி மனம் வந்தது?

ஏதோ தோன்ற, வேக வேகமாக அவள் அறையை நோக்கிச் சென்றான். அங்கே எதுவும் இல்லை. ஷெல்பிலும் சரி... கப்போர்டிலும் சரி... எந்தப் பொருளும் இல்லை.

கண் மூடிச் சில நொடிகள் யோசித்தான் அவன்.

இப்பொழுது அம்மாவிடம் விஷயத்தைச் சொல்ல வேண்டும். அஞ்சு இங்கு இல்லை, இனிமேல் அவள் இங்கு இல்லை.

இங்கு இருந்து போய் விட்டாள் என்பதை நாசூக்காகச் சொல்ல வேண்டும். இந்த லெட்டரைப் பற்றி அம்மாவிற்குத் தெரியக் கூடாது.

இந்த போட்டோஸும் லெட்டரும் அம்மா கையில் சிக்கவே கூடாது. சிக்கினால் அவர்கள் மனம் உடைந்து விடும்.

என்னாலேயே இதை ஜீரணிக்க முடியவில்லை. அம்மா இதை எப்படித் தாங்குவார்கள்? என்ன காரணம் சொல்லலாம் அம்மாவிடம்... அஞ்சு அவசரமாகப் புறப்பட்டுப் போனதற்கு என்று யோசிக்கத் தொடங்கினான்.

ஹாலுக்கு வந்தவுடன் சட்டென ஒரு யோசனை தோன்றியது அவனுக்கு. இப்படித்தான் சொல்ல வேண்டும் என்று முடிவு செய்தான்.

"குட்மார்னிங் ஐயா... காப்பி கலந்து எடுத்து வரவா?" என்றாள் வேலைக்காரப் பெண்மணி.

"இல்லை... வேண்டாம். நான் இன்னும் வாக்கிங் போகலை!"



"ஓ... சரிங்க ஐயா!"

"அம்மா கண் முழிச்சிட்டாங்களா?"

"ம்.. பூஜை அறையில்தான் இருக்காங்க."

"சரி..." என்றபடியே பூஜை அறை நோக்கிச் சென்றான்.

அம்மா சாமி அறையில் உட்கார்ந்து விளக்கு ஏற்றுவதைக் கவனித்தான் அவன்.

"அம்மா... குட் மார்னிங்!"

"குட் மார்னிங். என்னடா... வாக் போகலையா?"

"இல்லைம்மா... உங்ககிட்ட ஒரு முக்கியமான விஷயம் சொல்லணும்!"

"என்னடா... ரொம்ப முக்கியமான விஷயமா? ஒரு அஞ்சு நிமிஷம் வெயிட் பண்றியா? நான் ஸ்வாமிக்குத் தீபாராதனை செய்துவிட்டு வந்துடறேனே!"

"சரி அம்மா!"

அம்மா கண் மூடி ஸ்லோகங்களைச் சொல்வதைக் கவனித்தபடி நின்று கொண்டு இருந்தான் ராகவ். சே! தெய்வ சந்நிதியில் வைத்துப் பொய் சொல்ல வேண்டி இருக்கிறதே என்று தன்னையே கடிந்து கொண்டான் அவன்.

கஸ்தூரி கற்பூரம் ஏற்றித் தீபாராதனை காட்டி நைவேத்தியம் செய்து முடித்தார்.

"சொல்லுடா... என்ன விஷயம்?"

"அஞ்சனா பற்றித்தான் அம்மா!"

"என்னடா... அவளுக்கு உடம்புக்கு ஏதாவது...!" என்று பதறினார் கஸ்தூரி.

"நோமா... கவலைப்பட ஒன்றும் இல்லை. அவங்க ஆசிரமத் தலைவர் நேற்று ராத்திரி எனக்குப் போன் செய்தார்."

"என்னடா... ஏதாவது பிரச்சினையா?"

"இல்லம்மா... அஞ்சனாவோட அம்மாவோட தம்பி இறந்து போயிட்டாராம். அதனாலே அஞ்சனாவை உடனே அனுப்பி வைக்கும்படி சொன்னார்!"

"அடப் பாவமே! என்ன வயசு அவருக்கு?"

"ம்... அறுபது வயசு போல..."

"ஓ... ஏன் அஞ்சனா அவரோட இல்ல?"

"அது தெரியலைமா. ஏதாவது பிரச்சினையா இருக்கும். அதெல்லாம் நான் கேக்கலை!"

"ஓ... ஆமாம்! அதுவும் சரிதான். பாவம் அஞ்சு! அவகிட்ட விஷயத்தைச் சொல்லணுமாடா? நான் அவளைக் கூப்பிடவா? மணி ஆறுக்கு மேல ஆச்சே! அவள் கண்டிப்பா கண் விழிச்சிருப்பா!"

"இ... இல்லைம்மா... அஞ்சுவிடம் நான் விஷயத்தைச் சொல்லிவிட்டேன். அவளைத் திருச்சிக்கு அனுப்பிவிட்டுத்தான் வருகிறேன்."

"ஓ... எப்படா ஏத்திவிட்ட? நம்ம காரில்தானே அனுப்பின?"



"இ... இல்லைமா... அவள் கார் வேண்டாம்னு தீர்மானமாக மறுத்து விட்டாள். அதனால் பஸ்ஸில்தான் முத்துவை அனுப்பி ஏற்றி விடச் சொன்னேன்."

"என்னடா... அவள்தான் விவரம் இல்லாமல் சொன்னா... நீயும் அதை அப்படியே கேட்டுச் செஞ்சு இருக்கியே! சே! சே! பாவம். எப்படிடா அவ பஸ்ஸில போவா! அதுவும் தனியா? நீ செஞ்சது சரி இல்லை. என்னை எழுப்பி இருக்க வேண்டியதுதானே! நீயா ஏதாவது முடிவு எடுத்தால் இதுதான் பிரச்சினை!"

"ஸாரிம்மா... நீ அசந்து தூங்கிக்கிட்டு இருப்ப அப்படின்னுதான் உன்னை எழுப்பலை!"

"சரி... அஞ்சு போய்ச் சேர்ந்திட்டாளா திருச்சிக்கு!"

"இ... இல்லம்மா. போக எப்படியும் ஒன்பது இல்லை பத்து மணி ஆயிடும்."

"ஓ... அவ்வளவு நேரம் ஆகுமா?"

"ஆமாம் அம்மா! போனவுடன் அவளைப் போன் செய்யச் சொன்னேன்!"

"சரி... சரி. பாவம் அஞ்சு!"

"ம்.. நல்ல காலம் டாலி அண்ணா, அண்ணியோட ஊர் போயிருக்கா. இல்லாட்டி கத்திக் கலாட்டா செய்வாள். அவளைச் சமாளிப்பது கஷ்டம்."

"ஆமாம்... ஆமாம்! ஆனால் ஸ்நேகா டாலியை நன்றாகப் பார்த்துக் கொள்கிறாள். சஞ்சய் மேலும்

பிரியமாக இருக்கிறாள். கடவுள் இப்பத்தான் அவள் வாழ்க்கையில் கண் திறந்து இருக்கிறார்."

"ம்... யெஸ். ஸ்நேகாவும் அண்ணாவும் திருமணம் செய்து கொண்ட பின்புதான் மனம் லேசாக இருக்கிறது அம்மா."

"ஆமாம்டா. இனி அடுத்தது உன் திருமணம்தான் ராகவ்."

"இப்ப வேண்டாம் அம்மா!"

"டேய்... இப்ப பார்க்க ஆரம்பிச்சாத்தானே இன்னும் இரண்டு வருஷத்திலேயாவது கல்யாணம் முடியும்."

"அம்மா... ப்ளீஸ்! என்னை வற்புறுத்தாதீங்க!"

"இல்லடா... உனக்கு முடிஞ்ச பிறகுதான் நிரஞ்சனுக்குப் பார்க்கணும்."

"அம்மா... அவனுக்குப் பார்த்து முடிவு செய்யுங்க."

"ஏன்டா ராகவ் பிடிவாதம் பிடிக்கிற? உன் மனசில யாராவது இருக்காங்களா?"

"அம்மா... அப்படி எல்லாம் ஏதும் இல்லை!" என்று கோபமாகக் குரலை உயர்த்தினான் ராகவ்.

"ஏன்டா கோபிச்சுக்கிற?"

"ஸாரிமா... கோபம் எல்லாம் இல்லை."

"இல்லடா... ஏன் கல்யாணம் வேண்டாம்ங்கற?"

"அம்மா... இன்னும் இந்தத் துறையில் நான் சாதிக்க வேண்டியது நிறைய இருக்கு. அதனால்தான் மற்ற விஷயங்களைப் பற்றி யோசிக்கக் கூடப் பிடிக்கவில்லை."



"அது பாட்டுக்கு அது நடக்கட்டுமேடா! ஏன் உன் கேரியரையும் திருமணத்தையும் போட்டுக் குழப்பிக் கொள்கிறாய்! டாக்டருக்குப் படித்த பெண்ணையே வேண்டுமானால் நான் பார்க்கட்டுமா?"

"அம்மா... சொன்னால் புரிந்து கொள்ளுங்கள் அம்மா. தொணதொணவெனப் பேசாதீர்கள்!" என்று சொல்லிவிட்டு வேகவேகமாக அங்கு இருந்து சென்றான்.

அவன் போவதையே பார்த்துக் கொண்டு இருந்தார் கஸ்தூரி. அவரை அறியாமல் ஒரு பெருமூச்சு அவரிடம் இருந்து பிறந்தது.

ராகவ் இவ்வளவு கோபமாகப் பேசுகிறானே! அப்படி என்றால் அவன் எதையோ என்னிடம் மறைக்கிறான்.

என்னவாக இருக்கும்? இப்பொழுதெல்லாம் ராகவ் அடிக்கடி கோபப்படுகிறானே! பெற்ற மனசு பரிதவித்தது.

**பா**ண்டிச்சேரியில் அஞ்சனா பள்ளிக்கூடத்தின் வரவேற்பறையில் உட்கார்ந்து இருந்தாள்.

வரவேற்பறையில் கிட்டத்தட்ட ஐம்பது பேர் இருந்தனர். எல்லோருக்கும் கிட்டத்தட்ட நாற்பது வயது இருக்கும்.

அனுபவசாலிகளுக்கு முன்னுரிமை அளிப்பதாகப் பேப்பரில் போட்டு இருந்தார்களே. இங்கு இருப்பவர் களிலேயே எனக்குத்தான் முன் அனுபவம் ஏதும் கிடையாது போலத் தெரிகிறதே!

இந்த வேலை கிடைக்குமா? அவள் மனதில் கேள்விகள் தோன்றின. முயற்சி செய்து பார்ப்போம்.

கடவுள் ஒரு வழியை மூடினால் இன்னொரு வழியைக் காட்டுவார் என்று யோசித்தபடியே அமர்ந்து இருந்தாள் அஞ்சனா.

"மேடம்... இங்க அஞ்சனாங்கறது யார்?" யோசனையில் மூழ்கியிருந்தவளைக் கலைத்தது வரவேற்பறையில் இருந்த பெண்ணின் குரல்.

"மேடம்... நான்தான் அஞ்சனா!"

"அப்படியா? வாங்க... சிஸ்டரைப் பாருங்க. இந்த முதல் அறைதான்!"

"தேங்க்ஸ் மேடம்."

அறையை நோக்கி நடந்தாள் அஞ்சனா. மனதிற்குள் தோன்றிய படபடப்பு வேகமாக அவள் உடல் முழுவதும் பரவியது.

கதவு திறந்து இருந்தது. கதவை லேசாகத் தட்டியபடியே, "எக்ஸ்க்யூஸ் மி மேடம்!" என்றாள் அஞ்சனா.

"உள்ளே வாம்மா!"

குரலில் தெரிந்த கருணை சிஸ்டரின் முகத்திலும் வழிந்தது.

"குட் மார்னிங் சிஸ்டர்!"

"குட் மார்னிங்மா... உட்கார்!" என்று எதிரே இருந்த நாற்காலியைச் சுட்டிக் காட்டினார்.

"தேங்க்ஸ் சிஸ்டர்!" என்றபடியே நாற்காலியில் உட்கார்ந்தாள்.



சிஸ்டர் கையில் அவளுடைய ஃபைல் இருந்தது. சிஸ்டர் அதில் மூழ்கினார்.

"அஞ்சனா! ஏன் நீ மும்பையில் இருந்து சென்னைக்கு வந்தாய்? அதோடு உனக்கு முன் அனுபவம் எதுவும் இல்லையே! குழந்தைகள் பூவைப் போன்றவர்கள். அவர்களை ஜாக்கிரதையாகக் கையாள வேண்டும். ஆசிரியை வேலை சுலபமானது இல்லை அஞ்சனா. அதற்கு ரொம்பப் பொறுமை வேண்டும்."

அஞ்சனாவின் கண்கள் கலங்கின.

"ம்... தெரியும் சிஸ்டர். என்னுடைய வயது குறைவாக இருக்கலாம். எனக்கு முன் அனுபவம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் எனக்குக் குழந்தைகளைப் பிடிக்கும்.

"அதனால் நான் கண்டிப்பாக எந்தக் குறையும் இன்றி அவர்களைப் பார்த்துக் கொள்வேன். என்னை நீங்கள் நம்பலாம் சிஸ்டர். நம்பிப் பொறுப்பை ஒப்படைக்கலாம்."

"சரி... என்ன சம்பளம் எதிர்பார்க்கிறாய் நீ?"

"சிஸ்டர்... எனக்கென இந்த உலகில் யாரும் இல்லை. எனக்குச் சம்பளமாக நீங்கள் மனதில் நினைத்து வைத்து இருக்கிற தொகையை இந்தப் பள்ளியில் படிக்கும் வசதிக் குறைவான மாணவிகளுக்கு உபயோகப்படுத்திக் கொள்ளுங்கள்."

சிஸ்டர் அஞ்சனாவின் முகத்தைப் பார்த்தார். அஞ்சனாவின் முகத்தில் தெரிந்த விரக்தி, சோகம் எல்லாவற்றையும் அவர் விழிகள் கவனித்தன.

# 24

உன்
வார்த்தை
தேன்
வார்த்தது.
என்
மனதில்!
...............
மௌனம்
மேல்
எனக்கு
இருந்த
பிரியம்
தொலைந்து
போனது
உன்னாலே!
என்
கேள்விக்குப்
பதில்
சொல்லாமல்
வதைத்தாய்
நீ
மௌனம்
மூலமாக!
இன்று தேன்
வார்த்தாய்...!

"அஞ்சனா! நீ ஏன் மும்பையில் இருந்து வந்தாய்? சொல், பார்க்கலாம்."

அவள் மௌனமாக இருந்தாள். அவள் மனதில் போராட்டம். தலை குனிந்தபடி இருந்தாள்.

"சொல்லும்மா... ஏன் அங்கு இருந்து இங்கே வந்தாய்?"

அஞ்சனாவிற்கு சிஸ்டரிடம் பொய் சொல்ல மனம் வரவில்லை. உண்மையைச் சொல்லவும் துணிவு வரவில்லை.

"சொல்லு அஞ்சனா! பெற்றோரிடம் சண்டை போட்டு விட்டு வந்தாயா? இல்லை, ஏதேனும் காதல் தோல்வியா? உன் குடும்பப் பின்னணி மற்றத் தொழில்களுக்கு அவசியம் இல்லை. ஆனால் ஆசிரியைப் பணிக்கு உன் குடும்பப் பின்னணி பற்றி நான் தெரிந்து கொள்வது ரொம்பவே அவசியம்."

அதற்கு மேல் அஞ்சனாவால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. மனதில் இருந்தவற்றை எல்லாம் கொட்டித் தீர்த்து விட்டாள்.

அவள் பேசும்போது குறுக்கிடாமல் கவனித்து வந்தார் சிஸ்டர். அஞ்சனா மனதில் இருப்பதை எல்லாம் கொட்டிய பின்பு அழத் தொடங்கினாள்.

"அஞ்சனா! என்னம்மா இது? அழாதே. உன் மேல் எந்தத் தப்பும் இல்லை. அதனால் நீ அநாவசியமாக அழக்கூடாது!" என்று அவள் தோளைத் தட்டிச் சமாதானப்படுத்தினார்.

"சிஸ்டர்... ஏன் எனக்கு மட்டும் இந்த மாதிரித் தண்டனை? நான் என்ன தவறு செய்தேன்?"

"ம்... கர்த்தர் எல்லாவற்றையும் கவனித்துக் கொள்வார். யாருக்கு எதை எப்பொழுது எப்படிக் கொடுக்க வேண்டும் என்று அவருக்குத் தெரியும்."

"ஆனால் மனதில் நிம்மதியே இல்லை சிஸ்டர்!" என்று கேவினாள் அஞ்சனா.

"ம்... புரிகிறது அஞ்சனா. இது கஷ்டமான விஷயம்தான்."

"ஏன் என் வாழ்க்கையில் மட்டும் இவ்வளவு சோதனைகள், இவ்வளவு வேதனைகள்! ஏன் சிஸ்டர் இந்த மாதிரிக் கொடுமை எல்லாம் எனக்கு மட்டும் நிகழ்கிறது?"

"அஞ்சனா... நீ நடந்ததைப் பற்றியே நினைக்கக் கூடாது. நிகழ்காலத்தில் வாழப் பழகிக் கொள்ள வேண்டும். இறந்த காலம் முடிந்து போன ஒன்று. எதிர்காலம் நம் கையில் இல்லை. அதனால் நிகழ்காலத்தில் வாழ வேண்டும்.



"கர்த்தர் மேல் உன் கவலையை இறக்கி வைத்து விடு. 'வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களே, நீங்கள் என்னிடம் வாருங்கள். என்னில் இளைப்பாறுங்கள்!' என்று அவர் சொல்லி இருக்கிறார்."

"நன்றி சிஸ்டர்! இந்த வேலை..."

"ம்... அஞ்சனா... நீ பணியில் இன்றே சேரலாம்!" என்றார் புன்னகைத்தபடியே சிஸ்டர்.

"ரொம்ப தேங்க்ஸ் சிஸ்டர்."

"பரவாயில்லை. உனக்குத் தங்குவதற்கு இங்கே இட வசதி உள்ளது. இங்கே சிஸ்டர்ஸ் நடத்தும் ஒரு மெஸ் இருக்கிறது. உனக்கு வேண்டுமானால் நீ அங்கேயே சாப்பிடலாம். அது உனக்குச் சரிப்படவில்லை என்றால் நீ தனியாகக்கூடச் சமைத்துச் சாப்பிடலாம்."

"எனக்குச் சாப்பாடு என்பதே அலர்ஜியாகிவிட்டது சிஸ்டர்!"

"புரிகிறது அஞ்சனா. ஆனால் அதையே மனதில் வைத்துக் கொண்டு இருக்காதே. புதிய இடம்... புதிய சூழல் எல்லாமே உனக்கு நல்ல ஒரு மாற்றத்தை நிச்சயமாக ஏற்படுத்தும். ஆல் தி பெஸ்ட் மை சைல்ட்!" என்றார் சிஸ்டர்.

"ரொம்ப நன்றி சிஸ்டர்!" என்றபடியே எழுந்தாள் அஞ்சனா.

மனதில் இருந்த பாரத்தை எல்லாம் இறக்கி வைத்த பின்பு மனம் லேசானது போல் இருந்தது அவளுக்கு.

இங்கே வரும்பொழுது மனம் எவ்வளவு பதட்டமாக இருந்தது.

ஆனால் இங்கே இருந்து போகும் பொழுது மனம் லேசாக இருக்கிறதே என்று வியந்தபடியே நடந்தாள் அவள்.

வாழ்க்கைச் சக்கரம் உருண்டோடியது. அஞ்சனா பாண்டிச்சேரி வந்து ஆறு மாதங்கள் ஓடி விட்டன.

"அஞ்சனா... இங்கே வாம்மா!"

"சொல்லுங்க சிஸ்டர்..."

"அடுத்த வாரத்தில் இருந்து பள்ளிக்கூட விடுமுறை தொடங்கிவிடும்."

"ஆமாம் சிஸ்டர். குழந்தைங்க எல்லாம் குஷியா இருக்காங்க. லீவுக்கு எங்கெல்லாம் போகலாம் அப்படின்னு யோசனையில இருக்காங்க."

"ம்... நல்ல விஷயம்தான் அது. நாளைக்கு சனிக்கிழமை. அதனால சின்னப் பசங்களை மட்டும் எங்கேயாவது வெளியில அழைச்சிட்டுப் போகலாம் அப்படின்னு யோசிச்சேன்.

"ஹாஸ்டல்ல இருக்கிற பசங்க ரொம்ப ஏங்கிப் போயிடுவாங்க. மத்தப் பசங்க எல்லாம் அம்மா அப்பாவோட டைம் ஸ்பெண்ட் செய்வாங்க. இவங்க பாவம்... நமக்கு யாரும் இல்லை அப்படின்னு ஃபீல் செய்யக்கூடாது. அதனாலதான் யோசிச்சு இந்த முடிவுக்கு வந்தேன்."



"ரொம்ப நல்ல முடிவு இது சிஸ்டர். போன வருஷம் பசங்க எங்கு போனாங்க?"

"போன வருஷம் எங்கேயும் போகலை அஞ்சனா. இதுதான் முதல் தடவை."

"ஓ... அப்ப பீச்சுக்கு அழைச்சிட்டுப் போகவா சிஸ்டர்!"

"நல்ல ஐடியா அஞ்சனா."

"ம்... அப்ப ஆறாவதிலிருந்து ப்ளஸ் டூ வரை உள்ள எல்லா ஹாஸ்டல் கேர்ல்ஸையும் அழைத்துக் கொண்டு போகலாம் சிஸ்டர்."

"எத்தனை பேர் இருப்பாங்க அஞ்சனா?"

மனதில் வேகமாகக் கணக்குப் போட்டாள் அவள்.

"எப்படியும் ஒரு முப்பது பேர் இருப்பாங்க சிஸ்டர்."

"சரி... பெரிய குழந்தைங்க எல்லாரும் சின்னக் குழந்தைங்களைப் பார்த்துக்கட்டும். எல்லார்கிட்டயும் க்ளியரா, யார் யாரைப் பார்த்துக்கணும் அப்படின்னு சொல்லிடு."

"சரி சிஸ்டர். நீங்களும் வாங்களேன்!"

"ம்... வரணும் அப்படின்னு ஆசையா இருக்கு. ஆனால் அவ்வளவு நேரம் கடல் காற்றுக் கிட்ட இருந்தால் வீசிங் வரும் அஞ்சனா. உடம்பு கோவாபரேட் செய்ய மாட்டேங்குது. மை ஏஜ் இஸ் லைக் தட்!"

"சாரி சிஸ்டர்... உங்க வீசிங்கைப் பற்றி ஞாபகம் இல்லாமல் நான் உங்களைக் கேட்டுட்டேன். ஐயாம் ஸாரி!"

"பரவாயில்லை அஞ்சனா!"

"சரி சிஸ்டர்... நான் அப்ப நாளைக்குப் போவதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறேன்."

"ம்... ஓகேமா... ஸ்கூல் பஸ்ஸையே யூஸ் செஞ்சுக்கலாம்."

"ஓ.கே. சிஸ்டர்!" என்றபடியே உற்சாகமாகக் கிளம்பினாள் அஞ்சனா.

கடற்கரை என்றவுடன் ஏனோ அவள் மனம் ராகவை மீண்டும் நினைத்தது. அங்கு இருந்து வந்து ஆறு மாதங்கள் ஆகி விட்டன.

ஆனால் ராகவின் நினைப்பு மனதை விட்டு நீங்கவே இல்லை. இந்நேரம் ராகவ் என்ன செய்து கொண்டு இருப்பான்?

எப்படி இருப்பான்? ம்... ம்... திருமணம் ஆகி இருக்கும். அந்த நினைப்பே அவள் மனதில் வலியை ஏற்படுத்தியது.

கொடுமையான விஷயம் காதலைத் தியாகம் செய்வதுதான். அதைச் செய்த பெரிய தியாகி நான் என்று நினைக்கும் பொழுதே அவள் கண்கள் கலங்கின.

அடிக்கடி ஏன் பழைய நினைவுகள் என்னைத் துரத்துகின்றன? இவ்வளவு நாட்கள் பரவாயில்லை...



க்ளாஸ் எடுப்பது, தேர்வுப் பேப்பர்களைத் திருத்துவது, ஸ்பெஷல் வகுப்புகள் எடுப்பது என்று ரொம்பப் பிசியாக இருந்து விட்டேன்.

இரவு தூங்கும் பொழுது ராகவிற்கு நான் செய்த துரோகத்தை என் மனச்சாட்சி சுட்டிக் காட்டி என்னைத் தூங்க விடாமல் துரத்தும்.

பகலில் வேலையில் மூழ்கியதால் அவன் நினைவுகளிலிருந்து தற்காலிக விடுதலை எனக்குக் கிடைத்தது.

இனிமேல் வருவது எல்லாம் ஹாலிடேஸ். பகல் எல்லாம் என்ன செய்யப் போகிறேனோ? நினைக்க நினைக்க அவளுக்குத் தலைவலி அதிகமானது.

ஹாஸ்டலில் இருக்கும் குழந்தைகளுக்கு ஏதாவது ஸ்பெஷல் க்ளாஸ் மாதிரி எடுக்கலாம். எல்லாக் குழந்தைகளுமே கொஞ்சம் ஆங்கிலத்தில் வீக் தான்.

அதனால் அவர்களுக்கு ஆங்கிலம் வேண்டுமானால் சொல்லிக் கொடுக்கலாம். சிஸ்டரிடம் இதைப் பற்றிப் பிறகு பேசலாம் என்று முடிவு செய்தாள் அவள்.

அடுத்த நாள் சாயங்காலம் எல்லாக் குழந்தைகளும் தயாராகி இருந்தனர். காலையிலேயே யார் யார் எந்தக் குழந்தையைப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று விளக்கமாக அஞ்சனா சொல்லி இருந்தாள்.

"சரி... எல்லாரும் ரெடியா?"

"யெஸ் மேடம்..." உற்சாகமாக ஒலித்தது கோரஸாகக் குழந்தைகளின் குரல்.

"சரி... எல்லாரும் க்யூவில் இருங்க. ஒவ்வொருத்தரா பஸ்ஸில் ஏறுங்க."

"ஓ.கே. மேடம்."

எல்லாரும் ஏறிய பின்பு கடைசியில் பஸ்ஸில் ஏறினாள் அஞ்சனா. ஜன்னல் அருகே உள்ள ஒரு ஸீட்டில் உட்கார்ந்து கொண்டாள்.

வானில் சூரியன் அஸ்தமித்துக் கொண்டு இருந்தான். பஸ்ஸில் இருந்து பார்க்கும்பொழுது கடற்கரை கருநீலக் கோடு போல் தெரிந்தது.

"மேம்... பாட்டுப் பாடலாமா?"

"ஓ... யெஸ்... பாடலாம். ஆனால் டான்ஸ் பாத்து ஆடுங்க. டிரைவர் பிரேக் பிடித்தால் அவ்வளவுதான். அதற்குத்தான் கூடுதல் கவனம் தேவை டான்ஸ் ஆடும் பொழுது."

"ஓ.கே. மேம்."

குழந்தைகள் உற்சாகமாகப் பாடிக் கொண்டு வந்தனர். அந்த உற்சாகம் ஏன் என்னிடம் இல்லை?

என் மனதில் மும்பை வாழ்க்கை துளிகூட இல்லை. ராகவுடன் பேசிய நாட்கள். டாலியுடன் இருந்த அழகான பொழுதுகள் இவை எல்லாம்தான் எனக்கு நினைவில் உள்ளன.



என் வாழ்க்கை முழுவதும் இந்த நினைவுகள் இருக்குமா? நான் இறக்கும் பொழுதுகூடப் பசுமையாக இந்த நினைவுகள் மனதில் இருக்கும் போல.

ராகவ் தன்னிடம் வாங்கிய சத்தியம் அவள் நினைவுக்கு வந்தது. 'தற்கொலை செய்து கொள்ளக் கூடாது' என்று அவனிடம் சத்தியம் செய்து கொடுத்தது கடற்கரையில்தானே!

என் கடிதத்தையும் போட்டோவையும் பார்த்தவன் என்ன நினைத்து இருப்பான்.

'சே! இவள் செத்து ஒழியலாம்!' என்று நினைத்து இருப்பானோ? நினைக்கக் கூடிய ஆள்தான் ராகவ்.

அவன் மனத்தராசில் நான் இறங்கி விட்டேன். அது நானாக விருப்பப்பட்டுச் செய்ததுதானே! என்னை நானே அழித்துக் கொண்டேன் ராகவ்.

"மேடம், இறங்கலையா? பீச் வந்திடுச்சு!"

"ஓ... இறங்கணும். ஸாரி... ஏதோ ஞாபகம். கேர்ல்ஸ்... எல்லாரும் ஒவ்வொருத்தரா இறங்குங்க."

"யெஸ் மேடம்..."

"டிரைவர்... நீங்களும் வாங்க!"

"சரி மேடம்... நீங்க போங்க. நான் பஸ்ஸை ஓரமா நிறுத்திட்டு வர்றேன்."

குழந்தைகள் எல்லோரும் ஒவ்வொருவராக இறங்கினார்கள். கடைசியாக அஞ்சனா இறங்கினாள்.

"அபி... எல்லா திங்ஸையும் எடுத்துட்ட இல்ல..." என்று ப்ளஸ் டூ படிக்கும் அபிநயாவைப் பார்த்துக் கேட்டாள் அஞ்சனா.

"எல்லாம் இருக்கு மேம். சின்னப் பசங்க விளையாடறதுக்கு பீச் ஸெட், பால் எல்லாம் இருக்கு. பெரியவங்க விளையாட ஃப்ரிஸ்பி, வாலிபால் இருக்கு!"

எல்லாக் குழந்தைகளும் உற்சாகமாகப் பீச்சை நோக்கி நடந்தனர். அஞ்சனா அவர்களைப் பின் தொடர்ந்தாள்.

## 25

என்
காயங்கள்
என்
வலிகள்
என்
தோல்விகள்
என்
துக்கங்கள்
...............
எல்லாவற்றையும்
நீ
போக்கினாய்!



உன்
புன்சிரிப்பால்!
நான்
புதிதாகப்
பிறந்தது
போல்
உணர்கிறேன்,
உன்னாலே!
நீ வேண்டும்
என்
வாழ்க்கை
இறுதிவரை!

கடற்கரைக் காற்று சில்லென முகத்தில் மோதியது. பத்துப் பத்துக் குழந்தைகளை ஒரு குழுவாகப் பிரித்து, அந்தக் குழுவிற்கு ஒரு கேப்டன் அமைத்து இருந்தாள் அஞ்சனா.

கடற்கரையில் கூட்டம் அதிகம் இல்லை. மனம் திரும்பத் திரும்ப ராகவுடன் கடற்கரையில் கழித்த அந்தப் பொழுதையே சுற்றிச் சுற்றி வந்தது.

"மேம்... நீங்க இந்தப் பசங்களுடன் பந்து விளையாடறீங்களா?"

யோசனையில் மூழ்கி இருந்தவளைக் கலைத்தது அபியின் குரல்.

"ஓ... சரி அபி! நான் இந்தக் குரூப்பைப் பார்த்துக்கறேன். நீ மற்றக் குழந்தைகளைப் பார்த்துக்கோ. ஜாக்கிரதை... தண்ணி கிட்டப் போக வேண்டாம்."

"சரி மேம்..." என்றபடியே நகர்ந்தாள் அபி.

"குழந்தைகளா...! எல்லாரும் வட்டமா நில்லுங்க. யெஸ்... அப்படித்தான்!"

"என்ன கேம் மேம்?"

"வெயிட்... வெயிட்... எல்லாரும் வட்டமா நிக்கட்டும்."

"மேம்... சர்க்கிள் பார்க் செஞ்சிட்டோம். இப்பச் சொல்லுங்க மேம்... என்ன கேம்?"

"நான் இங்க நடுவுல இருந்திட்டுப் பந்தைத் தூக்கி உங்க யார் மேலயாவது போடுவேன். யார் மேலே விழுதோ அவங்க இந்த சர்க்கிள் நடுவில வரணும்."

"அவங்க அவுட்டா மேம்?"

"நோ... நோ... அவங்க அவுட் கிடையாது. பட் அவங்க ஏதாவது பெர்ஃபார்ம் செய்யணும்."

"மேம்... புரியலை எனக்கு!"

"ஓ.கே. புரியும்படி சொல்றேன். இங்க வந்து பெர்ஃபார்ம் செய்யறதுன்னா என்ன தெரியுமா? பாட்டுப் பாடலாம், டான்ஸ் ஆடலாம், மேஜிக் செய்யலாம்... இந்த மாதிரி எனிதிங்... இப்ப புரிஞ்சுதா?"

"ஓ... புரிஞ்சுது!"

"குட்... கேம் ஆரம்பிக்கலாமா?"



"யெஸ் மேம்!"

அஞ்சனா பந்தைக் குழுவில் இருந்ததிலேயே பெரிய குழந்தையான தீபிகா மேல் எறிந்தாள்.

"ஹாய்... தீபு... தீபு... தீபு..." என்று உற்சாகமாகக் கத்தினார்கள் எல்லோரும்.

தீபிகா வெட்கம் கலந்த புன்னகையுடன் சர்க்கிளினுள் நுழைந்தாள்.

"மேம்... நான் என்ன செய்யட்டும்?"

"எது வேண்டுமானாலும் செய் தீபிகா."

"டான்ஸ் ஆடவா?"

"ஆடு தீபிகா!"

"தீபு... கமான்... கமான்...!" என்று அவளை உற்சாகப்படுத்தினர் எல்லோரும்.

"யாராவது பாட்டுப் பாடுங்க!" என்றாள் தீபிகா.

'குழலூதும் கண்ணனுக்கு
குயில் பாடும் பாட்டு
கேட்குதா...
குக்கூ குக்கூ...
என் குரலோடு
மச்சான் உங்க
குழல் ஓசை
போட்டி போடுதா
குக்கூ குக்கூ...'

"ஓ... சரி அபி! நான் இந்தக் குரூப்பைப் பார்த்துக்கறேன். நீ மற்றக் குழந்தைகளைப் பார்த்துக்கோ. ஜாக்கிரதை... தண்ணி கிட்டப் போக வேண்டாம்."

"சரி மேம்..." என்றபடியே நகர்ந்தாள் அபி.

"குழந்தைகளா...! எல்லாரும் வட்டமா நில்லுங்க. யெஸ்... அப்படித்தான்!"

"என்ன கேம் மேம்?"

"வெயிட்... வெயிட்... எல்லாரும் வட்டமா நிக்கட்டும்."

"மேம்... சர்க்கிள் பார்க் செஞ்சிட்டோம். இப்பச் சொல்லுங்க மேம்... என்ன கேம்?"

"நான் இங்க நடுவுல இருந்திட்டுப் பந்தைத் தூக்கி உங்க யார் மேலயாவது போடுவேன். யார் மேலே விழுதோ அவங்க இந்த சர்க்கிள் நடுவில வரணும்."

"அவங்க அவுட்டா மேம்?"

"நோ... நோ... அவங்க அவுட் கிடையாது. பட் அவங்க ஏதாவது பெர்ஃபார்ம் செய்யணும்."

"மேம்... புரியலை எனக்கு!"

"ஓ.கே. புரியும்படி சொல்றேன். இங்க வந்து பெர்ஃபார்ம் செய்யறதுன்னா என்ன தெரியுமா? பாட்டுப் பாடலாம், டான்ஸ் ஆடலாம், மேஜிக் செய்யலாம்... இந்த மாதிரி எனிதிங்... இப்ப புரிஞ்சுதா?"

"ஓ... புரிஞ்சுது!"

"குட்... கேம் ஆரம்பிக்கலாமா?"



"யெஸ் மேம்!"

அஞ்சனா பந்தைக் குழுவில் இருந்ததிலேயே பெரிய குழந்தையான தீபிகா மேல் எறிந்தாள்.

"ஹாய்... தீபு... தீபு... தீபு..." என்று உற்சாகமாகக் கத்தினார்கள் எல்லோரும்.

தீபிகா வெட்கம் கலந்த புன்னகையுடன் சர்க்கிளினுள் நுழைந்தாள்.

"மேம்... நான் என்ன செய்யட்டும்?"

"எது வேண்டுமானாலும் செய் தீபிகா."

"டான்ஸ் ஆடவா?"

"ஆடு தீபிகா!"

"தீபு... கமான்... கமான்...!" என்று அவளை உற்சாகப்படுத்தினர் எல்லோரும்.

"யாராவது பாட்டுப் பாடுங்க!" என்றாள் தீபிகா.

'குழலூதும் கண்ணனுக்கு
குயில் பாடும் பாட்டு
கேட்குதா...
குக்கூ குக்கூ...
என் குரலோடு
மச்சான் உங்க
குழல் ஓசை
போட்டி போடுதா
குக்கூ குக்கூ...'

என்று சங்கீதா பாட, பாட்டிற்கு ஏற்ப தீபிகா ஆடினாள். அவள் ஆடி முடித்ததும் எல்லோரும் கைதட்டினர்.

"வெரி குட் தீபிகா. இப்ப உன் டர்ன்..."

"நான் பந்தை த்ரோ செய்யணுமா மேடம்?"

"யெஸ்..."

பந்தை இன்னொரு பெண் மேல் எறிந்தாள் தீபிகா. இப்படியாக நான்கு ஐந்து பேர் சர்க்கிள் உள்ளே வந்து தங்களுக்குத் தெரிந்ததை எல்லாம் செய்து காட்டினார்கள்.

ஒவ்வொருவரும் ஏதோ செய்து முடித்து விட்டுத் தங்கள் இடத்துக்குப் போகும் பொழுது எல்லோரும் உற்சாகமாகக் கத்தினார்கள்.

"மேடம்... நீங்க வேணும்னா போய்ப் பாருங்க... மத்த கேர்ல்ஸ் எப்படி விளையாடறாங்க அப்படின்னு... நான் இவங்களைப் பார்த்துக்கறேன்..." என்று டிரைவர் சொன்னவுடன், 'சரி' என்பது போல் தலை அசைத்தாள் அஞ்சனா.

டென்த் ஸ்டாண்டர்ட், நைன்த் ஸ்டாண்டர்ட் படிக்கும் பெண்கள் எல்லாரும் வாலிபால் கேமில் மும்முரமாக இருந்தார்கள்.

"மேம்... வாங்க மேம்... எங்க டீமுக்கு!" என்று திவ்யா அஞ்சனாவின் கையைப் பற்றி இழுத்தாள்.

"ஏய்... எனக்கு வாலிபால் எல்லாம் தெரியாது."

"பரவாயில்லை மேம்... இட் இஸ் ஓ.கே. நாங்க சொல்லித் தர்றோம்!" என்றபடியே அவளை இழுத்தனர்.



தன்னை நோக்கி வந்த பந்தை வேகமாக எதிர்த் திசையில் தூக்கி அடித்தாள் அஞ்சனா. பந்து வேகமாகப் பறந்து தொலைவில் போய் அங்கே உட்கார்ந்து இருந்தவரின் முதுகைப் பதம் பார்த்தது.

"மேம்... சூப்பர் ஷாட்!"

"அச்சோ... பாவம்! இருங்க. நான் போய்ப் பந்தை வாங்கிட்டு வர்றேன்!" என்றபடியே பந்து விழுந்தவரிடம் மன்னிப்புக் கேட்பதற்காக வேகமாக ஓடினாள் அவள்.

பந்து அவர் கையில் இருந்ததைக் கவனித்தாள் அஞ்சனா.

"ஸாரி ஸார்... பந்து..." என்றவள் மேலே தொடர முடியாமல் திடுக்கிட்டாள். சட்டெனத் தன் கால்கள் நடுங்குவதை அவளால் உணர முடிந்தது. நாக்கு ஒட்டிக் கொள்ள, பேச முடியாமல் திணறினாள்.

கடவுளே! நான் யாரைச் சந்திக்கக் கூடாது என்று நினைத்தேனோ அவனை ஏன் சந்திக்கும்படி செய்தாய்? மனதிற்குள் புலம்பினாள் அவள்.

ராகவ் முகத்திலும் அதிர்ச்சி தெரிந்தது. அவன் விழிகள் அவளை அளந்தன. முன்பைக் காட்டிலும் அவள் மெலிந்து விட்டாளே என்று அவன் மனம் நெகிழ்ந்தது.

"ஸோ... உன் பழைய வாழ்க்கை இதுதானா அஞ்சு?" என்று மவுனத்தை உடைத்தான் ராகவ்.

"ஸாரி... நான்... டாலி நல்லா இருக்காளா?" அவளையும் மீறி வார்த்தைகள் விழுந்தன.

"உனக்கு அவள் மேல் அக்கறை இருந்தால் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிப் போய் இருக்க மாட்டாய் அஞ்சு!"

"ப்ளீஸ்... டாக்டர்..." என்றவள், மேலே தொடர முடியாமல் அழத் தொடங்கினாள்.

தூரத்தில் இருந்த டிரைவரும், மற்றப் பெண்களும் அஞ்சனாவுக்கு ஏதோ பிரச்சினை எனத் தவறாக நினைத்துக் கொண்டனர்.

"மேம்... என்ன ஆச்சு? ஏதாவது பிரச்சினையா?" என்றார் டிரைவர் பதட்டமாக.

"இ... இல்லை... எனக்குத் தெரிந்தவர். நீங்க போய் கேர்ல்ஸைப் பார்த்துக்கோங்க. நான் ஒரு பத்து நிமிஷத்தில் வந்திடறேன்."

"சரி மேடம்..." என்றபடியே அங்கு இருந்து அகன்றார் அவர்.

"ஸோ... ஆறு மாசக் கணக்கைப் பத்து நிமிஷத்தில் தீர்த்திடலாம் அப்படின்னு நினைக்கற போல!"

"ஆன்ட்டி எப்படி இருக்காங்க?" என்றாள் மெல்லிய குரலில்.

"லுக்... ஏன் அப்படிச் செய்தாய்? அதற்கு மட்டும் விளக்கம் கொடு. உன் பழைய வாழ்க்கைக்குத் திரும்பிப் போகப் போகிறேன் என்று சொல்லிவிட்டுத்தானே போனாய். உன்னைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லையே! மெலிந்து போய் விட்டாய். ஏன் அப்படிப்



பொய் சொன்னாய் அஞ்சு?" என்று மெதுவாக வினவினான்.

அவள் மௌனமாக இருந்தாள். அவனைப் பார்க்கத் துணிவின்றித் தலை குனிந்தாள் அவள்.

"அஞ்சு... உன் போட்டோவைப் பார்த்த பின்பு என் மனம் எப்படித் துடித்தது தெரியுமா?" என்று அவள் தோளை உலுக்கினான்.

"இந்த மாதிரி ஒரு துரோகியை, நடத்தை கெட்டவளை நினைத்து ஏன் உங்கள் மனம் துடித்தது?" என்றாள் அஞ்சனா அழுத்தமாக.

"ஏய்... உன்னை..." என்றவன், சட்டென அவளை இழுத்து முரட்டுத்தனமாக அணைத்தான். அவன் உதடுகள் கோபத்துடன் அவள் இதழ்களை முற்றுகையிட்டன. அவள் திமிறினாள்.

ஆனால் அவன் பிடி இறுகியது.

"மேடம்... பிரச்சினை ஏதாவதா மேடம்...?" என்று ஒரு ஆண் குரல் கேட்க, ராகவ் அவளை விடுவித்தான்.

பதட்டத்துடன் நின்று கொண்டு இருந்த டிரைவரின் முகத்தைப் பார்க்கக் கூச்சமாக இருந்தது அவளுக்கு.

"டாக்டர்... நான் ஸ்கூலுக்குத் திரும்பப் போக வேண்டும்... ப்ளீஸ்... புரிந்து கொள்ளுங்கள்."

"நீ எங்களை எல்லாம் புரிந்து கொள்ளாமல்தானே வீட்டை விட்டு ஓடினாய். நான் மட்டும் இப்பொழுது

உன்னைப் புரிந்து கொள்ள வேண்டுமா?" கோபமாகக் கத்தினான் ராகவ்.

"ராகவ்... ப்ளீஸ்..." என்றாள் மெதுவாக அவள்.

அஞ்சனா தன்னை முதல் முறையாக ராகவ் என்று அழைத்தது அவன் மனதைத் தொட்டது.

"சரி... நானும் உன்னுடன் வருகிறேன்," என்றான் அவன்.

"வே... வேண்டாம். நான் மறுபடியும் இங்கே வருகிறேன்."

"குட் ஜோக். உன்னை நான் நம்பத் தயாராக இல்லை."

"இல்லை... ராகவ். நான் நிச்சயமாக வருவேன். என்னை நம்புங்கள்."

"நோ... நானும் உன்னுடன் வருவேன்."

"மேடம்... பஸ்ஸில் நிறைய இடம் காலியாயிருக்கு மேடம். உங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சாரையும் அழைத்துக் கொண்டு போகலாம்," என்றார் டிரைவர்.

"சரி..." என்று முனகினாள் அவள்.

"மேடம்... மேடம்... யார் அவர்?" என்று அவள் காதோரம் கிசுகிசுத்தனர் கேர்ல்ஸ்.

"அவர்... என் ஃபிரெண்ட்!"



"இவ்வளவு நாள் இந்த மாதிரி ஒரு ஃபிரெண்ட் இருந்ததாகச் சொல்லவில்லையே மேடம் நீங்க..."

"ஷ்... பேசாமல் வாங்க!" என்று அவர்களை அடக்கியபடியே பஸ்ஸில் உட்கார்ந்தாள் அவள். ராகவ் அவள் பின்னால் இருந்த சீட்டில் உட்கார்ந்தான்.

பஸ்ஸில் அவள் அருகே அபிநயா உட்கார்ந்து கொண்டாள். தலை வலித்தது அஞ்சனாவிற்கு. நெற்றியை விரலால் நீவி விட்டுக் கொண்டாள்.

"என்ன மேடம்... தலை வலிக்குதா?"

"ம்... ஆமாம் அபி!"

"பீச் காற்று உங்களுக்கு ஒத்துக்கலை போல மேம்!"

"ம்..." என்று முனகினாள் அவள்.

'கடவுளே! ஏன் என்னைப் பலவீனமாக மாற்றுகிறாய்? ராகவை ஏன் என் முன்னே காண்பித்தாய்? இந்த நாள் ஏன் வந்தது என் வாழ்வில்?' என்று மனதிற்குள் புலம்பியபடியே இருந்தாள் அவள்.

"மேடம்... ஸ்கூல் வந்திடுச்சு..." என்றாள் அபிநயா.

பஸ் நிற்பதை அப்பொழுதுதான் அஞ்சனா உணர்ந்தாள். அவள் இதயம் படபடத்தது.

எல்லாக் குழந்தைகளும் இறங்கிய பின்னர் இறங்கினாள் அஞ்சனா. ராகவ் அவளுக்குப் பின் பஸ்ஸிலிருந்து இறங்கினான்.

"வா, போகலாம்... நான் உன்னுடன் பேச வேண்டும்," என்றான் அவன்.

"நமக்குள் பேச எதுவும் இல்லை. உங்கள் பாதை வேறு... என் பாதை வேறு டாக்டர்!"

"ம்... உனக்குக் காரியம் ஆக வேண்டும் என்றால் ராகவ் என்பாய்... காரியம் ஆக வேண்டியது இல்லை என்றால் டாக்டர் என்பாய்... சே!" கத்தினான் அவன்.

"ப்ளீஸ்... போங்க இங்கு இருந்து!"

"ஏய்... என்னைப் பார்த்தால் உனக்குப் பைத்தியம் மாதிரித் தெரிகிறதா? ஆறு மாசமாக நான் பட்ட கஷ்டம், வலி, வேதனை எல்லாம் உனக்கு விளையாட்டாக இருக்கிறதா?

"நீ ஏன் இப்படி இருக்கிறாய் அஞ்சு? ஏன் பொய் சொல்லிவிட்டு வீட்டை விட்டு ஓடி வந்தாய்? சொல்!" என்று அவள் கையைப் பற்றி உலுக்கினான்.

"டாக்டர்... எனக்கு உங்களைப் பிடிக்கலை. அதனால்தான் வீட்டை விட்டு ஓடி வந்து விட்டேன்!" என்றாள் அவள் தலை குனிந்தபடி.

"ஓ... அப்படியா? எங்கே என்னைப் பார்த்துச் சொல்!" என்று அவள் முகத்தை நிமிர்த்தினான்.

அவன் கண்களில் தெரிந்த துக்கம், கோபம், வலி எல்லாமே அஞ்சனாவைப் பாதித்தன.

அவனுடைய இந்த நிலைமைக்குத் தான் காரணம் என்ற நினைப்பே அவள் மனதை நெகிழச் செய்தது.



# 26

நான்
ஏதோ
ஒரு
நதியில்
மூழ்குவது
போல்
உணர்கிறேன்!
உன்னாலே,
பெண்ணே!
...............
எல்லாம்
உன்னாலே!
என்
எண்ணங்களில்
...............
என்
கவிதையில்
...............
என்
தூரிகையில்
...............

என்
இசையில்
எல்லாமே நீ
நிறைந்து இருக்கிறாய்,
பெண்ணே!

அவள் மனதில் அடக்கி வைத்து இருந்த துக்கம் நீர்க்குமிழி போல் வெடித்தது. விம்மல் ஒன்று வெடித்தது அவளை மீறி.

"என்னம்மா இது?" என்று அவளை அணைத்துக் கொண்டான் ராகவ்.

அவன் மார்பில் தலை புதைத்து அழத் தொடங்கினாள் அஞ்சனா. கதறி அழும் அவளைப் பார்த்து அவன் மனம் கரைந்தது.

"அஞ்சு... யார் இவர்?" என்று ஒரு பெண் குரல் கேட்க, சட்டென விலகினாள் அவள்.

"சிஸ்டர்... இவர்தான் ராகவ். கடற்கரையில் பார்த்தேன்..." என்றாள் கண்களைத் துடைத்தபடியே அவள்.

"ஓ... அப்படியா? இரண்டு பேருக்கும் பேசித் தீர்க்க வேண்டிய விஷயங்கள் நிறைய இருக்கும்!" என்றார் புன்முறுவலுடன் சிஸ்டர்.

"ஆமாம் மதர்... நீங்கள் பர்மிஷன் கொடுத்தால் நான் அஞ்சனாவை வெளியே அழைத்துப் போகிறேன்.



ஒன் ஹவர் ஆகும். அதற்குப் பின்பு நானே அவளைப் பத்திரமாகத் திருப்பி அழைத்துக் கொண்டு வந்து விடுகிறேன்!" என்றான் ராகவ்.

சிஸ்டர் முகத்தில் புன்முறுவல் படர்ந்தது.

"டாக்டர், ஓ.கே. அஞ்சு வாழ்க்கையில் நிறையக் கஷ்டங்களை அனுபவித்து விட்டாள். இனிமேல் அவள் வாழ்க்கை நல்லபடியாக இருக்கும் என்று நம்புகிறேன்!" என்றார்.

"ஷ்யூர் சிஸ்டர்!" என்றவன், அஞ்சனா பக்கம் திரும்பினான். "வா அஞ்சு!" என்றான்.

"சிஸ்டர்... நான் போகவா?" என்றாள் அஞ்சனா.

"ம்... போயிட்டு வா மகளே!" என்றார் வாய் நிறையச் சிரிப்புடன் சிஸ்டர்.

"தேங்க்ஸ் சிஸ்டர்..." என்றபடியே ராகவுடன் நடந்தாள் அவள்.

"இங்கே நீ வந்து எவ்வளவு நாட்களாகிறது அஞ்சு? வீட்டை விட்டு ஓடி இங்கேதான் வந்து விட்டாயா?"

"ஆமாம்! பேப்பரில் விளம்பரம் வந்தது. அதைப் பார்த்தவுடன் இங்கே - இந்தப் பள்ளிக்கூடத்திற்கு வந்து விட்டேன்."

"நல்ல காலம்! நான் இங்கே ஜிப்மர் யுனிவர்ஸிடிக்கு வந்தேன். வந்ததால்தான் உன்னைப் பார்க்க முடிந்தது."

"நீங்கள் இங்கே வந்தது எதற்காக டாக்டர்?"

"ம்... உன்னைச் சந்தித்து நம் திருமண ஏற்பாடுகளைச் செய்வதற்குத்தான்!"

"டாக்டர்... ப்ளீஸ்..."

"ஏன் அஞ்சு? உன் எதிர்பார்ப்பிற்கு ஏற்ற மாதிரி நான் இல்லையா?"

"இந்தப் பேச்சு வேண்டாம் டாக்டர்!"

"நீ உண்மையைச் சொல்லும்வரை இந்தப் பேச்சுத் தொடரும் அஞ்சு!"

"டாக்டர்... நான் ஒரு மணி நேரத்திற்குள் திரும்பிப் போக வேண்டும்."

"ம்... அதெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன்!"

"ஏன் டாக்டர் உங்கள் நேரத்தை நீங்கள் இப்படி வீணாகச் செலவு செய்கிறீர்கள்?"

"ம்... உன்னுடன் பேசிக்கொண்டு இருப்பது வீண் என்று சொல்கிறாயா? உன் கடிதத்தில் குறிப்பிட்டு இருந்த ஆண் நண்பர்களைப் போல, அந்த போட்டோவில் இருந்தது போல் நான் உன்னிடம் நடந்து கொள்ள வேண்டுமா?"

"டாக்டர்..." என்று கதறினாள் அவள்.

பள்ளியை ஒட்டி இருந்த பூங்காவினுள் நுழைந்தான் ராகவ்.

"வா... இங்க உட்கார்ந்து பேசலாம்!" என்று ஒரு மரத்தடியின் கீழ் அமர்ந்தான் அவன்.



அவள் மௌனமாக அவன் அருகே அமர்ந்தாள். ...ட்டென ஒரு பலவீனம் தன்னை ஆட்கொண்டது போல் உணர்ந்தாள் அவள்.

"சொல் அஞ்சு... அந்த போட்டோவில் இருந்தது போல் நான் உன்னிடம் நடந்து கொள்ளவா?" என்று அவள் முகத்தைப் பார்த்தான்.

"டாக்டர்... வார்த்தைகளால் என்னைக் கொல்லாதீர்கள்!" அவள் கெஞ்சினாள்.

"ம்... நீ மட்டும் அப்படிச் செய்யலாமா அஞ்சு? சொல்... உண்மையைச் சொல்!"

"அதில் எழுதி இருந்தது உண்மை டாக்டர்!"

அவன் முகம் இறுகியது. அவன் கண்கள் கோபத்தில் பளபளத்தன.

"அப்ப வா என்னோடு!" என்று அவள் கையைப் பற்றினான் முரட்டுத்தனமாக.

"எ... எங்கே டாக்டர்?"

"ம்... ஏதாவது ஒரு இடத்திற்குப் போகலாம். நல்ல ஹோட்டலாக... உனக்குத் தேவையான மது கிடைக்கும். அது மட்டும் இல்லை... உனக்குத் தேவையான..." என்று அவன் முடிக்கும் முன்பு, அவள் தன் தலையில் கையால் அடித்துக் கொண்டு கதறி அழத் தொடங்கினாள்.

அவள் அழுவதையே பார்த்துக் கொண்டு இருந்தான் அவன்.

"டாக்டர்... ஏதாவது மருந்து கொடுத்து என்னைக் கொன்று விடுங்கள்... ப்ளீஸ்..." என்றாள் அழுதபடியே.

"அஞ்சு... கொல்வது என் வேலை இல்லை. நீ முதலில் உன் மனதில் இருப்பதை மறைக்காமல் சொல். அதுவரை நான் இங்கு இருந்து போக மாட்டேன். பொய் சொல்லாமல் உண்மையைச் சொல். அதுதான் நம் இருவருக்கும் நல்லது. புரிந்ததா?" என்றான் அவள் கன்னங்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்தபடியே அவன்.

அவளிடம் இருந்து பெருமூச்சுப் பிறந்தது.

"சொல் அஞ்சு..." அவன் அவளை ஊக்கப் படுத்தினான்.

"சொல்கிறேன்... பூஜாஸ்ரீ என்று ஒரு நடிகை பற்றி நீங்கள் கேள்விப்பட்டு இருக்கிறீர்களா?"

"ம்... மும்பையில் அவங்க ஃபேமஸ். பத்திரிகையில் அவங்களைப் பற்றி நியூஸ் படித்து இருக்கிறேன்."

"அவங்க என்னோட சித்தி டாக்டர்."

"வாட்...?"

"யெஸ். நான் ஆசிரமத்தில் வளரவில்லை. நான் மும்பையில் பாந்த்ராவில் பங்களாவில் வளர்ந்தவள்."

"காட்... ஆனால் ஆசிரமத் தலைவர் அஞ்சனா என்று ஒரு பெண் வருவாள் என்று கடிதத்தில் எழுதி இருந்தாரே! அந்தக் கடிதத்தின் நகல் உன்னிடம் கூட இருந்ததே! அது எப்படிச் சாத்தியம்?"



"ம்... காஞ்சனா... என்னுடைய நல்ல ஃப்ரெண்ட். அவள்தான் ஆசிரமத்தில் வளர்ந்தவள். அவள்தான் உங்க வீட்டுக்கு வந்து இருக்க வேண்டியது. அவளுக்குப் பதிலாகத்தான் நான் வந்தேன்."

"ம்... ஆள் மாறாட்டமா? ஏன் அஞ்சு?"

"என் அம்மாவின் முகத்தை நான் பார்த்தது இல்லை ராகவ். அப்பா பெயர் பிரகாஷ். அருமையான டைரக்டர் அவர். அம்மா இறந்தவுடன் அவர் எடுத்த படத்தில் துணை நடிகையாக அறிமுகம் ஆனார்கள் சித்தி.

"அதற்குப் பின்பு அடுத்தடுத்து அப்பாவின் டைரக்ஷனிலேயே நடிப்பதற்கான வாய்ப்பு அவர்களுக்குக் கிடைத்தது. முதலில் இருவரும் நல்ல நண்பர்களாகப் பழகினார்கள். பின்பு காதல் மலர்ந்தது. அது திருமணத்தில் முடிந்தது."

"ஓ... உனக்கு அப்ப என்ன வயது அஞ்சு?"

"ம்... ஆறு வயது. ரொம்ப லேசாக நினைவில் இருக்கிறது அப்பாவின் திருமணம்."

"கதைகளில் வருவது போல் உன் சித்தி ரொம்ப மோசமானவர்களா?"

"ம்... நீங்கள் நினைப்பது சரிதான். என் சித்தி எவ்வளவு மோசமானவர்கள் என்பது எனக்கு ரொம்ப ரொம்ப லேட்டாகத்தான் தெரிய வந்தது. அப்பா உயிரோடு இருந்த பொழுது இருந்த சித்திக்கும், அப்பா இறந்த பின்பு சித்தி என்னுடன் நடந்து கொண்ட முறைக்கும்... நினைத்துப் பார்க்கவே மோசமாக இருக்கிறது."

"என்ன காரணம்? பணப் பிரச்சினையா?"

"ம்... அப்பாவிற்குச் சித்தியைப் பற்றி ஏதோ சந்தேகம் ஏற்பட்டு இருக்கிறது என்று நினைக்கிறேன். அதனால்தான் உயிலில் சித்திக்குச் சாதகமாக எதுவும் எழுதவில்லை போல..."

"ஓ... அதனால்தான் உன் சித்திக்கு உன் மேல் அவ்வளவு வெறுப்பா?"

"ஆமாம்! பணம்தான் எல்லாவற்றுக்கும் காரணம்!"

"நீ போலீஸில் சொல்லி இருக்கலாமே!"

"முடியவில்லை. சித்தியின் ஆட்கள் வீடு முழுக்க இருந்தார்கள். என்னைக் கண்காணிப்பதுதான் அவர்களின் வேலை. அப்பா இருந்தவரை சித்தி என்னிடம் அன்பாக நடந்து கொண்டார்கள். அது நடிப்பாகக் கூட இருக்கலாம். ஆனால் எனக்கு அப்பொழுது அது புரியவில்லை. முட்டாள் போல் இருந்து இருக்கிறேன் நான். என்னை நினைத்தால் என் மீதே எனக்குக் கோபம் வருகிறது."

"ம்... சில நேரம் நாம் எல்லோருமே முட்டாள்கள் போல்தான் நடந்து கொள்கிறோம் அஞ்சு. உன் சித்தியின் உண்மையான சுயரூபம் உனக்கு எப்பொழுது தெரிந்தது?"

"அப்பாவின் உயிலில் சொத்தெல்லாம் என் திருமணத்திற்குப் பின்பு என்னுடைய வாரிசுக்குத்தான் என்று எழுதி வைத்திருந்தார்கள். அதனால் சித்தி என்னை அவர்களின் அண்ணனைத் திருமணம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தினார்கள். அவர்கள் எனக்குப்



பார்த்து வைத்து இருந்த அந்த அருமையான மாப்பிள்ளையின் வயது நாற்பத்திரண்டு..." என்றாள் கசப்பான தொனியில் அஞ்சனா.

"உனக்குப் போய் அந்த மாதிரி ஒரு மாப்பிள்ளையைப் பார்க்க அவர்களுக்கு எப்படி மனம் வந்தது?" என்றான் ராகவ் அதிர்ச்சியாக.

"ம்... அப்பாவின் சொத்துதான் அதற்கு எல்லாம் காரணம். நான் முடியாது என்று மறுத்தது சித்திக்குக் கோபத்தை வரவழைத்தது. அவர்கள் என்னிடம் இரக்கமே இல்லாமல் நடந்து கொள்ளத் தொடங்கியது அப்பொழுது தான்.

"என்னை அவர்கள் ஆட்டுவிக்கும் கைப்பொம்மை யாக மாற்ற அவர்கள் நினைத்தார்கள். அதற்காக உணவில் எனக்கே தெரியாமல் போதை மருந்தைக் கலந்தார்கள்."

"என்னது...! என்னால் நம்பவே முடியவில்லை... சே... சே... இப்படி எல்லாம் நடந்து கொள்ள அவர்களுக்கு எப்படி மனம் வந்ததோ?"

"ம்... எனக்கே தெரியாமல் கலந்து... எனக்கு மதுவையும் கொடுத்து... என்னைப் பார்ட்டிக்கு அழைத்துச் செல்வார்கள். ஒரு வாரம் இந்த மாதிரி நடந்தது.

"யாருக்கும் என் மேல் நல்ல எண்ணம் வரக் கூடாது என்பது ஒரு காரணம் - வக்கீல் உட்பட.

"அது மட்டும் இல்லை... என்னை போட்டோ எடுத்து மறுநாள் என்னிடம் அதைக் காட்டுவார்கள். ஊர் முழுக்க

அந்த போட்டோக்களைப் போஸ்டராக அடித்து ஒட்டுவோம். கணினியில் அந்த போட்டோக்களை எல்லோரும் பார்க்கும்படி செய்து விடுவோம் என்று சித்தி என்னை எவ்வளவோ முறை மிரட்டி இருக்கிறார்கள்.

"திருமணத்திற்கு ஒப்புக்கொள்ளா விட்டால் இதை எல்லாம் செய்ய வேண்டி வரும் என்று எச்சரித்தார்கள். ஏன் இந்த உலகில் இருக்கிறேன் என்று நிறையத் தடவை என்னையே நான் கேள்வி கேட்ட தருணங்கள் அவை.

"அப்பா இறந்த பின்பு சட்டெனத் தலைகீழாக மாறிவிட்டது என் வாழ்க்கை. பயம், நடுக்கம், அடுத்த நிமிடம் என்ன ஆகுமோ என்று தினம் தினம் நான் செத்துச் செத்துப் பிழைத்தேன்!" என்று மேலே தொடர முடியாமல் அழத் தொடங்கினாள் அஞ்சனா.

"ஷ்... அழாதே! ஸாரி... உண்மை தெரியாமல் நான் வேறு உன்னைப் பற்றி ரொம்ப மோசமாக உன் மனம் புண்படும்படி பேசி இருக்கிறேன்!" என்று அவளை அணைத்து மன்னிப்புக் கேட்டான் ராகவ்.

"உங்கள் நிலைமையில் யார் இருந்தாலும் இப்படித்தான் நினைத்து இருப்பார்கள்."

"எப்படி அந்த நரகத்தில் இருந்து மீண்டு வந்தாய்?"

"ம்... அப்பாவின் நம்பிக்கைக்கு உரியவர் ஒருவர் வீட்டில் வேலை பார்த்து வந்தார். அவர் ரொம்ப விசுவாசமானவர். முருகன் தாத்தா என்றுதான் நான் அவரை அழைப்பேன். அவர் பேத்திதான் காஞ்சனா. தாத்தாவைத் தேடி வார விடுமுறை நாட்களின் பொழுது அவள் வீட்டிற்கு அடிக்கடி வருவாள்.

"சின்ன வயதில் இருந்தே நல்ல ஃபிரெண்ட்ஸ் நாங்கள் இருவரும். முருகன் தாத்தாதான் நான் தப்பிச் செல்வதற்கு உதவி செய்தார். நான் உயிருடன் இருப்பதற்கு அவர்தான் காரணம்."

"காட்! எப்படி நீ தப்பினாய் அஞ்சு?"

"ம்... ஒரு வாரம் முழுக்க சாப்பிட்ட போதை மருந்துகளின் விளைவால் என் மூளை மழுங்கிப் போய் இருந்தது. பசிக்கும்... ஆனால் சாப்பிடப் பயமாக இருக்கும். தண்ணீர் கூடக் குடிக்கப் பயப்படுவேன் நான். என் உடல் நிலை மோசமாகிக் கொண்டே போனது.

"அப்பொழுதுதான் அவர் வெளியூர் போய் ஒரு டாக்டரிடம் என் நிலைமையை எடுத்துச் சொல்லி மாத்திரைகளை வாங்கி வந்தார். அந்த மாத்திரைகளைச் சாப்பிட்டால் பசிக்காது. ஆனால் ரொம்ப நாட்கள் தொடர்ந்து உபயோகப்படுத்துவது நல்லது இல்லை என்றும் அவர் சொன்னார்.

"உணவு சாப்பிடுவது போல் நடிக்கச் சொன்னார். போதை மருந்து உட்கொண்ட பொழுது எப்படி எல்லாம் நடந்து கொண்டேனோ அதைப் போல் தொடர்ந்து நடிக்கச் சொன்னார்.

"அந்த உணவை எல்லாம் பின்பு அவர் யாருக்கும் தெரியாமல் அப்புறப்படுத்தினார்."

"சே... நீ எவ்வளவு கஷ்டப்பட்டு இருக்கிறாய் டியர்... சாப்பாட்டைக் கண்டாலே உன் கண்ணில் தோன்றிய பயம், வெறுப்பு எல்லாவற்றுக்கும் பின்னணி இது தானா...?" என்றான் மெல்லிய குரலில் அவன்.

"ஒரு மாதம் இதே நிலை நீடித்தது. இதற்கு நடுவே நான் திருமணத்திற்கு ஒப்புக் கொண்டேன்... ஒப்புக் கொள்வதாகச் சித்தியிடம் பொய் சொன்னேன். அவர்கள் என்னை நம்பினார்கள். கொஞ்சம் அசால்டாக இருந்தார்கள் என்னிடம்.

"இதற்கு நடுவே காஞ்சனாவிற்கு உங்கள் வீட்டில் வேலை செய்வதற்கான வாய்ப்புக் கிடைத்தது. அவளுக்கு என் நிலைமை தெரியும். அதனால் அந்தக் கடிதத்தில் அவள் பெயருக்குப் பதிலாக என் பெயரைத் திருத்தி அனுப்பினாள். ஒரு எழுத்து - முதல் எழுத்து மட்டுமே மாறுபட்டதால் ரொம்பப் பெரிய வித்தியாசம் தெரிய வில்லை."

"நீ போலீஸ் உதவியை நாடவில்லையா அஞ்சு? சரியான கிரிமினல் உன் சித்தி."

"ம்... போலீஸில் சித்திக்கு வேண்டியவர்கள் இருந்தார்கள். அதனால்தான் எனக்குப் போலீஸிடம் உதவியைக் கேட்க இஷ்டம் இல்லை. வக்கீல் அங்கிள் அவர் மனைவியின் சர்ஜரிக்காக அமெரிக்கா போய் இருந்தார். அதனால் அவரையும் தொடர்பு கொள்ள முடியாத நிலை. அது மட்டும் இல்லை... என்னிடம் ஒரு ரூபாய் கூடப் பணம் கிடையாது. வீட்டிலேயே கைதியைப் போல் இருந்தேன் நான்."



"சரி... ஏன் என்னிடம் நீ விஷயத்தைச் சொல்லவில்லை அஞ்சு? நான் உன்னைப் பிரபோஸ் செய்த பொழுது சொல்லி இருக்கலாமே! முதலில் வேண்டுமானால் என் மீது நம்பிக்கை இல்லாமல் இருந்து இருக்கலாம். ஆனால் அப்புறம் கூடவா என் மேல் நம்பிக்கை வரவில்லை அஞ்சு?"

"நம்பிக்கை இருந்தது... கூடவே உங்கள் மேல் நேசமும் இருந்தது. அதனால்தான் உங்களிடம் சொல்லப் பயமாக இருந்தது!" என்றாள் மெல்லிய குரலில்.

"ஏன் அஞ்சு டியர்... மனதில் அன்பை வைத்துக் கொண்டு அதை மூடி மறைத்தாய்?" என்றான் அவள் கைகளைத் தன்னுடன் பிணைத்தபடியே.

"என் சித்தி ரொம்ப மோசமானவர்கள். அவர்கள் அண்ணனைத் தவிர வேறு யாரும் என்னைத் திருமணம் செய்து கொள்வதை அவர்களால் ஒத்துக் கொள்ளவே முடியாது. உங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படும். அதனால்தான் நான் என் நேசத்தை மனதிலேயே புதைத்து வைத்தேன்!" என்றாள் குரல் நடுங்க.

"உன்னுடைய எண்ணத்தை நான் தவறாகப் புரிந்து கொண்டேன் அஞ்சு. என் மேல் உனக்கு விருப்பம் இல்லை என்று நீ சொல்லும்பொழுதெல்லாம் என் இதயத்தில் பூகம்பம் ஏற்பட்டது. நான் விரும்பும் பெண்ணின் மனதில் இடம் பிடிக்க முடியவில்லையே என்று நான் என் மேலேயே கோபப்பட்ட நாட்கள் அதிகம்!" என்றவன், அவள் கை விரல்களில் மெதுவாக இதழ் பதித்தான்.

அவள் உடல் சிலிர்த்தது. மூச்சு விடுவது கூட அவளுக்குச் சிரமமாக இருந்தது. ராகவ் முகத்தைப் பார்க்கத் துணிவின்றிக் கண்களை மூடிக் கொண்டாள் அவள்.

“அஞ்சு... எனக்கு உன் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகளை எல்லாம் நினைக்கும் பொழுது மனம் அதிர்கிறது. நீ பட்ட கஷ்டம் எல்லாம் போதும் டியர். உன் அப்பாவின் சொத்தெல்லாம் உனக்கு வேண்டாம் என்று வக்கீலிடம் நீ சொல்லிவிடு.

“நம் திருமணத்தைச் சீக்கிரமாக வைத்துக் கொள்ள வேண்டும். அதற்கு முன்னால் உனக்கு ட்ரீட்மெண்ட் ஆரம்பிக்க வேண்டும்...” என்றான் அவள் நெற்றியில் விழுந்த கூந்தலைச் சரி செய்தபடியே.

“எ... என்ன ட்ரீட்மெண்ட்?”

“ம்... உன் உடல் நிலை ரொம்ப மோசமாக இருக்கிறது. உணவை உண்ணாமல் மாத்திரைகளை மட்டுமே உண்டதால் இந்த மாதிரி ஆகி விட்டது. உன் மனம் அமைதியாக இருக்க வேண்டும். அதுவும் ரொம்ப முக்கியம், உன் உடல் நலம் தேறுவதற்கு!”

“நீங்கள் என் கூடவே இருந்தால் போதும். நான் நிம்மதியாக இருப்பேன்!” என்றாள் மெல்லிய குரலில்.

“அஞ்சு... நீ இல்லாமல்... நான் எப்படித் தவித்தேன் தெரியுமா? எதிலேயும் என்னால் ஈடுபட முடியவில்லை. என்னை நினைத்து என் மேலேயே கோபம் வந்தது. என்னை ஆட்டிப் படைத்து விட்டாய் நீ!” என்று அவள் நெற்றியில் இதழ் பதித்தான் அவன்.



“ராகவ் ப்ளீஸ்...!” என்று சிணுங்கினாள் அவள்.

அஞ்சனாவின் கைபேசி சிணுங்கியது. அவன் பிடியில் இருந்து தன்னை விலக்கிக் கொண்டவள், கைபேசியை எடுத்தாள். பச்சைப் பட்டனை அழுத்தினாள்.

“ஹலோ... காஞ்சனா பேசறேன்!” என்றாள் மறுமுனையில் காஞ்சனா.

“ஹாய்... சொல்லுடி!”

“நான் சொல்லப் போற நியூஸ் உனக்குக் கண்டிப்பா அதிர்ச்சியாத்தான் இருக்கும்டி!”

“எ... என்ன காஞ்சனா?”

“ம்... தாத்தா இப்பத்தான் போன் செய்தார்.”

“என்ன விஷயம் காஞ்சனா?” பதட்டம் தெரிந்தது அவள் குரலில்.

“உன் சித்தியும் அவங்க அண்ணனும் போன கார் விபத்துக்கு உள்ளாகி விட்டது. சம்பவ இடத்திலேயே இருவரும் இறந்து விட்டார்கள். டிரைவரும் இறந்து விட்டார் போல!”

“நோ...” அலறினாள் அஞ்சனா.

“என்னம்மா... என்ன விஷயம்?” என்று அவள் தோளில் ஆதரவாகக் கை பதித்தான் ராகவ்.

அஞ்சனா அழத் தொடங்கினாள்.

“ஷ்... அஞ்சு... என்னம்மா இது? என்ன விஷயம்... சொல்லும்மா!” என்றபடியே அவளைச் சமாதானப் படுத்தினான்.

"ராகவ்... சித்தியும் அவங்க அண்ணனும் ஒரு விபத்தில்..." என்று மேலே தொடர முடியாமல் அழுகை வெடித்தது.

"ம்... அஞ்சு... உன்னை மாதிரி நல்ல மகளை அவர்கள் சரியாகக் கவனிக்காமல் ரொம்ப மோசமாக நடத்தினார்கள். அதற்குக் கடவுள் கொடுத்த தண்டனை இது. அழாதே... ப்ளீஸ்!"

"ராகவ்... சித்தியின் மனமாற்றத்திற்குக் காரணம் பணம்தான். பாவம் அவர்கள்..." என்றாள் மெல்லிய குரலில்.

"ம்... நீ ஒரு தேவதை அஞ்சு. இனி எந்த உறுத்தலும், பயமும் இல்லாமல் என்னைத் திருமணம் செய்து கொள்வாய்தானே?" என்றான் கண்களில் காதல் பொங்க ராகவ்.

அவள் முகம் சிவந்தது. தலை குனிந்தாள் அவள்.

"சொல்லு அஞ்சு!" என்று அவள் முகத்தை நிமிர்த்தினான்.

அவள் எம்பிச் சட்டென அவன் நெற்றியில் இதழ் பதித்து விட்டு ஓடினாள்.

"ஏய் அஞ்சு!" என்று அவளைத் துரத்தினான் அவன்.

பூங்காவில் அணில்கள் இரண்டு ஒன்றை ஒன்று துரத்தி விளையாடிக் கொண்டு இருந்தன – அவர்களைப் போல!